சமஸ்கார விதி.

இயற்றியவர்

மகரிஷி ஸ்வாமி தயானந்த சரஸ்வதி.

தமிழில் மொழிபெயர்த்தவர்

பண்டிதர் கண்ணையா.

பிரசுரித்தவர்

பண்டிட் கே. ஞானி.

ஆர்ய சமாஜ், சென்னை.

1000 காப்பிகள்.] 1934 [ஒரு ரூபாய்.

163417

ஹிந்தி பிரசார் பிரஸ்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

R65
N34

விஷய அட்டவணை.

விஷயம்.		பக்கம்.
முகவுரை (பூமிகா)	...	1—9
கடவுள் வணக்கம் (ஈஸ்வரோபாஸனு)	...	11
அருள் வேண்டல் (ஸ்வஸ்திவாசனம்)	...	15
அமைதி வேண்டல் (சாந்திப்ரகாணம்)	...	25
பொதுச்சடங்குகள் (சாமான்யப்ரகாணம்)	...	34
மகப்பேற்றுச்சடங்கு (கற்பாதானம்)	...	54
சுதர்வயச்சடங்கு (பும்ஸவனம்)	...	77
அகமத்தச்சடங்கு (சீமந்தோன்னயனம்)	...	83
சிசுதோற்றச்சடங்கு (ஜாதகர்மம்)	...	90
பெயரிடுஞ்சடங்கு (நாமகரணம்)	...	104
வெளிவிடுச்சடங்கு (நிஷ்க்ரமணம்)	...	110
சாதமூட்டற்சடங்கு (அன்னப்ராசனம்)	...	114
குழல் நீக்குச்சடங்கு (சூடாகர்மம்)	...	118
காதுகுத்தற்சடங்கு (கர்ணவேதம்)	...	126
பூணூற்சடங்கு (உபனயனம்)	...	127
கலைதுவக்கற்சடங்கு (வேதாரம்பம்)	...	140
இல்நுழைச்சடங்கு (ஸமாவர்த்தனம்)	...	171
திருமணச்சடங்கு (விவாஹ சமஸ்காரம்)	...	182
வனவாசிச்சடங்கு (வானப்ரஸ்த சமஸ்காரம்)	...	315
துறவிவாசச்சடங்கு (ஸன்யாஸ ஸமஸ்காரம்)	...	321
நீறுக்குச்சடங்கு (அந்த்யேஷ்டம்)	...	337

சென்னை ஆர்ய சமாஜத் தலைவர்.

பண்டிட். கே. ஞானியவர்களீந்த

அணிந்துரை.

ஓம் யக்ஞேன யக்ஞமயஜந்த தேவாஸ்தானி

தர்மானி ப்ரதமான்யாஸன் || (யஜுர் வேதம்).

பரமன் தங்களுக்கு அளித்த இகடகங்களுக்காக நன்றி செலுத்த விரும்பும் அறிவாளிகள் அப்பரமனை நிதமும் துதிப்பதைப்போலவே ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு முக்கியமான சடங்கினாரம்பத்திலேயும் அப்பரமனைத் துதிக்க வேண்டும்.

இந்து மதத்தின் கொள்கைப்படி மனிதனின் உயிரானது பதினாறு வகைச்சடங்குகளின் வழியாய் ப்ரயாணம் செய்து அதன் முடிவை அடைகிறது. இச்சடங்குகளுக்கே "சம்ஸ்காரங்கள்" என்று பெயராகும். மகப்பேற்றுச்சடங்கு முதல் நீருக்குச்சடங்குவரை பதினாறு சடங்குகள் ஆகும். பிறப்பிலிருந்து இறப்புவரை ஒவ்வொரு மனிதனும் இப்பதினாறு சடங்குகளுக்கு முட்படவேண்டும். ஒவ்வொரு சடங்கினாரம்பத்திலும் அச்சடங்கைப் புரிந்துகொள்பவன் தான் சமூகத்திற்குச் செய்யவேண்டிய கடமைகளையும், கடவுளுக்குச்செய்ய

வேண்டிய கடமைகளையும் நினைப்பூட்டிக் கொள்கின்றான். அன்றியும் உயிரானது, உலகத்தின் வெளிமயக்குகளில் சிக்கி ஆழ்ந்து விடுவதற்காகவல்ல வாழ்க்கையைப் புரிந்து வருவது எனவும் அவன் அறிகிறான்.

ஒவ்வொரு சமஸ்காரமும் சில மந்திரங்களைக்கொண்டிருக்கிறது. அம்மந்திரங்களால் அச்சடங்கைப் புரிந்துகொள்பவன் அக்காலத்தில் புதியதாக அறிந்து கொள்ளவேண்டியவைகளையும் அதற்குமேல் அவனின் கடமை என்ன வென்பதையும் சொல்லியிருக்கிறது. உதாரணமாக முதற் சடங்காகிய மகப்பேற்றுச் (கர்ப்பாதானச்) சடங்கை எடுத்துக்கொள்வோம். தற்கால வாலிபர்கள் இச்சடங்கு கேவலம் உத்திரவாதம் பெற்ற சிற்றின்பச் சேர்க்கையே என நினைக்கின்றனர். அந் நினைவினால் தகுதியில்லாத குழந்தைகளை கணக்கில்லாமல் பெறுகிறார்கள். ஆனால் உண்மையான சாஸ்த்திரம் இச்சடங்கைக்குறித்து "ப்ரஜாயை க்ருஹமேதினம்" "விவாகம் நன்மக்களைப் பெறுவதற்காகவே" என்று சொல்கின்றது. என்றால் மனிதன் நாய், பூனைகளைப்போல ஒழுக்கமின்றி சேர்க்கைகளைப் புரிந்து மக்கட்சேனைகளுக்கு அதிகாரி ஆகிவிடக்கூடாது. சாஸ்திர விதிப்படி ஒவ்வொரு குழந்தைக்கும் இடையில் மூன்று வருட வித்தியாசம் இருக்கவேண்டும். அன்றி இச்சடங்கிற்கு முன்னால் தம்பதிகளின் சரீராரோக்யத்தை கவனிக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். ஸுஸ்ருதரின் விதிப்படி இச்சடங்கிற்கு முன் தம்பதிகள் வைத்தியப் பரீட்சைக்குட்பட வேண்டும். அப்பரீட்சையின் பேரில் அவர்கள் அனுமதிபெற்றே மணம்செய்து கொள்ள வேண்டும். இவ்விதியை மீறி மணம் செய்துகொள்ளும் தம்

பதிகளும், அவர்களின் மக்களும் அனேக விதமான வியாதிகளுக்குட் படுகின்றனர்.

இல்லறத்தில், புருடன் மனைவியர்களின் கடமைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் புருடன் மனைவியர்கள் ஒருவருடனொருவர் எப்படி நடந்து கொள்ளவேண்டும், சரீரங்களை எப்படி காப்பாற்றிக்கொள்ளவேண்டும், குழந்தைகளை எப்படி வளர்க்கவேண்டும், என்ற பல விஷயங்களைக்குறித்து விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால் ஒவ்வோர் ஆர்யனுடைய வாழ்வும் கீதையில் சொல்லியுள்ளபடி "பலனை நாடா—பந்தமிலா—கர்மயோகமேயாகும். காரியம் புரிய வேண்டியது அவன் கடமையே அன்றி அதன் பலனை அவன் எதிர்பார்த்தல் கூடாது.

இதை முடிப்பதன் முன் ஒவ்வோர் இந்துவும் இப்பதினாறுசடங்குகளின் உண்மைத்தத்துவங்களை அறிந்து அதன்படி ஒழுகி அவர்களின் வாழ்க்கையை பயனுடைய வாழ்க்கையாகச் செய்து கொள்வார்களென்று நம்புகின்றோம்.

வர்ணாஸ்ரமதர்மமே இந்துமதத்தின் சாரம் என்றுசொல்லப்படுகின்றது. அதை இப்பதினாறு சடங்குகளைச் செய்வதன்னியில் அடையமுடியாதென்பதை ஒவ்வோர் இந்துவும் தெரிந்து கொள்ளவேண்டும்.

அர்த்தமில்லாமல் மந்திரங்களை கிளிப்பிள்ளையைப் போல் ஒப்புவிப்பதிலோ, காரணத்தை அறியாமல் குருட்டுத்தனமாக

சடங்குகளைப் புரிவதிலோ பலனுண்டு என்று ஆர்ய சமாஜம் நம்புவதில்லை. ஆகையால் இப்புத்தகத்தில் எல்லா மந்திரங்களுக்கும் அர்த்தம் எழுதி இருக்கின்றோம். ஆகையால் வாசகர்கள் நல்லபலனைப் பெறுவார்களென்று நம்புகின்றோம்.

சென்னை,
1—5—1934.

பண்டிட் கே. ஞானி.
ஆர்யன் மிஷினரி.

ஓம்.

சமஸ்கார விதி

நான்முகம்

அறிவிற் பெரியீர்!

திருவளர்ந்தோங்கும் பாரதகண்டத்தில் நிகழ்காலத்தில் வதியும் மக்களுள் வேதநூல் விதித்துள்ள பதினாறு வகைச் சடங்குகளையு மறிந்தொழுகுபவர் எவருமில்லை யெனலாம். எவ்வெக்காலங்களி லெவ்வெச் சடங்குக ளியற்றல் வேண்டு மவற்றாலாய பயனென் னெனுமறிவே நம் தேயத்தைவிட்டு நீங்கிற்றென வியம்ப வையமேதுளது? இதன் காரணமென் னையோ வெனிற், சடங்குகளின்கண் காரியபாகங்களை யனுசரித்து ஏற்பட்டுள மந்திர மொழிகளின் உண்மையுரையை யுணராது, பலவேறுபட்ட உரைகளைக் கொ[illegible]னாலேயே யெனலாம். ஆதலின் தற்கால மிந்தியாவில் செயப்பட்டு வருஞ் சடங்குகளெல்லாம் வேதத்தி னுண்மைப் பொருளுக் குப் புறம்பாய்ப் பல்வேறு பாகுபாடுகளுடன் செயப்பட்டு வருகின்றன வென்பதி லையமில்லை.

ஆதலின் இந்நூலின்கண் வேதத்திலுள்ள உண்மைப் பொருள் வரைந்துளது. வரைந்துள்ளமையினால் இந்நூல் வேதப் பிரியர்களுக்கோர் தலைமை மறையோனாக விளங்கும் எனலாம்.

இந்நூல், இந்து தேயத்தி னஞ்ஞான விருளை நீக்கி ஞான வொளி யுண்டாக்கி, வேதவுரையாளர்களின் தப்பெண்ணங்களைப் போக்கி, மக்களை யுண்மைவழியி லூக்கி அவர் தம்மை உய்விக்க வேண்டி உவந்தவதரித்த உத்தமச் செல்வராம் வேதவுரையாளர் மகரிஷி சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களின் “சமஸ்கார விதி” என்னும் நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

ஆரிய தேயத்திற் பிறந்தோ ரனைவரு மவசிய மனுட்டிக்க வேண்டிய இவ்வரிய சடங்குகளை அனைவரு மனுட்டித்துச், சகல இகபர சுகங்களைப் பெற்றுய்வார்களாக !

இப்படிக்கு,

கு. கண்ணையன்.

முக்கிய அறிவிப்பு

சகோதரர்களே !

தயைகூர்ந்து கீழ்வருவனவற்றை ஊன்றிப் படியுங்கள்.

நம் இந்து மதத்தை நிலைநிறுத்தல் வேண்டி பாடுபட்ட அனேக மதாச்சாரியர்கள் தம்மெண்ணங்க ளீடேற்றாமையே கொண்டொழிந்தனர். காரணம் என் ? நம் மதநூலாம் வேதத்தினுண்மைப் பொருளையறிய வேண்டுமளவு தேவபாடையின்க ணவ்வளவு திறமையின்மையே காரணம். அப்பாடையினற்பத் தேர்ச்சியினாற் பொருளாராய்வான் புக்கு, மற்றுமிந்து மதம் நாசமாம் வழியே அதினின்றும் பொருள்கொள்வர்னேற்பட்டது. ஆனால் தற்கால மவ்விடர் “தயானந்த சரஸ்வதி”யாரினரிய திறமையினா லொழிந்தது.

ஆதலினின்னூலை வாசிக்கு மன்ப ரறிய வேண்டிய முக்யமாவ தென்னெனி னின்னூலின்கண் வரும் சூரிய, சந்திர, வாயு, அக்னி முதலாய பலவேறு பெயர்களும், சகலத்தினும் நிறைந் திலகு மினிய காது, நாசி, முகம் முதலாய இந்திரியங்களானும் மனதானு மறியமுடியா முழுமுதற் கடவுளின் நாமங்களேயாகும். அவரி னற்புதத் திருவிளையாடலைக் குறித்து மன்னாரி னம்சங்களைத் தோத்தரித்தும் மறைமொழி ஏற்பட்டுள தாயி னவற்றைப் பலவேறு கடவுளர்களாகக் கொள்ளு மறிவீனரின் மதியை என்னென்பது ? உதாரணமாக ‘விஷ்ணு’ எனும் தேவ பாடை பதத்தை ஓர் தனிக் கடவுளாகக் கொள்கின்றனர். ஆனால் ஆராய்ந்து நோக்கி னவ்வாறு ஏற்படுதலில்லை. எனின் ‘விஷ்ணு’ எனும் பதம் விஷ் எனின் நுழை யெனப் பொருள்: சகலத்தினும்

நுழைந்திருப்பவன் 'விஷ்ணு'. இதில் 'விஷ்ணு' என் பது தனிப்பட்ட ஓர் தெய்வமெனப் பொருளாகின்றதா? அவ்வாறே சகல நாமங்களு மோரே பகவனின் வர்ணனைக ளாகும்.

நிற்க, இந்நூலின்கண் தேவபாடைச் சொற்களுக்குப் பதிலாகத் தமிழ்ச்சொற்களை ஆண்டிருக்கிறேன். அவைகளை எளிதின் அறியும் பொருட்டுக் கீழே தமிழ்ப் பதங்களுக்கு உரிய தேவ பாடைப் பதங்களைக் காட்டியிருக்கின்றேன். ஆகையால் நூலை வாசிக்கப்புகுமுன்னேயே வாசகர்கள் அவற் றை நன்றாகத் தெரிந்து கொள்ளல் மிகவும் நல்லது.

இப்படிக்கு,

கு. கண்ணையன்.

தமிழ்ப் பதங்களுக்குச் சரியான தேவ பாடைப் பதங்கள்.

பரிதி—சூரியன்	திங்கள்—சந்திரன்
சுடர்—அக்கினி	தாரணி, பூமி—பிருதிவி
புனல், நீர்—வருணன்	வாசவன்—இந்திரன்
போதன்—பிரஹ்மா	வாணி—சரஸ்வதி
கொண்டல்—மேகம்	கூற்றுவன்—எமன்
பவனன்—வாயு	வேள்வி—யாகம்
மறை—வேதம்	தடவு—ஓமகுண்டம்
சமித்து—யாகவிறகு	சமித்தம்—ஓம மண்டபம்
பரிமளம்—ஸுகந்தம்	வீரியங்கள்—புஷ்டிகாரி
சுவைகள்—மிஸ்டம்	வியாதி நிவர்த்திகள்—ரோக
குண்டுமணி—ரத்தி	கிச்சடி—கீர் [நாசகம்
சுவைச்சாதம்-மோகனபாகம்	தேவருணவு—அவிர்பாகம்
நெய்விடல்—ஆஹுதி	பாகபாத்திரம்—ஸ்தாளீபாகம்

நீர் தெளித்தல்—மார்ஜனம்

நீருட்கொளல்—ஆசமனம்	தீமூட்டல்—அக்ன்யாதானம்
அத்தாட்சி—ப்ரமாணம்	மறைமாணவன்—ப்ரம்மசாரி
இல்லறன்—கிருஹஸ்தன்	வனவாஸி—வானப்ரஸ்தன்
துறவி—சன்யாஸி	வேள்வியதிகாரி—ருத்விக்
தழ்ட்டுதி-அக்னிஹோத்ரம்	சூற்றாய்—கற்பிணி
நாந்தகம்—கத்தி	நெய் ஆகுதி—ஆஜ்யாகுதி
அறம்—தர்மம்	சுவைக்கலப்பு—மதுபர்க்கம்

கூட்டுவேளைத் தொழுகை—சந்தியாவந்தனம்

பெற்றோர்சேவை—பித்ருயக்ஞம்

விருந்தோம்பல்—அதிதி யக்ஞம்

உவா—பௌர்ணமி	அமை—அமாவாசை

மறையோன்—பிர்ப்பனன் உயிர்வயம்—பிராணாயாமம்
கால் கழுவுதல்—பாத்யம் முகம் கழுவுதல்—அர்க்யம்
வாழ்த்துதல்-ஆசீர்வதித்தல் தொழுகை—ஸ்துதி
அமைதி—சாந்தி அருள்—ஸ்வஸ்த்தி

மகப்பேற்றுச்சடங்கு—கற்பாதானம்
சுதர்வயச் சடங்கு—பும்ஸவனம்
அகமத்தச்சடங்கு—ஸ்ரீமந்தம்
சிசுதோற்றச் சடங்கு—ஜாதகர்மம்
பெயரிடுஞ் சடங்கு—நாமகரணம்
வெளிவிடுஞ் சடங்கு—நிஷ்க்ரமணம்
சாதமூட்டற் சடங்கு—அன்னப்ரசானம்
குழல்நீக்குச் சடங்கு—சூடா கர்மம்
காதுகுத்தற் சடங்கு—கர்ணவேதம்
பூணூற் சடங்கு—உபநயனம்
கலைதுவக்கற் சடங்கு—வேதாரம்பம்
இல்நுழைவுச் சடங்கு—ஸமாவர்தனம்
திருமணச்சடங்கு—விவாஹம்
நீறுக்குச் சடங்கு—அந்த்யேஷ்டம்
இல்லறசீலச் சடங்கு—க்ருகாஸ்ரம சம்ஸ்காரம்
வனவாசச் சடங்கு—வானப்ரஸ்த சம்ஸ்காரம்
சூதக பருவம்—ருதுதானம்.

ஓம்

முகவுரை

அறிவிற் சிறந்த பெரியோர்களுக் கறிவிப்ப தென்னெனின், நான் அனேக அறிவாளிகளி னபிப்பிராயங் கொண்டு விக்ரமாதித்ய சகாப்தம் 1932 வருடம், கார்த்திகை மாதம், தேய்பிறை, 30 ஆந் திகதி சனிக்கிழமை தினம் 'சம்ஸ்கார விதி' என்னும் இந்நூலை ஆரம்பித்தேன். அதில் தேவபாடை (சம்ஸ்கிருதம்) பாடமொன்றும், உரைப் பாடமொன்றுமாக வரைந்திருந்தேன். இக்காரணத்தினால் தேவபாடையு முரையும் வெவ்வேறிடங்களி லிருந்தன வாதலால் கிரியைகள் புரிவோர்க்கு அது மிகவும் கடினமாயிருந்தது. அவ்வாறே அப்போழ் தச்சிடப்பட்ட 1000 பிரதிகளில் இப்போழ் தொன்றுமில்லை. ஆதலின், மறுபடி விக்ரமாதித்ய சகாப்தம் 1940ம் வருடம் ஆடிமாதம் 13 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆராய்ந்தச்சிட வெண்ணினேன். ஆனால் இவ்வமயம் எந்தெந்தச் சடங்குகட்கு எந்தெந்த உபயோகம்—உரை—அத்தாட்சி உண்டோ அவ்வவற்றை அவ்வவற்றிற் கருகிலேயே வரைந்துளேன். அன்றிச், சடங்குகளெல்லாவற்றிலும் பொதுவாகச் செய்யவேண்டுவனவற்றை வரிசையாகவும், தனியாகச் செய்யவேண்டுவனவற்றை அவ்வச் சடங்குகளிலும் வரைந்துளேன். முதற் பதிப்பில் வரைந்துள்ளவற்றில் அவசிய மில்லாதவைக ளவையோ அவற்றை நீக்கியும், அப்பதிப்பினி லில்லாத அவசியமான

சிலவற்றைச் சேர்த்தும் இது வரையப்பட்டுள்ளது. இது கொண்டு முதற்பதிப்பிற் கண்ட விடயங்கள் அவசியமில்லாதனவென் றெண்ணுதற் கூடாது. அவற்றின் முக்ய கருத்துக்களை முதலில் தேவபாடையில் மாத்திரம் வரைந்திருந்தேன். அவைகளைப் பிறரறிந்து கொள்ளுதல் கடினமாயிருந்தது பற்றி இப்பொழுது சுலபமாக மாற்றியிருப்பதுடன் அதில் சேர்க்காது விட்டிருந்த சில விடயங்களையும் இதிற் சேர்த்துளேன். ஏனெனில், தேவபாடையி லிருந்ததைப் பண்டிதர்களன்றி யேனையோ ரறிந்து கொள்ளக் கூடவில்லை. இதிற் சடங்குகளுக்கு ஆரம்பத்திலும், சமயோசிதமான விடங்களிலும் அவசியமாகச் செய்ய வேண்டிய சாமான்ய விடயங்களைப், பொதுக் சடங்குகள் எனும் அங்கத்தில் வரைந்துளேன். இதில் வரைந்துள்ள மந்திரக் கிரியைகளுங் கூட சடங்குகளியற்றும் பாகத்திலும் வரைந்துள்ளேன். பொதுச்சடங்குகள் விதியைக்கூட இதில் எழுதியிருக்கிறேன். எனில் இவ்விதிகளைக் கொண்டே சடங்குகளின் காரியங்களைச் செய்தல்கூடும், பொதுச் சடங்குகள் அங்கத்தில் வரைந்துள விதி அனேக விடங்களில் அனேக தடவை உச்சரிக்கப்படும். நெருப்பு மூட்டல் ஒவ்வொரு சடங்குகளிலும் வகித்துள்ளவாறு பொதுச்சடங்குகளோரிடத்தில் வரையப்பட்டுள்ளதால், சடங்குகள் எல்லாவற்றிலும் திரும்பத் திரும்ப எழுதவேண்டியிராது.

இதில், முதலில் கடவுள் துதி, அருள் வேண்டல், அமைதி வேண்டற் பாடங்கள், பொதுச்சடங்குகள், மகப்பேற்றுச் சடங்குகள் முதலாக நீறுக்குச் சடங்கு வரையுள்ள 16 சடங்குகள் முதலியன வரிசையாக எழுதப்பட்டுள்ளன. இதிற் கண்டுள்ள எல்லா மந்திரங்களுக்கும் உரை எழுதப்படவில்லை. ஏனெனில் இதிற் கரும காண்டங்களின் விதியிருப்பதினால் விசேடமாகச் செய்கைவழிகளை 'எழுதியுள்ளேன். எங்கெங்கு உரை அவசியமோ அங்கங்கு உரையும் வரைந்துள்ளேன். மந்திரங்களி னுண்மையுரை என்னாலெழுதப்பட்டுள்ள 'வேத பாஷ்யம்' என்னும் நூல் கொண்டிருக்கிறது. விரும்புவோர் அங்குக் கண்டுகொள்ளலாம். இங்குக் காரியஞ் செய்தலே முக்யம். இவைகளால், சரீரமும் ஆத்மாவும் பரிசுத்தமடைவதுடன் சதுர்வித புருஷார்த்தங்களுங் கிட்டுவதாகும். அன்றி, உத்தம மக்கட்பேறு முண்டாம். ஆதலால், இத்யாதி சகல சம்ஸ்காரங்களையும் புரிவது மனிதருக்கு மிகவு மவசியம்.

இப்படிக்கு,

தயானந்த சரஸ்வதி.

அவையடக்கம்.

(ஆசார்யனும் மாணவனும் சேர்ந்து செய்யும் பிரார்த்தனை)

ஓம் சஹ நாவவது; சஹநௌ புநக்து; சஹவீர்யங்கர
வாவஹை; தேஜஸ்வி நாவதீதமஸ்து, மாவித்விஷாவஹை;
ஓம் ஷாந்தி: ஷாந்தி: ஷாந்தி:—தைத்ரீய ஆரண்யகம்.
அஷ்டம பாடம்; ப்ரதம வாசகம்.

சர்வாத்மா சச்சிதானந்தோ விஸ்வாதிர் விஸ்வக்ருத் விபு:
பூயாத்தமாம் சஹாயோ நஸ்ஸர்வே ஸோங்யாயக்ருச்சுசி: (1)
கர்பாத்யா ம்ருத்யுபர்யந்தா; சம்ஸ்காரா: ஷோடசைவஹி
வக்ஷ்யந்தே தம் நமஸ்க்ருத்யா நந்தவித்யம் பரமேஸ்வரம் (2)
வேதாதி சாஸ்த்ர சித்தாந்த மாத்யாய பரமாதராத்
ஆர்யைதிஹ்யம் புரஸ்க்ருத்ய சரீராத்ம விசுத்தயே (3)
சம்ஸ்காரைஸ்ஸம்ஸ்க்ருதம் யத்யன்மேத்யமத்ர ததுச்யதே
அசம்ஸ்க்ருதம் து யல்லோகே ததமேத்யம் ப்ரகீர்த்யதே (4)
அத: சம்ஸ்காரகரணே க்ரியதாமுத்யமோ புதை:
சிக்ஷயௌஷதிபிர்நித்யம் சர்வதா சுகவர்தன: (5)

குறிப்பு:—மந்திரங்களில் திக் எழுத்தில் வரும் க, ட, த, ப முதலிய எழுத்துக்களை அழுத்தமாக உச்சரிக்கவும். (உ-ம்.) க—புஸ்தகம்; ப—படம்; த—இந்து; ப—பம்பரம்.

: இம்மாதிரியான குறி ஹகாரத்திற்குப் பதிலாக வருவது. ஆதலால் அக்குறி வரின் ஹகாரம்போலுச்சரிக்க. (உ-ம்.) அம்பா:—அம்பாஹா; சனி:—சனிஹி.

S இது அகர உச்சரிப்பு. ஆனால் உச்சரிப்பதில்லை.

க்ருதானிஹ விதானானி க்ரந்த க்ரந்த னதத்பரை:
வேத விக்ஞானவிரதைஹ: ஸ்வார்திபி: பரிமோஹிதை: (6)
ப்ரமாணை ஸ்தான்யனு த்ருத்ய க்ரியதே வேதமானத:
ஜனானும் சுகபோதாய சம்ஸ்கார விதிருத்தம: (7)
புஹூபி: சஜ்ஜனைஸ்சம்யங்மானவ ப்ரியகாரகை:
ப்ரவ்ருத்தோக்ரந்தகரணேக்ரமேஸோ S ஹம்நியோஜித: (8)
தயாயா ஆனந்தோவிலசதிபரோப்ரஹ்மவிதித:
சரஸ்வத்யஸ்யாக்ரே நிவசதிமுதா சத்யநிலயா
இயம் க்யாதிர்யஸ்ய ப்ரததசுகுணா ஹீஸ்ஸரணா S ஸ்த்ய
நேனாயம் க்ரந்தோரசித இதிபோத்தவ்ய மனகா: (9)
சக்ஷூராமாங்க சந்த்ரேப்தே கார்த்திகஸ்யாசிதேதளே
அமாயாம் சனிவாரே S யம்க்ரந்தாரம்ப: க்ருதோமயா (10)
விந்து வேதாங்க சந்த்ரேப்தேஸௌமேசுமாஸே S ஸிதேதளே
த்ரயோதஸ்யாம் ரவெளவாரே புந: சம்ஸ்கரணம் க்ருதம் ()

கடவுள் வணக்கம்.

சகல சடங்குகளின் ஆரம்பத்திலும், வித்வானுகிலும், அறிவுள்ள புருடனுகிலும், திடமனது கொண்டு, பகவானிடம் மனதை நிறுத்திக் கீழே வரைந்துள்ள மந்திரங்களை பொருள்விளங்கக் கூறல்வேண்டும்; கேட்போரனைவோரும் உண்மைப்ரீதியோடு கேட்கவேண்டும்.

(1) ஓம் விஸ்வானி தேவ ஸவிதர் துரிதானி பராஸுவ
யத் பத்ரம் தந்ந ஆஸுவ (யஜுர்-அத் 30, மந் 3)

இதன் பொருள்: ஏ! சகல உற்பத்திக் காரணராகிய தேவ! தாங்கள் எங்களுக்கு ஏற்படும் சகல தீமைகளையும் நீக்கி, சகல நன்மைகளையும் தந்தருளல் வேண்டும்.

(2) ஹிரண்ய கர்ப்ப: சமவர்த்ததாக்ரே பூதஸ்ய ஜாத:
பதிரேக ஆசீத் ஸ,தாதாரப்ருதிவீம் த்யாமுதேமாம்
கஸ்மைதேவாய ஹவிஷா விதேம. (யஜுர்-13-4).

(இ-ள்.) யார் தன் உள்ளத்தில் சகல பிரகாசங்களையும் வைத்திருக்கின்றனரோ, யார் உற்பவக் காரணரோ, யார் சகல உலகங்களையும் உண்டாக்கி அவற்றின் காரியாதிகளை நடத்துகின்றவரோ அவரே சூரியாதி கோளங்களையு மீந்தவராவார். அப்பேர்ப்பட்ட சுகரூபியான பகவனைத் தெரிந்து கொள்ளும் மார்க்கத்தை உண்மையுடன் செய்வோமாக—;

(3) ய,ஆத்மதா பலதா யஸ்வ விஸ்வ உபாஸதே ப்ரசிஷம்
யஸ்யதேவா: யஸ்ய ச்சாயா ம்ருதம் யஸ்ய ம்ருத்யு:
கஸ்மை தேவாய ஹவிஷாவிதேம

(இ-ள்.) மக்களுக்கு ஆத்ம ஞானத்தையும், சரீரபலத்தையுமளிக்குமவரைச் சகல வித்வான்களும் உபாசிக்கின்றனர். அவரால் அளிக்கப்படும் நியாய தண்டனையைச் சகலரும் ஒப்புக்கொள்கின்றனர். யார் சகல சுகங்களும் அவரால் அளிக்கப்படுகின்றன வென்பதை நம்புவதில்லையோ, அவர்கள் அவரால் அளிக்கப்படும் எமவாதனை முதலிய துக்கங்களால் பீடிக்கப்படுகிறார்கள். ஆதலின், நாம் அவரை (சகல சுகங்களுக்கும் இருப்பிடமாகிய அவரை) உள்ளன்புடன் பக்தி செய்து துதிப்போமாக—;

(4) ய, ப்ராணதோ நிமிஷதோ மஹித்வைக இத்ராஜா ஜகதோ
பபூவ. ய,ஈஸே அஸ்ய துவிபதஸ் சதுஷ்பத: கஸ்மை
தேவாய ஹவிஷா விதேம. (யஜுர்-23-3.)

(இ-ள்.) யார், உயிருள்ளனவும், இல்லாதனவுமாகிய எல்லாவற்றையும் உண்டாக்கினாரோ, அவரே எல்லோருக்கும்—எல்லாவற்றிற்கும் ஒரே அரசனாக விருக்கின்றார். அவர் பசு. மக்கள் முதலானவற்றை உற்பத்தி செய்தார். அந்தச் சகல சுகங்களின் இருப்பிடமாய பகவனை உத்தமக் காரியங்களால் நாம் பக்தி புரிவோமாக.—

(5) ஏனத்யௌருக்ரா ப்ருதிவீச, த்ருடா யேன ஸ்வ:
ஸ்தபிதம்யேன நாக: யோ அந்தரிக்ஷே ரஜஸோ விமான:
கஸ்மை தேவாய ஹவிஷா விதேம—,

(இ-ள்.) உருத்ர ரூபமுள்ளவர் எவரோ, சூரியாதிகளையும் பூமியையும் அளித்தவர் எவரோ, சுகங்களை ஈந்தவர் எவரோ, உத்தமப் பதவியையளிக்கின்றவரெவரோ அவரே ஆகாயத்தில் பறவைகள் பறப்பதே போல் சகல உலகங்களையும் அந்தரத்துண்டாக்கிச் சுற்றச் செய்கின்றார். நாம் அப்பேர்ப்பட்ட நான்முக ரூபரான பகவனை அளவின்றி துதிப்போமாகவும்—,

(6) ப்ரஜாபதேந, த்வதே தான்யன்யோ விஸ்வாஜாதானி
பரிதாபபூவ. யத்காமாஸ்த்தே ஜுஹுமஸ்தன்னோ
அஸ்து வயம் ஸ்யாமபதயோ ரயீணாம் (ரிக்-10-121-10)

(இ-ள்.) சகல மக்களுக்கும் அதிபதியாய பகவனே! உங்களைத் தவிர்த்து மற்றொன்றில்லை. [illegible]

சேதனப் பொருள்கள் விலக்குவதில்லை. தாங்கள் எல்லாவற்றிலும் உயர்ந்தவர். சகல ஆசை கொண்ட நாங்கள் தங்கள் அருளுக்குப் பாத்திரராவோமாக! எங்கள் காரியங்களைத்தும் நிறைவேறுமாறு அருள்புரிவீராக. எங்களுக்குச் சகல சம்பத்துக்களையும் அருள்வீராக—

(7) ஸ, நோ, பந்துர் ஜனிதா ஸவிதாதா தாமானிவேதபுவனானி விஸ்வா யத்ரதேவா அம்ருதமான ஸானஸ் த்ரிதியே தாமன்ன த்யை ரயந்த்த. (யஜுர்-32-10)

(இ-ள்.) அப்பகவன் நமக்குப் பந்து. படைக்குந் தொழில் சகலமும் புரிந்தார். பூரண ரூபியாகிய அவர் சகல உலகங்களினுடையவும் நாம இட ரூபங்களையும் அறிந்தவர். எவ்விதத் துக்கங்களும் இல்லாதவர்கள். பரமாத்மாவினிடம் சுகத்தைப் பெற்றுச் சுயேச்சையுடன் வசிக்கின்றனர். ஆதலால் நாமும் சதா அவரிடம் பக்தி செலுத்திக் கொண்டிருப்போமாக!—

(8) அக்னே நய ஸுபதா ராயே அஸ்மான் விஸ்வானிதேவ வயுனானி வித்வான். யுயோத்யஸ் மஜ்ஜுஹுராண மேனோ பூயிஷ்டான் த்தே நமயுக்திம் விதேம (யஜுர்-40-16)

(இ-ள்.) சகலப் பிரகாச ரூபரே! சகல சுக தாதாவே! தாங்கள் எல்லாவற்றிலும் தேர்ச்சியுற்றவர். ஆதலால், தாங்கள் எங்களை அறிவுவிளக்கம் பெறுவதற்குரிய நல்வழியில் சம்பூரண உத்தமக் காரியங்களைப் புரியும்படி திருப்புங்கள். அதோடு, எங்களிடமுள்ள கபடசிந்தையின் காரணமாகவுள்ள பாபங்களைத் தூரத்துங்கள். இவற்றிற்காகத்

தங்கட்கு அநேக விதங்களில் தாழ்மையுடன் வழிபாடியற்றி வருகிறோம். எங்களைச் சுகமுடன் வதியச்செய்யுங்கள்.

அருள் வேண்டல்,

---

(1) அக்னிமீளே புரோஹிதம் யக்ஞஸ்யதேவம்ருத்விஜம்.
ஹோதாரம் ரத்னதாதமம் (ருக்-1-1-1.)

(இ-ள்.) வெள்விரூப பகவனே! சுகதாதாவே! இரத்தினுதிபதீ! தங்களை அக்னி ரூபத்தில் துதிக்கின்றேன்.

(2) ஸன: பிதேவ ஸூநவே s க்னே ஸூபாயனோ பவ
ஸசஸ்வா ந: ஸ்வஸ்தயே (ருக்-1-1-9)

(இ-ள்.) சுடரொளியே! சகல சுகங்களையும் தகப்பன் பன் மகனுக்கு எவ்வாறு ஈவானோ அவ்வாறே நீயும் எங்களுக்கு ஈயக்கடவாய்.—

(3) ஸ்வஸ்தினோ மிமீதாமஸ்வினோ பக: ஸ்வஸ்திதேவ்ய
திதிரனர்வண: ஸ்வஸ்தி பூஷா அஸுகரோ ததாது ந:
ஸ்வஸ்த்தி த்யாவா ப்ருதிவீ ஸுசேதுனா (ருக்-5-51-11)

(இ-ள்.) தேவ! எங்களுக்குச் சுகசம்பத்துக்களை அருள் சூரியனே, கொண்டலே! எங்களுக்கு அருள் செய்யுங்கள்.

(4) ஸ்வஸ்த்தயே வாயுமுபப்ரவாமஹை ஸோமம் ஸ்வஸ்த்தி
[புவனஸ்ய யஸ்பதி:

ப்ருகஸ்பதிம் சர்வகணம் ஸ்வஸ்த்தயே ஸ்வஸ்த்தய
ஆதித்யாஸோ பவந்து ந꞉ (ருக்-5-51-12)

(இ-ள்.) பகவனே! திங்களே! உங்கள் அருளைப் பெறவே நாங்கள் உபாசிக்கின்றோம். உலகத்தில் எவ்வெப் பகலானினம்ப்ரங்களுள்ளனவோ அவைகளெல்லாம் எங்களுக்கு அருள் செய்யவும். ஆதித்யனே! நீ எங்களுக்கு அருள் புரிவாயாக.

(5) விச்வேதேவானோ அத்யா ஸ்வஸ்த்தயே வைச்வானரோ
வஸுரக்னி꞉ ஸ்வஸ்த்தயே தேவா அவந்த்வ்ருபவஹ
ஸ்வஸ்த்தயே ஸ்வஸ்த்திநோ ருத்ர꞉ பாத்வம் ஹஸ꞉
(ருக்-5-51-13)

(இ-ள்.) இன்னு வசு, சுடர், உருத்திரன் முதலாய சகல தேவதாம்சங்களும் நமக்கு அருள்மாரி பொழியட்டும்.

(6) ஸ்வஸ்த்திமித்ரா வருணாஸ்வஸ்த்தி பத்யே ரேவதி
ஸ்வஸ்த்தின இந்த்ரஸ்சாக்னிஸ்ச
ஸ்வஸ்த்திநோ அதிதேக்ருதி (ருக்-5-51-14)

(இ-ள்.) மித்திரன், வருணன், வாசவன், தேவாதி தேவம்சங்கள் அருள் பொழிவோராவர். ஏ ஆதித்யனே! நீ எங்களுக்கு அருள் பொழிவாயாக!

(7) ஸ்வஸ்த்தி பந்தா மனுசரேம சூர்யா சந்த்ரமஸாவிவ |
புனர்த்ததாக்ன தாஜான தாஸங்கமேமஹி (ருக்-5-51-15)

(இ-ள்.) சூர்ய, சந்த்ராதிகளால், பொழியும் அருள் வெள்ளத்தாழ்ந்து நம் பாவங்கள் நீங்கப்பெற்று ஞான ரூபிகளைப் போன்று துளிர்வோமாக.

(8) யேதேவானாம் யஜ்ஞியா யஜ்ஞியானாம் மனோர்யஜத்ரா
அம்ருதாருதஜ்ஞா꞉| தேனோ ராஸந்தா முருகாய மத்ய
யூயம் பாத ஸ்வஸ்த்திபி꞉ ஸதான꞉ || (ருக்-7-35-15)

(இ-ள்.) உத்தம ஞானரூபிகள் ரூபமாய் வதியும், மரணமிலா சத்தியஞானரூபி யாரோ, அவரைப்பிரார்த்தித்து நாம் சர்வதுக்கங்களைப்போக்கி, அருள்வெள்ளத்திற் றிளைப்போம்.

(9) யேப்யோ மாதா மதுமத்பின்வதே பய꞉ பீயுஷம் த்யௌ
ரதிதி ரத்ரிபர்ஹா꞉| உக்த்தசுஷ்மான் வ்ருஷபரான்
ஸ்வப்ன ஸஸ்த்தாம் ஆதித்யாகும் அனுமதாஸ்
வஸ்த்தயே || (ருக்-10-63-3)

(இ-ள்.) எவருடைய உதவியால் தாயாரையொத்த பூமியும், விரிந்த மேகங்களும், மின்னொளி வீசும் விரிந்த ஆகாயமும், இனிமை பானத்தை யொத்த மழையும் நடைபெறுகின்றனவோ, அப்பேர்ப்பட்ட உலக சுகங்களை யீவோனாய ஆதித்யனை (சூர்ய கிரணங்கள்) அருள்மாரி பொழியுமாறு வேண்டுவோம்.

(10) ந்ருசக்ஷஸோ அநிமிஷந்தோ அர்ஹணாப்ருஹத்தேவா
ஸோ அம்ருதத்வ மானசு꞉ ஜ்யோதிரதா அஹிமாயா
அனாகஸோ திவோ வர்ஷ்மாணம் வஸதே ஸ்வஸ்த்தயே||
(ருக்-10-63-4)

(இ-ள்.) எவன் பாபரஹித ஞானரூபியாய் ரதாரோகணித்து சர்வத்தையும் விசாரிக்கும் கர்த்தனாய், மனிதர்களின் கிருத்தியங்களை நிதர்சனமாய் நோக்குபவனாய், வித்வான்களால் பூஜிக்கப்படுபவனாய், முக்திபுலகத்தின் முக்கிய வழியாய் வசிப்பவனோ; அவன் நமக்காக அருள்புரிவானாக.

(11) ஸம்ராஜோயே ஸுவ்ருதோ யஜ்ஞமாயயுரபரிஹ்ருவ்ருதா
ததிரே திவிக்ஷயம்| தாம் ஆவிவாஸ நமஸா ஸுவ்ருக்தி
பிர்மஹோ ஆதித்யாம் அதிதிம் ஸ்வஸ்த்தயே ||
(ருக்-10-63-5)

(இ-ள்.) எவன், சதா வுன்னத ரூபியாய், யாகாதி நற்காரியங்களின் பலனை யீவோனாய், முக்தியளிக்கச் சாதனமான வழியில் வசிப்பவனாய் இருக்கின்றானோ! அவனை நமக்கருள்செய்யுமாறு வணக்கம் செய்வோமாக.

(12) கோவ: ஸ்தோமம் ராததியம் ஜுஜோஷத விச்வே
தேவாஸோ மனுஷோ யதிஷ்டன| கோவோத்வரம்
துவிஜாதா அரம்கரத்யோ ந: பர்ஷதத்யம்ஹ:
ஸ்வஸ்த்தயே ||
(ருக்-10-63-6)

(இ-ள்.) ஏ! இகபர கர்த்தாவே! யார் யாகாதிகளால் தங்களருளை நாடுகின்றனரோ அவர்கள் பாபங்களை நசிக்கச் செய்பவர்கள். நீ சகல அலங்காரரூபனாய், யார் யார் எவ்வெவைகளை வேண்டுகின்றனரோ அவ்வவைகளை யீபவனாவாய்.

(13) யேப்யோ ஹோத்ராம் ப்ரதமாமாயேஜேமனு:
ஸமித்தாக்னிர்மனஸா ஸப்த ஹோத்ருபிஹி தஆதித்ய
அபயம் சர்மயச்சத ஸுகா ந: கர்த்த ஸுபதா
ஸ்வஸ்த்தயே ||
(ருக்-10-63-7)

(இ-ள்.) நிதமும் யாகாதிகளால் பூஜிக்கப்பட்ட சிலரை தங்களுக்கு மனப்பூர்த்தியாய் வந்தனம் செய்கின்றோம். ஏ! ஆதித்ய ப்ரம்மசாரி! நாங்கள் உன் அடைக்கலம். யேங்கள் அருள்வெள்ளத்தைப் பெறுவதற்காக எங்களை சத்தியவழியில் நடத்துவிப்பீராக.

(14) ய ஈசிரே புவனஸ்ய ப்ரசேதஸோ விச்வஸ்ய ஸ்த்தா
தூர்ஜக தஶ்சமந்தவ:| தே ந: க்ருதா தக்ரிதா
தேன ஸஸ்பர்யத்யா தேவாஸ: பிப்ருதாஸ்வஸ்த்தயே||
(ருக்-10-63-8)

(இ-ள்.) எவன் தாவர ஜங்கமாதி சகல உலகப்பொருள்களையும் அதனதன்படி உண்டாக்கி அதிகாரம் செய்கிறானோ, அவன் இன்று நம்முடைய செய்ததும் செய்யாததுமாகிய சகல பாபங்களையும் நீக்கிக் காப்பாற்றுவானாக.

(15) பரேஷ்விந்த்ரம் ஸுஹவம் ஹவாமஹேஹோமுசம்
ஸுக்ருதம் தைவ்யம்ஜனம்| அக்னிம் மித்ராம் வருணம்
ஸாதயே பகம் த்யாவா ப்ருத்வீ மருத: ஸ்வஸ்த்தயே||
(ருக்-10-63-9)

(இ-ள்.) பாபத்தினின்று விடுபட விரும்பி, நிராசையுடன், உத்தமக்கார்யங்களி லீடுபட்டு ஆத்திகமதங்கொண்ட உத்தமப் புருடர்கள் யாரை உபாசிப்பார்களோ அவரை அருள் பொழியுமாறு நாங்கள், அக்கினி, சூர்ய இன்னும் மழை, ஆகாயம், வாயு முதலாய பௌதிக சத்திகளால் வேண்டுகின்றோம்.

(16) ஸுத்ரமாணம் ப்ருதிவீம் த்யாமனேகஸம் ஸுசர்
மாணமதிதிம் ஸுப்ரணீதிம்| தைவீம் நாவம் ஸ்வரித்
ராமனு கஸமஸ்ரவந்தீ மாருஹேமா ஸ்வஸ்த்தயே ||
(ருக். 10-63-10)

(இ-ள்.) நாங்கள் அருள்மாரிக்காகப், பாபமில்லா, ஆசையில்லா, நற்கருமங்களையே புரிந்துவருவோமாக!

(17) விஸ்வேயூஜத்ரா அதிவோசதோதயே த்ராயத்வம்நோ
துரேவாயா அபிஹ்ருத꞉| ஸத்யயாவோ தேவஹூத்யா
ஹுவேமச்ருண்வதோ தேவா அவஸே ஸ்வஸ்த்தயே||
(ருக். 10-63-11)

(இ-ள்.) சகல பூஜைகளின் கர்த்தா! நாங்கள் எங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் மார்க்கத்தைப்பெறத் தாங்கள் எங்களுக்கு உபதேசியுங்கள். துக்கத்தை யளிக்கும் கெட்ட காரியத்திலிருந்து விலக்குங்கள். தங்களருளைப்பெறச் சத்தியமாகிய வேதவாக்கியங்களால் துதி செய்கின்றோம்.

(18) அபாமீவாமப விஸ்வாமனு ஹ்ருதிமபாராதிம் துர்
விதத்ரா மகாயத꞉| ஆரேதேவா த்வேஷோ அஸ்மத்
யுயோதனோருண꞉ சர்மயச்சதா ஸ்வஸ்த்தயே ||
(ருக். 10-63-12)

(இ-ள்.) ஏ! கருணை வள்ளலே! எங்களை எங்கள் வியாதிகளினின்றும், யாகாதிகளைப் புரியாதவரினின்றும், லோபி, பாபவான்கள், துர்க்காரியங்களைப் புரிபவர், சத்துருக்கள் முதலியவர்களினின்றும் பிரித்துத் தங்களருள்வெள்ள மீந்து சுகமுண்டாகச் செய்யுங்கள்.

(19) அரிஷ்ட꞉ ஸமர்த்தோவிச்வ ஏததேஸ ப்ரஜாபிர்ஜாயதே
தர்மணஸ்பரி| யாமாதித்யாஸோ நயதாஸு நீதிபிரதி
விஸ்வானி துரிதா ஸ்வஸ்த்தயே || (ருக். 10-63-13)

(இ-ள்.) ஏ ஆதித்ய! எவன் நின்பாலருள்பெற்று துர்க்கிருத்தியங்களை யொழியப்பெற்றுச் சன்மார்க்கத்தில் நடத்தப் படுகிறானோ. அவனுலிவ்வுலகிலுள்ள சகல ஜீவர்களும் சுகமடைகிறார்கள்.

(20) யம்தேவாஸோऽவத வாஜஸாதெளயம் சூரஸாதா
மருதோ ஹிதேதனே | ப்ராதர்யாவாணம் ரதமிந்த்ர
ஸானஸி மரிஷ்யந்த மாருஹேம ஸ்வஸ்த்தயே ||
(ருக் 10-63-14)

(இ-ள்.) ஏ, மருததேவ! தாங்கள் விடியற்காலம் எதை நடத்துகின்றீர்களோ, பரிசுத்தமடைய விரும்பும் வித்வான்கள் எதன்மேலமர்வார்களோ, தீவிர கதியுடன் ஓடக்கூடியது எதுவோ அப்பேர்ப்பட்ட இரதத்தில் நாங்கள் உங்களருளைநாடி வருவோமாக.

(21) ஸ்வஸ்த்தி ந꞉ பத்யாஸு தன்வஸு ஸ்வஸ்த்யப்
ஸுவ்ருஜனே ஸ்வர்வதி | ஸ்வஸ்த்தி ந꞉ புத்ரக்ருதே
ஷுயோனிஷு ஸ்வஸ்த்தி ராயேமருதோ ததாதன ||
(ருக்-63-15)

(இ-ள்.) ஏ! மருததேவ! தாங்கள் அசையுந்தருணத்திலு மசையாத்தருணத்திலு மெங்களுக்கருள் புரியுங்கள். யுத்த பூமியிலும், ஜலமயமான நதி சமுத்திரங்களிலும், இன்னும் மற்றவிடங்களிலும், அருள்புரியுங்கள். இன்னும் புத்ரோத்பத்தி, தனதான்யாதிகளிலு மருள்புரியுங்கள்.

(22) ஸ்வஸ்த்திரித்தி ப்ரபதேச்ரேஷ்டாரேக்ணஸ்வஸ்த்ய
பிர்யா வாமமேதி! ஸானோ அமாஸோ அரணே நிபாது
ஸ்வா ஸ்வீரவேசா பவது தேவ கோபா꞉||
(ருக்-10-63-16.)

(இ-ள்.) எவர் இவ்வுலகத்தில் தனதான்யாதிகளில் சம்பூர்ணராயும், யாகாதி நற்காரியங்கள் புரிவோர்க்குப் பலனீபவராயும் இருக்கின்றாரோ அவர் எங்களை நற்கதியில் செலுத்த

அருள்செய்பவர். இவ்வுலகத்தின்கண் அழகிய மனைகளிலாயினும், காடுகளிலாயினும் வசிப்போரனைவர்க்கு மருள் புரிய வருமவரே யாகும்.

(23) இஷேத்வோர்ஜ்ஜேத்வாவாயவஸ்த்ததேவோவ: ஸவிதா
ப்ரார்ப்பயது ச்ரேஷ்டதமாயகர்மண ஆப்யாயத்வ மக்ன்
யா இந்த்ராயபாகம் ப்ரஜாவதீரனமீவா அயக்ஷ்மாமா
வஸ்தேன ஈசதமாகஸகும்ஸோத்ருவா அஸ்மின் கோப
தௌஸ்யாதபஹ்வீர்யஜமானஸ்யபசூன் பாஹீ ||
(யஜபிர்-1-1.)

(இ-ள்.) சகல உலகையுமீந்து, காற்றைப் போன்றெங்கும் வியாபித்துள பகவானே! தாங்கள் சகல ஜீவர்களுள்ளும் புறம்புமாகி, சகல ஜீவர்களும் பலசாலிகளாய் உத்தம காரியங்களைப் புரியும் பொருட்டு ஐஸ்வர்யபோகாதி சுகங்களையீவாய்! அத்துடன் ஜீவர்களுள்ளத்தின்கண் அன்புண்டாகச்செய். எவர் திருடர்களாயும், பாபிகளாயு முள்ளாரோ அவர்களால் மற்றோருக்குத் தீங்கணுகாமற் செய்வாயாக.

(24) ஆநோ பத்ரா ஃக்ரதவோ யந்து விச்வதோऽதப்தாஸோ
அபரீ தாஸ உத்பிதஹ தேவானோயதா ஸதமித்வ்ருதே
அஸன்னப்ராயுவோ ரக்ஷிதாரோதி வேதிவே ||
(அத-ம் 25-14.)

(இ-ள்.) எங்கள் சகல யாகாதி நற்காரியங்கள் ஓர் குற்றமுமின்றி உத்தம வழியில் நடைபெறுக. பிரதிதினமும் பகவானின் அருளைப்பெறும் வழியில் காரியங்களியற்றுவோமாக.

(25) தேவானும் பத்ரா சுமதிர்ருஜூயதாம் தேவானுகும் ராதி
ரபிநோ நிவர்த்ததாம் தேவானுகும் ஸக்யமுபஸேதிமா

வயம் தேவாந ஆயு ஃப்ரதிரந்து ஜீவஸே|| (அம். 25-14.)

(இ-ள்.) தூயகுண வித்வான்களுடைய அறிவெங்களுக்குண்டாகட்டும். அவர்களெங்கள் நேசர்களாகட்டும். அனேக காலம் ஜீவித்திருக்க அவ்வித்வான்கள் நமக்கருள் செய்வார்களாக.

(26) தமீசானம் ஜகஸ்தஸ் தஸ்துஷஸ்பதிம் தியஞ்ஜின் வம
வஸே ஹூமஹேவயம்| பூஷாநோ யதாவேதஸாம சத்
வ்ருதே ரக்ஷிதா பாயுரதப்த ஃஸ்வஸ்தயே ||
(அத-ம்-25-18.)

(இ-ள்.) படைத்தற் றொழிற் கருத்தா! அறிவை எங்களுக்கு விளங்கச் செய்யுமாறும், காரியாதிகளில் ஏற்படும் விக்கினங்களை நிவர்த்திசெய்தும் பூரண அருள் பாலிப்பீராக!

(27) ஸ்வஸ்திந இந்த்ரோ வ்ருத்தச்ரவா ஃஸ்வஸ்திந ஃ
பூஷா விச்வவேதா ஃ| ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்
டநேமி ஃஸ்வஸ்திநோ ப்ருஹஸ்பதிர்ததாது ||
(அத-ம்-25-19.)

(இ-ள்.) அளவிலாக்கீர்த்தி கொள்ளுமிந்தரா! சர்வத்திலும் பூஜிக்கப்பட்டவனே! துக்கநிவாரணனே! பிருஹஸ்பதி எங்களுக் கருள்மாரி பொழியுங்கள்.

(28) பத்ரம் கர்ணேபி ஃ ச்ருணுயாம தேவாபத்ரம் பச்யே
மாக்ஷபிர்ய ஜத்ரா ஃ| ஸ்திரைரங்கை ஸதுஷ்ட்டவாகும்
ஸஸ்தனூபிர்வ்ய சேமஹி தேவஹிதம்யதாயுஹு ||
(யஜுர்-25-21.)

(இ-ள்.) ஏ பகவன்! நாங்கள் காதுகளால் நல்லனகேட்போம்; கண்களால் நல்லனபார்ப்போம்; இன்னும் தங்கள்

தியானத்திற்காகவே வாழ்நாளைக் கழிப்போம். ஆதலின் இவைகளுக்குத் தங்களருளால் பலமீயுங்கள்.

(29) அக்ன ஆயாஹி வீதயே க்ருணானோ ஹவ்யதாதயே
நிஹோதா ஸத்ஸி பர்ஹிஷி || (சாமம் 7-1-1.)

(இ-ள்.) ஏ அக்னி! வாருங்கள்! உங்களைத் துதித்து உங்கள் மூலமாய் யாகாதிகளியற்றுகின்றோம். யாகாதிகளிலீயப்படும் சகலத்தையு மேற்றுட்கொள்ளுங்கள்.

(30) த்வமக்னே யக்ஞானாம் ஹோதா விச்வேஷாகும்
ஹித:| தேவேபிர் மானுஷேஜனே || (சாமம்-7-1-2.)

(இ-ள்.) ஏ அக்னி! சகல யாகக்கடவுள் நீ. வித்வான்கள் மூலமாய் மனிதர்களுக்குத் திறப்படுத்தப்படுகின்றாய்.

(31) யே த்ரிஷப்தா: பரியந்திவிச்வா ரூபாணிபிப்ரத:|
வாசஸ் பதிர் பலாதேஷாம் தன்வோ அத்யததாதுமே ||
(அத-ம். 1-1-1.)

(இ-ள்) எவர், ஞானேந்திரிய, கர்மேந்திரிய, பஞ்சபூதியம், பொறிகளின் மூலம், ஒருயிர், மறுபடி அனேக உயிர்களையும் தரித்திருக்கின்றாரோ! அவர் என் பிராணனையுமின்று தரித்துக்கொள்ளட்டும் :—

அருள்வேண்டல் முற்றிற்று.

அமைதிவேண்டல் (சாந்திப்ரகரணம்)

(1) சன்ன இந்த்ராக்னி பவதாமவோபி: சன்ன இந்த்ரா
வருணாராதஹவ்யா| சமிந்த்ரா ஸோமா ஸுவிதாயசம்
யோ: சன்ன இந்த்ரா பூஷணா வாஜஸாதௌ ||
(ருக்-7-35-1.)

(இ-ள்.) வாசவனும், அக்னியும், நம்மைக்காப்பாற்றும் பொருட்டுஅமைதியளிப்பார்களாக.தேவராஜனும்,வருணனும் நமக்கமைதியளிக்கட்டும். இந்திரனும், சோமனும், பொருள்கள் விடயத்தில் அமைதியளிக்கட்டும். ஆயிரங்கண்ணனும், போஷகனும், நமக்குச் சகலத்திலும் அமைதியளிக்கட்டும்.

(2) சன்னோபக: சமுந: சம்ஸோ அஸ்து சன்ன: புரந்
த்ரி: சமுசந்துராய:| ஸன்ன: ஸத்யஸ்ய ஸுயமஸ்ய
சம்ஸ: சம்நோ அர்யமா புருஜாதோ அஸ்து ||
(ருக்-7-35-2.)

(இ-ள்.) பொருள் நமக்கு அமைதியளிக்கட்டும்; அறிவு சத்ய உபதேசம், நியாயவழி, முதலியவைகள் நமக்கு சகலத்திலும் அமைதியளிக்கட்டும்.

(3) சம்நோதாதா சமுதர்த்தாநோ அஸ்துசம்ந உரூசீபவது
ஸ்வதாபி: சம்ரோதஸீப்ருஹதீ சம்நோ அத்ரிஹி சம்
நோ தேவானாம் ஸுஹவானி ஸந்து || (ருக். 7-35-3.)

(இ-ள்) உலகத்தைக் காப்பாற்றுகிறவனும், உலகத்தைத்தரித்தவனும், நமக்கமைதி யளிக்கட்டும். புவனம் தான் கொண்டுள அன்னபானாதிகளிலும், ஆகாய, மலைகளிலும் நமக்கமைதியளிக்கட்டும். பகவனின் துதி பாடல் முதலியவைகள் நமக்கமைதி யளிக்கட்டும்.

(4) சம்நோ அக்னிர் ஜ்யோதிரனீகோ அஸ்து சன்னோமித்ராவருணா வச்விநாசம்| சம்ந: ஸுக்ருதாமஸுக்ருதானிஸந்து சம்ந இஷிரோ அபிவாதுவாத:||
(ருக் 7-35-4.)

(இ-ள்.) தழற்பிழம்புகள் யாருடைய சேனைகளோ அப்பேர்ப்பட்டதழற்கடவுள் நமக்கு அமைதியளிக்கட்டும். நேச வருணனும் அஸ்வினி தேவனும் அமைதியளிக்கட்டும். நற்கருமங்களின் நற்கருமம் அமைதியளிக்கட்டும். வேககாரகனை வாயுதேவன் நமக்கமைதி யளிப்பானாக.

(5) சம்நோத்யாவா ப்ருதிவீ பூர்வஹூதௌ சமந்தரிக்ஷம் த்ரிசயேநோ அஸ்து| சம்நஓஷதீர் வனினோபவந்து சம்நோ ரஜஸஸ் பதிரஸ்து ஜிஷ்ணு:|| (ருக் 7-35-5.)

(இ-ள்.) உலகம் அமைதியளிக்கட்டும்; சூர்யசந்திரர்களின் வழியாய் நாம் பார்க்க அருள்புரியும் ஆகாயம் நமக்கமைதியளிக்கட்டும். வனமூலிகைகள் அமைதி யளிக்கட்டும். உலகக்கடவுள் அமைதி யளிக்கட்டும்.

(6) சம்ந இந்த்ரோ வசுபிர்தேவோ அஸ்து சமாதித்யேபிர் வருண: ஸுசம்ஸ: சம்நோருத்ரோ ருத்ரேபிர் ஜலாஷ: சம்நஸ்த்வஷ்டாக்னா பிரிஹச்ருணோது||
(ருக் 7-35-6.)

(இ-ள்.) தேவஅரசன் பொருள் மூலமாயமைதி யளிக்கட்டும். மழைக்கடவுள் சூரியக்கதிர் மூலமாய் அமைதியளிக்கட்டும். நீராதார உருத்திரன்தன் உருத்திரத்தின் மூலமாயமைதியளிக்கட்டும். சகலருமிநம்துதிக்காகஅமைதி யளிப்பார்களாக.

(7) சம்ந: ஸோமோபவது ப்ரஹ்ம சம்ந: சம்நோ க்ராவாணஹசமு ஸந்துயஜ்ஞா:| சம்ந: ஸ்வரூணாம் மிதயோ பவந்து சம்ந: ப்ரஸ்வ: சம்வஸ்து வேதி:||
(ருக் 7-35-7.)

(இ-ள்.) சோமரசம், அதையருந்தும் பார்ப்பனன், கழிந்தவவ்விலை, யாகம், யாகாதி பொருள்கள், ஓடதிகள் முதலிய சகலமும் நமக்கமைதி யளிக்கட்டும்.

(8) சம்ந: ஸூர்ய உருசக்ஷா உதேது சம்நஸ்சதஸ்ர: ப்ரதிசோபவந்து சம்ந: பர்வதாத்ருவயோ பவந்து சம்ந: சிந்தவ: சமு ஸ்ந்த்வாப:|| (ருக் 7-35-8.)

(இ-ள்.) பெரும்வொளி பெறுஞ் சூரியன் நமக்கமைதி யளிக்கும் பொருட்டு உதிக்கின்றன். நான்கு பக்கங்களினும் நின்றிருக்கும், மலை, யாறு, கடல், முதலாய சகலமும் நமக்கமைதி யளிக்கட்டும்.

(9) சம்நோ அதிதிர்பவது வ்ரதேபி: சம்நோபவந்து மருத: ஸ்வர்க்கா:| சம்நோ விஷ்ணு: சமுபூஷாநோ அஸ்து சம்நோ பவித்ரம் சம்வஸ்து வாயு:|| (ருக் 7-35-9.)

(இ-ள்.) அதிதிகளின் நோன்புகள் நமக்கமைதி யளிக்கட்டும். மருதன் அமைதி யளிக்கட்டும். மால், போஷகன், காற்றுத்தேவன் முதலிய அனைவரும் அமைதியளிக்கட்டும்.

(10) சன்னோதேவ ஸ்ஸவிதா த்ராயமாண: சம்நோ பவந்தூஷஸோ விபாதீ: சம்ந: பர்ஜன்யோ பவது ப்ரஜாப்ய: சம்ந: க்ஷேத்ரஸ்ய பதிரஸ்து சம்பு:|| (ருக் 7-35-10.)

(இ-ள்) ஆக்கிக், காக்கும் கடவுள் நமக்கமைதி யளிக்கட்டும். விடியற்காலவொளி அமைதியளிக்கட்டும். மே[illegible],

வயல்களினதிபதிகளாய குடிகளாகிய சகலரும் நமக்கமைதி யளிப்போராக விருக்கின்றனர்.

(11) சம்நோ தேவாவிஸ்வேதேவா பவந்து சம்ஸரஸ்வதீ ஸஹதீபிரஸ்து சமபிஷாச꞉ சமுராதிஷாச꞉ சம்நோ திவ்யா꞉ பார்த்திவா꞉ சம்நோ அப்யா꞉|| (ருக். 7-35-11.)

(இ-ள்.) சகலத்தையும் படைத்த கடவுள் அமைதியளிக்கட்டும். அறிவுருவான கலைவாணி (கலை) நமக்கமைதி யளிக்கட்டும். எவன் பலசாலியோ, தான்யாதி சகலத்திற்கு மதிபதி எவனோ, இருவரும் அமைதி யளிக்கட்டும். ஆகாயம், பூமி, தண்ணீர், இம்மூன்றாலும் உற்பத்தியான சகலமும் அமைதியளிக்கட்டும்.

(12) சம்ந꞉ ஸத்யஸ்ய பதயோ பவந்து சம்நோ அர்வந்த꞉ சமுஸந்து காவ꞉| சன்னருபவ꞉ ஸுக்ருத꞉ ஸுஹஸ்தா꞉ சம்நோ பவந்து பிதரோ ஹவேஷு ||

(ருக். 7-35-12.)

(இ-ள்.) சத்ய பரிபாலனன் நமக்கமைதி யருளட்டும். பசு, குதிரை முதலியன அமைதி யளிக்கட்டும். நற்காரியங்களைப்புரியும் பண்டிதர் அமைதி யளிக்கட்டும். துதிக்கும் நற்காலங்களில் உதிக்கும் நற்குணன் அமைதி யளிக்கட்டும்.

(13) சம்நோ அஜ ஏகபாத்தேவோ அஸ்து சம்நோ அஹிர் புத்ன்ய꞉ சம்ஸமுத்ரஹ சம்நோ அபாம்ந பாத்பேருரஸ்து சம்ந꞉ ப்ருச்னிர் பவது தேவகோபா꞉||

(ருக். 7-35-13.)

(இ-ள்) பிறப்பின்றி உலகைக் காப்பாற்றுபவர் நமக்கமைதி யளிக்கட்டும். மேகம், கடல், அமைதியளிக்கட்டும்.

நீர்வாழ்வன நமக்கமைதி யளிக்கட்டும். கடவுளால் காப்பாற்றப்படுமாகாய மமைதியளிக்கட்டும்.

(14) இந்த்ரோ விச்வஸ்ய ராஜதி ! சம்நோ அஸ்துத் விபதேஷம் சதுஷ்பதே || (ய-ர்-36-8.)

(இ-ள்.) தேவ அரசன் சகல உலகத்திற்கு மரசன். அவர் இருகால், நாற்கால் முதலிய சகல மிருகங்களுக்கு மமைதி யளிக்கட்டும்.

(15) சம்நோவாத꞉ பவதாகும் சம்நஸ்தபது ஸூர்ய꞉ சம்ந꞉ கனிக்ரதத்தேவ꞉ பர்ஜன்யோ அபிவர்ஷது ||

(ய. 36-10.)

(இ-ள்.) காற்றுக்கடவுள் நமக்கமைதியளிக்க வீசுகின்றார். சூரியனமைதியளிக்க உதயமாகின்றார். சப்தமிடும் மேகங்கள் நமக்கமைதியளிக்கப் பெய்கின்றன.

16) அஹானிசம் பவந்துந꞉ சகும்ராத்ரீ꞉ ப்ரதிதீயதாம்| சம்நஇந்த்ராக்னீ பவதாமவோபி꞉ சம்நஇந்த்ரா வருணா ராதஹவ்யா꞉ சன்ன இந்த்ராபூஷணா வாஜஸாதௌ சமிந்த்ரா ஸோமாஸு விதாயசம்யோ꞉||

(யஜுர். 36-11.)

(இ-ள்.) இரவும், பகலும் நமக்கு அமைதியளிக்க ஏற்பட்டனவாகும். தேவ அரசனும், தழற்கடவுளும் நமக்கமைதி யளிக்கட்டும். அன்னதாதாவாகிய இந்திரனும், நீர்க்கடவுளும் அமைதியளிக்கட்டும். தேவராஜனும், போஷகனும் அன்னாதி காலங்களில் நமக்கமைதி யளிக்கட்டும். தேவ அரசனும், சோமனும் பொருள் விடயத்திலமைதி யளிக்கட்டும்.

(17) சம்நோதே வீரபிஷ்டய ஆபோபவந்து பீதயே| சம் யோரபிஸ்ரவந்து ந꞉ || (யர்-36-12.)

(இ-ள்) நற்குணம் பொருந்திய நீர், குடிக்கும்போதும், மற்ற நற்காரியங்களிலும் நமக்கமைதியளிக்கட்டும். அவை கள் நம் வியாதிகளாதிகளைப் போக்க வக்குகப் பட்டிருக்கின் றன.

(12) த்யௌ꞉ சாந்தி ரந்தரிக்ஷகும் சாந்தி꞉ ப்ருத்வீ சாந்தி ராப꞉ சாந்தி ரோஷதய꞉ சாந்தி꞉ வனஸ்பதய꞉ சாந் திர் விஸ்வேதேவா꞉ சாந்திர் ப்ரம்ஹ சாந்தி꞉ சர்வகும் சாந்திசாந்திரேவசாந்தி꞉ஸாமாசாந்திரேதி|| (யர்-36-17).

(இ-ள்.) உலகம், நீர், வன ஓடதிகள், வனகர்த்தாக்கள் சகலரும், இன்னும் நான்முகன் முதலனைவரும் நமக்கமைதி யளிக்கட்டும். சர்வ அமைதிகளு மமைதியாயின. அவ்வமைதி கள் நமக்கேற்படுவனவாக.

(19) தச்சக்ஷுர் தேவஹிதம் புரஸ்தாத் சுக்ரமுச்சரத்| பச் யேமசரத꞉ சதம் ஜீவேம சரத꞉ சதகும் ச்ருணுயாம சரத꞉ சதம்ப்ரப்ரவாம சரத꞉ சதமதீனாச்யாம சரத꞉ சதம்பூயஸ்ச சரத꞉ சதாத் || (யர்-36-24.)

(இ-ள்.) தேவர்களுக்கித காரணனும், தூயவனும், சக லத்திற்கும் கண்போன்றவனுமான பகவான், முதலிலிருந்தே சகலத்தையு மறிந்து கொண்டிருக்கிறார். நாமவர் தயவினால் 100 வருடங்கள் வரை, பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண் டும், சொல்லிக்கொண்டும், சுயேச்சையாக வாழ்ந்து கொண் டுமிருப்போம். பின்னும் நூறு வருடங்கள் வரை இன் பத்துடனு மிருப்போமாக.

(20) யஜ்ஜாக்ரதோ தூரமுதைதி தைவம் ததுஸுப்தஸ்ய ததைவைதி| தூரங்கமம் ஜ்யோதிஷாம் ஜ்யோதிரே கம் தன் மேமன꞉ சிவ சங்கல்பமஸ்து || (ய-ர்-34-1.)

(இ-ள்.) எவன் திவ்யசக்தி சம்பன்னனோ, அவனிட மென்மனம் தூங்கும்போதும், விழித்திருக்கும் போதும் ஒற்றுமை யடைந்திருக்கிறது. ஒளியின் ஒளி எவனோ அப் பேர்ப்பட்ட சுத்த புருடனுக்கடவோம்.

(21) யேன கர்மாண்யபஸோமனிஷிணோ யஜ்ஞே க்ருண்வந்தி விததேஷு தீரா꞉| யதபூர்வம் யக்ஷமந்த꞉ ப்ராஜானாம் தன்மேமன꞉ சிவ சங்கல்பமஸ்து || (ய.ர்-34-2.)

(இ-ள்.) கர்மங்களைப் புரியும் பண்டிதர்கள் அறிவாளி கள், யாகாதிகளிலும், வீரர்கள் சண்டையிலும், எவர் உதவி யினால் சகலகாரியமு மியற்றுகின்றனரோ, பிராணிகளிடம் அபூர்வ சக்தி வாய்ந்தவரும் எவரோ, அவரே நம்மனதைத் தூயனவாய்ச் செய்பவராவார்.

(22) யத்ப்ரஜ்ஞானமுத சேதோத்ருதிஸ்ச யஜ்யோதிரந்தரம் ருதம் ப்ரஜாஸு யஸ்மான்னருதேகிஞ்சன கர்மக்ரியதே தன்மேமன꞉ சிவ சங்கல்பமஸ்து || (ய-ர்-84-3.)

(இ-ள்) எவன் பிராணிகளுக்கு, அறிவு, அசைதல், தைரியம், முதலியன அளித்து, அமிர்தமய ஒளி ரூபமுள்ள வனோ; சகலத்தினுபயோகமு மறிந்தவனோ; எவன் தயவின்றி எக்காரியமும் நடைபெறுதோ; அவன் எம்மனதைச்சுத்திகரிக் கச் செய்பவனாவான்.

(23) யேனேதம் பூதம் புவனம் பவிஷ்யத் ப்ரக்ருஹீதமம் ருதேன ஸர்வம், யேன எக்ஞஸ்தாயதே ஸப்தஹோதா தன்மேமன꞉ சிவ சங்கல்பமஸ்து || (ய-ர்-34-4.)

(இ-ள்.) எவர் மனதினின்றும், நிகழ், எதிர் கால காரியங்கள் நடைபெறப் போகின்றனவோ; யாகாதிகளெவரால் நடைபெறுகின்றனவோ, அவர் நம்மனதைச் சுத்தி செய்பவராவர்.

(24) யஸ்மின்ரிச: ஸாம யஜூம்ஷியஸ்மின் ப்ரதிஷ்டிதா ரதனாபாவிவாரா:| யஸ்மிம்ஸ் சித்தகும் ஸர்வமோதம் ப்ரஜானாம் தன்மேமன: சிவ சங்கல்பமஸ்து ||
(ய-ர்-34-5.)

(இ-ள்.) எவரால் யஜூர், ருக் வேதமிப்படி ஏற்பட்டதோ; எவரால் இரதங்கள் முதலாயவைகள் நடைபெறுகின்றனவோ; சகல பிராணிகளுள்ளமும் எவர் வயப்பட்டிருக்கின்றனவோ; அப்பேர்ப்பட்டவர் நம்மனதைச் சுத்தி செய்பவராவர்.

(25) ஸுஷாரதி ரச்வானிவ யன்மனுஷ்யான்னேனீயதேS பீஷுபிர்வாஜின இவ| ஹ்ருத்ப்ரதிஷ்டம் யதரம்ஜி ஜவிஷ்டம் தன்மேமன: சிவ சங்கல்பமஸ்து || (யர்-34-6.)

(இ-ள்) எப்படிச் சாரதியின் பற்றினால் குதிரைகள் ஓடுகின்றனவோ; அவ்வாறே மனிதர்களு மியங்குகின்றனர். எவன் மனதில் கருணையுண்டோ, எதனினும் வேகமுள்ளவன் எவனோ; அவனே நம்மனதைச் சுத்தி செய்பவன்.

(26) ஸன: பவஸ்வ சங்கவேசம்ஜனாயசமர்வதே|சம் ராஜன் ஞேஷதீப்ய: || (சாமம். 1-1-உத்ராத்ரம்.)

(இ-ள்.) எவன் உலகத்தின் அரசனோ, அவன் நம்முடைய, பசு, குதிரை முதலாய மிருகங்களுக்கும், மருந்து

களாதி வனப்பொருள்களுக்கும், பிள்ளை, குட்டிகளுக்காகவு மமைதி யளிப்பானாக.

(27) அபயம்ந: கரத்யந்தரிக்ஷமபயம் த்யாவாப்ருதிவீ உபே இமே| அபயம் பஸ்சாதபயம் புரஸ்தாதுத் தராததரா தபயம் நோ அஸ்து. (அதர்வம்-19-17-5.)

(இ-ள்.) நாங்கள், கீழ், மத்தி, மேல், மூன்றுலகத்தினுமடைக்கலம் அடைகிறோம். முன், பின், மேல், கீழ், சகல பக்கங்களினு மடைக்கலமடைகின்றோம்.

(28) அபயம் மித்ராதபயம் மித்ராதபயம் ஜ்ஞாதாதபயம் புரோய:| அபயம் நக்தமபயம் திவாந: ஸர்வா ஆசா மமித்ரம் பவந்து. (அதர்வம்-19-17-6.)

(இ-ள்.) நண்பன், அல்லான், நியாயன், அல்லான், சகலரிடமு மடைக்கலமடைகிறோம். இரவு, பகல், நமக்கபயமளிக்கட்டும். சகலமும் என்னிடம் நண்பனாக வதியட்டும்.

அமைதிவேண்டல் முற்றிற்று.

பொதுச் சடங்குகள்

கீழே எழுதப்படும் காரியங்களைச் சகல சடங்குகளினும் செய்யவேண்டும். அன்றி எங்காவது அதிகப்படவேதேனு மிருப்பின் அங்கே அவைகளைக் காட்டியிருக்கின்றது. இதனினுமதிகமாகச் செய்யவேண்டிய இடங்களிலு மவைகளைக் காட்டியிருக்கின்றது.

வேள்வித்தலம் :—வேள்வித்தலம் தூய "எனின் அவ்விடம் காற்று புனிதமாயும், எவ்வித உபத்திரவமும் நேராத" விடமாயுமிருத்தல் வேண்டும்.

வேள்விச்சாலை :—இதை வேள்வி மண்டபமென்றுஞ் சொல்வர். இது நீள்வட்டத்தில் 16 முழமும், குறுக்கில் 8 முழமு முடைத்தாயிருத்தல் வேண்டும். அங்கு தரை சுத்தமின்றி யிருப்பின், அங்கு எவ்வளவு தூரம் வரை சமித்த மமைக்கவேண்டுமோ அது வரை 2 முழ ஆழமண்ணை யெடுத்துவிட்டு, தூயமண்ணிடவேண்டும். பிறகு 16 முழ தூரமுள்ள விடங்களில் 20 தூண்களும் 8 முழ சதுரத்தில் 12 தூண்களும் நட்டு, அதன் மேல் கூரையிடவேண்டும். அக்கூரை வேள்வித் திண்ணைகளுக் கவசியமாய் 10 முழ உயரத்திலமைக்கவேண்டும். வேள்விச்சாலையின் நான்கு பக்கங்களினும் நான்கு வழிகள் விடவேண்டும். சாலைக்கு நான்கு பக்கங்களினும் தளிர் தோரணங்கள் கட்டவேண்டும். தினமும் சாலையினுள் நீர்தெளித்து கோமயமிட்டு மெழுக வேண்டும். இன்னும் மஞ்சள், குங்குமம், கோதுமை மாவு முதலியவைகளா லலங்கரிக்க வேண்டும். சகல நற்காரியங்களிலும் தன்பொருட்டும், பிறர்பொருட்டும் நன்மையைக்

கோரி வேள்விகள் மூலமாய் கடவுட்டொழுகை நடத்தல் வேண்டும். ஆதலின் கீழ் வரையப்படும் பரிமளப்பொருள் களைத் தடவினிற் போடவேண்டும்.

தடவினளவு :—ஓர் இலக்ஷம் உரு செய்யவேண்டியதாயின், சதுரத்தில் 4-முழ அளவும், அதே அளவு உயரமும், ஆழமுமுள்ள நாற்கோணத்தடவும், அதனடிப்பாகம் சதுரத்தில் ஒரு முழ உயரமும் அகலமுமுடையதா யிருக்க வேண்டும். அப்படியே உருவிற்குத் தகுந்தபடி அகல ஆழத் தடவுகளமைக்க வேண்டும். இரண்டு இலக்ஷம் உரு செய்வதாயின் ஆறு முழச் சதுரத்தில் தடவமைக்க வேண்டும். ஐம்பதினாயிரம் உரு செய்வதாயின் முக்கால் முழத்தில் அடிப்பாகமும், 3-முழச் சதுரத்தில் மேற்பாகமும், இருபத்தையாயிரம் உரு செய்வதாயின் அரை முழ அடிப்பாகமும், 2-முழச் சதுரத்தில் மேற்பாகமும் உள்ள தடவுகளை அமைக்கவேண்டும். பத்தாயிரம் உரு செய்வதாயின் 2-முழ அகலமும் ஆழமும் அரை முழ அடிப்பாகமும் இருத்தல் வேண்டும் 5-ஆயிரம் வரை 1 முழ அகலமும் ஆழமும், அரைமுழ அடிப்பாகமும் இருத்தல் வேண்டும். இத்தடவுகளின் அளவு அனேகமாய் நெய் உருவுகள் செய்வதற்கு அநுகூலமா யிருக்கிறது. ஓர் சமயம் 25-ஆயிரம் மயக்கற்பொருள், சாதம், பாயசம், முதலியவைகளுடன் 25-ஆயிரம் நெய்யுருக்களும் செய்யவேண்டியிருப்பின் சதுரத்தில் 2-முழ அகலமும் ஆழமும் அரை முழ அடிப்பாகமும் உள்ள தடவு அமைக்க வேண்டும். ஆயிரம் நெய்யுருக்கள் மாத்திரம் செய்யவேண்டின் சதுரத்தில் அரைமுழ அகலமும் ஆழமும் அதற்கு 4-ல் 1-பங்கு அடிப்பாகமும் அமைக்க வேண்டும். இத்தடவுகளுக்கு 15 அங்குலச் சதுரத்தில் திண்ணைகள் 5 அங்குல உயரத்தில் 3 கட்டவேண்டும். இம்மூன்று திண்

ணைகளையும் வேள்விச் சாலையின் பூமிமட்டத்தினின்றும் மேலாகக் கட்டவேண்டும்.

வேள்விச் சமிதைகள் :—பலாசு, வரகு, மா, வில்வம் முதலாய சமிதைகள் உப்யோகத்திற்குத் தகுந்தபடி சிறிது பெரிதாக வெட்டிவைத்துக் கொள்ளவேண்டும். இச்சமிதைகள் புழுகு விழாதனவாகவும் மலின தேசத்தில் உண்டாகாதனவாகவும் அசுசியான பொருள்களுடன் சேராதனவாகவும் பார்த்துக் கொள்ள வேண்டும். நான்கு பாகங்களுக்கும் மத்தியில் சரியாய் வைத்துக்கொள்ளவும்.

வேள்விப்பொருள்கள் :—கஸ்தூரி, குங்குமப்பூ, அகரு, தேவதாரு, வெண்சந்தனம், ஏலரிசி, சாதிக்காய், சாதிபத்திரி முதலியவை பரிமளப்பொருள்கள். (1) நெய், பால், பழங்கள், கிழங்குகள், சாதம், அரிசி, கோதுமை முதலியவை வீரியப்பொருள்கள் (2). சருக்கரை, தேன், கர்ஜூரம் முதலியவை சுவைப்பொருள்கள் (3). சோமலதை, (ஆட்லாங்கொடி) முதலியவை வியாதி நிவர்த்திப் பொருள்கள் (4).

சேர்க்கைபாகம் :—(பாகபாத்திரம்) கீழ் எழுதப்படும் விதமாய் சாதம், பாயசம் சுவை பதார்த்தங்கள் முதலாய சகல பொருள்களையும் சேர்க்கத்தகும். இதற்குப் பிரமாணம் :—

ஓம் தேவஸ்த்வா ஸவிதா புனுத்வச்சித்ரேண வஸோ :
பவித்ரேண சூர்யஸ்ய ரஸ்மிபி ஃ|| (யஜுர் 1-3)

(இ-ள்.) படைத்தற் றொழிற்கடவுள் வேள்வியையும் வேள்விப்பொருள்களையும் சுத்திகரிப்பாராக.

இம்மந்திரத்திலிருந்து சகல வேள்விப் பொருள்களையும் நன்றாக சுத்தம்செய்துகொள்ள வேண்டுமென் றேற்படுகிறது.

எல்லாவற்றையு மாய்ந்து, வடிகட்டி தகுந்தபடி கலந்து பாகம் செய்து கொள்ளவேண்டும். எவ்வாறெனின்; 1 சேர் சுவைச் சாதத்தில், (பொங்கலில்) குண்டுமணியிடை கஸ்தூரியும், ½ விராகனிடை குங்குமப்பூவும், இரண்டரை விராகனிடை ஜாதிக்காய், ஜாபத்திரியும், ½ சேர் சர்க்கரையும், சேர்த்து, சுவைச்சாதம் செய்துகொள்ளவேண்டும். இவ்வாறே மற்ற சுவைச்சாதங்களும், பாயாசம், கிச்சடி, முதலியவைகளை வேள்விக்காக தயார் செய்துகொள்ளவேண்டும். வேள்விக்காக "சரு" எனும் பாகம்செய்யும்விதம்—:

ஓம் அத்கைய த்வஷ்டாஜூடம்நிர்வபாமி(ருக்.சூத்திரம்-1-10-6)

(இ-ள்.) அன்புட னிதைச் சேர்க்கின்றேன். (அதாவது) எவ்வளவு ஆகுதிகள் கொடுக்கவேண்டுமோ ஒவ்வொன்றுக்கும் நான்கு பிடி அரிசி முதலியன எடுத்துக் கொண்டு,

ஓம் அக்னயேத்வா ஜுஷ்டம் ப்ரோக்ஷாமி || (ய-ர். 1-13.)

(தனலாய தங்களுக்கு அன்புடன் இடுகின்றேன்.) என்னும் மந்திரத்தைக் கூறி அவைகளை நன்றாய் நீரிலிட்டலம்பி பாகபாத்திரத்திலிட்டு நெருப்பின்மீது வேகவைத்தற்றகும். வேள்விக்காக மற்றொரு பாத்திரத்திலதை வாங்கும்பொழுது கீழே யெழுதப்படும் யாக பாத்திரத்தில் இட்டு மேலே நெய்யிட்டு வைக்கவேண்டும்.

யாக பாத்திரம்.

கீழே எழுதப்படும் அத்தாட்சியின்படி வெள்ளியிலாகிலும், மரத்திலாகிலும், யாக பாத்திரங்களிருக்கவேண்டும் ஃ

வேள்விப் பாத்திரங்கள்—: பாஹுமொத்ரய ஃ பாணிமாத்ர புஷ்கரா ஃ ஷடங்குல காதாஸ்த்வக்விலா ஹம்ஸமுகப்ர

ஸேகா: மூலதண்டாச்சஸ்ர: ஸ்ரசோ பவந்தி || தத்ர பாலாசீ ஜுஹு: | ஆச்வத்த்யுபப்ரத் | வைகங்கதீத்ருவா | அக்னிஹோத்ரஹவணீச | அரத்னி மாத்ர: காதிர: ஸ்ருவ: அங்குஷ்டபர்வமாத்ர புஷ்கர: | ததாவிதோ த்விதீயோ வைகங்கத: ஸ்ருவ:| வாரணம் பாஹுமாத்ரம் மகராகாரமக்னிஹோத்ர ஹவணீநிதாநார்த்தம் கூர்சம்| அரத்னிமாத்ரம் காதிரம் கட்காக்ருதி வஜ்ரம்| வாரணான்ய ஹோமசம்யுக்தானி| தத்ரோலூகலம்நாபி மாத்ரம், முஸலம் சிரோ மாத்ரம்| அதவாமுஸலோலூகலே வார்க்ஷயே ஸாரதாருமயே சுபே இச்சா ப்ரமாணேபவத:| ததா-காதிரம் முஸலம் கார்யம் பாலாச: ஸ்யாதுலூகல:| யத்வோபௌ வாரணௌ கார்யௌ தத பாவே பின்யவ்ருக்ஷாஜன || சூர்பம் வைணவமேவ வா| ஜசீகம் நலமயம் வாமசர்ம பத்தம்| ப்ரதேசமாத்ரீ வாரணீசம்யா| க்ருஷ்ணாஜிமைகண்டம்| த்ருஷதுபலே அஸ்மமயே| வாரணீம் ஹஸ்தமாத்ரீம் அரத்னி மாத்ரீம் வாகாதமஸ்யாம் மத்யசங்க்ருஹோதாமிடா பாத்ரீம்| அரத்னிமாத்ராணி ப்ரஹ்மய ஜமானஹோ த்ருபத்ன்யாஸனானி, முஞ்ஜமயம் த்ரிவ்ருதம் வ்யாமமாத்ரம் யோக்த்ரம்| ப்ராதேசதீர்கே அஷ்டாஸ்குலாயதே ஷடங்குல காதமண்டல மத்யே புரௌடா சபாத்ர்யேன| ப்ராதேசமாத்ரம் த்வ்யங்குல பரீணாஹந் தீக்ஷ்ணாக்ரம் ஸரிதாவதானம்| ஆதர்சாகாரே சதுரஸ்ரே வாப்ராசி த்ரஹரணே| தயோரேகயோஷத் காதமத்யம்| ஷடங்குல கங்கதிகாகார முபயத: காதம் ஷடவதாத்தம்| த்வாதசாங்குலமர்த சந்த்ராகார மஷ்டாங்குலோத்ஸே தமந்தர்த்தனகடம்| உபவேசோமரத்னிமாத்ர:| முஞ்ஜமயீ ரஜ்ஜு:| காதிரான்த்வாதசாங்குல தீர்கான் சதுரங்குல மஸ்தகான் தீக்ஷ்ணாக்ரான் சங்கூத்| யஜமான பூர்ணபாத்ரம் பத்னி பூர்ணபாத்ரம் சத்வாதசாங்குலதீர்கம் சதுரங்குல விஸ்தாரம் சதுரங்குல காதம்| ததாப்ரணீதா பாத்ரஞ்ச| அஜ்யஸ்தானீ

த்வாதசாங்குல விஸ்த்ருதா ப்ராதேசோச்சா| ததைவசருஸ்தானீ அன்வாஹார்யபாத்ரம் புருஷ சதுஷ்ட்யாஹாரபாக பர்யாப்தம்| ஸமித்மார்தம் பளாசசாகாமயம்| கொசம பர்ஹி:| ருத்விக்வரணார்தம் குண்டலாங்குலீய காவாஸான் ஸீ| பத்னியஜமான பரிதானார்த்தம் க்ஷௌமம்வாசச்யதுஷ்டயம்| அக்னயாதேய தக்ஷிணார்தம் சதுர்விம் சதிபக்ஷேயேகோன பஞ்சாசத்காவ:| த்வாதசபக்ஷ பஞ்சவிம்சதி:| ஷட்பக்ஷத்ரயோதச| ஸர்வேஷு பக்ஷேஷு ஆதித்யேபிஷ்டௌ தேநவ:| வரார்தம் சதஸ்ரோ காவ: ||



Fig 1.

(1)—: தடவு (எவ்வுலோகத்தினலாகிலும்) முக்கோண வடிவமா யிருத்தல் வேண்டும். அவ்வளவுகளை சமயோசிதம்போல் அங்குலங்களாகவும் வைத்துக்கொள்ளலாம்.

Fig. 2.

(2) நீர் பாத்திரம்:—கை முதலானதுகளைக் கழுவ.

Fig. 3.

(3) நீர் யெடுத்துவிடும் பாத்திரம்.

Fig. 4.

(4) நெய்க்கிண்ணம் வேண்டிய அளவுக்கு.

Fig. 5.

(5) மரம், வெள்ளி, தங்கம், இவைகளிலேதாவதொன்றினற் செய்த கரண்டி. நெய் விடுவதர்க்காக.

வேள்வித்தலைவர் விண்ணப்பம்: — (ருத்விக்வரணம்) வேள்வியதிகாரிகள் " ஓமாவஸோ: ஸதனே ஸீத " இம் மந்திரத்தினால் வேள்வியதிகாரிகளை வரும்படி வேண்டிக்கொள்கின்றார். வேள்வித்தலைவர்.

வேள்வியதிகாரிகள் மறுமொழி : — " ஓம் ஸீதாமி " இம் மந்திரம் சொல்லிக்கொண்டு வேள்வியதிகாரிகள் அவரவர்களுக் கிடப்பட்டிருக்கும் பீடங்களிலமர்தல் வேண்டும்.

தலைவர் விண்ணப்பம்:—" அஹமத்யோக்த கர்ம கரணாய பவந்தம் | "வ்ருணே" அதிகாரிகள்:—"வ்ருதோஸ்மீ" | வேள்வியதிகாரிகள் நிலை: — (இருக்கவேண்டியவழி): — நற்கலையாளனாகவும், நல்லறமுடையோனாகவும், புலன்களைவென்றவனாகவும், காரியங்கள் புரிவதி லன்புள்ளவனாகவும், உலோப குண மில்லாதவனாகவும், பிறற் குபகாரியாகவும், துக்கமில்லாதவனாகவும்,, குளிர்ந்த மனமுடையோனாகவும், நற்பழக்கமுடையவனாகவும், மறைக்கொள்கையோனாகவும், மறைபயின்றோனாகவு முள்ளோர்களில், ஒருவரிருவர் மூவரல்லது நால்வரையும் தெரிந்தெடுத்தல் வேண்டும். ஒருவரேவரின் புரோகிதனாகவும், இருவர் கிடைப்பின் (அத்வர்யு) வேள்விப் புரோகிதனாகவும், மூன்றுபேர் கிடைப்பின், (ருத்விஜ) வேள்விப் புரோகித அதிபதியாகவும், நான்குபேர் கிடைப்பின், வேள்விப் பிரமங்களாகவும், ஏற்றுக்கொண்டு, இவர்கள் பீடங்களை நான்கு புரங்களினு மிடவேண்டும். அதாவது:—முதல்வன்- (ஹோதா) தடவின் மேற்கில் பீடமிட்டு கிழக்குமுகமாகவும்; இரண்டாமவன் (அத்வர்யு): — வடக்கில் பீடமிட்டு தெற்கு முகமாகவும்; மூன்றாமவன் (உத்காதா) கிழக்கில் பீடமிட்டு மேற்கு முகமாகவும் ; நான்காமவன் (ப்ரஹ்மா) தெற்கில் பீடமிட்டு வடக்குமுகமாகவும் ; உட்காரவேண்டும். இவர்களுக்கு நற்காரியங்களியற்றி பீடங்களி லமரச்செய்தல் வேண்டும். இவர்கள் செய்ய ஏற்பட்ட காரியந்தவிர வேறொரு காரியமாகிலும் வேறொரு வார்த்தையாகிலும் யாரும் செய்யக்கூடாது. வேள்விபுரிய அமர்ந்த அவர்களெல்லோரும் அவரவர்கள் நீர்பாத்திரத்தினின்றும் கீழ்வரும் மந்திரங்களால் மும்மூன்று (ஆசனம்) "நீருட்கொளல்" செய்தல்வேண்டும். எனின் ஒவ்வொரு மந்திரத்திலு மொவ்வொரு தடவை புரிய வேண்டும். அம்மந்திரங்க ளிதுவாகும்.

(1) ஓம் அம்ருதோபஸ்தரணமஸி ஸ்வாஹா - 1 ஏபுனலே நீ அமிர்தம்போல சகலருக்கு மாதாரமானவன்.

(2) ஓம் அம்ருதாபிதானமஸி ஸ்வாஹா | ஏ | புனலே! நீ அமிர்தம்போல சகலரோகமும் தீர்ப்பவனாகின்றாய்.

(3) ஓம் சத்யம்யச: ஶ்ரீர்மயிஶ்ரீ: ஸ்ரயதாம் ஸ்வாஹா 1

(இ-ள்.) தாங்கள், உண்மை, பொருள், திருவிலாசமுண்டாகச்செய்பவர், இம்மூன்றினாலும் மூன்றுமுறை நீருட்கொண்டு, பிறகு கீழ் எழுதியுள மந்திரங்களால் நீரை இடதுகையி லெடுத்துக்கொண்டு அவயவங்களைத் தொடுதல் வேண்டும்.

ஓம் வாங்ம ஆஸ்யே஽ஸ்து—1 (முகம்)
ஓம் நஸோர்மே ப்ராணோ஽ஸ்து | மூக்கினிருபுறமும்
ஓம் அக்ஷ்ணோர்மேசக்ஷுரஸ்து1—இரண்டுகண்களும்
ஓம் கர்ணயோர்மே ஶ்ரோத்ரமஸ்து 1—இரண்டு காதுகளும்.
ஓம் பாஹ்வோர்மே பலமஸ்து 1—இரண்டு புஜங்களும்
ஓம் ஊர்வோர்மே ஓஜோ஽ஸ்து 1 இரண்டு துடைகளும்

என், முகம் கலைக்கும், மூக்கு ப்ராண வாய்வுக்கும், கண் பார்வைக்கும், காது கேள்விக்கும், புஜங்கள் பலத்திற்கும், துடைகள் நிற்பதற்கும் பலமடையட்டும்.

ஓம் அரிஷ்டானி மேsங்கானி தனூஸ்தன்வாமேஸஹ ஸந்து (பாரகஸ் 1 3 25), என் சரீரத்தின் சகல அவயவங்களும் வியாதியற்று பலமடையட்டும்,

(இ-ள்.)—இம்மந்திரத்தால் கைகளில் நீரைக்கொண்டு (மார்ஜனம்) சிரசின்மேற் றெளித்துக் கொள்ளவேண்டும். பின், முன் சொல்லியிருக்கும் சமிதைகளை தடவினிற் சேர்க்கவேண்டும், (பிறகு):

ஓம் பூர்புவஃ ஸ்வஃ (கோபீலக்ரு-1-1-11.)

பூர், புவஃ, ஸ்வஃ இம் மூன்று பெயரும் கடவுளைக் குறிக்கும்.

(இ-ள்.)—இம்மந்திரத்தைச் சொல்லி, பார்ப்பனர், க்ஷத்திரியர், இவர்களி லெவருடைய வீட்டிலிருந்து நெருப்பு கொண்டு வந்தாகிலும், இன்றேல் நெய்விளக் கேற்றி அதனில் கற்பூரத்தைக் கொளுத்திக்கொண்டு, ஓர் பாத்திரத்தில் வைத்தாகிலும், தடவினில் சிறியசிறிய குச்சிகளைச் சேர்த்து, தலைவனாகிலும் புரோகிதனாகிலும், அப்பாத்திரத்தை யிரண்டு கைகளாலு மெடுத்து வைத்துக்கொண்டு, "சுடுமாயின் பட்டு குட்டையினாற் பிடித்துக்கொண்டு" கீழெழுதியிருக்கும் மந்திரத்தால் (அக்ன்யாதானம்) நெருப்பு மூட்டல் செய்ய வேண்டும்.

ஓம் பூர்புவஃ ஸ்வர்த்யௌரிவ பூம்னாப்ருதிவீ வவரிம்ணா| தஸ்யாஸ்தேப்ருதிவி தேவயஜனிப் ப்ருஷ்டேs க்னிமன்னாத மன்னாத்யாயாததே-யஜு-3-5.) பண்டிதர்கள் எதன்

மேல் யாகம் புரிகின்றனரோ, அப்பேர்ப்பட்ட பூமி! நான் உன் பாதங்களுக்கு, மூன்றுலகத்திலும் தன் ஒளியினால் ஆகாயத்திற்குச் சமமாய், மஹிமையில் பூமியைப்போலும், ப்ரகாசிக்கின்ற அன்னாதிகாரியாம் சுடரை அன்ன மருந்துவதற்காக நிலைக்கச்செய்கின்றேன் இம்மந்திரத்தா லன்நெருப்பைத் தடவின் மத்தியிலிட்டு, அதன்மேல் சிறிய சிறிய குச்சிகளையும் சிறிது கற்பூரமுமிட்டு, கீழெழுதியிருக்கும் மந்திரத்தைச்சொல்லி விசிறியினால் நெருப்பை எரியும்படிச் செய்ய வேண்டும்.

ஓம் உத்புத்யஸ்வாக்னே ப்ரதிஜாக்ரஹி த்வமிஸ்டாபூர்தேசம். ஸ்ருஜேதாமயஞ்ச| அஸ்மின்த்ஸதஸ்தே அத்யுத்தாஸ்மின் விஸ்வேதேவா யஜமானஸ்ய ஸீதத|| (யஜுர்-15-54.)

ஏ, அனலே! நீ சீக்கிரம் பற்றியெரி, நீயும், இத்தலைவரும் நல்லறத் தொழிலுக்காக சேர்ந்திருக்கின்றீர்கள். இப்புனித விடத்தில் சகல பண்டிதர்களும், தலைவரும்வந் தமர்ந்திருக்கின்றனர்.

(இ-ள்.)—நெருப்பு சமிதைகளில் பற்றும்போது, 8 அங்குல அளவுள்ள சந்தனக் குச்சிகளையாகிலும், முன்னெழுதியுள்ள பலா முதலிய தேதேனுமொன்றின் குச்சிகளை யாகிலும், மூன்றை நெய்யில் துவைத்து, கீழ் எழுதியிருக்கும் மந்திரங்களுடன் ஒவ்வொரு சமிதையை நெருப்பிற் போட வேண்டும்:

ஓம் அயந்த இத்ம ஆத்மா ஜாதவேதஸ்தே நேத்யஸ்வ வர்த்தஸ்தவ சேத்த வர்த்தய சாஸ்மான் ப்ரஜயா பசுபிர்ப்ரஹ்ம வர்சஸேனான்னத்யேந ஸமேதய ஸ்வாஹா-| இதமக்னயே ஜாதவேதஸே இதன்னமம|| (11 அஸ்வ-1-10-12)

(இ-ள்.)—ஏ அனலே! இத்தழற் பிழம்பே உன்னக மாகும். எங்கள் குழந்தை, முதலாயவைகள் தங்களின் இத் தழலி னருளால் வசிக்கின்றோம். இது அவ்வக்கினிக்காக எனக்காகவன்று.

ஓம் ஸமிதாக்னிம் துவஸ்யத க்ருதைர்போதயதாதிதிம்| ஆஸ்மின் ஹவ்யாஜுஹோதன ஸ்வாஹா || இதமக்னயே இதன்னமம — (ய-3-1.)

ஓம் ஸுமித்ராய நஆப ஓஷதய : ஸந்து | துர்மித்ரியாஸ் தஸ்மை ஸந்து யோ஽ஸ்மான் த்வேஷ்டி யம்சவயம் த்விஷ்ம:|| (யஜு-6-22.)

நமக்காக நீர், மருந்து வகைகள் முதலியன நல்நண்பர்களாயுபகாரம் புரியட்டும். எவர் நம் பால் விரோதிக்கின்றனரோ அவர்களை நாமும் விரோதிக்கின்றோம். ஆதலாலிவ் விருவருமவ் விரோதிகளை விரோதிக்கட்டும்.

மூர்த்தானம் திவோ அரதிம் ப்ருதிவ்யா வைஸ்வாநரம் ருத ஆஜாதமக்னிம் | கவிம் சம்ராஜமதீதிம் ஜனுமாஸன்னு பாத்ரம் ஜனயந்ததேவா :|| (ய-7-24.)

எவ்வாறு வித்வான்கள் நெருப்பை யுண்டாக்குவார்களோ? அவ்வாறே நில வுலகத்தின் கண் பருதி உதிக்கின்றனன். அப்பருதியைச் சகலரும் வந்தித்து அவராலெல்லா வுயிர்களும் பிழைக்கட்டும்.

ஓம் அயமூர்ஜ்ஜாவதோ வ்ருக்ஷ ஊர்ஜீவ பலினீ பவ | பர்ணம் வனஸ்பதேனுத்வா னுத்வா ஸூயதாகும் ரயி ꞉|| (மந்-ப்ரா-1-5-1)

ஏ பெண்ணே! மரங்களெவ்வாறனேக கிளைகளை யுடைத்தோ; அவ்வாறே நீயுமனேக மகவுகளைப் பெறுவாயாக. எவ்வாறு கிளைகளிலிலைகள் பரவி யிருக்கின்றதோ அவ்வாறே என்னிடம் விருத்தியடை வாயாக.

ஓம் யேனாதிதே꞉ ஸீமானம் நயதி ப்ரஜாபதிர் மஹதே ஸௌபகாய | தேனாஹமஸ்யை ஸீமானம் நயாமி ப்ராஜாமஸ்யை ஜரதஷ்டிம் க்ருணோமி || (மந்-ப்ரா-1-5-2). (4)

எவ்வாறு கடவுள் சகல பாக்ய விருத்திக்காக. உலகத்திற் பொருள்களை உற்பவித்தாரோ; அவ்வாறே நானிப் பெண்மணிக்கு வேண்டியதை யளித்து இவள் பெரும் குழந்தைகளையும் பாது காப்பேனாகவும்.

ஓம் ராகாமஹம் ஸுஹவாம் ஸுஷ்டு தீம்ஹுவே ஸ்ருணோது ந꞉ ஸுபகா போததுத்மனா | ஸீவ்யத்வப꞉ ஸூச்யா சித்யமான யாததாது வீரகும் ஸததாய முக்த்யம் || (ருக்-2-32-4).

ஓம் யாஸ்தேராகே ஸுமதய꞉ ஸுபேஸஸோ யாபிர்ததாஸி தாசுஷே வஸூனி | தாபிர்னோ அத்ய ஸுமனா உபாகஹி ஸஹஸ்ரபோஷம் ஸுபகேராணா || இவ்விரண்டின் பொருள் இப்பாகத்தின் முதலில் உள்ளது 85-ம் பக்கம் பார்.

இம்மந்திரத்தைச் சொல்லி, புருடன்றன்கைகளால் தன் மனைவியின் கூந்தலில் நல்வாசனைத் தைலமிட்டு, சீப்பைக் கொண்டு வாரி, மேடி குச்சியினாலாவது, அர்ஜுன மரத்தின்

குச்சியினாலாவது, தந்த முள்ளினாலாவது கூந்தலைச் சரி செய்து, வடுவெடுத்து, பின்னழகேற்படும்படிக் கூந்தலை முடித்து வேள்விச் சாலைக் கழைத்துவர வேண்டும். அப்பொழுது வீணை முதலாய கருவிகள் வாசிக்க வேண்டும். பின் சாமவேதகானம் செய்து பிறகு—:

ஓம் ஸோம ஏவநோ ராஜேமா மானுஷீ꞉ ப்ரஜா꞉| அவிமுக்த சக்ர ஆஸீரன்ஸ்தீரே துப்யம் அஸௌ|| * (பாஸ்கர-1-15.)

நம்மரசன் குடிகள் நன்மைக்காக அரசு புரிபவன். ஏ நதியே! உன் கரையிலுள்ள உயிர்களியற்றும் பாபங்களை நீக்கு.

முதலிலிம்மந்திரஞ்சொல்லி பிறகு; மற்ற மந்திரங்களைச் சொல்லவேண்டும். பிறகு ஆகுதிகளீந்து மிகுந்த சுவைச் சாதத்தில் நெய்யிட்டு, அந்நெய்யில் மனைவி தன்னுதனின் முகத்தைப் பார்க்கவேண்டும். அப்போது புருடன் மனைவியைப் பார்த்து "கிம்பஸ்யஸி" (யாரைப் பார்க்கிறாய்) எனக் கேட்கவேண்டும். "ப்ரஜாம் பஸ்யாமி" (நாதனை) என விடையளிக்கவேண்டும். பிறகு தனிமையில், நற்குடும்பத்தவரும், பாக்யவதிகளும், குழந்தையை யீன்றவர்களும், சூற்றாய்களும் ஆகிய பெண்களொருங்கு கூடி உற்சாகமான வார்த்தைகள் பேச வேண்டும். அம்மிகுந்த சாதத்தை யச்சூற்றாயருந்தவேண்டும். அருகிலுள்ள பெரிய ஸ்த்ரீகளெல்லோருமிவ்வாறு வாழ்த்தவேண்டும்.

ஓம் வீரஸூஸ்த்வம் பவ, ஜீவஸூஸ்த்வம் பவ, ஜீவபத்னீத்வம் பவ || !

* இவ்விடம் ஏதாவதோர் நதியின்பேரைச் சொல்லவேண்டும்.

ஏ பெண்ணே ! நீ வீர புருடனின் தாயாவாயாக. உன் குழந்தைகள் நீடூழி வாழட்டும். உன் மனையாளனும் நீடூழி வாழட்டும்.

இவ்வாறு நல்வாழ்த்துக்க ளியம்ப வேண்டும். பிறகு வந்திருப்பவர்களுக்கு வேண்டியனபுரிந்து, புருடர்களைப் புருடர்களும், பெண்களைப் பெண்களும் விடையீந் தனுப்ப வேண்டும்.

அகமத்தச் சடங்கு முற்றிற்று.

சிசுதோற்றச் சடங்கு (ஜாதகர்மம்)

இதற்குச் சமயமும், அத்தாட்சியும், காரியமு மிவ்வாறுகும்—:

ஸோஷ்யந்தீ மத்பிரப்யுக்ஷதி || (பா-1-26.)

இது "பாராசரக்ருக சூத்திரம்" இவ்வாறே "அஸ்வலாயன" "கோபிலீய" "ஸௌனக" க்ருஹ சூத்திரங்களிலுமுள்ளது.

பிரசவகாலத்தில் சூற்றுயின்மேல் நீர்தெளித்தல் வேண்டும். இதற்கு மந்திரம்.

ஓம் ஏஜது தசமாஸ்யோ கற்போ ஜராயுணுஸஹ | யதாயம் வாயுரேஜதி யதாசமுத்ர ஏஜதி | ஏவாயம்' தசமாஸ்யோ அஸ்ரஜ்ஜராயுணுஸஹ|| (யஜு-9-29.)

பத்து மாதங்களின் பிறகு இப்பிண்டம் உயிருடன் துன்பமின்றி வெளிப்படவும். எவ்வாறு கடலும், காற்றும் தானுகவே நடைபெறுகின்றதோ அவ்வாறே இப்பிண்டமும் வெளிவரக்கடவதாக.

இம்மந்திரத்தால் நீர் தெளித்த பிறகு :—

ஓம் அவைதுப்ருச்னி சேவலகும் சுபே ஜராய்வத்தவே| நைவமாம் ஸேன பீவரிம் நகஸ் மிம்ச்சனுயதமைவ ஜராயு பத்யதாம் || (பாரஸ்-1-16-2.)

பலவித சென்னீர்களா லேற்படும் ஊனுடன் கூடி உலக சுகத்தை யனுபவிக்க யிப்பிண்டம் வெளிப்படட்டும். ஏ ! பலம் பொருந்திய உடலைக்கொண்டுள பெண்ணே | இப்பிண்டத்தினுன், உன்றனுறுக இருக்கிறது. உனக்கோர் துன்பமுமின்றியிப் பிண்டம் வெளிப்படட்டும்.

இம் மந்திரத்தால் துதி செய்து மீறுபடி நீர் தெளிக்க வேண்டும்.

குமாரம் ஜாதம் புராSன்யை ராலம்பாத் ஸபர்மதுனி ஹிரண்ய நிகாஷம் ஹிரண்யேன ப்ராஸயேத் ||

(அஸ்வ-1-1-1.)

பிறந்த குழந்தையை முதலில் தகப்பனுர் கையிலீய வேண்டும்.

தோழிகளாய பெண்களப் பிண்டத்திலிருக்கும் தோலை நீக்கி, முகம், மூக்கு, காது, கண், முதலியவை களிலிருக்கும் மலத்தை நீக்கி, நல்லாடை யாலதைத்துடைத்து, சுத்தம் செய்து தகப்பனுர் மடிமேலிடவேண்டும். தகப்பனுர் குளிர் காற்றில்லாத விடத்திலமர்ந்து 'சான் தொப்புள் விட்டு மற்றதை கயிரால் கட்டி, அக் கட்டுக்கு மேலிருக்குந் தொப்புளை யறுத்து, சிறுகச் சூடுள்ள நீரில் குழந்தையைக் குளிப்பாட்டி

குழந்தையுடன் வெளிவந்து, யாகத்தடவினிற்கு அருகில், ''நெருப்பு மூட்டல்'' ''சமிதையிடல்'' முதலியன செய்து, நெருப்பை நன்றாக எரியச்செய்து, நெய் முதலானவைகளை வைத்துக்கொண் டிருக்கவேண்டும். வேதபார்ப்பனன் தனக் கிடப்பட்டிருக்கும் தெற்காசனத்தில் வடக்கு முகமா யமர, குழந்தையின் தகப்பன் தன்னாசனத்தின் மீது ஓர் ஆடை யிட்டு, கைகால்களை சுத்திசெய்துகொண்டு, மேற்கு முகமாக அமரவேண்டும். பிறகு பார்ப்பனன் தன்னதிகார மேற்றுக் கொள்ள இவ்வாறு சொல்லவேண்டும்—:

ஓம் ஆவஸோ: ஸதனே ஸீத|| பிடத்தின்மேலமருங்கள்

ஓம் ஸீதாமி | அமருகிறேன்.

இவ்வாறாசனத் தமர்ந்து, 43-வது பக்கத்திலுள்ளபடி ''அயந்த இத்ம'' எனும் 3மந்திரங்களால் 3சந்தனக்குச்சிகளை நெருப்பிலிடவேண்டும். பிறகு நெய்யினால் 41-வது பக்கம் உள்ளபடி நான்கு ''ஆஹார வாஜ்யபாகாகுதிகளும்; நான்கு ''வ்யாஹ்ருத்யாகுதி'' களும் செய்யவேண்டும். பிறகு,

ஓம் யாதிரச்சி நிபத்யதே அஹம் விதரணீ இதி| தாம் த்வா க்ருதஸ்ய தாரயா யஜேஸகும் ராதனீ மஹம் | ஸகும் ராதின்யை தேவ்யை தேஸ்ட்ர்யை ஸ்வாஹா || இதம் ஸரா தின்யை-இதன்னமம || (மங்-ப்ரா-1-5-6.)

தகப்பன் சொல்கின்றான், ஏ குழந்தையே! நீ எனக்கு மென்மேனயாட்கும் ப்ரதி கூலன். அவளினில்லற தருமத் தினவதாரமே! உன்னைப் பெற்றாட்கிவ்வாகுதி மூலமாய் பல மளிக்கின்றேன். இவ்வாகுதி இல்லற தேவிக்காக எனக் கன்று.

ஓம் விபச்சித் புச்சமபரத்தத்தாதா புனராஹரத்| பரே ஹித்வம் விபச்சித்புமானயம் ஜனிஷ்யதேs ஸௌ நாம ஸ்வாஹா || இதம் தாத்ரே இதன்னமம || (மங்-ப்ரா-1-5-7.)

ஏ கடவுளே! உன்னுத்திரவின்படி மகப்பேற்றை யடையச் செய்த என் புருடனுக்கு இன்னும் மகப்பேறடைய வேண்டிய பல மீயக்கடவாய் (பெண்ணின் வாக்யம்.)

இவ்விரண்டு மந்திரங்களாலிரண் ''டாஜ்யாகுதி''க ளியற்றி 53ம் பக்கத்திலிருக்கும் ''வாமதேவகானம்'' செய்து 11-ம் பக்கத்திலிருக்கும் கடவுள் வணக்கம் செய்யவேண்டும். பிறகு, தேன், நெய் யிவ்விரண்டையும் சமமாகக் கலந்து, பொன்னாற்செய்த குச்சியால் குழந்தையின் நாக்கின்மேல் '' ஓம் '' என எழுதி, வலது காதில் ''வேதோஸீதி'' (உன் பெயர் வேதம்) என்று சொல்லி, கலந்துவைத்திருக்கும் தேன், நெய்யை அப்பொன் குச்சியாலெடுத்து கொஞ்சங் கொஞ்சமாக கீழ்வரும் மந்திரங்களா லூட்டவேண்டும்—:

ஓம் ப்ரதேததாமி மதுனோ க்ருதஸ்ய வேதஸவித்ரா ப்ரஸமிதம் மகோனம் | ஆயுஷ்மான் குப்தோ தேவதாபி: சதம் ஜீவ சரதோ லோகே அஸ்மின் || (அஸ்-1-15-1.)

ஏ குழந்தையே! உனக்காக இந்நெய்கலந்த தேனை யளிக் கின்றேன். இந்நெய்யுந் தேனும் பகவானா லளிக்கப்பட்ட தாகும் என நானறிகின்றேன். நீ இந்நிலவுலகத்தி லுத்த மர்கள் சேர்க்கையுடன் நூறு வருடங்கள் உயிருடனிரு.

மேதாம்தே மித்ராவருணௌ மேதாமக்னிர் ததாதுதே| மேதாம் தே அஸ்வினௌ தேவாவாதத்தாம் புஷ்கரஸ்ரஜோ|| (மங்-ப்ரா-1-5-9.)

மித்ரன் முதலாய தேவர்களுன்னறிவை விசாலிக்கச் செய்யட்டும்.

ஓம் பூஸ்த்வயி ததாமி ||

உனக்கு உலகத்திலறிவுண்டாக்க நானிருப்பேனுகவும்.

ஓம் புவஸ்த்வயி ததாமி ||

உனக்கு மேலுலகத்தினறிவுண்டாக்க நானிருப்பேனுகவும்.

ஓம் ஸ்வஸ்த்வயி ததாமி ||

உனக்கு தேவவுலக அறிவுண்டாக்க நானிருப்பேனுகவும்.

ஓம் பூர்புவஃ ஸ்வஸ்ஸர்வம் த்வயி ததாமி|| (பாரஸ்-1-16)

உனக்கு மூவுலக அறிவுண்டாக்க நானிருப்பேனுகவும்.

ஓம் ஸதஸஸ்பதி மத்புதம் ப்ரியமிந்த்ரஸ்ய காம்யம் |
ஸனிம் மேதாமயாஸிஷகும் ஸ்வாஹா || (ருக்-1-18-6.)

சகல சக்தியும் வல்ல கடவுளிடம் நான் நற்குணங்களை யாசிக்கின்றேன்.

இவ்வேழு மந்திரங்களால் நெய்க்கலப்பை ஊட்டினபின், அரிசி, அவல் இரண்டையுஞ் சுத்தஞ்செய்து, நீரினுலரைத்து துணியில் வடிகட்டி, ஓர் பாத்திரத்திலெடுத்து பெருவிரல் மோதிர விரல்களாலதைக் கொஞ்சங் கொஞ்சமாயெடுத்து—:

ஓம் இதமாஜ்ய மிதமன்ன மிதமாயுரிதமம்ருதம் ||
(மந்-ப்ரா-1-5-8.)

இது ஒளியுள்ளது; அருந்தக்கூடியது; அம்ருதமாகும்:

இம் மந்திரத்தைச் சொல்லி குழந்தையின் வாயிலோர் துளி விடவேண்டும். இது "கோபிலீய க்ருக்சூத்திரத்தி" லுள மதமாகும். எல்லோருடையது மன்று. பிறகு குழந்தையின் வலது காதில் வாயைவைத்து கீழ்வரும் மந்திரங்கள் சொல்லவேண்டும்.

ஓம் மேதாந்தே தேவஃ ஸவிதாமேதாம் தேவீ ஸரஸ்வதீ |
மேதாந்தே அஸ்விநௌ தேவாவாதத்தாம் புஷ்கரஸ்ராஜௌ ||
(அஸ்வ-1-15-2.)

ஏ சிறுவ! உனக்குக் கடவுளும், வித்வான்களினறிவுருபமாய வாணியும், அசுவினி தேவர்களும் நல்லறிவீவார்களாக.

ஓம்; அக்னிராயுஷ்மான் ஸ வனஸ்பதி பிராயுக்ஷமான்ஸ் தேன த்வாயு ஷாயுஷ்மந்தம் கரோமி ||

உனக்கு அக்னிபகவன் நற்சீவனை யளிக்கட்டும்.

ஓம் ஸோமஆயுஷ்மான்ஸ ஓஷதீ பிராயுஷ்மாம்ஸ்தேனம்||

(முன் மந்திரத்தின் மிகுதி.)

திங்கள் முதலாயவர்கள் உனக்கு நீண்ட ஆயுளளிக்கவும்.

ஓம் ப்ரஹ்ம ஆயுஷ்மான் ததப்ராஹ்மணை ராயுஷ்மத் தேனம் ||

நான்முகன் முதலானவர்களுனக்கு நீண்ட ஆயுளளிக்கவும்.

ஓம் தேவா ஆயுஷ்மந் தஸ்தேடம் ருதேனயுஷ்மன் தஸ் தனம் ||

அம்ருதத்தால் நித்திய உயிர்நிலை பெற்றோ ருனக்கு நீண்ட ஆயுளளிக்கட்டும்.

ஓம் ருஷய ஆயுஸ்மந்தஸ்தே வ்ரதைரா யுஷ்மன் தஸ் தேனம் ||

நோன்புகளால் பயன்பெற்ற இருடிகளுனக்கு நீண்ட ஆயுளளிக்கட்டும்.

ஓம் பிதரஆயுஸ் மந்தஸ்தே ஸ்வதாபிரா யுஷ்மன் தஸ் தேனம் ||

நீண்டாயுள்பெற்ற தகப்பன்மார்களுனக்கு நீண்ட ஆயுளளிக்கட்டும்.

ஓம் யக்ரு ஆயுஷ்மான் ஸ தக்ஷிணா பிராயுஷ்மான்ஸ் தேனம் ||

உனக்கு யாகாதிகள் நீண்ட ஆயுளை அளிக்கட்டும்.

ஓம் ஸமுத்ர ஆயுஸ்மான் ஸ ஸ்ரவந்தீ பிராயுஷ்மான்ஸ் தேனத்வாயுஷாSSயுஷ்மந்தம் கரோமி|| (பாரஸ்-1-16.)

கடல் முதலியவைகளுனக்கு நீண்ட ஆயுளளிக்கட்டும்.

இவ்வாறு சொன்னபிறகு இடது காதிலு மிவ்வாறே சொல்ல வேண்டும். பிறகு குழந்தையின் தோளின்மேல் லேசாக கையை வைத்து, கீழ்வரும் மந்திரங்களைச் சொல்ல வேண்டும்—:

ஓம் இந்த்ர ஸ்ரேஷ்டானி த்ரவிணானி தேஹி சித்தம் தக்ஷஸ்ய ஸஷ்பதத்வமஸ்மே| போஷம் ரயிணாமரிஷ்ஷம் தனூனாம் ஸ்வாத்மானம் வாச ஃ ஸுதின த்வமஹ்னாம் || (ருக்-2-21-6.)

ஏவாசவ! எங்களுக்குத் தாங்கள் பொருளை அருளுங்கள். காரியங்களியற்றுவதில் திடம், அறிவு, சகல பாக்கியம் அருளுங்கள். தனத்தையும், சரீராரோக்யத்தையும், கலையையும் அருள் செய்யுங்கள்.

அஸ்மே ப்ரயந்தி மகவுவன் ன்ருஜீஷின்னிந்த்ர ராயோ விஸ்வவாரஸ்ய பூரே ஃ| அஸ்மேசதம் சரதோ ஜீவஸேதா அஸ்மே வீராஞ்சஸ்வத இந்த்ரஸிப்ரின் || (ருக்-3-36-10.)

ஏ பொருளதிகாரி! சகலரும் தங்களிடம் வேண்டுவதாய செல்வ மெங்களுக்கீயுங்கள். உயிருடன் நூறு வருடங்கள் வசிக்க எங்களுக்காயுளை யளியுங்கள். எங்களை எப்பொழுதும் வீரபுருடர்களாக வசிக்கச் செய்யுங்கள்.

ஓம் அஸ்மாபவ பரசுர்பவ ஹிரண்யமஸ்த்ருதம் பவ வேதோவை புத்ரனாமாஸிஸ ஜீவ சரத ஃ சதம் || (மங்-ப்ரா-1-5-18.)

ஏ சிறுவ! நீ வாளாயுதங்கள் பூண்டு விரோதிகளினின்றும் காப்பாற்றிக் கொள்வதில் வீரபுருடனாக விளங்கு. சு[illegible] விரி பசும்பொன்னி னொளியைப் பெறு. நீ புத்திரனெனு பெயருடைய என் ரூபமே யாவாய். நீ நூறுவருடங்களுயிருடனிரு.

இம்மூன்று ம[illegible]ங்களுக்குப் பிறகு—:

த்ரயாயுஷம் ஜமதக்னே ஃ கஸ்யபஸ்யத்ரயாயுஷம்| யத் தேவே ஷுத்ரீயாயுஷம் தன்னோ அஸ்துத்ரயாயுஷம் || [illegible] (யஜு-3-[illegible])

நான் உன்னை பால்ய, யௌவன, நரை, இப்பருவங்களினு முத்தமனாகச் செய்வேன்.

இம்மந்திரத்தை மூன்றுமுறை சொல்லி கையை வாங்கிக்கொண்டு பிறகு, குழந்தை பிறந்தவிடஞ் சென்று—:

ஓம் வேததேபூமி ஹ்ருதயம்திவி சந்த்ரமஸி ஸ்ரிதம்| வேதாஹம் தன்மாம் தத்வித்யாத்பஸ்யேம சரத: சதம் ஜீவேமசரத: சதகும் ஸ்ருணுயாமசரத: சதம்|| (பாரஸ்-7-16)

என் புத்திரனை யேற்றளித்த தரணீ! உன் மனதையென்மனம்போற் பார்ப்பேன். நானுமிக் குழந்தையும் நூறு வருடங்கள் உன்னைப் பார்த்துக்கொண்டும், உன்னுடன் விளையாடிக்கொண்டு மிருப்போமாக.

இம் மந்திரத்தைச் சொன்னபின்—:

யத்தே ஸுஸிமே ஹ்ருதயகும் ஹிதமந்த: ப்ரஜாபதௌ| வேதாஹம் மன்யே தத்ப்ரஹ்ம மாஹம் பௌத்ரமகம் நிகாம்|| (மங்-ப்ரா-1-5-10.)

ஓர் துக்கமுமின்றி என் குழந்தையை ஏற்றளித்த தாயே! நான் உன்னை மதிக்கின்றேன்.

யத் ப்ருதிவ்யா அனும்ருதம் திவிசந்த்ரமஸி ஸ்ரிதம்| வேதாம்ருதஸ்யே ஹனுமமாஹம் பௌத்ரமகம்ரிஷம் ||

(மங்-ப்ரா-1-5-11.)

இப்பூமியினரிய வல்லமையை யானறிகிறேன். என் புத்திரன் பிறந்ததிலோர் துக்கமுமின்று.

இந்த்ராக்னீ சர்ம யச்சதம் ப்ரஜாபதீ| யதாயன்ன ப்ரமீயதே புத்ரோ ஜனித்ரயா அதி || (மங்-ப்ரா-1-5-12.)

ஏ வாசவா! சுடரே! நீங்கள் இப்பூமிக்கருள் செய்யுங்கள்; குழந்தையை மரிக்கச் செய்யாது ஈன்றெடுத்த இப்பூமிக்கு அருள் செய்யுங்கள்.

யதத்சந்த்ரமஸி க்ருஷ்ணம் ப்ருதிவ்யாஹ்ருதயம் ஸ்ரிதம்| ததஹம் வித்வாம்க்ஸ்தத்பஸ்யன்மாஹம் பௌத்ரமகம் ருதம் || (மங் 1-5-13)

என் புத்திரனை துக்கமின்றி யளித்த இப்பூமியினுண்மையை யானறிகின்றேன்.

இம்மந்திரங்களைச் சொல்லி குழந்தைமேல் நல்ல நீர் தெளிக்கவேண்டும்.

கோஸி கதமோஸ்யே ஸேஷ்யம்ருதோஸி| ஆஹஸ்பத்யம் மாஸம் ப்ரவிசாஸௌ || (மங்-ப்-1-5-14).

நீ யார்? எவ்வாறு வந்தாய்? இது அமிர்தமாகும். இன்னிலவுலகத்தில் வருவாய்.

ஸத்வாஹ்னே பரிததாத்வஹஸ்த்வா ராத்ரயை பரிததாது ராத்ரிஸ்த்வாஹோ த்ராப்யாம் பரிததாத்வஹோ ராத்ரேத்வார்த்த மாஸேப்ய: பரிததத் வ்ருதவஸ்த்வா ஸம்வத்ஸராய பரிதத்து ஸம்வத்ஸரஸ்த் வாயுஷே ஜராயை பரிததாத்வஸௌ || (மங்-ப்ரா-1-5-15).

இச்சூரியன் உனக்காக பகலளிக்கட்டும், பகலுனக்கிரவளிக்கட்டும், இரவு உனக்கிரவுபக லளிக்கட்டும், இரவுமுனக்குப் பிறையளிக்கட்டும்; பிறையுனக்கு மாதமளிக்கட்டும், மாதமுனக்கு ருதுக்களளிக்கட்டும், ருதுக்களுனக்கு வருட மளிக்கட்டும், அவ்வருடமுனக்கு பெருகிக்கொண்டே சென்றுன்னுயுளை நீடிக்கச் செய்யட்டும்.

இம்மந்திரத்தால் குழந்தைக் காசிர்வாதமீந்து பிறகு—:

அங்காதங்காத்ஸம் ஸ்ரவஸி ஹ்ருதயாததி ஜாயஸே| ப்ராணந்தேப்ராணேன ஸந்ததாமி ஜீவமே யாவதாயுஷம் ||
(மங்-ப்ரா-1-5-16).

ஏ! குழந்தாய்! நீ என் அவயவங்களிருந்தும் மனதிலிருந்தும் பிறந்தவன். என் உயிரை உன்னுயிருடன் கட்டுப்படுத்துகின்றேன். நீ மனிதர்களின் பூரணஆயுள்வரையிரு.

அங்காதங்காத் ஸம்பவஸி ஹ்ருதயாததி ஜாயஸே | வேதோவை புத்ரனுமாஸி ஸ ஜிவஸாத: சதம் ||
(மங்-ப்ரா-1-5-17).

ஏ சிறுவ! நீ என்னவயவங்களாலு மனதாலுமாகியவன். நீ நல்ல வேதமுணர்ந்தவனாக 100-வருடங்கள் உயிருடனிருக்கக் கடவாய்,

அஸ்மாபவ பரஸுர்பவ ஹிரண்யமஸ்த்ருதம் பவ | ஆத்மாஸி புத்ரமாம்ருதா: ஸஜீவ சரத: சதம் ||
(மங்-ப்ரா-1-5-18).

நீ உண்மையாளனாகவும், நல் வீரனாகவும் ஆவாய், பொன்னினொளியைப் பெறு. நீ என்னாத்மாவின் ரூபம். உனக்கு மரணமில்லை. நீ 100-வருடங்களுயிர் பெறுவாய்.

பஸுனும் த்வா ஹிங்காரேணாபி ஜிக்ராம்யஸௌ ||
(மங்-ப்ரா-1-5-19).

கன்றின்னைசை கேட்கும் பசு எவ்வாறன்புடனோடுமோ; அவ்வாறே நானுன்னனையைக் கேட்டவுடனே மகிழ்ந்தெடுப்பேன்,

163917

இம் மந்திரத்தைச் சொல்லி குழந்தையின் சிரசை முகரவேண்டும், இம்மாதிரியே தகப்பனர் குழந்தைக ளிட மன்புகாட்ட வெளிதேசங்கள் செல்லுங்காலத்திலும் திரும்பி வருங்காலத்திலு மிச்சடங்கு செய்யவேண்டும்.

ஓம் இடாஸி மத்ராவருணீ வீரே வீரமஜீஜனதா:| ஸாத்வம் வீரவதி பவ யாஸ்மான் வீரவதோடகரத் ||
(பாரஸ்-1-16).

ஏ வீரமாதே! எவ்வாறு யாகத் தலைவர்கள் தங்கள் யாகத்தை நிறைவேற்றிவைக்கும் யாகக் கர்த்தர்களிடமன்பு செலுத்துவார்களோ; அவ்வாறே நீ என் பிரிய நேசி! நீ நல்ல வீர புருடனைப்பெற்று எனக் களிக்கின்றாய். நீயும் வீர புத்திரியே.

இம் மந்திரத்தாற் கடவுளை வேண்டி, பெற்றதாய்க்கின் புண்டாக்கி, பிறகு பெண்ணினிரண்டு கொங்கைகளையும் சிறுச் சூடாய நீரினாற் கழுவி நன்றாய்த் துடைத்து—:

ஓம் இமம் ஸ்தனமூர்ஜ்ஜஸ்வந்தம் தயாபாம் ப்ரபீன மக்னே சக்ரஸ்யமத்யே| உத்ஸம் ஜுஷஸ்வ மதுமந்தமர்வன் த்ஸமுத்ரியம் ஸதனமாவிசஸ்வ ||
(யஜு-17-87).

கொங்கைகளிலிருக்கு மக்னியைத் தணித்தபின் னதிலிருக்கும் பாலி லிரண்டு குண்முளது. அப்பாலை யருந்தும் குழந்தைக்கு பலமீதல், குழந்தையை நன்றாக வளர்த்தல்.

இம் மந்திரத்தைச் சொல்லி இடது முலையை முதலில் குழந்தையின் வாயில் வைத்தபின்—:

ஓம் யஸ்தே ஸ்தன: ஸஸயோ யோமயோ பூர்வேண விஸ்வா புஷ்யஸி வீர்யாணி | யோ ரத்னதா வஸுவித்ய:

R65
N34

ஸூதத்ர꞉ ஸரஸ்வதீ தாதவேக꞉ ‖ (ருக்-1-164-49).

ஏ கலைவாணி யொத்த பெண்ணே! உன் கொங்கைக ளேற்பட்டது பாலூட்டுவதர்க்காகவே, இதனால் நீ குழந்தையின் சகல அவயவங்களையும் பலமடையச் செய்கின்றாய். ரத்ன மயத்தை பால் ரூபமாக உன் கொங்கைகளிற் கொண்டிருக்கின்றாய். இதினாலிக் குழந்தையை நீ காப்பாற்றுவாயாக.

இம் மந்திரத்தின்பின் வலது கொங்கையைக் குழந்தையின் வாயில் வைத்து—:

ஓம் ஆபோதேவேஷூ ஜாக்ருதயதா தேவேஷூ ஜாக்ருத। ஏவமஸ்யாம் ஸூதிகாயா ஸபுத்ரிகாயாம் ஜாக்ருத ‖
(பாரஸ்-1-16).

வேள்விகளி லமிர்தமயமா யொளிரும் நீரே யிங்கு பால் ரூபமாயிருந்து குழந்தையைக் காப்பாற்றி யருள்கின்றீர்.

இம் மந்திரத்தால் பெண்ணின் தலையருகில் ஓர் செம்பில் (கலசம்) நீரை நிறைய மொண்டு, பத்து இரவுகள்வரை அங்கேயே வைத்திருக்கவும். அவ்வாறே யீன்றாளு மங்கேயே பத்துநாட்க ளிருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் காலைமாலை சந்திகாலத்தி லங்கு கீழுள மந்திரங்களால் சாதமும் கடுகும் கலந்து ஆகுதிகள் கொடுத்துக்கொண்டு வர வேண்டும்.

ஓம் சண்டாமர்கா உபவீர꞉ சௌண்டிகேய உலூகல꞉। மலிம்லுசோ த்ரோணா ஸஸ்ச்யவனோ நஸ்யதாதித꞉ ஸ்வாஹா ‖ இதம் சண்டாமர்காய, உபவீராய, சௌடிகேயாயோலூகலாய, மலிம்லுசோ த்ரோணஸஸ்ச்யவனோ னஸ்யதாதி தேப்யஸ்ய இதன்னமம ‖

இங்குள பீடையுண்டு செய்பவனவும், பாபத்திற்குக் காரணமாயிருக்கும்படியானவும், அழுக்கை உற்பத்தி செய்பவனவும், மூக்கின்வழியாய் வியாதிகளுண்டு செய்பவனவும், ஆகிய சகல வியாதியுயிர்களும் ஒழியக்கடவது.

ஓம் அலிகின்னனிமிஷ꞉ கிம்பதந்த உபஸ்ருதி꞉। ஹர்யக்ஷ꞉ கும்பீசத்ரு꞉ பாத்ரபாணிர்ன்ரு மணிர் ஹன் த்ரிமுக꞉ ஸர்ஷபாருணஸ்ச்யவனோ நஸ்யதாதித꞉ ஸ்வாஹா ‖ இதமலிகின்னனிமிஷாய கிம்வதத்ப்ய, உபஸ்ரு திஹர்யக்ஷாய கும்ப்சத்ரவே பாத்ரபாணயே ன்ருமன்யே ஹந்த்ரிமுகாய ஸர்ஷபாருணய இதன்னமம ‖ (பாரஸ்-1-16).

எப்பொழுது மிடையூறு புரிபனவும், மூன்று தோடங்களானவையும், உயிர்களைத் தின்பனவும் முதலாய சகல கெட்ட பொருள்களும் ஒழியட்டும்.

இம்மந்திரத்தால் 10 தினங்கள்வரை வேள்வி செய்தபின் பண்டிதர்களும், தர்மாத்துமாக்களும், வேதமதங் கொண்டோரும், ஆகியவர்கள் வெளியிலும், தகப்பனார் உள்ளும் நின்றுகொண்டு கீழ்வரும் மந்திரங்களால் மனப்பூர்த்தியா யாசீர்வதிக்க வேண்டும்.

மானோ ஹூாஸிஷூர்ருஷயோ தைவ்யாயேதனூபா யே நஸதன் வஸ்தனூஜா꞉। அமர்யா மர்த்யா அபிந꞉ ஸசத்வமாயுர்தத்த ப்ரதாம் ஜீவஸேந꞉ ‖ (அதர்-6-4-41-3).

வேள்வியறிவும் நற்குணமுங் கொண்ட பெரியோர்கள் நமக்குச் சகல நற்பேறுகளு முண்டாக ஆசீர்வதிப்பார்களாக.

இதம் ஜீவேவ்ய ஃ பரிதிம் ததாமிமைஷாம் நு காதபரோ அர்த்தமேதம்| சதம் ஜீவந்த ஃ சரத ஃ புருசிஸ்திரோ ம்ருத்யும் தததாம் பர்வதேன || (அதர்-12-2-23).

கடவுளின் கட்டளையையுணர்ந் ததன்படி யுண்மையை யறிந்தொழுகக் கடவுள் நமக்கு நல்லறிவை யீவாருகவும்.

விவஸ்வான்னே அபயம் க்ருணோது ய ஃ ஸுத்ரா மா ஜீரதானு ஃ ஸுதானு ஃ| இஹேமே வீராம் பகவோ பவந்து கோமதஸ்வ வன்மய்யஸ்து புஷ்டம் || (அதர்-18-3-61).

வீரியத்தினவசிய முணர்ந்ததனை ஈயும் வள்ளள். தர்ம மனத்தன்-நமக்கடைக்கலமீவார். நானவரருளால் புத்திரன், மனைவி, பசு, குதிரை முதலாயதுகளுடன் நல்ல பலசாலியாய் வாழ்வேனுகவும்.

சிசுதோற்றச் சடங்கு முற்றிற்று.

பெயரிடுஞ் சடங்கு (நாமகரணம்)

அத்ர ப்ரமாணம்| நாமசாஸ்மை தத்யுஃ ||

“ அஸ்வலாயன க்ருககுத்திரம் ” எழுவதாவது—:

இப்பிள்ளைக்குப் பெயரிடுவோம்,

கோஷவதாத்யந்தரந்த ஃ ஸ்தம பினிஷ்டானுந்தம் த்ப்யக்ஷரம் ||

இவன் பெயர் முதலில் பகவனின் பேர்களில் 2, 3, 4 எழுத்துக்கள் வருவனவற்றி லொன்றும், மத்தியில், ய-ர-ல-வ-இவைகளி லொன்றும் கடைசியில் (விசர்கம்) ஹ காரங்களி லொன்றும் வருவதாக பெயரிடுவோமாக—:

சதுரக்ஷரம் வா ||

குறைந்தது நான்கெழுத்துக்க ளிருக்கவேண்டும்.

த்வ்யக்ஷரம் ப்ரதிஷ்டாகாமச் சதுரக்ஷரம் ப்ரஹ்மவர்சஸ காமஃ||

யார் கீர்த்தியை விரும்புகின்றார்களோ அவர்களிரண்டெழுத்துக்களும், யார் ஒளிபெற விரும்புகின்றனரோ அவர்கள் நான்கெழுத்துக்களும் கொண்ட பெயரிடுக.

யுக்மானி த்வேவ பும்ஸாம் ||

புருடர்களின் பெயர் உயிரெழுத்தி லிருக்கவேண்டும்.

அயுஜானி ஸ்ரீணாம் ||

பெண்களின் பெயர் உயிரல்லாத எழுத்திலிருக்கவேண்டும்.

அபிவாதனீயம்ச ஸமீக்ஷத தன்மாதா பிதரௌ| விதய்யாதாமோ பனயனுத் ||

தாயார், தகப்பனுருக் கெப்பெயரி லன்புண்டாகுமோ வப்பெயரிடுக.

(இது “அஸ்வலாயன க்ருககுத்திரம்”).

தசம் யாமுத்தாப்ய பிதாநாமகரோதி த்வ்யக்ஷரம் சதுரக்ஷரம் வாகோஷவததாதர்ந்தரோத்யந்தர ஃ ஸ்தம்ர்காபினிஷ்டா

ஞந்தம் க்ரும்குர்யான்ன தத்திக மயுஜாக்ஷர மாகாராந்தம் ஸ்ரியௌ சர்ம ப்ராஹ்மணஸ்ய வர்மக்ஷத்ரியஸ்ய குப்தேதி வைஸ்யஸ்ய || (பராஸ்-1-17-1-4).

குழந்தை பிறந்த பத்தாம்நாள் தகப்பனார் குழந்தையை எடுத்து பெயரிடவேண்டும். அப்பெயர் நான்கெழுத்து வர்க்கங்களில் 3,4,5 வது எழுத்திலொன்று முதலிலும், ய,ர, ல,வ,க்களிலொன்று நடுவிலும், கடைசியில் (விசர்க்கமும்) ஹகாரமும் வருமாறு வைக்கவும். பெண்களின் பெயர் உயிரல்லாத எழுத்து நெடிலி லிருக்கவேண்டும். பார்ப்பனர்களின் பெயரின் கடைசியில் சர்மா வென்றும், வீரர்களின் பெயரின் கடைசியில் வர்மா வென்றும், வைஸ்யர்களின் பெயர் கடைசியில் குப்தாவென்றும் வரவேண்டும்.

இவ்வாறே "கோபிலீய" "சௌனக க்ருககூத்திர"ங்களிலு முள்ளது. பெயரிடுதலெனின் குழந்தைக்கு ஓர் நற்பெயரை யளித்தலாகும். இதற்கு காலம் பிறந்தநாளிலிருந்து 10 நாள் கழித்து, 11-ம் நாளிலாகிலும், 101-ம் நாளிலுமின்றேல் இரண்டாவது வருடாரம்பத்திலும் பெயரிடலாம். பெயரிடத் தீர்மானித்த நாளில் பந்து மித்திரர்களை யெல்லாமழைத்து, தகப்பனும் பிள்ளையும், வேள்வி கர்த்தாக்களும் சடங்கைப் புரிதல் வேண்டும். முதலில் 11-ம் பக்கங்களிலுள்ளவாறு, கடவுள் வணக்கம், அருள்கோறல், அமைதி வேண்டல் முதலியவைகளை நடத்தி, பொதுச் சடங்குகளிற் சொல்லியுள சகல சடங்குகளையுஞ் செய்து; 4 "ஆஹாரவாஜ்யபாஹாருதி"கள், (4) "வ்யாஹ்ருத் யாகுதிகளும்" 50-ம் பக்கத்தில் வரைந்துள "த்வன்னோ அக்னே" முதலாய 8-மந்திரங்களால் 8-ஆகுதியும், ஆகமொத்தம் 16-நெய்யாகுதிகள் செய்ய வேண்டும். பிறகு குழந்தைக்கு நீராட்டி, நல்லாடையாற் றுடைத்து, தடவினருகாமையில் தாயார் குழந்தையை தகட்பனிடமிருந்து வாங்கிவந்து, வலதுபக்கம் நின்று குழந்தையின் தலையை வடக்கு பக்கத்திருத்தி தகப்பனார் கையிற் கொடுக்கவேண்டும். மறுபடி இவ்வாறே மனைவி புருடனின் பின்னாலிருந்து வந்து வடக்கு பாகத்தில் கிழக்கு முகம் பார்த்தபடி அமரவேண்டும். பிறகு தகப்பனார் குழந்தையின் தலையை வடக்கிலும், பாதத்தைத் தெற்கிலுமாக வைத்து மனைவியிடம் கொடுக்கவும். பிறகு அச்சடங்கில் முதலில் தலைமை வகித்துள்ள வேள்வி செய்யவேண்டும். முன்பு சொல்லியுள்ளபடி நெய்யில் கரண்டியையிட்டு "ஓம் ப்ரஜாபதயேஸ்வாஹா" இம்மந்திரத்தாலோ ராகுதியளித்து, பிறகு குழந்தை எந்த திதி, நட்சத்திரத்திற் பிறந்ததோ அவைகளின் பெயரைச் சொல்லி அத்திதிநட்சத்திரங்களினதிதேவதைகளின் பெயருடன் நான்கு ஆகுதி கொடுக்கவேணடும் எனின், ஒன்று திதிப்பெயருடனும், 2-வது திதிதேவதையின் பெயருடனும், 3-வது நட்சத்திரப் பெயருடனும் 4-வது நட்சத்திர தேவதையின் பெயருடனும், கடைசியில் ஸ்வாஹா என்பதைச் சேர்த்து 4-ஆகுதிகள் கொடுக்கவேண்டும். எவ்வாறெனின் ஒருவன் பிரதமைதிதி அஸ்வினி நட்சத்திரத்திற் பிறந்திருப்பின்—:

ஓம் ப்ரதிபதே ஸ்வாஹா | ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா |
ஓம் அஸ்வின்யைஸ்வாஹா | ஓம் அஸ்விப்யாம் ஸ்வாஹா || *
(கோபி-2-8-6-12).

---

* திதிதேவதைகள்:—1-பிரஹ்ம; 2-த்வஷ்ட்ரு, 3-விஷ்ணு, 4-எம, 5-ஸோம, 6-குமார, 7-முனி, 8-வஸு, 9-சிவ, 10-தம: 11-ருத்ர, 12-வாயு, 13-காம, 14-அனந்த, 15-விஸ்வேதேவ, 16-பிதர—:

நட்செத்ரதேவதை—:அஸ-அஸ்வி; ப்ர-யம; கிரு-அக்னி; ரோக-ப்ராஜாபதி, மிரு-ஸோம, திரு-ருத்ர; புன-அதிதி, பூச-

பிறகு 47-ம் பக்கத்தின்படி 4 "வ்யாஹ்ருதாஹுதி" களுமாக 5-ஆகுதிகளிருந்து, பிறகு தாயார் குழந்தையை யெடுத்துக்கொண்டு ஓர் நற்பீடத்தின்மே லமரவேண்டும். தகப்பனார் குழந்தையின் மூக்கிலிருந்துவரும் காற்றைத் தொட்டு,

கோ஽ஸி கதமோ஽ஸி கஸ்யாஸி கோனாமாஸி யஸ்யதே நாமாமன்மஹியம் த்வா ஸோமே னதீத்ருபாம|| பூர்புவஃ ஸ்வஃ ஸுப்ரஜாஃ ப்ரஜாபிஃ ஸ்யாம் ஸுவீரோ வீரைஃ ஸுபோஷஃ ஸுஸுபௌஷைஃ|| (யஜு-7-29).

நீயார்? யாருடையவன்? யாருடைய மகன்? உன் பெயரென்ன? இதற்கு பதிற் சொல், நீ அவன்தான். நானிப்பொழுது பெயர் வைத்தவன். பாலாதி பொருள்களால் வளர்க்கப்பட்டவன். ஏ பகவானே! என் குழந்தைக்கு நல்ல வீரியாதுகளளி.

ஓம் கோ஽ஸி கதயோ஽ஸ் யேஷோ஽ஸ்யம் ருதோ஽ஸி| ஆஹஸ்பத்யம் மாஸம் ப்ரவிசாஸௌ || (மங்-ப்ரா-1-5-14).

பொருள் 99-ம் பக்கத்திலுள்ளது.

இந்த "அஸௌ" எனும் பதத்திற்குப் பிறகு, குழந்தைக்கு ஏற்படுத்திய பெயரைச் சொல்லவேண்டும். எவ்வாறெனின் ஜெயதேவன் எனும் பெயர், பார்ப்பனனாயின் முன் விதிப்படி ஜெயதேவ சர்மா; க்ஷத்திரியனாயின் ஜெயதேவ

ப்ருஹஸ்பதி, ஆயி-ஸர்ப, மக-பித்ரு. பூர-பக, உத்-அர்யமன்; அஸ்-ஸவித்ரு, சித்-த்வஷ்ட்ரு, சுவா-வாயு, விசா-சக்ராக்னி; அனு-மித்ர, கேட்-இந்த்ர, மூல-நிர்ஹ்ருதி, பூரா-அப், உத்-விஸ்வேதேவ, திரு-விஷ்ணு, அவி-வசு, சதை-வருண, பூரட்-அஜபாத, உத்ர-அஹிர்புத்ன்ய, ரேவதி-பூஷன்—:

வர்மா, வைசியனாயின் ஜெயதேவ குப்தா, சூத்திரனாயின் ஜெயதேவதாசன் எனப் பெயரிடவேண்டும். பெண்ணாயிருப்பின், யசோதா, ஸுகேதா, ஸௌபாக்யப்ரதா முதலியவைகளாகும். பெயரை நன்றாக விளங்கும்படி சொல்லி, மறுபடி "அஸௌ" எனுமிடத்தில் பெயரைச் சேர்த்து முன் சொன்ன "ஓம் கோ஽ஸிம்" எனும் மந்திரம் சொல்லவேண்டும். பிறகு:—

ஓம் ஸ த்வாஹ்னே பரிததாத்வஹஸ்வா ராத்ரயை பரிததாது ராத்ரிஸ்த்வா ஹோராத் ராப்யாம் பரிததாத் வஹோராத்ரௌ த்வார்த்த காஸேப்யஃ பரிதத்தாமர்த்த மாஸாஸ்த்வா மாஸேப்யஃ பரிததது மாஸாஸ்த்வர்த்தப்யஃ பரிததத் வ்ருதவஸ்த்வா ஸம்வத்ஸராய பரிததது ஸம்வத்ஸரஸ்த்வாயுஷே ஜராயை பரிததாது அஸௌ || (மங்-ப்ரா-1-5-15).

பொருள் முன்பே வந்துள்ளது 99-ம் பக்கம் பார்.

இம் மந்திரத்தின் மூலமாய் குழந்தையை முன்போலாசீர்வதிக்க வேண்டும். இவ்வாறு குழந்தைக்குப் பெயரிட்டு, சடங்குக்கு வந்திருக்கு மெல்லோருக்கும் பெயரைக் கேட்கும்படி சொல்லி, 53-ம் பக்கத்திலுள்ள "மகா வாமதேவ்யகானம்" செய்யவேண்டும். பிறகு வந்திருப்பவர்களுக்கு மரியாதைகளியற்றி யனுப்பவேண்டும். போகும்போதெல்லோரும் 11-ம் பக்கத்திலுள்ள கடவுள் வணக்கம் புரிந்து, குழந்தைக் காசீர்வாத மீயவேண்டும். எனின்:—

"ஹே பாலக! த்வமாயுஷ்மான், வர்ச்சஸ்வி தேஜஸ்வி, ஸ்ரீமான் பூயாஃ"

ஏ குழந்தாய்! நீ நீண்ட ஆயுளுள்ளவனாகவும், தர்மாத்மாவாகவும், கீர்த்தி பொருந்தியவனாகவும், பரோபகாரி

யாகவுமிருந்து சகல பேறுகளையும் பெற்று நீடூழி வாழக் கடவாய்.

பெயரிடுச் சடங்கு முற்றிற்று.

வெளிவிடுச் சடங்கு (நிஷ்க்ரமணம்).

வெளிவிடுச் சடங்கெனின், குழந்தையை இல்லத்தினின்றும் நற்காற்றுலவு மிடத்திற்கு அத்தாட்சியின்படி யழைத்துச் செல்லுதலாகும். இதற்குக் காலம்-எப்பொழுது நன்மையாக விருக்குமோ வப்பொழுதே அழைத்துச் செல்ல வேண்டும். ஆயினும், குறைந்தது ஐந்தாவதுமாதம் கட்டாயம் அழைத்துச் செல்லவேண்டும். இதற்கு அத்தாட்சி

சதுர்த்தே மாஸி நிஷ்க்ரமணிகா சூர்யமுதீட்சயதி தச்சக்ஷுரிதி || (பரா-1-17).

நான்காமாதம் வெளிவிடுச்சடங்கு செய். "தச்சக்ஷுர்" முதலாய மந்திரங்களால் பரிதி தரிசனம் செய்துவைக்க வேண்டும்.

ஜனனாத் யஸ்த்ருதீயோ ஜ்யௌத்ஸ்னஸ்ய த்ருதீயாயாமி || (கோபி-8-1).

பிறந்தநாளிலிருந்து எப்போது மூன்றுவது வளர்பிறை ஆரம்பமோ அப்போது அதில் மூன்றுவதுநாள் வெளிவிடுச் சடங்கு செய்.

(இ-ள்.) வெளிவிடுச் சடங்கியற்ற இரண்டு காலபேதங்களுண்டு. ஒன்று குழந்தை பிறந்த நாட்டொடங்கி மூன்று

வது வளர்பிறையில் மூன்றும் நாளும், மற்றொன்று நான்காவது மாதத்தில் குழந்தை பிறந்தநாளுமாகும். இன்னாளில் குழந்தையின் பிறந்ததிதி யிருத்தல் வேண்டும்.

இச் சடங்குக்காக ஏற்படுத்திய நாளில் விடியற்காலை பருதி உதயத்திற்குப்பின், குழந்தைக்கு நன்னீராற் குளிப்பாட்டி, நல்லாடையணிவித்து, குழந்தையை ஈன்றாள் வேள்விச் சாலைக் கெடுத்துவந்து புருடனுக்கு தெற்கு பாகத்தில் சுற்றிவந்து புருடன்முன்சென்று, குழந்தையை தலைமேலாகவும், கால் கீழாகவும் வைத்து புருடன் கையில் கொடுக்க வேண்டும். பிறகு புருடனுக்கு பின்சென்று கிழக்கு முகமாக நிற்கவேண்டும்.

ஓம் யத்தே ஸுஸீமே ஹ்ருதயகும் ஹிதமந்தஃ ப்ரஜாபதௌ | வேதாஹம் மன்யே தத் ப்ரஹ்மமாகம் பௌத்ரமகம் நிகாம் || (மங்-ப்ரா-1-5-10). (1)

ஓம் யத் ப்ருதிவ்யாமம்ருதம் திவி சந்த்ரமஸி ஸ்ரிதம் | வேதாதம் ருஸ்யாஹ ணுமமாஹம் பௌத்ரமகம் ரிஷம்|| (2) (மங்-ப்ரா-1-5-11).

ஓம் இந்த்ராக்னி சர்ம யச்சதம் ப்ரஜாபதீ | யதாயன்ன ப்ரமீயேத புத்ரோ ஜனித்ராய அதி|| * (மங்-ப்-1-5-12). (3)

இம்மூன்று மந்திரங்களாலும் பகவானைத் துதித்து, 11,25-ம் பக்கங்களிலுள்ள கடவுள் வணக்கம், அருள்கோறல், அமைதி வேண்டல் முதலியவைகளுடன் பொதுச் சடங்குகளில் சொல்லியுள்ள சகல காரியங்களுஞ் செய்து, பிறகு குழந்

---

* இம்மூன்று மந்திரங்களின் பொருள்கள் 98-ம் பக்கத்திற் பார்க்கவும்.

தையின் றலையில் கையைவைத்து கீழ்வரும் மந்திரங்களைச் சொல்லவேண்டும்.

ஓம் அங்கா தங்காத்வம் பவஸி ஹ்ருதயாததி ஜாயஸே|
ஆத்மா வை புத்ரனாமாஸி ஸ ஜீவ சரத꞉ சதம் ||
(பரா-1-18-2).

ஓம் ப்ரஜஸ தேஷ்ட்வா ஹிங்காரேண வஜிக்ராமி |
ஸஹஸ்ராயுஷாऽஸௌ ஜீவ சரத꞉ சதம்|| (பராஸ்-1-18-3).

கவாம் த்வா ஹிங்காரேணவஜிக்ராமி | ஸஹஸ்ராயுவாऽ
ஸௌ ஜீவசரத꞉ சதம்|| (பராஸ்-1-18-4).

இவ்வாறே கீழ்வரும் மந்திரங்களைக் குழந்தையின் வலது காதிற் சொல்லவும்—:

அஸ்மே ப்ரயந்தி மகவன்ன் ருஜீஷின்னிந்த்ரராயோ விஸ்
வவாரஸ்யபூரே꞉| அஸ்மேசதம் சரதோ ஜீவஸேதா அஸ்மே
வீராஞ்சஸ்வத இந்த்ர ஸிப்ரின்|| (ருக்-3-36-10).

இந்த்ர ஸ்ரேஷ்டானி த்ரவிணானிதேஹிசித்தம் தக்ஷஸ்ய
ஸுபகத்வமஸ்மே | போஷம் ரயிணாமரிஷ்டம் தனூனாம்
ஸ்வாத்மானம் வாச꞉ ஸுதின த்வமஹ்னாம் || (ருக்-2-21-6).

இம்மந்திரத்தை இடது காதிற் சொல்லி, வடக்கிற்றலையும், தெற்கிற் கால்களுமாக குழந்தையை யெடுத்து, தாயாரின் மடியிலிட வேண்டும். பிறகு மோனத்துடனிருந்து பெண்ணின் றலையிற் கையை வைக்கவும். பிறகு களிப்புடனெழுந்து குழந்தைக்குக் கீழ்வரும் மந்திரங்களால் பருதி தரிசனஞ் செய்விக்க வேண்டும்—:

ஓம் தச்சக்ஷுர்தேவஹிதம் புரஸ்தாத் சுக்ரமுச்சரத் |
பஸ்யேமசரத꞉ சதம் ஜீவேமசரத꞉ சதம் ஸ்ருணுயாம சரத꞉
சதம் ப்ரப்ரவாம சரத꞉ சதமதீனா꞉ ஸ்யாம சரத꞉ சதம்
பூயச்ச சரத꞉ சதாத் || *
(யஜு-36-24.)

இம்மந்திரத்தைச் சொல்லி குழந்தையை நற் காற்று மார்க்கத்தில் வைத்திருந்து, வேள்விச்சாலைக்குக் கொண்டுவர அங்குள்ள எல்லோரும்—:

த்வம் ஜீவ சரத꞉ சதம் வர்த மான꞉|

இம்மந்திரத்தா லாசீர்வதிக்கவேண்டும். பிறகு வந்திருப்பவர்களுக்கு செய்யவேண்டுவன செய்தனுப்ப வேண்டும். பிறகு, இரவில் திங்களுதயமானபொழுது, குழந்தைக்கு நல்லாடையணிவித்து, தாயார் குழந்தையை வலதுபக்கத்திருந்து புருடனுக்கெதிர்சென்று வடக்கிற்றலையும் மேற்கில் காலுமாக வைத்து தகப்பனார் கையில் குழந்தையை யீந்து, வலதுபக்கத்திருந்து இடதுபக்கம் வந்து இரண்டு கைகளாலும் நீரைக் கொண்டு, திங்களினெதிரில் நின்று—:

ஓம் யதத்ச் சந்த்ரமஸி க்ருஷ்ணம் ப்ருதிவ்யாஹ்ருதயம்
ஸ்ரிதம்| ததஹம் வித்வாம்ஸ் தத்பஸ்யன்மாஹம் பௌத்ர
மகம் ருதம் || †
(மந்-ப்ரா-1-5-13.)

இம்மந்திரத்தாற் கடவுளைத் துதித்து, நீரை பூமியில் விட்டுவிடவேண்டும். பிறகு, தாயார் இடது பக்கமாக புருடனுக் கெதிர்வந்து குழந்தையை பெற்று, மறுபடி இடது பக்கத்தில் வந்து, குழந்தையின் தலை வடக்கிலாயி சல்லில

* இம்மந்திரத்தின் [illegible] பொருள் [illegible]
† இம்மந்திரத்தின் பொருள் [illegible] பக்கம் பார்க்கவும்

தெற்கிலுமாக வைத்து நிற்கவேண்டும். பிறகு தகப்பனிரண்டுகைகளாலும் நீர்கொண்டு "ஓம் யததச்ச" எனும் மந்திரத்தாற் கடவுளை துதித்து நீரை பூமியில் விட்டுவிட்டு, இருவரும் களிப்புடன் வீட்டிற்கு வருதல் வேண்டும்.

வெளிவிடுச் சடங்கு முற்றிற்று.

சாதமூட்டற் சடங்கு (அன்னப்ராசனம்)

குழந்தை சாதத்தையருந்தி செரிக்கச்செய்யும் பலமுடைத்தானபோது இச்சடங்கியற்ற வேண்டும். இதற்கு "அஸ்வலாயன க்ருஹ்ருஸூத்ரத்" தினத்தாட்சி—:

ஷஷ்டே மாஸ்யன்னப் ராசனம் || (அஸ்-1-16-1.)

க்ருதௌதனம் தேஜஸ்காம ஃ|| (அஸ்-1-16-4.)

ததிமதக்ருத மிஸ்ர தமன்னம் ப்ராசயேத் ||
(அஸ்-1-16-5.)

இவ்வாறே "பாரஸ்கர க்ருஹ்ருஸூத்திர" த்திலுமுள்ளது.

ஆறுவது மாதத்திற் குழந்தைக்கு சாதமூட்டவேண்டும். குழந்தை நன்னொளியுடனிருக்க வேண்டுமென விரும்புவோர் நெய்ச்சாதமாகிலும், தயிர், நெய், தேன், மூன்றும் கலந்த சாதமாகிலும் தயார் செய்துகொண்டு, கீழே வரையப்படும் விதிப்படி ஊட்டவேண்டும். 11-34 பக்கங்களிலெழுதியுள்ள சகல சடங்குகளுமியற்றி, குழந்தை பிறந்த நாளிலிச் சடங்கியற்றவேண்டும். கீழ் வரையுமத்தாட்சியாக சாதம் சமைத்து, தயார் செய்து கொள்ளவேண்டும்.

ஓம் ப்ராணாய த்வாஜுஷ்டம் ப்ரோக்ஷாமி| ஓம் அபானாய த்வாம்| ஓம் சக்ஷுஷே த்வாம்| ஓம் ஸ்ரோத்ராய த்வாம்| ஓம் அக்னயே ஸ்விஷ்டக்ருதே த்வாம் ||

உயிர்க்காற்று, உயிரிற் காற்று, கண், காது, இன்னும் மற்றவைகளின் காரியங்களை நடாத்திவைக்குஞ் சுடரே? இச் சகலத்திற்க்காகவும் நானிச் சாதத்தைச் சமைக்கின்றேன்—:

அரிசியை நன்றாகக் கழுவி, உலையிலிட்டு, சாதம் இறக்குந் தருவாயில் நெய்யையு மதிலிடவேண்டும். நன்றாக வெந்தபின்னிறக்கி வைத்து, சிறி தாறியபின், வேள்வி பாத்திரத்திலிட்டு—:

ஓம் ப்ராணாயத்வா ஜுஷ்டம் நிர்வபாமி| ஓம் அபானாய த்வாம்| ஓம் சக்ஷுஷே த்வாம்| ஓம் ஸ்ரோத்ராய த்வாம்| ஓம் அக்னயே ஸ்விஷ்டக்ருதே த்வாம் || (அஸ்-1-10-67.)

இம்மந்திரம் சொல்லிபின், வேள்வித்தலைவரும், வேள்வியதிகாரிகளும் அவரவர் பாத்திரங்களி லெடுத்து வைத்துக்கொண்டு; 42-43 பக்கங்களிலுள்ளபடி—நெருப்பு மூட்டல், சமிதையிடல், முதலியவைகளைச் செய்து, நான்கு "ஆஹார வாஜ்யபாகாகுதி"களும், நான்கு "வ்யாஹ்ருத்யாகுதி"களும் ஈந்து, கீழ்வரும் மந்திரங்களால் தயாரித்து வைத்துள்ள சாதத்தால் ஆகுதிகொடுக்கவேண்டும்.

ஓம் தேவீம் வாசமஜனயந்த தேவாஸ்தாம் விஸ்வரூபா பஸவோவதந்தி| ஸாநோ மந்த்ரேஷ மூர்ஜ்ஜம் துஹானா தேனுர்வாக ஸ்மானு பஸுஷ்டுதைது ஸ்வாஹா || இதம் வாசே—இதன்னமம || (ருக்-8-100-11.)

பண்டிதர்களெல்லாம் உத்தமகுண வாணியினருளைப் பெற்றனராயினும் அறிவில்லாதோரதையனேக விதங்களாகச் சொல்கின்றனர். அவள் நமக்கு சாதம், பலம், முதலாயவைகளை யளிக்கட்டும்.

வாஜோநோs அத்ய ப்ரஸுவாதி தானம் வாஜோ தேவாம் ஹ்ரிதுபிஃ கல்பயாதி| வாஜோஹிமா ஸர்வவிரம் ஜஜான விஸ்வா அஸா வாஜபதிர் ஜயேயம் ஸ்வாஹா ||

இதம் வாசேவாஜாய—இதன்னமம || (ய-18-33).

இன்று நமக்காக சாதம் உண்டாகிறது. இருது காலங்களுக்கேற்ற வாறு பண்டிதர்கள் சாதம் கொள்கின்றனர். சாதம் நம் குழந்தைகள் முதலாயவர்களுக்கு பலத்தையூட்டும். நான் சாத மனுபவிக்கச் சகல திசைகளினும் பலமுடையோனு வேணுகவும்.

இவ்விரண்டு மந்திரங்களா லிரண்டாகுதி யளித்தபின், அச்சாதத்திலன்னஞ் சிறிது நெய்விட்டு—:

ஓம் ப்ராணேனான்ன மஸீயஸ்வாஹா || இதம் ப்ராணாய இதன்னமம ||

நான் உயிர்க்காற்றினின்றும் சாதத்தினுபயோகம் செய்வேன்.

ஓம் அபானேன கந்தான மஸீய ஸ்வாஹா || இதம் அபானாய இதன்னமம ||

நான் உயிரிலாக் காற்றினின்றும் வாசனை யினுபயோகம் செய்வேன்.

ஓம் சக்ஷு சாரூபான் மஸீய ஸ்வாஹா || இதம் சக்ஷுசே இதன்னமம ||

நான் கண்களினின்றும் ரூபத்தினுபயோகம் செய்வேன்.

ஓம் ஸ்ரோத்ரேண யஸோஸீய ஸ்வாஹா || இதம் ஸ்ரோத்ராய இதன்னமம ||

நான் காதினின்றும் கேட்குமுபயோகஞ் செய்வேன்.

இம் மந்திரங்களால் 4 ஆகுதிகளீந்து, 48-ம் பக்கப் படி (யதஸ்ய கர்மணோ) எனும் மந்திரத்தாலொரு ஆகுதி யீந்த பின், 47-ம் பக்கத்திலுள்ளபடி "வ்யாஹ்ருதி யாகுதி" 4-ம், 50-ம் பக்கப்படி (ஓம் த்வன்னோ) முதலாய 8 ஆகுதிகளுமீய வேண்டும். பிறகு ஆகுதி தீர்ந்து மீந்த சாதத்திற் சிறிது தயிரும், தேனும், சுமாராகக் கலந்து, குழந்தைக்கு கீழ் வரும் மந்திரஞ்சொல்லி சிறிது வாயிலூட்ட வேண்டும்—:

ஓம் அன்னபதேsன்னஸ்ய நோதேஹ்யன மீவஸ்ய ஸுஷ்மிணஃ| ப்ரப்ரதா தாரம் தாரிஷ ஊர்ஜம்நோ தேஹி த்விபதே சதுஷ்பதே || (ய-11-83).

ஏ அன்னபதி! எங்களுக்கு வியாதியிலா, பலம் பொருந்திய சாதத்தைக் கொடுங்கள். எங்கள் பசு முதலாய சகலத்திற்கும் பலம் பொருந்திய ஆகாரமீ யுங்கள்.

இவ்வாறூட்டிய பின் குழந்தையின் வாயைக் கழுவித் துடைத்து, தன் கைகளையும் சுத்தம் செய்து கொண்டு, 53-ம் பக்கத்திலுள்ள "வாமதேவ கானம்" செய்து, குழந்தையின் தாய் தகப்பனுரு மற்றுள அனைவரும் கூடி [illegible]—:

த்வயன்னபதி ரன்னுதோ வாதமானே பூயா ஃ|| ஏ குழந்தையே! இனி மேல் நீ சாத மருந்து பவனாகி வளர்ந்து வரக்கடவாய்.

இம் மந்திரத்தாற் குழந்தையை யாசீர்வதித்து, வந்திருக்கும் புருடர்களுக்குக் குழந்தையின் தகப்பனாரும், பெண்களுக்குத் தாயாரும் செய்யவேண்டுவன செய்து இனிமையுடனனுப் பிவைத்தல் வேண்டும்.

சாதமூட்டற் சடங்கு முற்றிற்று.

குழல் நீக்குச் சடங்கு (சூடாகர்மம்)

இவ்வெட்டாவது சடங்கை "சிகை வாங்குதற் சடங்கு" எனவும் சொல்வர். இதர்க்கு "அஸ்வலாயன க்ருஹ சூத்திரத்தின்" மதமிவ்வாறு சொல்கின்றது—:

த்ரிதியேவர்ஷே சௌலம் ||

உத்தரதோsக்னேர் ப்ரிஹியவமாஷ திலானம் ஸராவாணி நிததாதி || (அஸ்-1-17).

இம்மாதிரியே "கோபிலீய க்ருஹசூத்திரத்" தின்மதமுமாகும்.

குழந்தை பிறந்த மூன்றுவது வருடத்திலாகிலும், ஒன்றும் வருடத்திலேயே யாகிலும், உத்தராயன காலத்தில் வளர்பிறை, கூடிய ஓர் நல்ல நாளிற் செய்யவேண்டும்.

ஆரம்பத்தில் 11-34-ம் பங்கங்களிலுள்ள சடங்குகள் புரிந்து, நான்கு முறங்களெடுத்து, ஒன்றிலரிசியும், இரண்டாதில் அவலும், மூன்றுவதில் பயறும் (கடலை) நான்காவதிலெள்ளும், நிறைத்து, தடவினிற்கு வடக்குப் பக்கத்தில் வைத்து, 45-ம் பக்கத்திலுள்ள "ஓம் ஆதிதேsனுமன்யஸ்வ". எனும் 3 மந்திரங்களால் தடனிற்கு மூன்று பக்கங்களினும், 46-ம் பக்கத்திலுள்ளபடி "ஓம் தேவஸவித ஃ ப்ரஸுவ" எனுமிந்ம் மந்திரத்தால் தடவினிற்கு நான்கு பக்கங்களிலும், நீர் தெளித்து, 42-43-ம் பக்கங்களின் படி தீ மூட்டல்," "சமிதையிடல்," செய்து, நெருப்பை நன்றுயெரியும் படிச்செய்து, நன்றுயெரியும் குச்சிகளின் மேற்கவனம் வைத்து, 46-ம் பக்கத்திலுள்ள "ஆஹார வாஜ்யபாஹாகுதிகள்" நான்கும், "வ்யாஹ்ருத்யாகுதி" கள் நான்கும், அவ்வாறே 53-ம் பக்கத்திலுள்ளபடி "அஸ்டாஜ்யாஹுதி" களுமாக 16 ஆகுதிகளியற்றி, 48-ம் பக்கத்திலுள்ளபடி "ஓம் பூர்புவஃஸ்வ ஃ—அக்னி ஆயும்ஷி" எனுமாதி மந்திரங்கள் நான்கினாலுமாகுதியியற்றி, 47-ம் பக்கத்திலுள்ள நான்கு "வ்யாஹ்ருத்யாகுதி" களும் "ஸ்விஷ்ட க்ருதக்னி" எனும் மந்திரத்தாலொன்றுமாக 5 ஆகுதிகளுமியற்ற வேண்டும். பிறகு காரியத்தலைவன் பகவனைத்துதித்து, முதலில் அம்பட்டனிருக்கும் திசையைப் பார்த்து—:

ஓம் ஆயமாகன்த் ஸவிதா க்ஷுரேணோஷ்ணேனயாய உதகேனேஹி| ஆதித்யாருத்ரா வஸவ உந்தந்து ஸசேதஸஃ ஸோமஸ்ஹ ராஜ்ஞோ வபத ப்ரசேதஸ ஃ|| (அதர்-6-68-1).

இம் மங்கலன் தன்னுயிதத்துடனிங்கு வந்துளன். ஏ மஞ்சிகா! உன் சூட்டு நீருடனிங்குவா.

இம் மந்திரஞ்சொல்லி தகப்பன் குழந்தையின் பின்புறமமர்ந்து, சிறிது சுடு நீரையும், சிறிது குளிர்நீரையு மிரண்டு

பாத்திரங்களிலெடுத்து, "உஷ்ணேன வாய உதகேனேதி" எனும் மந்திரத்தைச் சொல்லி, இரண்டு பாத்திரத்திலுள்ள நீரையு மொன்றாகக் கலந்து, சிறிது நீரையும், சிறிது வெண்ணெ யல்லது தயிரல்லது எடாகிலு மெடுத்துக்கொண்டு

ஓம் அதிதி꞉ ஶ்மஶ்ருவபத்வாப உந்தந்து ஸசேதஸ꞉| சிகித்ஸது ப்ரஜாபதிர் தீர்காயுத்வாய சக்ஷஸே || (அத-6-68-2).

ஏ! மயிர்வினைஞ! நன்னீராலிக் குழந்தையின் கேசத்தை நனை. கடவுளிக் குழந்தைக்கு நல்லறிவும், நீண்டவாயுளும் அளிக்க, இக் குழந்தையின் சிகையை நீக்கு.

ஓம் ஸவித்ரா ப்ரஸூதா தைவ்யா ஆப உந்தந்து| தேத னும் தீர்காயுத் வாய வர்சஸே || (பாரஸ்-2-1-9.)

ஏ பாலா! நீண்ட ஆயுளும், ஒளியும் உண்டாக கடவுள் மூலமாயுண்டாய இவ்வமிர்தகுண நீரை யுன் சரீரத்திலேற்றுக்கொள். இம் மந்திரங்களைச் சொல்லி குழந்தையின் தலை மயிரை மூன்று முறைகையால் நனைக்கவேண்டும். பிறகு சீப்பைக்கொண்டு சிவி கூந்தலை யெலாமொரு புறத்திற்சேர்க்க வேண்டும். எனின் அங்கிங்கு மலையாது பார்த்துக்கொள்ள வேண்டும். பிறகு, "ஓம் ஓஷதேத்ராயஸ்வ ஏனம்மைனம் ஹிம்ஸீ꞉|| * (யஜு-1-1).

எனுமிம் மந்திரஞ்சொல்லி மூன்று தர்ப்பைப் புற்களைக் கொண்டு வலது பக்கமிருக்கும் மயிரனைத்தையும் கையாலொத்திவைத்து "ஓம் விஷ்ணோர் தம்ஷ்ட்ரோஸி". † (மந்-ப்ரா-1-6-4).

* ஏ தர்ப்பையே! இக் குழந்தையைக் காப்பாற்று இதற்குத் துன்பமுண்டு செய்யாதே.

† ஏ கத்தி! நீ கடவுளினம்சம். நீ ஒளியுள்ளவன்.

இம் மந்திரத்தால் கத்தியிருக்கும் பக்கம் பார்த்து:—

ஓம் ஶிவோ நாமாஸி ஸ்வதிதிஸ்தே பிதா நமஸ்தே அஸ்துமா மாஹிம்ஸீ꞉|| (யஜு-3-63.)

ஏ நாந்தகமே! நீ கல்யாண குணமானவன். நல்ல உலோகத்திலுலாயவன். உனக்கு வந்தனம்! நீ இக் குழந்தைக்குத் தீங்கு செய்யாதே.

இம்மந்திரஞ் சொல்லி கத்தியை வலது கையிற்பிடித்துக் கொண்டு :—

ஓம் ஸ்வதிதே மைனம் ஹிம்ஸீ꞉|| (ய-4-1.)

ஏ ஆயுதமே! இக் குழந்தைக்குத் தீங்கு புரியாதே.

ஓம் நிவர்த்தயாம்யாயுஷேன்னாத்யாய ப்ரஜனனாய ராயஸ்போஷாய ஸுப்ரஜாஸ்த்வாய ஸுவீர்யாய || (ய-3-63.)

நான், ஆயுளும், ஆகாரத்தின் பலனும், புத்திரப்பேறும், செல்வத்தின் மிதப்பும், நற் குழந்தைகளுண்டாதலும், பலம் முதலியவைகளுக்காக இச்சிகையை நீக்குகின்றேன். இவ்விரண்டு மந்திரங்களைச் சொல்லி, கத்தியையும் தர்ப்பைக் குச்சியையும் சிகைக்கருகி லெடுத்துச் சென்று—:

ஓம் யேனாவபத்ஸவிதா க்ஷுரேண ஸோமஸ்ய ராஜ்ஞோ வருணஸ்ய வித்வான்| தேன ப்ரஹ்மணோ வபதேதமஸ்ய கோமானஶ்வவானயமஸ்து ப்ரஜாவான் || (அத-6-68-3.)

எங்காவிதன் அரசர்கள் முதல் பெரிய புருடர்கள் வரை சகலருக்கும் சிகை நீக்குகின்றனனோ, அவன் இக் குழந்தையின் சிகையையும் நீக்கட்டும்.

இம்மந்திரம் சொல்லி தர்ப்பப் புல்லுடன் மயிரைக்களைதல் வேண்டும் * களைபட்ட மயிரையும், தர்ப்பையையும் அரச மரத்தினிலைகளுடன்—எனின் அரச மரத்தினிலைகள் முன்பே தயார் செய்து கொள்ளவேண்டும்—சேர்த்து தாயும் தகப்பனுமாகச் சேர்ந்தெடுத்தோர் சட்டியிலிடவேண்டும். களையும் போது கீழே சிந்திய மயிர்களையுமெடுத்து சட்டியிலாகிலும், அருகிலாகிலும் வைக்கவேண்டும். பிறகிவ்வாறே—:

ஓம் யேனதாதா ப்ருஹஸ்பதே ரக்னேரிந்த்ரிஸ்ய சாயுஷேsவபத்தேனத ஆயுஷேவபாமி ஸுஶ்லோக்யாய ஸ்வஸ்த்தயே ||
(ஆஸ்வ-1-17-12).

எச்சக்தியினுற் கடவுள் புனல், புவனம், சுடர், கொண்டல், முதலாய சகலத்தையுமுண்டு செய்தனரோ ; அச் சக்தியினுல் நான் உன்றனுயுள் விருத்தியும், நற்பேறும், இன்னும் மற்றும் சகல நற்காரியங்களு முண்டாக்குமாறுன் மயிரைக் களைகின்றேன்.

இம்மந்திரத் தாலிரண்டாமுறை மயிர்களைந்து முன் போலவே வைத்து, மறுபடி—:

ஓம் யேனபூயச்ச ராத்ரயம் ஜ்யோக் ச பஸ்யாதி ஸூர்யம் | தேனத ஆயுஷேவபாமி ஸுஶ்லோக்யாய ஸ்வஸ்தயே ||
(அஸ்வ-1-17-12.)

* மயிர்களையும் வழியிவ்வாரிருக்கின்றது. தர்ப்பைப் புல்லையும், கூந்தலையு மிவ்வாறு பத்திரமாக வைத்துக்கொண்டு—எனினிரண்டு பக்கத்திலும் புல்லை வைத்துக்கொள்ள மத்தியிலிருந்து மயிரைச் சிதைக்கவேண்டும்.

எந்தக் கடவுளின் சக்தியால் இரவும், பகலும், பொருள்களும் நடைபெறுகின்றனவோ ; அச் சக்தியால் ஓ பாலா ! உனக்கு நீண்ட ஆயுளும் சகல நற்பேறுகளு முண்டாகுமாறுன் மயிரைக்களைகின்றேன்.

இம்மந்திரத்தால் முன் போலவே மூன்றும் முறை மயிரைக்களைந்து—முன்சொன்ன—"ஓம் யேனுவபத்" "ஓம்யேனதாதம்", "ஓம்யேன பூயச்சம்", இன்னும் ஓம்யேனபூஷா ப்ருஹஸ்பதேர் வாயோரிந்த்ரியஸ்ய சாவபத | தேனதேவபாமி ப்ரஹ்மணு ஜீவாதவே ஜீயனுய தீர்க்காயுஷ்ட்வாய ||
(சாம-மந்-ப்ரா-16-7.)

எச் சக்தியாற் க்டவுள் பவனன், சுடர், மேகாதிகளையுண்டு செய்தனரோ, அச்சக்தியாலே பாலா ! உனக்கு நீண்ட ஆயுளுண்டாக வுனக்கு மயிர்களைகின்றேன். இம் மந்திரத்தையும் சேர்த்து முன் சொன்னபடி நான்கு முறை மயிரைக் களையவேண்டும். முதலில் வலதுபக்க மயிரைக்களைந்தும், பிறகிடது பக்கத்திலும், முன்பக்க பின் பக்கங்களிலும் மூறையே களையவேண்டும். நான்காம் முறை "யேனபூஷா" எனும் மந்திரத்திர்க்குப் பதிலாக—:

ஓம்யேன பூரிச்சரா திவும் ஜ்யோக் சபச்சாத்தி ஸூர்யம் | தேனதே வபாமி ப்ரஹமணு ஜீவாதவே ஜீவனுய ஸுஶ்லோக்யாய ஸ்வஸ்த்தயே ||
(பராஸ்-2-1-16.)

எச் சக்தியால் பவனன் மூவுலகத்திலும் யுகமுடிவுவரையில் வசிக்கின்றனனே அச் சக்தியாலே பாலா ! வுனக்கு நீண்ட ஆயுளாரோக்ய முண்டாமாறுன் மயிரைக் களைகின்றேன். இம் மந்திரஞ்சொல்லி மயிர்களைந்த பிறகு—:

ஓம் த்ரயாயுஷம் ஜமதக்னே ꞉ கஸ்யபஸ்யத்ர யாயுஷம் |
யத்தேவேஷுத்ர யாயுஷம் தன்னோ அஸ்து த்ரயாயுஷம் ||
(யஜு-3-62.)

இதன் பொருள் 97-ம் பக்கத்திலுள்ளது.

இம் மந்திரஞ்சொல்லி பின் பக்கத்து மயிரை மற்றோர் முறைகளைந்து, மறுபடியும் "ஓம் த்ரயாயுஷம்" மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு உள்ளங்கையாற் குழந்தையின் நெற்றி மேற்கையை வைத்து மந்திரம் முடிந்த பிறகு கத்தியை நாவிதன் கையிலீந்து,—:

ஓம் யத்க்ஷுரேண மர்சயதா ஸுதேஜஸா வப்தாவபஸி கேஸஸ்மஸ்ரு | ஸுபம் முகம்மா ந ஆயு ꞉ ப்ரமோஷீ꞉||
அதர்-8-2-17).

ஏ மயிர்வினைஞ! நீயிவ் வொளிபொருந்திய கத்தியால் மயிர்களைக்கின்றாய். அதினுலிப் பாலனின் முகம் அழகு பெறச்செய்.

இம் மந்திரத்தைச் சொல்லி கத்தியை சாணைக்கல்லின் மேற்றீட்டச் செய்து, "இக் சூட்டு குளிர்நீரினல் குழந்தையின் நெற்றியை வெண்டுமளவு நிதானமாக நனைத்து, அபாயமின்றி வழிப்பாயாக" என்று தகப்பனர் நாவிதனிட மியம்பி, தடவினிற்கு வடக்கிலவனை யழைத்துச்சென்று, அவனெதிரில் குழந்தையை வடக்கு முகமாக உட்காரவைத்து, எவ்வளவு மயிரிருக்கவேண்டுமோ அதை விட்டாகிலும், எல்லாவற்றையுமாகிலும் சிரைக்கச் செய்யவேண்டும்.

இரண்டாமுறை வேண்டுமாயின் மயிரைவேண்டிய வாறு செய்து கொள்ளலாம். பிறகு தடவினிற் கருகில் வைத்திருக்

கும் கொடுக்கக் கூடிய பொருள்களையும், முதலில் நிறைத்து வைத்திருக்கும் முறங்களையும் நாவிதனுக் கீயவேண்டும். சிரைத்து வைத்திருக்கும் மயிர்களையும், சட்டியையும் எடுத்துச் சென்று, மக்கள் வாசமில்லாத விடத்திலாகிலும், பசுத்தொட்டியிலாகிலும், ஏரி, ஆறுகளிலாகிலும், குழி வெட்டிப் புதைத்து விடும்படிச்சொல்லி நாவிதனிடமீய வேண்டும். அது முடிவதை யறிவதர்க்காக யாரையாவ துடனனுப்ப வேண்டும். அவருக்கேற்ற பொருளும், ஆடையுமீயவேண்டும். பிறகு வெண்ணையையாகிலும், தயிரினடையையாகிலுமெடுத்து குழந்தையின் றலையிற்றேய்த்து, குளிப்பாட்டி, நல்லாடை யணிவித்து, தகப்பனர் குழந்தையை யெடுத்துக் கொண்டு கிழக்கு முகமாயமர்ந்து 53-ம் பக்கத்திலுள்ள "வாமதேவ கானம்" செய்யவேண்டும். பிறகு மனைவி பெண்களையும், புருடன் புருடர்களையும் விசாரித்தனுப்ப வேண்டும். போகும் போது எல்லோரும் குழந்தையின் தாய் தகப்பனுள்பட—பகவானைத் துதித்து—:

ஓம் த்வம் ஜீவ சரத꞉ சதம் வர்தமான꞉|| பாலா! நீ 100 வருடங்கள் ஜீவித்திரு.

இம் மந்திரத்தாற் குழந்தையை வாழ்த்தி அவரவரில் லிற்கேவேண்டும். பிறகு தாய் தகப்பன்மார் குழந்தையை இனிமையுடன் வைத்திருக்கவேண்டும்.

குழல் நீக்குச்சடங்கு முற்றிற்று.

காதுகுத்தற் சடங்கு (கர்ணவேதம்)

அத்தாட்சி—: கர்ணவேதோ வர்ஷேத்ருதீயே பஞ்சமே வா || இது "பாரஸ்கரக்ருக சூத்திரத்" தின்வாக்யம், குழந்தையின் காதாகிலும் மூக்காகிலும் துவாரம் புரிவதர்க்குக் குழந்தை பிறந்த மூன்றல்லதைந் தாம் வருடம் நன்றாகும். காது குத்தற்காக ஏற்படுத்திய நாள் விடியற்காலை நன்னீராற் குழந்தையைக் குளிப்பாட்டி, நல்லாடை யணிவித்து, வேள்விச் சாலைக்குத் தாயார் குழந்தையை யெடுத்துவரவேண்டும். 11-ம் முதல் 34-ம் வரை யுள்ள சகல சடங்குகளுமியற்றி, அக் குழந்தையினெதிரிற் சிறிது தின் பண்[illegible]த்து.

ஓம் பத்ரம் கர்ணேபி: ஸ்ருணுயாம தேவாபத்ரம் பஸ்யேமாக்ஷ பிர்யஜத்ரா:| ஸ்திரைரங்கை ஸ்துஷ்டவாகும் ஸஸ்தனூபிர்வ்ய ஸேமஹி தேவஹிதம் யதாயு:||
(ருக்-1-89-8.)

ஏ வேள்விப் பண்டிதர்களே! நாங்கள் காதுகளால் நல்லன கேட்போம். கண்களால் நல்லன பார்போம், உங்களிடமுள சகல சக்திகளையு மெங்களுக் கீவீர்களாகவும். இம்மந்திரஞ் சொல்லிக்கொண்டு வலது காதை நரம்பு முதலாயவைகளை யறிந்து குத்தத் தகுந்த வைத்திய நூற்களை யறிந்த வைத்தியர்களால் குத்தச் செய்யவேண்டும். அவ்வாறே—:

வக்ஷ்யன் தீவேதாகனீகந்தி கர்ணம் ப்ரியப் ஸகாயம் பரிஷஸ்வஜாநா| யோஷேவ ஸிங்க்தே விததாதி தன்வஞ்ஜ்யா இயம் ஸமனே பாரயந்தி ||
(ருக்-6-85-3.)

செருக்களத்தினை திரியின் சர மெவ்வாறாடுறு வமோ; அவ்வாறிக்காதையு மிதூடுறு வட்டும். ஆயினும், கடவுளிக் குழந்தைக் கதினுற்றுன்பமாகிலுமாபத்தாகிலுமுண்டு செய்யாது காப்பாற்றட்டும்.

இம்மந்திரத்தாலிடது காதைக் குத்தவேண்டும். பிறகவ் வைத்தியனே யத்துவாரம் மூடிக்கொள்ளா திருக்கத் தங்கக் குச்சிகளை யதிலிடவேண்டும். அவ்வாறே காது துன்பமின்றி சீக்கிரத்திலாறி விடுவதர்க்காக அதன் மேல் மருந்தையுந்தடவவேண்டும்.

காதுகுத்தற் சடங்கு முற்றிற்று.

பூணூற் சடங்கு (உபனயனம்).

அத்தாட்சி—: அஷ்டமே வர்ஷே ப்ராஹ்மணமுபனயேத் || (1). கர்பாஷ்டமே வா || (2) ஏகாதஸே க்ஷத்ரியம் || (3) த்வாதஸே வைஸ்யம் || (4). ஆஷோடஸாத் பராஹ்மணஸ்யானதீத: கால:|| (5). ஆத்வாவிம்ஸாத் க்ஷத்ரியஸ்ய, ஆசதுர்விம் ஸாத்வைஸ் யஸ்ய, ஆத ஊர்த்வம் பதிதஸாவித்ரீகா பவந்தி || (6).

இது "அஸ்வலாயன க்ருஹ சூத்திரத்" தினட்தாட்சி. இவ்வாறே "பாரஸ்காரதி க்ருஹசூத்திரங்களினுமுள்ளது.

(இ-ள்.) பிறந்த நாளிலிருந்தாகிலும், பிண்ட நிலை ஏற்பட்ட நாளிலிருந்தாகிலும், எட்டாவது வருடம் பார்ப்பனனுக்கும், பதினோராவது வருடம் வீரனுக்கும், பனிரெண்டாவது வருடம் வியாபாரிகளுக்கும், பூணூற் பூணுவிக்கத் தகும். எனினும், குழந்தையின் தாய் தகப்பனர் நிறையப் பெற்ற "வேதமாணவம்" அனுசரித்த பிறகிச் சடங்கைச்

செய்யலாமென்றுஞ் சொல்வாருளர். அப்பேர்ப்பட்டவர்களுக்கே உத்தமகுணமும், கல்வியிற்றீவிரமுமுடைய மகவுகளுற்பவிக்கும். ஆகையால் கல்விகற்குந் திறமையுண்டாய பின்னரே பூணூற் பூணுவிக்கத்தகும்.

பூணூற்பூணுங்காலம்—வடபாரிசத்தில் (உத்தராயணம்) பரிதியிருக்கும் போது.

வஸந்தே ப்ராஹ்மண முபனயேத்| க்ரீஷ்மே ராஜன்யம் | ஶரதிவைஶ்யம் | ஸர்வகாலமேகே || இது "சதபதப்ராஹ்மண"த்தின் வாக்கியம்.

(இ-ள்.) இளவேனிற் காலத்திற் பார்ப்பனனுக்கும், முதுவேனிற் காலத்தில் வீரனுக்கும், இளந்தென்றற் காலத்தில் வியாபாரிக்கும், பூணூற் பூணச்செய்தல் வேண்டும். எனினுமெல்லா பருவத்தினும் செய்யலாம். அதர்க்கு விடியற் காலமே சமையமாகும்.

பயோவ்ரதோ ப்ராஹ்மணோ யவா கூவ்ரதோராஜன்ய ஆமிக்ஷாவ்ரதோ வைஶ்ய:|| (சதபதப்ராஹ்மணம்).

எந்நாளிற் பூணூற்பூண ஏற்பாடாயிற்றோ அதற்கு மூன்றல்லதோர் நாள் முன்பாக ஒன்றல்லது மூன்று நோன்புகளை பாலன் செய்யவேண்டும். அந்நோன்புகளில் பார்ப்பனன் ஒரு தடவையாகினு மனேக தடவையாகினும் பாலருந்தலாம். வீரபுருடன் அவலை வற்றலைத்தூளுடன் வெல்லங்கலந்து காய்ச்சிய பானமருந்தலாம். வியாபாரி "ஸ்ரீகண்டம்"—நான்கு பாகந்தயிரும் ஒரு பாகம் பாலும் வேண்டுமளவு சர்க்கரையும், குங்குமப்பூவும் கலந்து வடிகட்டி—அதை அருந்தியோன்பிருக்க வேண்டும். எனினும் மூன்று

வர்ணத்தவர்களும் பசியெடுத்த போதெல்லாம் இம்மூவித பொருள்களையே உண்டு வரவேண்டும். மற்ற எதையும் சாப்பிடக்கூடாது.

விதி :—எந்நாளில் பூணூற் சடங்கியற்ற வேண்டுமோ அதற்கு முன்னாள் சகலவேள்விப் பொருள்களையும் தயார் செய்து அவைகளை நன்கு சுத்தம்செய்து கொள்ளவேண்டும். அந்நாளில் விடியற்காலம் குழந்தைக்கு க்ஷவரம் செய்வித்து, நன்னீரால் குளிப்பாட்டி, நல்லாடைகளை யணிவித்து, சுவையன்னங்களையுண்பித்து தகப்பனார் அல்லது ஆசார்யன் குழந்தையை தடவினிற் கருகு கொண்டுவந்து கிழக்குமுகமாய் நல்லாசனத்தில் உட்கார வைக்கவேண்டும். தகப்பனாரும், மற்ற வேள்விகர்த்தர்களும் தங்கள் தங்களிருசனங்களிலமர்ந்து நீருட்கொள்ளல் முதலியவைகளைச் செய்ய வேண்டும். பிறகு காரியத்தலைவர் பாலனின் முகத்தை நோக்கி :—

ப்ரஹ்மசர்யமாகாம், ப்ரம்மசார்யஸானி || (பாரஸ்-2-2.; மந் ப்ராம் 1-6-6).

நான் ப்ரம்மசர்யத்தை அடைவேன், நான் பிரம்மசாரியாவேன்.

இவ்வசனத்தைச்சொல்லி * ஆசார்யன் :—

---

* வேதங்களை சாங்கோபாங்கமாக அர்த்தத்துடன் கற்று, கபட வஞ்சனையற்று, அதிக அன்புடன் அன்னியர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் பரோபகாரனும், பக்ஷபாதம், அவமதிப்பு, வஞ்சனை இல்லாது சத்யத்தையே உபதேசிக்கும் ஜிதேந்திரிய தர்மாத்மாவே ஆசார்யனாகும்.

ஓ யேனேந்த்ராய ப்ருஹஸ்பதிர்வாஸ: பர்யததாதம்ருதம் । தேன த்வா பரிததாம்யாயுஷே தீர்காயுத்வாய பலாய வர்சஸே ॥ (பாரஸ்கரம்-1-2-10.)

எந்த ப்ரயோஜனத்தைநாடி பெரும் பெரும் ஆசாரியார்கள் தங்களின் சீடர்களுக்கு அருளையும் ஆடைகளை யணிவிக்கின்றார்களோ, அதே ப்ரயோஜனத்தை நாடி நானும் இவ்வாடையை அருளுக்காகவும், நீண்ட ஆயுளுக்காகவும், பல தேஜஸ்ஸுக்காகவு முனக் கணிகின்றேன்.

இம்மந்திரத்தைச் சொல்லி குழந்தைக்கு ஆடையை அணிவிக்கவேண்டும். பிறகு பாலன் ஆசார்யனெதிரில் அமர்ந்து பூணூலை கையிலெடுத்துக் கொண்டு :—

ஓம் யக்ஞோபவீதம் பரமம் பவித்ரம் ப்ராஜாபதேர்யத்ஸகஜம் புரஸ்தாத் । ஆயுஷ்யமக்ர்யம் ப்ரதிமுஞ்ச ஸுப்ரம் யக்ஞோபவீதம் பலமஸ்து தேஜ: ॥.

யக்ஞோபவீதமஸி யக்ஞஸ்ய த்வா யக்ஞோபவீதேனோப நஹ்யாமி ॥ 2 ॥ (பாரஸ் 2-2.)

பூணூல் பரம பவித்திரமாகும், இதை அணியவேண்டுமென்பது கடவுளின் கட்டளை. இது ஆயுள் பலத்தை யுண்டாக்கும் முக்ய சுத்தமானதாகும். இது உனக்கு பலத்தையும் தேஜஸ்ஸையு மளிக்கும். (1)

ஏஹோ ப்ரம்ம சூத்திரமே! நீ யக்ஞோபவீதமாகும். குழந்தாய்! ப்ரம்மசர்ய விரதத்திற்காக உனக்கு இவ் யக்ஞோபவீதத்தை யணிகின்றேன். (2)

இம்மந்திரத்தைச் சொல்லி பாலனின் வலது தோளின் மேல்கழுத்திற்கருகில் தலையினுள்விட்டு, வலதுகையின் கீழாக

தொங்கவிட்டு இடுப்புவரை தரிக்கவேண்டும். பிறகு குழந்தையைத் தன் வலது பக்கத்திலுட்காரவைத்து கடவுள்துதி, அருள்கோறல், அமைதிவேண்டல் முதலியவைகளைப் படித்து, நெருப்புமூட்டல், சமிதையிடல்செய்து (ஓம் அதிதேனுமன்யஸ்வ) முதலிய மந்திரங்களால் தடவினைச் சுற்றிலும் நீர் வார்த்து பிறகு நெய்யாகுதிகள் கொடுக்க ஆரம்பிக்கவும்.

முதலில் "ஆகார வாஜ்யபாகாகுதி" நான்கும், "வ்யாக்ருதி ஆகுதி" நான்கும், "ஆஜ்யாகுதி" 8ம், ஆக 16 ஆகுதிகள் கொடுத்து, கீழ்வரும் மந்திரத்தால் விசேஷ ஆகுதியளிக்கவேண்டும். (ஓம் பூர் புவ: ஸ்வ: । அக்ன ஆயூம்ஷி) என்னும் மந்திரங்களால் 4ன்கு ஆகுதிகள் கொடுத்துபின்—:

ஓம் அக்னே வ்ரதபதே வ்ரதம் சரிஷ்யாமி தத்தே ப்ரப்ரவீமி தச்சகேயம் । தேனர்த்யாஸமித மஹமன்ருதாத் ஸத்யமுபைமி ஸ்வாஹா ॥ இதமக்னயே இதன்னமம ॥ (மந்-ப்ராம்-1-6-9.)

விரதத்தலைவனாகிய சுடரே! நான் இவ்விரதத்தை ஏற்றுக்கொள்கின்றேனென்று சொல்கின்றேன். உன்னுடைய கிருபையால் நான் இதை பரிபாலிப்பேனாகவும். நான் இவ்விரதத்தின் உன்னதியை அடைவேன். நான் பொய்யை விட்டு சத்யத்தை கிரகிக்கின்றேன்.

ஓம் வாயோ வ்ரதபதே * ஸ்வாஹா ॥ இதம் வாயவே இதன்னமம ॥ (மந்-ப்ராம்-1-6-10.)

விரதத்தலைவனாகிய வாயூ! மற்றது முன் மந்திரம் போலவே—:

* இதன்பிறகு "வ்ரதம் சரிஷ்யாமி" இத்தியாதி முழு மந்திரத்தையும் சொல்லவேண்டும்.

ஓம் ஸூர்ய வ்ரதபதே—ஸ்வாஹா ‖ இதம் சூர்யாய இதன்னமம ‖ (மந்-ப்ராம்-1-6-11.)

விரதத் தலைவனாகிய சூர்யா! மற்றது முன்போல்—:

ஓம் சந்த்ர வ்ரதபதே—ஸ்வாஹா ‖ இதம் சந்த்ராய இதன்னமம ‖ (மந்-ப்ராம்-1-6-12)

விரதத் தலைவனாகிய சந்திரா! மற்றது முன்போல்—:

ஓம் வ்ரதானாம் வ்ரதபதே—ஸ்வாஹா ‖ இதமிந்த்ராய வ்ரதபதயே இதன்னமம ‖ (மந்-ப்ராம்-1-6-13.)

விரதங்களில் சகல விரதங்களின் தலைவனே! மற்றது முன்போல்—:

இதன் அபிப்பிராயம் சூர்ய, சந்த்ர, அக்னியாதிகளும் உன் விரதத்தை பாலிப்பதில் உதவி செய்யுமாக.

இவ்வைந்து மந்திரங்களால் ஐந்து நெய்யாகுதிகள் கொடுக்கவேண்டும். இதன் பிறகு "வ்யாஹ்ருதி" யாகுதிகள் 4ம், "ஸ்விஸ்டக்ருத் ஆகுதி" 1ம், "ப்ரஜாபத்யாகுதி" 1ம், ஆக 6 நெய்யாகுதிகள் கொடுக்கவேண்டும். இச்சகல ஆகுதிகளும் பாலன் கையால் கொடுக்கச் செய்யவேண்டும். இதன் பிறகு ஆசார்யன் தடவினற்கு வடக்கே கிழக்கு முகத்தனாய் உட்கார்ந்து பாலனின் திக்கை நோக்கி—:

ஓம் ஆகந்த்ரா ஸமகன்மஹி ப்ரஸூமர்த்யம் யுயோதன ।
அரிஷ்டாః ஸம்சரேமஹி ஸ்வஸ்தி சராதயம் ‖
(மந்-ப்ராம்-1-6-14.)

நாம் இன்று இப்புதிய ப்ரம்மசாரிகளுடன் சேருகிறோம். இச்சேர்க்கை நல்லவர்களின் சேர்க்கையாகும். நாம் விரதங்

களில் குற்றமில்லாமல் வசித்து வருவோம். இக்குழந்தைக்குச் சகல நன்மைகளும் உண்டாகட்டும்.

இம்மந்திரத்தை ஜெபிக்கவும்—:

மாணவனின் வாக்யம்—"ஓம் ப்ரம்மசர்யமாகாமுபமா நயஸ்வ". (மந்-ப்ராம்-1-6-16.)

நான் மறைமாணவத்தை யேற்றுக்கொள்கின்றேன். எனக்குப் பூணூல் அணியுங்கள்.

ஆசார்யன் வாக்யம்—"கோநாமாஸி"—உன் பெயரென்ன?

மாணவன் வாக்யம்—"ஏதன்னமாஸ்மி"—என் பெயர் இதுவாகும்.

இதன் பிறகு—:

ஓம் ஆபோஹிஷ்டா மயோபுவஸ்தான ஊர்ஜே ததாதன । மஹேரணாய சக்ஷஸே ‖ (ருக்-10-9-1.)

யோ வః ஶிவதமோ ரஸஸ்தஸ்ய பாஜயதேஹ நః । உஶதீரிவமாதரః ‖ (ருக்-10-9-2.)

தஸ்மா அரம் கமாமவோ யஸ்ய க்ஷயாய ஜின்வத । ஆபோஜனயதாச நః ‖ (ருக்-10-9-3.)

ஏ நீரே! நீ சுகமளிப்பவன். நீ எங்களுக்காக அன்னத்தைக் தரி. எங்களுக்கு நீண்ட திடமான பார்வையை அளி (1) உன்னிடமிருக்கும் நன்மைபொருந்திய ரஸத்தை எங்களுக்களி. தாயார் குழந்தைக்குப் பாலூட்டுவதைப் போல் எங்களுக்கும் ஊட்டு (2) நீ எந்த அன்னத்தை உண்டு

செய்ய, காப்பாற்ற மழையாதி ரூபங்களில் காணப்படுகிறாயோ அதை நாங்கள் அருந்த உன்னிடம் வருகின்றோம். எங்களுக்காக நீ அவ்வன்னத்தை யளி (3)

இம்மூன்று மந்திரங்களைப் படித்து குழந்தையினிரண்டு கைகளிலும் ஜலம் நிரப்பி ஆசார்யனும் தன்னிரண்டு கைகளிலும் ஜலம் கொண்டு—:

ஓம் தத்ஸவிதுர் வ்ருணீமஹே வயம் தேவஸ்ய போஜனம் । ஸ்ரேஷ்டம் ஸர்வதாதமம் துரம் பகஸ்ய தீமஹி ॥

(ருக்-5-82-1)

நாம் ஸ்ருஷ்டிகர்த்தாவாகிய பரமேஸ்வரனிடம் சகலத்தையும் போஷிக்கும் மேன்மையான ஆகாரத்தை வேண்டுவோம். நாம் பூர்ண ஐஸ்வர்யவான்களாவோம்.

இம்மந்திரத்தைச் சொல்லி ஆசார்யன் தன் கையிலுள்ள நீரை பாலன் கையில் விடவேண்டும். பிறகு பாலனின் கை நீரை பெருவிரல் சகிதமாய் பிடித்துக்கொண்டு—:

ஓம் தேவஸ்ய த்வா ஸவிது: ப்ரஸவே஽ஸ்வினோ பாஹுப்யாம் பூஷ்ணோ ஹஸ்தாப்யாம் ஹஸ்தம் க்ருஹ்ணாம்யஸௌ * ॥

(யஜுர்-5-26.)

ஹே பாலக! ஸ்ருஷ்டிகர்த்தா பரமாத்மாவின் இச்சிருஷ்டியில் நான் உன் கையை அஸ்வினீ தேவர்களின் புஜங்களாலும், பூஷனின் கைகளாலும் கிரகிக்கிறேன். எனின் இத்தேவர்கள் எவ்வாறு ஸ்ருஷ்டியின் பலத்தைச் செய்கின்றார்களோ அவ்வாறே நானும் ரக்ஷிப்பாதிகளைச் செய்வேன்.

* அஸௌ வென்னும் பதமுடைய இடத்தில் பாலனின் முழுப் பெயரையுஞ் சொல்லவேண்டும்.

இம்மந்திரம் சொல்லி பாலனின் கையிலுள்ள நீரை கீழேயுள்ள பாத்திரத்தில் விட்டுவிடச் செய்யவேண்டும். இதேபோல் முன்மாதிரியே பாலனின் கையில் நீர் நிரப்பி ஆசார்யன் அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு—:

ஓம் ஸவிதா தே ஹஸ்தமக்ரபீத், அஸௌ ॥

(மாணவக்ருக்ய-1-2-5.)

ஹே பாலக! உன் கையை ஸ்ருஷ்டிகர்த்தான ஈஸ்வரன் பிடித்திருக்கின்றார்.

இம்மந்திரத்தால் நீரை கீழே விட்டுவிடச்செய்யவும். மூன்றாம் முறையும் பாலன் கையில் நீர் நிரப்பி அதை ஆசார்யன் பிடித்துக்கொண்டு—:

ஓம் அக்னிராசார்யஸ்தவ, அஸௌ ॥

(மந்-ப்ராம்-1-6-15.)

ஹே பாலக! உன்னாசார்யன் அக்னியாகும்.

இதைச் சொல்லி நீரை விட்டுவிடச்செய்து பாலகனை சூர்யனெதிரில் கொண்டு சென்று நிற்கவைத்து, சூர்யனைப் பார்க்கச்சொல்லி ஆசார்யன்—:

ஓம் தேவஸவிதரேஷதே ப்ரஹ்மசாரீதம் கோபாய ஸமாம்ருத ॥ (அதர்-1-20-6.)

ஹே ஸ்ருஷ்டிகர்த்தா பரமாத்மன்! இம்மறைமாணவன் உன்னுடையவன், நீயவனைக் காப்பாற்று. இவனுக்கு மரணமுண்டாக்காதே.

இம்மந்திரத்தையும் பிறகு 30ம் பக்கத்திலுள்ள (தச்சக்ஷுர்தேவ) மந்திரத்தையும் படித்து பாலனுக்கு சூர்ய தரிச

னம் செய்விக்கவேண்டும். மறுபடி பாலனுடன் தடவினிற்கரு கில் வந்து இருவரும் வடக்கு முகத்தவர்களாய் அமர்ந்து—:

ஓம் யுவா யுவாஸாः பரிவீத ஆகாத்ஸ உஸ்ரேயாத் பவதி ஜாயமானः ‖ (ருக்-3-8-4.)

ஓம் ஸூர்ய ஸ்யாவ்ரதமன்வா வர்த்தஸ்வ * அஸௌ ‖ (சாம-மந் ப்ராம்-2-6-19.)

இப்பாலன் நல்லாடைகளை யணிந்து பூணூல் தரித்து வந்திருக்கின்றான். இவன் மறைமாணவத்தை யனுசரிப்பதால் உலகிற்கு நன்மை புரிபவனாகின்றான். ஏ மறைமாணவ! நீ சூர்யனைப்போல ப்ரகாசவானாகவும், பரோபகாரியாகவும் ஆவாயாக.

இம்மந்திரங்களைச் சொல்லவும், பாலன் ஆசார்யனைச் சுற்றிவந்து ஆசார்யன் முகத்தைப் பார்த்து உட்காரவும். அப்போதாசார்யன் தன் இடது கையால் பாலனின் இடது புஜத்தைத் தொட்டு, பின் தன் கையை வஸ்த்திரத்தால் மறைத்துக்கொண்டு—:

ஓம் ப்ராணனாம் க்ரந்திரஸிமா விஸ்ரஸோऽந்தக இதம் தே பரிததாமி, அமும் ‖ (மந்ப்ராம்-1-6-20.)

ஏ நாபீ! நீ ப்ராணத்தினிருப்பிடம், நீ கீழே தாழ்ந்து விடாதே. ஓ சம்சாரத்தின் அந்தக்காரணனான பரமாத்மா! நான் இக்குழந்தையின் ரக்ஷிப்புக்காக உன்னிட மிவனை அனுப்புகின்றேன்.

---

* அஸௌ, அஸூ வென்னுமிவ்விரண்டிடங்களிலும் பாலனின் முழுப் பெயர் சொல்லவேண்டும்.

இம்மந்திரத்தைச் சொல்லிய பிறகு—:

ஓம் அஹுர இதம்தே பரிததாமி, அமும் ‖ (மந்-ப்ராம்-1-6-21.)

ஓ வாயுவை ப்ரேரேபிக்கும் பரமாத்மா! இம்மறைமாணவனை உன்னிட மனுப்புகின்றேன்.

இம்மந்திரத்தால் வயிற்றின்மேலும்—:

ஓம் க்ருஶன இதம் தே பரிததாமி, அமும் ‖ (மந் ப்ராம் 1-6-22.)

ஏ ஜீவாத்மாக்களின் கர்த்தாவான பரமாத்மா! இம்மறைமாணவனை உன்னிட மனுப்புகின்றேன்.

இம்மந்திரத்தால் இருதயத்தையும்—:

ஓம் ப்ரஜாபதயே த்வா பரிததாமி அஸௌ ‖ (மந்-ப்ராம்-1-6-23.)

ஏ மறைமாணவ! மக்களை ரக்ஷிக்கும் பரமாத்மாவினிடம் உன்னை சேர்க்கின்றேன்.

இம்மந்திரத்தால் வலது தோளையும்—:

ஓம் தேவாய த்வா ஸவித்ரே பரிததாமி, அஸௌ ‖ (மந்-ப்ராம்-1-6-24.)

ஏ மறைமாணவ! ஸ்ருஷ்டிகர்த்தா பரமாத்மாவிடம் உன்னைச் சேர்க்கின்றேன்.

இம்மந்திரத்தால் இடது தோளையும் தொட்டு பாலனின் ஹ்ருதயத்தின்மேல் கையை வைத்து—:

ஓம் தம் தீராஸः கவய உன்னயந்தி ஸ்வாத்யோ மனஸா தேவயந்தः ‖ (ருக்-3-8-4.)

இந்த மறைமாணவனுக்கு வீரம், புத்தி, திவ்ய குணங்கள், நன்னடத்தை உண்டாகட்டும்.

இம்மந்திரம் சொல்லி பாலனின் வலது இருதயத்தின் மேல் கையை வைத்து—:

ஓம் மம வ்ரதே தே ஹ்ருதயம் ததாமி மம சித்தமனு சித்தம் தே அஸ்து । மம வாசமேகமனா ஜுஷஸ்வ ப்ருஹஸ்பதிஷ்ட்வா நியுனக்து மஹ்யம் ॥ (பாரஸ்-2-2-16.)

ஏ சிஷ்யா! உன் இருதயத்தை என்னுடை ஆதீனம் செய்துகொள்கிறேன். உன் சித்தம் சதா என் சித்தத்தின் அனுகூலமாகட்டும். உன் மனது என் எண்ணத்தைப்போல எண்ணி ஒற்றுமை யடையட்டும். இன்றிலிருந்து கடவுள் உன் ப்ரதிக்ஞையை என் ப்ரதிக்ஞையாகச் செய்வாராக. என்று சொல்ல பாலகன் ஏ ஆசார்ய! உங்களுடைய இருதயத்தின்படி என் இருதயமுமாகி தாங்கள் ஈயும் உத்தம வித்தைகளையென் சித்தமேற்றுக்கொள்ளட்டும். என்னுடைய சித்தம் உங்களின் சித்தத்தின்படி யாகட்டும். என்னை உங்களுடன் ஒற்றுமையடைய கடவுள் அருள்புரிவாராக, இவ்வாறு இருவரும் ப்ரதிக்ஞை செய்துகொண்டபின்—:

ஆசார்யன்—;"கோ நாமாஸி"—உன் பெயரென்ன?

மாணவன்—:"அஹம்போஃ"—: என் பெயரிதுவாகும்.

ஆசார்யன்—:"கஸ்ய ப்ரம்மசர்யாஸி"—: நீ யாருடைய மறைமாணவன்?

மாணவன்—:"பவதஃ"—: உங்களுடையவன்

(பாரஸ்-2-2.)

ஆசார்யன் மாணவனைக் காப்பாற்றும் பொருட்டு—:

இந்த்ரஸ்ய ப்ரஹ்மசார்ய்யஸ் யக்னி ராசார்ய ஸ்தவாஹமாசார்யஸ்தவ அஸௌ * ॥ (பாரஸ்-2-2)

நீ இந்திரனுடைய மறைமாணவன். உன்னாசார்யன் அக்னியாகும். உன்னாசார்யன் நான், என்றால் உன் முக்கிய ஆசார்யன் கடவுள். ஆனால் அவனின் பிரதிநிதியாக நான் உன் ஆசார்யனாகின்றேன்.

இம்மந்திரத்தைச் சொன்ன பிறகு—:

ஓம் கஸ்ய ப்ரஹ்மசார்யஸி ப்ராணஸ்ய ப்ரஹ்மசார்யஸி கஸ்த்வா கமுபனயதே காயத்வா பரிததாமி ॥

(மாணவ க்ருஹ்யசூத்-1-22-5.)

ஓம் ப்ராஜாபதயே த்வா பரிததாமி. தேவாயத்வா ஸவித்ரே பரிததாமி. அத்ப்யஸ்த்வௌஷ தோப்யஃ பரிததாமி. த்யாவாப்ருதிவீப்யாம் த்வா பரிததாமி, விஸ்வேப் யஸ்த்வா தேவேப்யஃ பரிததாமி. ஸர்வேப்யஸ்த்வா பூதேப்யஃ பரிததாம் யரிஷ்ட்யை ॥ (பார்ஸ்-2-2.)

நீ யாருடைய மறைமாணவன்? ப்ராணத்தினுடைய. உன் பூணூற் சடங்கு யாரால் செய்யப்பட்டது? உன்னை யாருடன் சேர்க்கப்பட்டது? நான் உன்னை ஸ்ருஷ்டியைச் செய்த பரமாத்மன், ஜல, ஒஷதி, த்யௌலோகம், பூலோகம், மற்றும் சகல பௌதிக சக்திகளுடன் சேர்க்கின்றேன். அச்சகலரும் உனக்கு பலத்தை யீவார்கள்.

---

* அஸௌ யெனுமிடத்தில் பாலகனின் முழுப் பெயரையும் சொல்லவேண்டும்.

இம்மந்திரம் சொல்லி பின் "நீ ப்ராணம் ஆகி வித்தைகளையறிய முயற்சிசெய்" என்று கற்பிக்கவேண்டும்.

இப்பூணூற் சடங்கு முடிந்தபின் (வேதாரம்பம்) கலைதுவக்கற் சடங்கு அன்றே புரிய விரும்பின் அன்றே புரியலாம். மற்றோர் நாள் புரியவிரும்பின் வாமதேவகானம் புரிந்து, வந்திருப்பவர்களுக்குத் தகுந்தவைகளைப் புரிந்து அனுப்பிவைக்கவேண்டும். அப்போது தாய், தகப்பன், பந்துமித்திரர்கள் எல்லோரும் சேர்ந்து—:

ஓம் த்வம் ஜீவ சரத: சதம் வர்த்தமான:, ஆயுஷ்மான் தேஜஸ்வீ வர்சஸ்வீ பூயா: ।

நீ வளர்ந்துகொண்டும், அறிவை யடைந்துகொண்டும் 100 வருடங்கள் வரை வாழ்ந்திரு. நீண்ட ஆயுளும், தேஜஸ்ஸும் உனக் குண்டாகுமாக.

இவ்வாறு ஆசிர்வாதமீந்து அவரவர்கள் வீட்டிற்குப் போகவும்.

பூணூற் சடங்கு முற்றிற்று.

கலைதுவக்கற் சடங்கு (வேதாரம்பம்)

கலைதுவக்கல் என்பது காயத்ரீ மந்திரத்திலிருந்து சாங்கோபாங்கமாக நான்கு வேதங்களையும் கற்பதற்காக உள்ள நியமங்களை யேற்றுக்கொள்வதாகும்.

சமயம்—: பூணூற் சடங்கு செய்த தினத்திலேயாவது, அதற்கு மறுநாளாவது, அல்லது அவ்வருடத்திற்குள் எந்த நாளிலாவது செய்யவேண்டும்.

விதி—: கலைதுவக்கற் சடங்கு செய்யவேண்டிய நாளில் நன்னீராட்டி, நல்லாடைகளணிவித்து, தகப்பன் அல்லது ஆசார்யன் பாலகனை தடவினிற்கருகில் கொண்டுவந்து மேற்கில் கிழக்கு முகத்தவனாய் உட்காரவைக்கவேண்டும். பிறகு கடவுள் துதி, அருள் கோறல், அமைதிவேண்டல் முதலியவைகளைப் படித்து நெருப்பு மூட்டல், சமிதையிடல், நீர் தெளித்தல் முதலியவைகளைச் செய்து, அக்னியை நன்கு எரியச்செய்து "ஆகாரவாஜ்யபாகாகுதிகள்" நான்கும், "வ்யாஹ்ருதி ஆகுதிகள்" நான்கும், "ஆஜ்யாகுதிகள்" 8ம் ஆக 16 நெய்யாகுதிகளியற்றி, ப்ரதான ஆகுதிகள் இயற்றியபின், "வ்யாஹ்ருதி ஆகுதிகள்" 4-ன்கும், "ஸ்விஷ்டக்ருத் ஆகுதி" 1-ம், "ப்ராஜாபத்யாகுதி" 1-ம் ஆக 6 ஆகுதிகள் பாலன் கையால் கொடுக்கவேண்டும் பிறகு—:

ஓம் அக்னே ஸுஸ்ரவ: ஸுஸ்ரவஸம் மாகுரு। ஓம் யதாத்வமக்னே ஸுஸ்ரவ: ஸுஸ்ரவா அஸி। ஓம் ஏவம் மாம் ஸுஸ்ரவ: ஸௌஸ்ரவஸம்குரு। ஓம் யதாத்வமக்னே தேவானாம் யக்ஞஸ்ய நிதிபா அஸி। ஓம் ஏவமஹம் மனுஷ்யாணாம் வேதஸ்ய நிதிபோ பூயாஸம்॥ (பாரஸ்கரம்-2-4-1, 2.)

ஏ அக்னீ! நீ நற்கீர்த்தியாளன், என்னையும் நற்கீர்த்திவானாக்கு. ஏ புகழ்ச்சிவானாய அக்னீ! நீ புகழ்ச்சியாளனாயுள்ளதைப்போலவே யென்னையும் புகழ்ச்சிவானாக்கு. ஏ அக்னீ! நீ யாக பொக்கிஷங்களைக் காப்பாற்றுபவன். என்னையும் வேத பொக்கிஷங்களின் ரக்ஷகனாக்கு.

இம்மந்திரத்தைச் சொல்லி தடவினிலுள்ள நெருப்பை ஒன்ருகச் சேர்க்கவேண்டும். பிறகு பாலன் தடவைச் சுற்றி வந்து "அதிதேऽனுமன்யஸ்வ" எனுமாதி மந்திரங்களால் தடவைச் சுற்றிலும் நீர்வார்த்து, பாலன் தடவினிற்கு தெற்கில் வடக்கு முகத்தனுய் நின்று நெய்யில் துவைத்த சமிதையைக் கையில் பிடித்து—:

ஓம் அக்னயே ஸமிதமாஹார்ஷம் ப்ருஹதே ஜாத வேதஸே। யதா த்வமக்னே ஸமிதா ஸமித்யஸ ஏவமஹ மாயுஷா மேதயா வர்சஸா ப்ரஜயா பசுபிர் ப்ரஹ்மவர்சஸேன ஸமிந்தே ஜீவபுத்ரோ மமாசார்யோ மேதாவ் யஹமஸான் யனிராகரிஷ்ணுர் யஶஸ்வீ தேஜஸ்வீ ப்ரஹ்மவர்சஸ்வ்யன்ன தோ பூயாஸம் ஸ்வாஹா ॥ (பாரஸ்-2-4-3)

பெரியவான ஞானதாதா அக்னிக்காக நான் இச் சமிதையிடுகின்றேன். ஏ அக்னீ! நீ யெவ்வாறு சமிதை யால் வளர்த்து விருத்தியடைகின்ருயோ, அவ்வாறே என் ஆயுள், புத்தி, பல, சந்தான, பசு முதலியவைகள் மறைமாண வத்தால் வளர்ந்து விருத்தியடையட்டும். என் ஆசார்யன் ஜீவித புத்ரவான் ஆகும். என்னை ஆசாரிமார்களை திரஸ்கரிக் காத புத்திசாலியாகவும், கீர்த்தி, பலம், தேஜஸ்வீ, மறை மாணவனுகவும் செய்வாயாக.

இம்மந்திரம் சொல்லி கையில் உள்ள சமிதையை அக்னி யின் மத்தியிலிடவேண்டும். இம்மாதிரி மூன்று சமிதைகளை இட்டபின் "அக்னேஸுஶ்ரவः" இம்மந்திரத்தால் நெருப் பை ஒன்ருகச் சேர்த்து, "அதிதேऽனுமன்யஸ்வ" எனு மாதி மந்திரங்களால் தடவைச் சுற்றிலும் நீர் வார்த்து, பாலன் தடவினற்கு மேற்கே கிழக்கு முகத்தனுய் அமர்ந்து

அக்னியில் சிறிது கையை வாட்டிக்கொண்டு ஜலத்தில் நனைத்து—:

ஓம் தனூபா அக்னேஸிதன்வம் மே பாஹி ॥ 1 ॥ ஏ அக்னே! நீ சரீர ரக்ஷகன் என் சரீரத்தை ரக்ஷீ. ஓம் ஆயுர் தா அக்னேஸ்யாயுர்மே தேஹி ॥ 2 ॥ ஏ அக்னே! நீ ஆயுளை அளிப்பவன். எனக்கு ஆயுள் அளி. ஓம் வர்சோதா அக்னே ऽஸி வர்சோ மேதேஹி ॥3॥ அக்னே! பலமீபவன் நீ எனக்கு பலத்தை யளி. ஓம் அக்னேயன்மே தன்வா ஊனந்தன்ம ஆப்ருண ॥ 4 ॥ அக்னே! என் உடலின் பலகீனத்தை யகற்று. ஓம் வேதாம் மே தேவः ஸவிதா ஆததாது ॥ 5 ॥ உலகை ஸ்ருஷ்டித்த பரமன் எனக்கு புத்தியை யளிக்கட்டும். ஓம் மேதாம்மே தேவீ ஸரஸ்வதீ ஆததாது ॥ 6 ॥ ஞானப் பொக்கிஷத்தினிருப்பிட மெனக்கு ஞானத்தை யளிக்கட்டும். ஓம் மேதாம் மே அஸ்வினௌ தேவாவாதத்தாம் புஸ்காஸ்ர ஜௌ ॥ சுந்தர அலங்காரனுகிய அஸ்வினிதேவன் எனக்கு நல்லறிவை யளிக்கட்டும். (7)

இவ்வேழு மந்திரங்களால் 7 முறை ஜலத்தைத் தொட் டுத் தொட்டு, நெருப்பில் வாட்டி, முகத்தைத் தொட்டுக் கொள்ளவேண்டும். பிறகு பாலகன்—:

ஓம் வாங்ம ஆப்யாயதாம் ॥ என் வாக்கு உன்னதி யாகட்டும்.

இம்மந்திரத்தால் முகத்தையும்.

ஓம் ப்ராணஸ்ச ம ஆப்யாயதாம் ॥ என் ஸ்வாசம் உன் னதியாகட்டும்.

இம்மந்திரத்தால் மூக்கையும்.

ஓம் சக்ஷுஸ்ச ம ஆப்யாயதாம் என் கண்கள் உன்னதியாகட்டும்.

இம்மந்திரத்தாலிரண்டு கண்களையும்

ஓம் ச்ரோத்ரஞ்ச ம ஆப்யாயதாம் || என் காதுகள் உன்னதியாகட்டும்.

இம்மந்திரத்தா லிரண்டு காதுகளையும்

ஓம் யசோபலஞ்ச ம ஆப்யாயதாம் || என் கீர்த்தியும் பலமும் உன்னதியாகட்டும்.

இம்மந்திரத்தா லிரண்டு புஜங்களையும் ஸ்பர்சித்து—:

ஓம் மயி மேதாம் மயி ப்ரஜாம் மய்யக்னிஸ்தேஜோ ததாது | மயிமேதாம் மயிப்ரஜாம் மயீந்த்ர இந்த்ரியம் ததாது | மயிமேதாம் மயிப்ரஜாம் மயி ஸூர்யோ ப்ராஜோ ததாது | யத்தே அக்னே தேஜஸ்தேனாஹம் தேஜஸ்வீ பூயாஸம் | யத்தே அக்னே வர்சஸ்தேனாஹம் வர்சஸ்வீ பூயாஸம் | யத்தே அக்னே ஹரஸ்தேனாஹம் ஹரஸ்வீ பூயாஸம் ||

(ஆஸ்வலா-1-21.4.)

அக்னி எனக்கு புத்தி, சந்தானம், தேஜஸ்ஸை யளிக்கட்டும். இந்திரன் எனக்கு புத்தி, சந்தானம், இந்த்ரிய பலமளிக்கட்டும். சூர்யன் எனக்கு புத்தி, சந்தானம், தேஜஸ்ஸை யளிக்கட்டும். அக்னீ! உன்னுடைய தேஜஸ்ஸால் என்னை தேஜஸ்வானாக்கு. அக்னீ! உன் செல்வத்தால் என்னை செல்வவானாக்கு. அக்னீ! உன் பொருள் எரிப்புச் சக்தியால் நானும் அச்சக்தியைப் பெற அருள்செய்.

இம்மந்திரங்களால் பாலன் கடவுளை வேண்டிய பின் தடவின் வடக்குப் பக்கம் சென்று, ஒரு ஜான் இடம் விட்டு

பூமிமேல் கிழக்கு முகத்தனாய் உட்காரவும். ஆசார்யன் அவனுக்கெதிராக மேற்கு முகத்தனா யமர்ந்து பின்—:

மாணவன்—: அதீஹி பூ: ஸாவித்ரீம் போ அனுப்ரூஹி ||

"ஏ ஆசார்ய! முதலில் ஒன்றான ஓங்காரம், பின் மூன்று மஹாவ்யாக்ருதிகள், பின் சாவித்ரீ ஆக இம்மூன்றுங் கலந்த பரமாத்மாவின் வாசகத்தை யெனக்கு உபதேசியுங்கள்." என்று சொல்ல ஆசார்யன் ஓர் ஆடையை தனக்கும் பாலனுக்கும் இடையில் புஜங்களின் மேலிட்டு தன் கைகளால் பாலன் இரண்டு கைப் பெரு விரல்களையும் பிடித்துக்கொண்டு கீழ்வரும்விதமாக மூன்றுமுறை காயத்ரீயை உபதேசிக்கவும்—:

முதலில்—:

ஓம் பூர்புவ: ஸ்வ: | தத்ஸ விதுர்வரேண்யம் |

இதுவரை நிறுத்தி ஒவ்வொரு பதத்தையும் பாலனை சுத்தமாக உச்சரிக்கச்செய்து பின் இரண்டாம் முறை—:

ஓம் பூர்புவ: ஸ்வ: | தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி ||

இங்கு நிறுத்தி பதங்களைச் சரிவர உச்சரிக்கச்செய்து மூன்றாம்முறை—:

ஓம் பூர்புவ: ஸ்வ: | தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோ ந: ப்ரசோதயாத் ||

இப்பதங்களை முழுவதும் நன்றாக உச்சரிக்கச்செய்து கீழ் வருமாறு அர்த்தம் சொல்லவும்—:

(ஓம்) இது கடவுளின் முக்கியப் பெயராகும். இதிலிருந்தே மற்றெல்லா பெயர்களும் பிறந்தது. (பூ:) ப்ராணங்களுக்கும் ப்ராணன். (புவ:) சகல துக்கங்களிலிருந்தும் வேறுபட்டவன் (ஸ்வ:) சுயமாக சுகரூபனாய் வேண்டுவோருக்கு சுகத்தையீபவனாகிய அந்த (ஸவிது:) சகல உலகையு முண்டாக்குபவன், சூர்யாதி ஒளிகளிலும் ஒளியானவன், சகல ஐச்வர்யதாதா (தேவஸ்ய) இச்சிக்கத்தகுந்த, சதா விஜயம் புரிவனாகிய கடவுளின் (வரேண்யம்) அதி மேன்மையான, த்யானிக்க யோக்யமான (பர்க:) சகல துக்கங்களையும் எரிக்கச்செய்யும் பவித்திர சுத்த ஸ்வரூபமாகிய (தத்) அதை நாம் (தீமஹி) தரிப்போம், த்யானிப்போமாக (ய:) அப்பரமாத்மன் (ந:) நமக்கு (தியஃ)புத்தியின் உத்தம குணகர்ம ஸ்வபாவத்தை (ப்ரசோதயாத்) ப்ரேரேபிக்கின்றார். இதனால் நாம் அப்பரமனை துதிக்கவேண்டும். இவரைத் தவிர மேலானதோ, சமமானதோ வேறொன்றுமே யில்லை. இவ்வாறு அர்த்தத்தைச் சொன்னபிறகு—:

ஓம் மம வ்ரதே தே ஹ்ருதயம் ததாமி । மம சித்தமனு சித்தம் தே அஸ்து । மம வாசமேகமனா ஜுஷஸ்வ ப்ருஹஸ்பதிஷ்ட்வா நியுனக்து மஹ்யம் ॥ (பாரஸ்-2-2.)

இதன் பொருள் 138-ம் பக்கம் வந்துள்ளது.

இம்மந்திரத்தால் ஆசார்யனும் மாணவனும் முன்போல் ப்ரதிக்ஞை செய்துகொண்டு—:

ஓம் இயம் துருக்தம் பரிபாதமானா வர்ணம் பவித்ரம் புனதீம ஆகாத் । ப்ராணாபானப்யாம் பலமாததானா ஸ்வஸா தேவீ ஸுபகா மேகலேயம் ॥ (மந்-ப்ராம்மணம்-1-1-27) (பாரஸ்-2-2.)

இவ்வாடை துஷ்டர்களின் கெட்ட வார்த்தைகளை விலக்குகிறது. வர்ணத்தை சுத்தம் செய்கிறது ப்ராண, அபானங்களை பலமடையச் செய்கிறது. சௌபாக்யவதியான தங்கையைப்போல் எனக்கு உபயோகமாகிறது.

இம்மந்திரத்தைச் சொல்லி ஆசார்யன் மாணவனுக்கு ஆடைகளை * அணிவித்து—:

ஓம் யுவா யுவாஸா: பரிவீத ஆகாத் ஸ உஸ்ரேயான் பவதிஜாயமான: । தம்தீராஸ: கவய உன்னயந்தி ஸ்வாத்யோ மனஸா தேவயந்த: ॥ (ருக்-3-8-4.)

இதன் பொருளை 136—137-ம் பக்கம் பார்க்கவும்.

இம்மந்திரம் சொல்லி இரண்டு சுத்தமான கௌபீனங்கள், இரண்டு இடையாடைகள், ஒரு மேலாடை, இரண்டு மடி வஸ்த்திரம் இவைகளை ஆசார்யன் மாணவனுக்குக் கொடுக்கவேண்டும். அவைகளிலிருந்து ஒரு கௌபீனம், 1 மடி வஸ்த்திரம், ஓர் இடை வஸ்த்திரம் இவைகளை பாலன் தரித்துக்கொள்ளவேண்டும். பிறகு ஆசார்யன் கையில் தண்டத்தை † எடுத்துக்கொண்டு பாலன் எதிரில் நிற்க பாலனும் இரண்டு கைகளையும் சேர்த்துவைத்து நின்று—:

---

* ப்ராம்மணர்கள் மூங்கில் அல்லது தர்பை, க்ஷத்ரியர்கள் தனுஷ்யெனும் பெயருடைய புல், வைஸ்யர்கள் சணல் அல்லது ஊணம் இவைகளால் செய்யப்பட்ட ஆடைகளையே அணிய வேண்டும்.

† ப்ராம்மணர்களுக்கு பாலன் நின்றபோது பூமி முதல் தலைவரை உயரமுள்ள பலாசம் அல்லது வில்வத்தண்டையும், க்ஷத்ரியர்

ஓம் யோமேதண்ட: பராபதத்வை ஹாயஸோதி பூம்யாம் । தமஹம் புனராதத்த ஆயுஷே ப்ரஹ்மணே ப்ரஹ்மவர்சஸாய ॥ (பாரஸ்-2-2).

எனக்காக இன்று ஏற்பட்டுவந்த தண்டத்தை என் மறைமாணவ விரதத்தின் மூலமாய் ஆயுள், பலம், வேதக்கலை இவைகளைப்பெற நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

இம்மந்திரம் சொல்லி பாலன் ஆசார்யன் கையிலிருந்து தண்டத்தைப் பெற்றுக்கொள்ளவும். அப்போது தகப்பன் மகனுக்கு மறைமாணவத்தைக் குறித்து சாதாரண உபதேசம் செய்யவும்—:

ப்ரஹ்மசார்யஸி அஸௌ* (1) அபோ஽ஶான (2) கர்ம குரு (3) திவாமாஸ்வாப்ஸீ: (4) ஆசார்யாதீனோ வேதமதீஷ்வ (5) த்வாதஶவர்ஷாணி ப்ரதிவேதம் ப்ரஹ்மசர்யம் க்ருஹாண வாப்ரஹ்மசர்யம் சர (6) ஆசார்யாதீனோ பவான்யத்ரா தர்மா சரணாத் (7) க்ரோதான்ருதேவர்ஜய (8) மைதுனம்வர்ஜய

களுக்கு பூமிமுதல் நெற்றிவரை உயரமுள்ள வட அல்லது கதிரமரத் தண்டையும், வைஸ்யர்களுக்கு பூமிமுதல் மூக்குவரை உயரமுள்ள வீலு அல்லது கூலமரத்தண்டையும் அளிக்கவேண்டும். அத்தண்டங்கள் கணுக்களுடையதாகவோ, எரிந்ததாகவோ, சொத்தை, புழு வரித்தல் முதலியவைகள் உடையதாகவோ இருக்கக்கூடாது. இத்துடன் மறைமாணவன் உட்கார ஒரு மிருகத் தோலாடையையும், ஒரு ஜல பாத்திரம், ஒரு உபபாத்திரம், ஒரு காண்டி இவைகளையும் கொடுக்கவேண்டும்.

* இவ்விடத்தில் மாணவனின் பெயரைச் சொல்லவேண்டும்.

(9) உபரிஶய்யாம்வர்ஜய (10) கௌஶீலவகந்தாஞ்ஜனானி வர்ஜய (11) அத்யந்தம்ஸ்னானம் போஜனம் நித்ராம் ஜாகரணம் நிந்தாம் லோபமோஹபய ஶோகான்வர்ஜய (12) ப்ரதிதினம் ராத்ரே: பச்சிமேயாமே சோத்தாயாவஶ்யகம் க்ருத்வா தந்ததாவனஸ்னான ஸந்த்யோபாஸனேஶ்வரஸ் துதி ப்ரார்த்தனோபாஸனாயோகாப்யாஸான்னித்யமாசர (13) க்ஷௌரக்ருத்யம் வர்ஜய (14) மாம்ஸருக்ஷாஹாரம் மத்யாதிபானம் சவர்ஜய (15) கவாஶ்வ ஹஸ்த்யுஷ்ட்ராதியானம் வர்ஜய (16) அந்தர்க்ராம நிவாஸோபானச் சத்ரதாரணம் வர்ஜய (17) அகாமத: ஸ்வயமிந்த்ரியஸ்பர்ஶேனவா வீர்யஸ்கலனம் விஹாய வீர்யம்ஶரீரே ஸம்ரக்ஷ்யோர்த்வரேதா: ஸததம்பவ (18) தைலாப்யங்க மர்தனாத்யம்லாதி திக்தகஷாயக்ஷாரரேசனத்ரவ்யாணி மாஸேவஸ்வ (19) நித்யம் யுக்தாஹாரவிஹாரவான் வித்யோபார்ஜனேச யத்னவான்பவ (20) ஸுஶீலோ மிதபாஷீ ஸப்யோபவ (21) மேகலாதண்டதாரண பைக்ஷ்யசர்யஸமிதாதானோதகஸ்பர்ஶனாசார்யப்ரியாசரண ப்ராத: ஸாயமபிவாதன வித்யா ஸம்சய ஜிதேந்த்ரியத்வாதீன் யேதேதே நித்யதர்மா: (22) (மந்.ப்ராம்-1-6-26.)

பொருள்—: இன்றுமுதல் நீ மறைமாணவன் (1) நிதமும் கூட்டுவேளைத் தொழுகைசெய்து போஜனத்தின் முன் சுத்த ஜலத்தால் நீருட்கொள்ளல் செய் (2) கெட்ட காரியங்களை நீக்கி தர்மமானவைகளைச் செய்துவா (3) பகலில் தூங்காதே (4) ஆசார்யன் சொற்படி நடந்து நிதமும் வேதங்களைப் படித்துவா (5) ஒவ்வொரு வேதமும் சாங்கோபாங்கமாக என்றால் மொத்தம் 48 வருடங்கள் முற்றும் கற்பதன் முன் மறைமாணவத்தைக் கைவிடாதே (6) ஆசார்

யன் சொற்படி தர்மத்தை அனுசரித்து அவர் ஏதாவது தீயனசொன்னால் அதை மதிக்காமல் அதைச் செய்யாமலிரு. (7) குரோதம், பொய் பேசுதலை விடு. (8) எட்டுவிதமான மைதுனங்களையும் * விட்டுவிடு (9) பூமியின்மேல் படுப்பதன்றி மஞ்சங்களில் சயனிக்காதே (10) பாடுதல், ஆடுதல், முகர்தல், மையிடல் இவைகளை விலக்கு. (11) அதிக ஸ்னானம், அதிக போஜனம், அதிக தூக்கம், அதிக விழிப்பு, நிந்தை, லோபம், மோஹம், பயம், சோகம் இவைகளை எப்போதும் அனுஷ்டிக்காதே. (12) இரவில் 4-ங்காம் ஜாமத்தில் எழுந்து தந்த சுத்திசெய்து குளித்து, கூட்டுவேளைத் தொழுகை, கடவுள் துதி, யோகாப்யாசம் முதலியவைகளைச் செய்துவா. (13) க்ஷவரம் செய்துகொள்ளாதே. (14) மாம்ஸம், உலர்ந்தது, குளிர்ச்சியானவைகளைப் புசியாதே. (15) குதிரை, ஒட்டகம், யானை இவைகளில் சவாரி செய்யாதே. (16) கிராமத்திற்குப்போதல், செருப்பு, குடை இவைகளை அணியாதே. (17) மர்மஸ்தானத்தைத் தொடுதலும், இந்திரியங் கலிதம்செய்தலும் கூடாது. வீர்யத்தை உடலிலேயே இருத்தி வெளிச்செல்லாதபடி காப்பாற்றிவா. (18) தைலாதிகளால் உடலைத் தேய்த்தல், அதிக திதிப்பு, காரம், புளிப்பு, மிளகாய், வெங்காயம், அதிக உப்பு, முதலியவைகளை அருந்தாதே. (19) நிதமும் சரியாக கவனித்து ஆகாரங்களை யருந்தி கல்விமேல் கவனம் செலுத்திவா. (20) பெரியோர்கள் சபைகளில் அமர்ந்து அறிவை அனுபவி.

* பெண்களை நினைத்தல், கதை, தீண்டல், விளையாடல், பார்த்தல், அணைத்தல், தனித்து வசித்தல், புணர்தல் இவ்வெட்டு மைதுனங்களையும் விலக்கியவனே மறைமாணவனாகும்.

(21) மேகலை, தண்டம் தரித்தல், பிக்ஷை யெடுத்தல், அக்னிஹோத்ரம், ஸ்னானம், கூட்டுவேளைத் தொழுகை, ஆசார்யனுடன் அன்பாகப் பேசுதல், காலை மாலையில் ஆசார்யனை வணங்குதல் இவைகளை தினமும் செய்துவா (22.)

இவ்வுபதேசத்தைத் தகப்பன் செய்தவுடன் பாலன் தகப்பனை வணங்கி "நீர் சொல்லியதைப்போலவே நடந்துகொண்டுவருவேன்" என்று சொல்லவேண்டும். பிறகு மாணவன் தடவைச் சுற்றிவந்து மேற்கில் நின்று தாய், தகப்பன், பந்து, மித்திரர்கள் எல்லோரிடத்திலும் பிச்சை கேட்கவேண்டும் * கிடைத்த பிச்சையை ஆசார்யன் முன்பு வைக்க, அவர் அதில் சிறிது அன்னம் எடுத்து அச்சகல பிச்சை பாலர்களுக்கு கொடுக்க அவர்கள் ஆகாரத்துடனதை சேர்த்துப் புசிக்கவும். பிறகு பாலகனை நல்லாசனத்தமர்த்தி வாமதேவகானம் செய்யவேண்டும். பிறகு பாலன் முன் வைத்துள்ள பிச்சையை அருந்தவேண்டும். பிறகு மாலை வரை இளைப்பாரியபின், மாணவனை கூட்டுவேளைத் தொழுகை செய்யும்படிச் செய்யவேண்டும். பிறகு மாணவனுடன் ஆசாரியனும் தடவினற்கு மேற்கில் கிழக்கு முகத்தவர்களாய் அமர்ந்து ஸ்தாலீபாகம்செய்து அதில் நெய்விட்டு, சமிதையிடல்செய்து "ஆகாரவாஜ்ய பாகாகுதிகள்" 4-ன்கும்,

* ப்ராம்மணன் புருடர்களிடம் "பவான் பிக்ஷாம் ததாது" என்றும், பெண்களிடம் "பவதிபிக்ஷாம் ததாது" என்றும், க்ஷத்ரியன் புருஷர்களிடம் "பிக்ஷாம்பவான் ததாது" என்றும், பெண்களிடம் "பிக்ஷாம்பவதி ததாது" என்றும், வைஸ்யன் புருடர்களிடம் "பிக்ஷாம் ததாதுபவான்" என்றும், பெண்களிடம் "பிக்ஷாம் ததாதுபவதி" என்றும் கேட்டு வாங்கவேண்டும்.

"வ்யாக்ருதி யாகுதிகள் 4-ம் கொடுக்கவேண்டும். பிறகு மாணவன் எழுந்து நின்று 141-ம் பக்கத்திலுள்ள "ஓம் அக்னேஸுஸ்ரவ:' எனும் மந்திரத்தால் மூன்று சமிதைகளையிட்டு, கையை யாகநெருப்பில் காய்ச்சி 143-ம் பக்கங்களிலுள்ளதைப்போல் முகத்தைத்தொட்டு அவயவங்களைத் தொடவேண்டும். பிறகு ஸ்தாலீபாக அன்னத்தை பாலன் ஆசார்யனுக்கு வேள்வி செய்யவும், புசிக்கவு மளிக்கவேண்டும். மறுபடி ஆசார்யன் அதில் நெய்யைவிட்டு

ஓம் ஸதஸஸ்பதிமத்புதம் ப்ரியமிந்த்ரஸ்ய காம்யம் । ஸனிம் மேதாமயாஸிஷம் ஸ்வாஹா ॥ இதம் ஸதஸஸ்பதயே இதன்ன மம ॥ (யஜுர்-32.13.)

ஜீவாத்மாவின் நண்பன், ஆசைக்குகந்த, அத்புத, சகல சம்சாரத் தலைவனாகிய ஈஸ்வரனுடன் நான் யோக்ய உபயோக அறிவை யாசிக்கின்றேன்.

தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்யதீமஹி தியோ யோ ந: ப்ரசோதயாத் ॥ இதம் ஸவித்ரே இதன்ன மம ॥ (யஜுர்-22.9.)

ஓம் ருஷிப்ய: ஸ்வாஹா ॥ இதம் ருஷிப்ய: இதன்ன மம ॥ (ஆஸ்வ-1-22-14.)

(இதன் பொருளை 146-ம் பக்கம் பார்க்கவும்.)

இம்மூன்று மந்திரங்களால் மூன்றும் (ஓம் யதஸ்ய கர்மணோ) எனும் மந்திரத்தால் ஒன்றும், ஆக நான்கு ஆகுதிகள் கொடுக்கவேண்டும். பிறகு "வ்யாஹ்ருத்யாகுதிகள் 4ன்கும்", (ஓம் த்வன்னோஅக்னே) எனும் மந்திரத்தால் ஒன்றும், "ஆஜ்யாகுதிகள்" 8ம், கொடுத்தபின் மாணவன் கிழக்கு முகத்தவனாய் ஆசனத்தமர்ந்து ஆசார்யனுடன் "வாமதேவ்யகானம்" செய்யவேண்டும் பிறகு—:

அமுக கோத்ரோத் பன்னோஅஹம் போ பவந்தமபிவாதயே ॥ இக்கோத்திரத்திற் பிறந்த நான் தங்களை ப்ரணாமம் செய்கிறேன்.

இதைச் சொல்லி ஆசார்யனை வணங்கவேண்டும். அப்போது ஆசார்யன்—:

ஆயுஷ்மான் வித்யாவான் பவ ஸௌம்ய ॥ ஆயுள்வானாகவும், அறிவாளனாகவும் வாழ்வாயாக.

இவ்வாறு ஆசீர்வதித்து பிறகு வேள்வியில் மிகுந்த அன்னத்தையும் மற்ற அன்னத்தையுங் கலந்து ஆசார்யனும் மாணவனும் எதிரெதிரமர்ந்து ஆகாரம் புசிக்கவேண்டும். பிறகு கை, முகம் இவைகளை சுத்தி செய்துகொண்டு வந்திருப்பவர்களுக்கு வேண்டுவன செய்தனுப்பவேண்டும். பிறகு கீழ்வருமாறு எல்லோரும் சேர்ந்து—:

ஹே பாலக! த்வமீஸ்வரக்ருபயா வித்வான் ஸரீராத்மபலயுக்த: குஸலீ வீர்யவானரோக: ஸர்வாவித்யா அதீத்யாஸ்மான் தித்ருக்ஷு: ஸன்னாகம்யா ॥

ஹே பாலகா, நீ ஈஸ்வரக் கிருபையால் வித்வான், பலவான். வீர்யவான், நிரோக, குசலவான் ஆனவனாக சகல வித்தைகளையுங் கற்றபிற்பாடு மறுபடி எங்களுடன் வந்து சேருவாயாக, இவ்வாறு ஆசீர்வாதம்செய்து பின் அவரவரில்லங்களுக்குப் போய்விடலாம். இதன் பிறகு மூன்று நாள்

வரை மாணவன் பூமியின்மேல் சயனித்திருந்து காலை மாலைகளில் (ஓமக்னே ஸுச்ரவः) இம்மந்திரத்தால் சமிதாதானமும், (வாங்ம) முதலியவைகளால் ஆசார்யன் அங்கஸ்பர்சமும் செய்யவேண்டும். இவ்வாறே அம்மூன்று நாள் வரையிலும் (ஸதஸஸ்பதி) 152-ம் பக்கத்திலுள்ள மந்திரங்களால் 4-ன்கு ஸ்தாலீ பாகாகுதிகள் கொடுக்கவேண்டும். இம்மூன்றுநாள்வரை மாணவன் காரம், உப்பு கலவாத ஆகாரங்களையே உண்டுவரவேண்டும். பிறகு பாடசாலைக்குச் சென்று குருவின் அருகு வித்யாப்யாச சமயத்தின் ப்ரதிக்ஞையைச் செய்யவேண்டும். ஆசார்யனும் செய்யவேண்டும்.

ஆசார்ய உபநயமானோ ப்ரஹ்மசாரிணம் க்ருணுதே கர்பமந்தः । தம்ராத்ரீஸ்திஸ்ர உதரே பிபர்த்தி தம் ஜாதம் த்ரஷ்டுமபிஸம்யந்தி தேவாः ॥ (அதர்-11-5-3.)

இயம் ஸமித்ப்ருதிவீ த்யௌர்த்விதியோ தாந்தரிக்ஷம் ஸமிதாப்ருணாதி । ப்ரஹ்மசாரீ ஸமிதாமேகலயா ச்ரமேண லோகான்ஸ்தபஸா பிபர்தி ॥ (அதர்வ-11-5-4.)

ப்ரஹ்மசார்யேதி ஸமிதா ஸமித்திः கார்ஷ்ணம் வஸாநோ தீக்ஷிதோ தீர்கச்மச்ருः । ஸ ஸத்ய ஏதி பூர்வஸ்மாதுத்தரம் ஸமுத்ரம் லோகான்த்ஸங்க்ருப்ய முஹுராசரிக்ரத் ॥ (அதர்-11-5-6.)

ப்ரஹ்மசர்யேன தபஸா ராஜாராஷ்டாம் விரக்ஷதி । ஆசார்யோ ப்ரஹ்மசர்யேண ப்ரஹ்மசாரிணமிச்சதே ॥ (அதர்-11-5-17.)

ப்ரஹ்மசர்யேன கன்யா யுவானம் விந்ததே பதிம் ॥ (அதர்-11-5-18ன் பூர்வம்.)

ப்ரஹ்மசாரீ ப்ரஹ்ம ப்ராஜத் பிபர்தி தஸ்மின்தேவா அதிவிச்வே ஸமோதாः । ப்ராணாபானௌ ஜனயன்னாத் வ்யானம் வாசம்மனோஹ்ருதயம் ப்ரஹ்மமேதாம் ॥ (அதர்-11-5-24.)

சுருக்கமான பொருள்—: ஆசார்யன் மறைமாணவனை ப்ரதிக்ஞையுடன் அருகில்வைத்துக்கொண்டு மூன்று இரவுகள் வரை கூட்டுவேலைத் தொழுகையாதிகளைச் செய்வித்து அவனுக்குக் கற்பரூப வித்தையை ஸ்தாபிப்பதற்காக அவனை தரித்து அவனை பூர்ணவித்வானாகச் செய்கின்றார். எப்போது மாணவன் பூர்ண மறைமாணவத்தையும், வித்தையையுங் கற்று வீட்டிற்குத் திரும்புகின்றானோ அப்போது எல்லோரும் அவனை எதிர் சென்றழைத்து மரியாதை செய்கின்றார்கள். (1)

வேதாரம்ப சமயத்தில் மூன்று சமிதைகளை நெருப்பிலிட்டு மறைமாணவத்தை நியமத்துடன் அனுஷ்டித்து வித்தைமுழுதும் கற்கவேண்டுமென திட எண்ணம்கொண்ட மாணவன், பூமி சூர்ய, ஆகாயங்களைப்போல சகலரையும் காப்பாற்றுகின்றவனாகின்றான். தான் கற்ற வித்தையாலும் அனுசரித்த வ்ரதபலத்தாலும் உலகை ஆனந்திக்கச் செய்கின்றான். (2)

வித்தையால் ப்ரகாசமடைந்து மிருகசர்மத்தாடை யணிந்து தீக்ஷிதனாகி 40 வருஷங்கள்வரை கேசங்களை வளர்த்து வந்த மறைமாணவன் சம்பூர்ணமான சமுத்திரத்தை யொத்த அனுஷ்டானத்தால் உலகிற்கு சத்யோபதேசம்செய்து ஆனந்த சாகரத்தை யூட்டுகின்றான். (3)

பூர்ண மறைமாணவம் நோற்று வித்வத்வம், நன்னடத்தை, ஜிதேந்திரியம்பெற்றவனாய் ராஜ்யத்தை பல வழிகளிலும் பரிபாலிக்குமரசனே உத்தமனாவான். அவனையே ப்ரம்மசாரிகள் விரும்புகின்றனர். அவனே ஆசார்யனாகத்தகும். (4)

புருடர்கள் முழு மறைமாணவமனுட்டித்து தங்களுக்குகந்த மனையாளைத் தெரிந்தெடுத்துக் கொள்வதைப்போலவே பெண்களும் முழு மறைமாணவமனுட்டித்து தங்களுக்குகந்த மனையாளர்களைத் தெரிந்தெடுத்துக்கொள்ளவேண்டும். (5)

எப்போது மாணவன் நான்கு வேதங்களையும் அங்கங்களுடன் சப்த, அர்த்த, சம்பந்த சகிதமாய் அறிகின்றானோ அப்போதே அவன் ப்ரகாசமடைகிறான். இவனுடன் சகல வித்வான்களும் நட்புகொள்கின்றனர். இவனே ப்ராண, நீண்ட ஆயுள், துக்கநாசம், சகல முழுவித்தை, வ்யாபகம், நல்வாக்கு, பவித்ர ஆத்மா, சுத்த ஹிருதயம், பரமாத்மா இவைகளைத் தரித்தவன். சகல ஜீவராசிகளின் நன்மைக்காகவும் தன் வித்தைகளை உபயோகிக்கின்றான்.

மறைமாணவ காலம்.

இதற்கு சாந்தோக்ய உபநிடதத்தில் ஒன்றாம் ப்ரபாடகம், 16-வது கண்டத்தின் ப்ரமாணம்—:

மாத்ருமான் பித்ருமானாசார்யவான் புருஷோவேத (1) புருஷோவாவ யக்ஞஸ்தஸ்யயானி சதுர்விம்ஶதிவர்ஷாணி தத் ப்ராதஃ ஸவனம் சதுர்விம்ஶத்யக்ஷரா காயத்ரீ

காயத்ரம் ப்ராதஃ ஸவனம் ததஸ்ய வஸவோऽன்வாயத்தாஃ ப்ராணாவாவ வஸவ ஏதேஹீதகும் ஸர்வம் வாஸயந்தி (2) தம் சேதேதஸ்மின் வயஸிகிஞ்சதுபதபேத் ஸ ப்ரூயாத் ப்ராணாவஸவ இதம் மே ப்ராதஃ ஸ்வனம் மாத்யந்தினம் ஸவனமனு ஸந்தனுதேதிமாஹம் ப்ராணானாம் வஸூனாம் மத்யேயக்ஞோ விலோப்ஸீயேத்யுத்தைவ தத ஏத்யகதோ ஹ பவதி (3) அத யானி சதுஶ்சத்வாரிம் ஶத்வர்ஷாணி தன்மாத்யந்தினம் ஸவனம் சதுஷ்சத்வாரிகும் ஶதக்ஷரா த்ரிஷ்டுப் த்ரைஷ்டுபம் மாத்யுந்தினம் ஸவனம் ததஸ்ய நத்ரா அன்வாயத்தாஃ ப்ராணாவாவ நத்ராரதேஹீதகும் ஸர்வம் ரோதயந்தி (4) சேதேதஸ்மின் வயஸிகிஞ்சிதுபதபேத்ஸ ப்ரூயாத் ப்ராணாருத்ரா இதம்மே மாத்யந்தினம் ஸ்வனம் த்ருதீய ஸவனமனுஸன் தனுதேதிமாஹம் ப்ராணானாம் ருத்ராணாம் மத்மேயக்ஞோ விலோப்ஸீயேத்யுத்தைவ தத ஏத்யகதோ ஹ பவதி (5) அதயான்யஷ்டா சத்வாரிம் ஶத்வர்ஷாணி தத் த்ருதீயஸவனமஷ்டாசத்வாரிம் ஶதக்ஷரா ஜகதி ஜாகதம் த்ருதீயஸவனம் ததஸ்யாதித்யா அன்வாயத்தாஃ ப்ராணாவாவாதித்யா ஏதேஹீதம் ஸர்வமாததே (6) தம் சேதேதஸ்மின் வயஸிகிஞ்சிதுபதபேத்ஸப்ரூயாத் ப்ராணா ஆதித்யா இதம்மே த்ருதீயஸவனமாயுரனு ஸந்தனுதேதி மாஹம் ப்ராணானாமாதித்யானாம் மத்யேயக்ஞோ விலோப்ஸீயேத்யுத்தைவ தத ஏத்யகதோ ஹைவ பவதி (7)

பொருள்—: குழந்தைகளுக்கு 5 வயதுவரை தாயும், 8 வயதுவரை தகப்பனும், 48-44-40-36-25 வயதுவரை ஆசார்யனும் கல்வி கற்றீயவேண்டும். பெண்களுக்கு 8-24-22-20-18-16-வயதுவரை ஆசார்யிணியும் கல்வி கற்றீய

வேண்டும். இதனால் குழந்தைகள் தர்மார்த்தகாம மோக்ஷங்களை அடைகிறார்கள். (1) இம்மனித சரீரம் யக்ஞமாகும் எனின் நல்லவிதமாக இதற்கு ஆயுள் பலம் ஆதிகளால் சம்பன்னமடையச்செய்ய குறைந்தது 24-வயதுவரை ஆணும், 36-வயதுவரை பெண்ணும் மறைமாணவத்தை அனுஷ்டிக்க வேண்டும். இதற்கு (ப்ராதః ஸவனம்) எனப்பெயராகும். இதனால் ப்ராணன் மத்திபமாகி பலவானாகி சுப குணங்களால் சரீரம், ஆத்மா, மனம் இவைகளில் வசித்துக்கொண்டிருக்கும் (2) இவ்விருபத்தைந்து வயதிற்கு முன்பாக விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று சொல்வார்களானால் அவர்களைப் பார்த்து மாணவன் "25 வயதுவரையில் என் மனதும், ப்ராணனும் மறைமாணவத்தால் பலமடையாவிட்டால் (மத்யமஸவனம்) 44-வயதுவரை மறைமாணவத்தை அனுஷ்டிக்குந் திறமையில்லாமல் போய்விடும். முதல் மறைமாணவத்தை சரியானபடி யனுஷ்டித்தாலொழிய இரண்டாவதை அனுஷ்டிக்கமுடியாது. ஆகையால் நான் உங்களைப்போல் மூர்க்கனல்ல. என் சரீரம், ப்ராணன், அந்தக்கரணம், ஆத்மா இவைகளின் குணகர்ம ஸ்வபாவங்களை விருத்தியடையச் செய்யும் இச்சாதனத்தை வீணாக்கிக்கொண்டு மனித ஜன்மத்தின் பலனை வீணாக்கிக்கொள்ளமாட்டேன். சகல ஆஸ்ரமங்களின் மூலமும், நற்காரியங்களிலும் நற்காரியமும், சகலத்திற்கும் முக்கிய காரணமாகிய இம்மறைமாணவத்தைவிட்டு பெரிய துக்க சாகரத்தில் நான் மூழ்கமாட்டேன். மறைமாணவத்தால் கலையும் ரோகரகிதமும் உண்டாகின்றது. இதனால் மூர்க்கர்களாகிய உங்களின் சொல்லை நான் கேட்கமாட்டேன்" என்று சொல்லவேண்டும். (3) எவன் 44

வருடங்கள்வரையுள்ள மத்யம மறைமாணவத்தை அனுசரிக்கின்றானோ அவன் ப்ராணனின் முழு பலத்தையும் பெறுகின்றான். அவன் சகல துஷ்டகார்யங்களிலிருந்தும் நீங்கி மற்றவர்களின் துஷ்டத்தனங்களையும் நீக்கிக்கொண்டு வருகின்றான். (4) மத்யமமறைமாணவம் முடிக்குமுன் அவனை விவாகம் செய்துகொள்ளும்படி யாராவது சொன்னால் அவர்களைப் பார்த்து மாணவன் "உண்மையான சுகம் மறைமாணவத்தாலேயே உண்டாகிறது. மற்ற விஷய சம்பந்தங்களும் சந்தோஷமானவைகளாக ஆகிறது. இவைகள் மறைமாணவமன்றி மற்றெவ்விதத்திலுமுண்டாகாது. மறைமாணவத்தாலேயே சம்சார சம்பந்தமானவையும், பரமார்த் சம்பந்தமானவையும் உண்மைக் களிப்பும் உண்டாகும். மற்றெதினாலும் முடியாது. இதனாலேயே இவ்வுத்தம மறைமாணவத்தைக் கைவிடலாகாது. வித்வான், பலவான், ஆயுஷ்மான், தர்மாத்மா ஆகி பூர்ண ஆனந்தத்தை அடைவேன். உங்கள் விருப்பப்படி விவாகம் செய்துகொண்டு என்னையும் சமூகத்தாரையும் நாசம் செய்யமாட்டேன்" என்று சொல்லவேண்டும். (5) இனி 48-வயதுவரையான உத்தம மறைமாணவத்தால் பூர்ண வித்தை, பூர்ண பலம், பூர்ண அறிவு, பூர்ண சுபகுண கர்மஸ்வரபம், சூர்யனைப்போல் ப்ரகாசமடைந்து உத்தம புருடார்த்தங்களை யடையலாம். (6) இவ்வுத்தம மறைமாணவனை விவாகம்செய்து கொள்ளும்படி தூண்டுபவர்களைப் பார்த்து மாணவன் "ஏ அறிவிலிகளே! உங்களுடைய தர்க்கத்துடன்கூடின வார்த்தைகளிலிருந்து நான் தூரம் செல்கின்றேன். நான் இவ்வுத்தம மறைமாணவத்தை எப்போதுங் கைவிடேன். இதைமுடித்து

சர்வரோகங்களையும் நசிக்கச்செய்து, ஸர்வவித்யாதி சுபகுண கர்ம ஸ்வபாவத்தானாய் ஆவேன். இவ்வென் சுபப்ரதிக்ஞையை கடவுள் பூர்ணமாக்குவாராக. அறிவிலிகளாகிய உங்களின் குழந்தைகளையும் நான் ஆனந்தசாகரத்தில் மூழ்கச் செய்குவேன்" என்று சொல்லவேண்டும்.

சதஸ்ரோऽவஸ்த: ஶரீரஸ்ய வ்ருத்திர்யௌவனம் ஸம்பூர்ணதா கிஞ்சித் பரிஹாணிச்சேதி தத்ரா ஷோடஶாத் வ்ருத்தி: ஆபஞ்சவிம்ஶதேர்யௌவனம், ஆசத்வாரிம்ஶதஸ் ஸம்பூர்ணதா । தத: கிஞ்சித் பரிஹாணிச்சேதி ॥

பஞ்சவிம்ஶே ததோ வர்ஷே புமான்நாரீ து ஷோடஶே ।
ஸமத்வாகதவீர்யௌ தௌ ஜானீயாத் குஶலோ பிஷக் ॥

தன்வந்திரீயனர் செய்த ஸுஶ்ருதக்கிரந்தத்தின் ப்ரமாணமாகும்.

இம்மனித உடலுக்கு நான்கு அவஸ்த்தைகளுண்டு— வ்ருத்தி, யௌவனம், ஸம்பூர்ணம், கிஞ்சித் பரிஹாணி என்பவைகளாகும். 16 வயதிலிருந்து 25 வயதுவரை வ்ருத்தியவஸ்தையாகும். எவன் இந்த அவஸ்த்தையில் வீர்யாதிகளை நாசம் செய்வானோ அவன் கோடாரியால் வெட்டப்பட்ட மரத்தைப்போன்று தன் சகலத்தையும் நாசமாக்கிக் கொண்டவனாய் பச்சாதாபம் அடைவான். அவன் கையால் எந்தக் காரியமும் செய்யமுடியாது. இனி 25ல் இருந்து 40 வயது வரையில் யௌவன அவஸ்த்தையாகும். எவன் இதை சரியாக பாதுகாக்கவில்லையோ அவன் தன் பாக்கியங்களைப் பாழாக்கிக்கொண்டவனாகின்றான். இனி 40வது வயதில் பூர்ண

அவஸ்தையாகிறது. எவன் இதில் அக்னி விரதத்தையும் கற்பனிலை கண்டபின் மறைமாணவத்தையும் அனுஷ்டிக்கவில்லையோ அவன் தான் அடைந்த பலன்களை கொஞ்சங் கொஞ்சமாக இழந்து விடுகின்றான். பிறகு 40 வயதுக்கு மேல் தாதுக்கள் சிறிதுசிறிதாக தன்பலத்தை இழக்க ஆரம்பிக்கின்றன. இக்காலத்திலே தன் வீர்யத்தை அதிகமாக வீணாக்குபவன் ராஜப்பிளவை, கிரந்தி முதலிய கொடியவியாதிகளுக்காளாகின்றான். இந்நான்கு அவஸ்தைகளையும் நன்கு பரிபாலிப்பவன் சதா ஆனந்தம் பொருந்தியவனாய் உலகத்திற்கும் ஆனந்தத்தை யளிக்கின்றான்.

ஆனால் புருடர்களுக்கும் பெண்களுக்கும் இவ்வவஸ்தைகள் ஒரேகாலத்திலுண்டாவதில்லை. ஆனால் புருடனுக்கு 25 வயதில் ஏற்படும் சாமர்த்யம் பெண்களுக்கு 16 வயதில் உண்டாகிறது. ஆகையால் சீக்கிரத்தில் விவாகம் செய்யவேண்டுவோர் குறைந்தது ஆணுக்கு 25 வயதும், பெண்ணுக்கு 16 வயதுமான பின்பே செய்யவேண்டும். ஆனால் இது அதம விவாகமாகும். 17 வயது பெண், 30 வயது புருடன், 18 வயது பெண் 36 வயது புருடன், 19 வயது பெண் 38 வயது புருடன் இவர்களுக்கு மணம்செய்தல் மத்யம விவாகமாகும். 20, 21, 22, 24 வயது பெண்களுக்கும், 40, 42, 46, 48 வயது புருடனுக்கும் மணம்செய்தல் உத்தம விவாகமாகும். ஏ மறைமாணவா! சம்சாரத்திற்கு உபகாரம் செய்யவேண்டுமெனவும், உன்பந்து ஜனங்களுக்கு உதவி புரியவேண்டுமெனவும் நீ விரும்பினால் முன் சொன்ன விதிகளை நீ கவனித்து நடக்கவேண்டும்.

ஸ்ரோத்ரம் த்வக் சக்ஷுஷீ ஜிஹ்வா நாஸிகா சைவ பஞ்சமீ । பாயூபஸ்தம் ஹஸ்தபாதம் வாக்சைவ தசமீ ஸ்ம்ருதா ॥ 1 ॥

புத்தீந்த்ரியாணி பஞ்சைஷாம் ஸ்ரோத்ராதீன்யனு பூர்வச: । கர்மேந்த்ரியாணி பஞ்சைஷாம் பாய்வாதீனி ப்ரசக்ஷதே ॥ 2 ॥

ஏகாதசம் மனோக்ஞேயம் ஸ்வகுணேனோ பயாத்மகம் । யஸ்மின் ஜிதே ஜிதாவேதௌ பவத: பஞ்சகௌ கணௌ ॥ 3 ॥

இந்த்ரியாணாம் விசரதாம் விஷயேஷ்வபகாரிஷு । ஸம்யமே யத்னமாதிஷ்டேத் வித்வான் யந்தேவ வாஜினாம் ॥ 4 ॥

இந்த்ரியாணாம் ப்ரஸங்கேன தோஷம்ருச்சத்ய ஸம்சயம் । ஸம்நியம்ய துதான்யேவ தத: ஸித்திம் நியச்சதி ॥ 5 ॥

வேதாஸ்த்யாகச்ச யக்ஞாச்ச நியமாச்ச தபாம்ஸி ச । ந விப்ரதுஷ்ட பாவஸ்ய ஸித்திம் கச்சந்தி கர்ஹிசித் ॥ 6 ॥

வசே க்ருத்வேந்த்ரியக்ராமம் ஸம்யம்ய ச மனஸ்ததா । ஸர்வான் ஸம்ஸாதயே தர்த்தான க்ஷிண்வன் யோகதஸ் தனும் ॥ 7 ॥

யமான் ஸேவேத ஸததம் ந நியமான் கேவலான் புத: । யமான் பதத்யகுர்வாணோ நியமான் கேவலான் பஜன் ॥8॥

அபிவாதன சீலஸ்ய நித்யம் வ்ருத்தோப ஸேவின: । சத்வாரி தஸ்ய வர்த்தந்தே ஆயுர்வித்யா யசோபலம் ॥ 9 ॥

அக்ஞோ பவதிவை பால: பிதாபவதி மந்த்ரத: । அக்ஞாம் ஹி பாலமித்யாஹு: பிதேத்யேவ து மந்த்ரதம் ॥ 10 ॥

ந ஹாயனைர் ந பலிதைர் ந வித்தேன ந பந்துபி: । ருஷயச்சக்ரிரே தர்மம் யோऽனசான: ஸ நோ மஹான் ॥ 11 ॥

நதேனவ்ருத்தோ பவதியேனாஸ்ய பலிதம் சிர:। யோவை யுவாப்யதீயானஸ்தம் தேவா ஸ்தவிரம் விது: ॥ 12 ॥

யதா காஷ்டமயோ ஹஸ்தி யதா சர்ம மயோ ம்ருக: । யச்ச விப்ரோऽனதீயானஸ்த்ர யஸ்தே நாம பிப்ரதி ॥ 13 ॥

ஸம்மானாத் ப்ராஹ்மணோ நித்யமுத்விஜேத விஷாதிவ । அம்ருதஸ்யேவ சாகாங்க்ஷேத் அவமானஸ்ய ஸர்வதா ॥ 14 ॥

வேதமேவ ஸதாப்யஸ்யேத் தபஸ்தப்ஸ்யன் த்விஜோத்தம: । வேதாப்யாஸோ ஹி விப்ரஸ்ய தப: பரமிஹோச்யதே ॥ 15 ॥

யோऽனதீத்ய த்விஜோ வேதமன்யத்ர குருதே ஸ்ரமம் । ஸ ஜீவன்னேவ சூத்ரத்வமாசு கச்சதி ஸான்வய: ॥ 16 ॥

யதா கனன் கனித்ரேண நரோ வார்யதி கச்சதி । ததா குருகதாம் வித்யாம் சுஸ்ருஷுரதி கச்சதி ॥ 17 ॥

ஸ்ரத்ததான: சுபாம் வித்யாமாததீதாவராதபி । அன்த்யாதபி பரம் தர்மம் ஸ்த்ரீ ரத்னம் துஷ்குலாதபி ॥ 18 ॥

விஷாதப்யம்ருதம் க்ராஹ்யம் பாலாதபி ஸுபாஷிதம் । விவிதானி ச சில்பானி ஸமாதேயானி ஸர்வத: ॥ 19 ॥

(மனு-2வது அத்யா—90—92,88,93,87,100,121,153,154, 156,157,162,166,168,218,238—240)

அர்த்தம்—: காது, தோல், கண், நாக்கு, மூக்கு, குதம் (மலத்வாரம்), குய்யம் (மூத்திரத்வாரம்), கை, பாதம், வாக்கு, ஆகிய 10 இந்திரியங்கள் சரீரத்திலிருக்கின்றன (1) இவைகளில் கண்முதல் 5ம் ஞானேந்திரியங்கள், குதம் முதலிய 5ம் கர்மேந்திரியங்கள் என்று சொல்லப்படும் (2) 11வது இந்திரியம் மனம். இம்மனம் தன்நினைவு ஆதி குணங்களால் இரண்டு விதமான இந்திரியங்களுடனும் சம்பந்தப்பட்டிருக்கிறது. இம்மனம் உயிருள்ளவரை இந்திரியங்களும் உயிருடையதாகின்றது (3) சாரதியானவன் குதிரையைத் தன்னிச்சையின்படி நடத்துவதைப்போல மனதையும் புலன்களின் இஷ்டப்படி செல்லவிடாமல் அறிவாளி தன்னிச்சையின்படி செலுத்துகின்றான் (4) இந்திரியங்களின் வழியாக மனதைச்செலுத்தும் மறைமாணவன் தோஷமுடையவனாவன். மறுபடி மனதைத் தன் வழியாக அடக்கிய பின்பே அவன் சித்தியை அடைகின்றான். (5) இந்திரியவச மில்லாதவனுக்கு வேதக் கல்வி, சன்யாசம், யாகம்செய்தல், நியமம் அனுசரித்தல், தபம் (நிந்தை, துதி, ஹானி, லாபம், ஆதிகளைச்சகித்தல்) செய்தல் ஆதி காரியங்கள் எப்போதும் சித்தியாவதில்லை. இதனால் மறைமாணவன் தன்விதிகளைச் சரிவர பாலித்து சாந்தியைப்பெறுவானாக. (6) மறைமாணவன் தன் முழு இந்திரியங்களையும் வசப்படுத்தி, மனதை ஆத்மாவுடன் சேர்த்து, யோகாப்யாசத்தால் சரீரத்திற்குச்சிறிது கஷ்டமளித்துக்கொண்டே தன் சகலப்ரயோஜனங்களையும் சித்தி செய்து கொள்வானாக. (7) அறிவாளியான மறைமாணவன் நித்யமும் இயமத்தைச்சேவிக்கவும். நியமத்தைச்சேவிக்க

வேண்டாம் * ஏனென்றால் இயமத்தைச்செய்யாமல் கேவலம் நியமத்தை மாத்திரம் செய்துகொண்டு வருவதாலும் தன் சித்திகளில் இருந்து நழுவிவிட ஹேதுவாகும். ஆதலால் இயமத்தைச் செய்தபின்பே நியமத்தைச்செய்து வரவேண்டும். (8) வந்தனைபுரியும் ஸ்வபாவத்தன், கலைகற்றல் முதலிய காலங்களில் பெரியோர்களை நிதமும் சேவித்து வருபவருக்கு காரியசித்தி, கீர்த்தி, படிப்பு, பலம் இவைகள் தானாக உண்டாகும். மறைமாணவன் நிதமும் தாய், தகப்பன், அதிதி, கற்றோர்களுக்கு நிதமும் வந்தனை புரிந்துவரவேண்டும். (9) சிறிதும் படிக்காதவன் பாலனாகும். சகல விசாரணைப் படிப்புக்கற்றவன் சகலருக்கும் தகப்பனைப்போலாவான். இதனால் மறைமாணவத்தை சரிவர பரிபாலித்து சகலருக்குந் தகப்பன் தன்மையை மாணவன் பெறவேண்டும். (10) வயதானவர்களையும், நரைத்தவர்களையும், தோல்கள் சுருக்கம் விழுந்தவர்களையும், பணம்படைத்தவர்களையும், பந்துஜனங்களையும் அறிவாளிகள் பெரியோரெனச்சொல்வதில்லை. ஆனால் தர்மத்தை நிச்சயிப்பதாக வாதம் புரிந்து ஜெயிப்பவர்களையே பெரியோர்களென்று மதிக்கிறார்கள். அதனால் மறைமாணவத்தை அனுஷ்டித்து தர்மநிர்ணயம் பெறவேண்டியது அவசியமாகும். (11) சிரம் மறந்த (மயக்க) நிலையடைந்ததாலோ; தலைமயிர் உதிர்ந்துவிட்டதாலோ ஒருவன் பெரியவனாகமாட்டான். ஆனால் குழந்தையாயினும் வித்வத்தன்மை உடையவனே பெரியவனாகும். ஆதலால் மறைமாணவத்தை நன்கு முடித்துப் பெரியவனாக

---

* அஹிம்ஸை, சத்யம், அஸ்தேயம், (திருடாமை), வீர்யத்தைக் காப்பாற்றல், புணராமை ஐந்தும் இயமம். சுத்தி, களிப்பு, தபம், வேதம்படித்தல், ஈஸ்வரனைத்துதித்தல் ஐந்தும் நியமம்.

வேண்டும். (12) மரத்தால் செய்த யானையையும், தோலால் செய்த மரத்தையும் கல்வியில்லாத விப்ரன் ஒப்பாவான். ஏனென்றால் இம்மூன்றும் பெயரை மாத்திரம் தரித்திருக்கின்றதே யன்றி அதன் குணம் சிறிதும் கிடையாது. ஆகையால் மறைமாணவத்தை சரியாக அனுஷ்டித்து உண்மை வித்வானாக வேண்டும். (13) ப்ராப்மணன் மரியாதையை விஷமாகவும், அவமானத்தை அமிர்தமாகவும் மதிக்கவேண்டும். என்றால் மறைமாணவ ஆஸ்ரமத்தில் பெரியதைநாடாமல் பிக்ஷையிலேயே வாழவேண்டும். (14) ப்ராம்மணர்கள், வித்வான்கள் சதா வேதங்கற்றலையே பெரிய தவமாகச் செய்துவரவேண்டும். ஏனென்றால் வேதங்கற்றலையே பெரியதவமாகச் சொல்லியிருக்கிறது. இதனால் மறைமாணவத்தை நன்கு பரிபாலிக்க வேண்டும். (15) வேதத்தைப்படிக்காமல் மற்ற சாஸ்த்திரங்களுக்காக கஷ்டப்படும் ப்ராம்மண, க்ஷத்ரிய, வைஸ்யர்கள் வம்சத்துடனே சூத்திரத்தன்மையை அடைகின்றார்கள். இதனால் மறைமாணவனாகி வேதத்தைக் கட்டாயம் படித்து வரவேண்டும். (16) பூமியைத் தோண்டிக்கொண்டே செல்பவன் தண்ணீரை யடைவதுபோல, குருமார்களின் சேவையை விடாமல் செய்துகொண்டு போபவன் அவர்களின் வித்தையை அடைகின்றான். இதனால் மறைமாணவத்தை பரிபாலித்து குருமார்களுக்கு ஊழியம் செய்துகொண்டு அவர்களின் வார்த்தைப்படி நடந்து வேதங்களைக் கற்கவேண்டும். (17) தன்னிலும் தாழ்ந்தவனிடத்திலும் வித்தையை கிரகிக்கவேண்டும். நீசஜாதிகளிலிருந்தும் உத்தம வித்தையை கிரகிக்க வேண்டும். நிந்திதமான குலப்பெண்களிலிருந்தும் உத்தமப் பெண்ணை கிரகிக்கவேண்டும். இதுவே நீதியாகும். இதனால்

உத்தம வித்தைகற்று மறைமாணவம் முடித்தபின் ஓர் உத்தமப்பெண்ணை மணஞ்செய்து கொள்ளவேண்டும். (18) இதனால் விஷத்திலிருந்தும் அமிர்தத்தை கிரகிக்கவேண்டும். குழந்தையினிடமிருந்தும் நல்ல வார்த்தைகளை கிரகிக்கவேண்டும். பலவிதமான சில்பகாரியங்களை எல்லோரிடத்திலிருந்தும் கிரகிக்கவேண்டும். இதனால் மறைமாணவ சம்பன்னனாய் தேச தேசாந்திரங்களில் சுற்றி உத்தம குணங்களைக் கற்றுக் கொள்ளவேண்டும். (19)

யான்யனவத்யானி கர்மாணி தானி ஸேவிதவ்யானி। நோ இதராணி। யான்யஸ்மாகம் ஸுசரிதானி தானித்வயோபாஸ்யானி। நோ இதராணி। ஏகே சாஸ்மச்ரேயாம் ஸோ ப்ராஹ்மணாஃ। தேஷாம் த்வயாऽऽஸனேன ப்ரஸ்வ ஸிதவ்யம்॥
(தைத்திரீயாரண்ய. ப்ரபா 7 அனு 11)

ருதம் தபஃ ஸத்தியம்தபஃ ஸ்ருதம்தபஃ ஶாந்தம்தபோ தமஸ்தபஶ்ஶமஸ்தபோ தானம் தபோ யக்ஞம்தபோ ப்ரஹ்ம பூர்புவஃ ஸுவர்ப்ரஹ்மை தது பாஸ்வைதத்தபஃ ॥ 2 ॥
(தைத்ரீயாரண்யகம்-ப்ரபாட 10 ; அனு 8)

அர்த்தம் :—ஹே மாணவர்: நிந்தை இல்லாத பாப மில்லாத, அன்யாய அதர்ம மில்லாத காரியங்களையே நீ செய்ய வேண்டும். தர்மமில்லாத காரியங்களை ஒருபொழுதும் செய்யக் கூடாது. ஏ மாணவர்! உன் தாய், தகப்பன், ஆசாரியன் முதலியர்களுக்கு நன்மையை அளிக்கும்படியான தர்மமான காரியங்களையே நீ செய்வாயாக. சம்பத்தினாலே வசிக்கும்படியான வித்வான்களின் சேர்க்கையைக் கொண்டு அவர்கள் அருகில் அமர்ந்து அவர்களிடம் நம்பிக்கையை செலுத்தி வா. (1) ஏ மாணவர்! யதார்த்தத்தைக் கவனித்தல், சத்யத்தை மதித்தல், சத்

தியம் பேசுதல், வேதாதி சத்திய சாஸ்த்திரங்களைக் கேட்டல் அதர்மம் மனதில் நுழையாதபடி செய்துக்கொள்ளல், இந்திரியங்களைக் கெட்டநடத்தையில் இருந்து நன்னடத்தையில் செலுத்துதல், க்ரோதாதிகளை நீக்கி அமைதி அடைதல், வித்தை ஆதி சுபகுணங்களை தானமீதல், வேள்விகளை செய்தல், அறிவாளிகளின் நட்பைக் கொள்ளல், பூமி ஆகாயம் சூரியன் ஆதி சகலபொருள்களின் அறிவைப்பெறல், யோகாப்யாசம், ப்ராணாயாம், ஓர் கடவுளின் வணக்கம் செய்தல் இவைகளே தவம் என்று சொல்லப்படும் (2).

ருதஞ்ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச। ஸத்யஞ்ச ஸ்வாத்யாய
ப்ரவசனே ச। தபஸ்ச ஸ்வா—:। தமஸ்ச ஸ்வா—:। ஶமஸ்ச
ஸ்வா—:। அக்னயஸ்ச ஸ்வா—:। அக்னிஹோத்ரஞ்ச
ஸ்வா—:। ஸத்யமிதி ஸத்யவசா ராதீதரஃ। தப இதி தபோ
நித்யஃ பௌருஶிஷ்டிஃ। ஸ்வாத்யாயப்ரவசனே ஏவேதி
நாகோ மௌத்கல்யஃ। தத்தி தபஸ் தத்தி தபஃ।

(தைத்ரீ 7—9.)

மறைமாணவா! நீ சத்தியத்தையே படித்து படிப்பித்து வருவாயாக. சத்தியோபதேசம் செய்வதை ஒருபொழுதும் மறக்காதே. சந்தோஷம் துக்கம் ஆதிகளை விட்டு ப்ராணாயாமம் யோகாப்பியாசாதிகளை படித்து படிப்பித்துக் கொண்டு வா. இந்திரியங்களை கெட்டகாரியங்களினின்றும் விலக்கு. நல்ல காரியங்களில் செலுத்தி வித்தையை அறிந்தும் அறிவித்துக் கொண்டும் இரு. உன் அந்தக்கரணங்களையும் ஆத்மாவையும் அன்யாயத்திலிருந்து விலக்கி நியாயத்தில் செலுத்தி செல்வித்துக்கொண்டுவா. அக்னிவித்தையைப் படித்து படிப்பித்துவா.

அக்னிஹோத்திரத்தைச் செய்து செய்வித்துக்கொண்டுவா. நியாயா சாரணத்தின் கஷ்டத்தை சகித்து சத்தியத்தையே கொண்டொழுகுதல் தவமாகும். தர்மத்தைக் கற்று கற்பித்து சத்தியோபதேசம் செய்தல் தவமாகும் இது மௌத்கல்ய ஆசாரியரின் மதமாகும். அன்னிய ஆசாரியர்களின் மதமும் இவ்வாறேதான். (3) இம்மாதிரியான உபதேசங்களை மூன்று தினங்களுக்குள் ஆசாரியனாவது தகப்பனாவது செய்ய வேண்டும்.

இதன் பிறகு ஆண் குழந்தையாயின் புருஷர் பாடசாலைக்கும் பெண் குழந்தையாயின் பெண்கள் பாடசாலைக்கும் அனுப்பிவிடவேண்டும். இதுவரை வீட்டில் எழுத்துச்சரிப்புக் கற்றுக்கொடுக்கப்படவில்லையாயின் உபாத்திமார்கள் பாணினி முனிவரால் இயற்றிய வர்ணோச்சாரா ஶிக்ஷையை 1 மாதத்திர்க்குள் கற்பிக்கவேண்டும். பிறகு பாணினி முனி செய்த அஷ்டாத்தியாயியை பதப்பிரிவு அர்த்தத்துடன் 8 மாதம் அல்லது 1 வருஷத்திர்க்குள்ளும், தாதுபாடம் 10 லஹாரங்களின் ரூபங்கள் 10 ப்ரக்கிரியை இவைகளை கற்பிக்கவேண்டும். பிறகு பாணினி முனிவர் செய்த லிங்கானு சாஸனம் உணாதிகண பாடம் அஸ்ட்டாத்தியாயினுள்ள உல், த்ரு ப்ரத்யயம் ஸுபந்தங்கள் இவைகளை 8 மாதங்களுக்குள் கற்பிக்கவேண்டும் பிறகு இரண்டாம்முறை அஸ்ட்டாத்தியாயியின் யதார்த்த உத்திஸமாஸம் ஸுபந்தசமாஸம் உச்ஸர்க்கம் அபவாதம் இவைகளை அன்வய பூர்வமாக கற்பிக்கவேண்டும். இத்துடனேயே சமஸ்கிருத பாஷையையும் கற்பித்துக்கொண்டு 8 மாதங்களுக்குள் இதை முழுவதையும் முடித்து விடவேண்டும். பிறகு பதஞ்சலி முனிவர் எழுதிய வர்ணோச்சாரஶிக்ஷா அஷ்டாத்தி

யாயி தாதுபாடம் கணபாடம் உணாதிகணம் லிங்காநு சாஸனம் இவைகளின் வியாக்கியானம் அடங்கிய மஹா பாஷ்யத்தை 1½ வருஷத்தில் கற்பிக்கவேண்டும். இவ்வாறு வ்யாகரண சாஸ்த்திரம் முழுவதையும் 3 வருஷம் 5 மாதம் அல்லது 4 வருஷங்களுக்குள்ளாக கற்பித்து விடவேண்டும். பிறகு யாஸ்க முனிவர் செய்த நிகண்டு நிருக்த்தம் காத்தியாயன முனிவர் செய்த கோசம் இவைகளை 1½ வருஷத்திர்க்குள்ளும் அவ்விய யாத்தம் ஆப்த்த முனிவர் செய்த வாக்கிய வாசக ரூபம் யவ்கிக யோக ரூடி சத்துங்களை கற்பிக்கவேண்டும். பிறகு பிங்களாசாரியர் செய்த பிங்கள சூத்திரம் சந்தோக்கிரந்தம் இவைகளை பாஷ்யத்துடன் மூன்று மாதங்களிலும், அடுத்த 3 மாதங்களில் ஸ்வாதி ரசனுவித்தையை கற்பிக்கவும். பிறகு யாஸ்கமுனி செய்த காவ்யாலங்கார சூத்திரம் வாச்சியாயன முனி செய்த ஆகாங்க்ஷா யோக்கியதா ஆஸத்தி தாத்பர்யம் இவைகளை அன்வய சகிதத்துடன் கற்பித்து அத்துடனேயே மனுஸ்மிருதி விதுர நீதி வால்மீகி ராமாயணத்தின் 10வது ஸர்கம் இவைகளை எல்லாம் 1 வருஷத்திர்க்குள் கற்பிக்கவும். அடுத்த 1 வருடத்தில் கணித வித்தியா (பீஜகணிதம் ரேகாகணிதம் அங்ககணிதம்) இவைகளை உடைய சூர்ய சித்தாந்தத்தை கற்பிக்கவும். நிகண்டுவிலிருந்து ஜோதிஷம். வரை உள்ள வேதாங்கங்களை 4 வருஷத்திற்குள் கற்பிக்கவும். பிறகு பூர்வ மீமாம்ஸை, வைஸேஷிகம், நியாயம், யோகம், ஸாங்க்யம், வேதாந்தம், ஆகிய தர்ஸனங்களையும் அத்துடனேயே ஈஸ, கேந, கட, ப்ரஸ்ன, முண்டக, மாண்டூக்கிய ஐத்ரேய, தைத்திரிய, சாந்தோக்கிய ஆகிய 10 உபநிஷதங்களையும் 2 வருஷத்துக்குள் கற்பிக்கவும். பிறகு நான்கு பிராம-

மணங்களையும் கல்ப சூத்திரங்களையும் ரிக்வேதத்தையும் 3 வருடங்களுக்குள்ளும் யஜுர்வேதத்தை அதைச்சேர்ந்த ப்ராம்மணங்களுடன் 2 வருஷத்திலும். ஸாமவேதத்தை ப்ராமணங்களுடன் 2 வருஷத்திலும். அதர்வேதத்தை ப்ராமணங்களுடன் 2 வருஷத்திலும் ஆக 9 வருடங்களில் 4 வேதங்களையும் கற்பிக்கவும். பிறகு ரிக்வேதத்தின் உபவேதமாகிய ஆயுர்வேதத்தை சகல உதாரணங்களுடன் கற்பிக்கவும் பிறகு யஜுர்வேதத்தின் உபவேதமாகிய தனுர்வேதத்தை மூன்று வருஷத்திலும், சாமவேதத்தின் உபவேதமாகிய காந்தர்வ வேதத்தை 3 வருஷத்திலும், அதர்வவேதத்தின் உபவேதமாகிய அர்த்தவேதத்தை 6 வருஷத்திலும் ஆக மொத்தம் அர்த்தவேதம்வரை உள்ள 14 வித்தைகளையும் 31 வருஷங்களில் கற்றுக்கொடுத்து மாணவர்களை சம்பூர்ண வித்வான்களாக்க வேண்டும்.

கலை துவக்கற்சடங்கு முற்றிற்று.

இல்நுழைச்சடங்கு (ஸமாவர்த்தனம்.)

மறைமாணவத்தின் மூலமாய் சாங்கோபாங்கமாக வேதத்தையும்,“ பதார்த்த விக்ஞானங்களையும் கற்றுக்கொண்டபின் விவாகம் புரிந்து இல்லற தர்மத்தை மேற்கொள்வதற்காக குரு குலத்திலிருந்து மாணவனை வீட்டிற்கழைத்துச் செல்லும் சடங்கிற்கு “இல்நுழைச்சடங்கு” எனப்பெயராகும்.

இதற்கு ப்ரமாணம்—:

வேதஸமாப்திம் வாசயீத. (1) கல்யாணைஃ ஸஹ ஸம்ப்ரயோக: (2).

ஸ்னாதகாயோபஸ்திதாய । ராக்ஞே ச । ஆசார்ய ஶ்வஶுர பித்ருவ்ய மாதுலானாம் ச ததனி மத்வாணீய । ஸர்பிர்வா மத்வலாபே । விஷ்டரஃ பாத்யமர்க்ய மாசமனீயம் மதுபர்கஃ(3)
(அஸ்வாலன-1.)

இதேமாதிரி பாரஸ்கரத்திலும்—:

வேதம் ஸமாப்ய ஸ்னாயாத் । ப்ரஹ்மசர்யம் வாஷ்டசத்வாரிம் ஶகம். (4) த்ரயஏவ ஸ்னாதகா பவந்தி । வித்யாஸ்னாதகோ வ்ரதஸ்னாதகோ வித்யாவ்ரதஸ்னாதக ஶ்சேதி (5).

வேதங்களை முடித்தபின் “இல்நுழைச்சடங்கு” செய். சதா புண்ய புருடர்களின் சபையில் இரு. அரசன், ஆசார்யன், மாமன், மாமி முதலியவர்கள் வந்தபோது ஸ்னானம் என்றால் வித்தையையும் மறைமாணவத்தையும் முடித்து மறைமாணவன் வீட்டிற்கு வந்தபோது அவனுக்கு பாதம் கழுவநீரும், (பாத்யம்) முகம் கழுவநீரும் (அர்க்யம்) ஆசமனத்திற்காக நீருமளித்து நல்லாசனத்தில் உட்காரவைத்து தயிரில் தேன் அல்லது நெய் கலந்து ஓர் பாத்திரத்தில் வைத்தல் (மதுபர்கம்) ஆகும். பிறகு வித்தியாஸ்னானம், வ்ரதஸ்னானம் வித்யாவ்ரதஸ்னானம் *எனும் மூன்றுவித ஸ்னானங்களுண்டு. இக்காரணத்

* மறைமாணவத்தை முடிக்காது கேவலம் வித்தையை மாத்திரம் முடித்தமாணவன் வித்யாஸ்னானத்தையும், மறைமாணவத்தை மாத்திரம் முடித்து வித்தையை முடிக்காதவன் வ்ரதஸ்னானத்தையும், மறைமாணவம் வித்தை யிரண்டையும் முடித்தவன் வித்யாவ்ரதஸ்னானத்தையும் செய்யவேண்டும்.

தால் வேதங்களை முடித்து 48 வருடமறைமாணவத்தை முடித்து மறைமாணவன் வித்யாவ்ரத ஸ்னானத்தைச்செய்ய வேண்டும்.

தானிகல்பத் ப்ரஹ்மசாரீ ஸலிலஸ்ய ப்ருஷ்டே தபோऽதிஷ்டத்தப்யமானஃ ஸமுத்ரே । ஸ ஸ்னாதோ பப்ரஃ பிங்கலஃ ப்ருதிவ்யாம் பஹு ரோசதே ॥

பொருள்—: சமுத்திரத்திற்குச் சமமான பெரிய உத்தம மறைமாணவத்தில் வசித்து, பெரிய தவத்தைச் செய்துகொண்டு வேதங்கற்றல், வீர்யங்காப்பாற்றல், ஆசாரியரிடமன்புசெலுத்தல் முதலிய நன்னடைத்தைகளைப் பூராவும் செய்து, முன் சொன்ன விதிப்படி ஸ்னானம் செய்து, சுந்தர தர்மயுக்தனாய் குண கர்ம ஸ்வபாவங்களால் ப்ரகாசிக்கும் மாணவனே பூஜைக்குரியவனாகும்.

இதற்கு சமயம் 156 ம் பக்கங்களில் வரைந்துள்ளதைப் பார்க்கவும். ஆனால் வித்தை, பொருள்களின் அறிவு, மறைமாணவம் இவைகள் முழுவதையும் முடித்தபின்பே மாணவர்களும் மாணவிகளும் விவாக இச்சையைக் கொள்ளவேண்டும். விவாஹத்தின் ஸ்னானங்கள் இரண்டாகும். 1 ஆசார்யன் மனையில் குளிப்பது. 2 தன் வீட்டில் குளிப்பது. இதற்குப்பின் கீழ்வரும் விதிகளைச் செய்தபின் விவாகச் சடங்கு விதிகளைச் செய்யவேண்டும்.

விதி—: இல்நுழைச் சடங்கியற்ற வேண்டிய தினத்திற்கு முன்தினம் ஆசார்யன் வீட்டிலே வேள்விக்கு வேண்டியவைகளையெல்லாம் தயார்செய்து வைத்திருந்து, ஈஸ்வரோ

பாசனே, அருள்கோறல், அமைதிவேண்டல், நெருப்பு மூட்டல், சமிதையிடல், நீர் தெளித்தல் முதலியவைகளை விதிப்படி செய்து, ஆசார்யன் கிழக்கு முகத்தனாய் அமர்ந்து "ஆகாரவாஜ்ய பாகா குதிகள்" 4ன்கும். "வ்யாஹ்ருத் யாகுதிகள்" 4ன்கும், "அஷ்டாஜ்யா குதிகள்" 8ம், "ஸ்விஷ்டக்ருத்யாகுதி" 1ம், "ப்ரஜாபத்யாகுதி" 1 மாக. 18 ஆகுதிகளீந்தபின் மறைமாணவன் 141ம் பக்கத்துள்ள (ஓம் அக்னே ஸுஸ்ரவ:) இம்மந்திரத்தால் தடவின் நெருப்பை ஒன்று சேர்த்து 142ம் பக்கத்துள்ள (ஓம் அக்னயே ஸமித) எனும் மந்திரத்தால் மூன்று சமிதைகளையிட்டு, 143ம் பக்கத்துள்ள (ஓம் தனூபா) எனும் மந்திரங்களால் நீர் தொட்டு நெருப்பில் காய்ச்சி முகத்தைத் தொட்டு 143ம் பக்கத்துள்ள (ஓம் வாங்ம) எனும் மந்திரங்களால் அவயவங்களை ஸ்பர்சித்து, முன்பே தயாரித்து வைத்துள்ள நீர் பாத்திரங்களிலிருந்து—:

ஓம்யே அப்ஸ்வந்தாக்னய: ப்ரவிஷ்டா கோஹ்ய உப கோஹ்யோ மயூகா மனோஹாஸ்கலோ விருஜஸ் தனூதூஷரிந்த்ரியஹா தான் விஜஹாமி யோ ரோசனஸ்தமிஹ க்ருஹ்ணாமி ॥
(பாரஸ் 2-6-9.)

(பொ-ள்) ஜலத்தில் கலந்துள்ள, சரீரத்திற்குக் கஷ்டத்தையளிக்கும், உற்சாகத்தை நாசம்செய்யும், அஜீர்ணம் செய்யும், பலவியாதிகளை உண்டாக்கும், சரீரத்தை தூஷிக்கும் குற்றங்களையுடைய அக்னியை நான் விலக்கி, ஹிதமான அக்னியை நான் கிரகிக்கின்றேன்,

இம்மந்திரம் சொல்லி ஒரு நீர்ப்பாத்திரத்தைக் கைக்கொண்டு அதில் உள்ள நீரை யெடுத்துக்கொண்டு—:

ஓம் தேன மாமபிஷிஞ்சாமி ஸ்ரியை யஸஸே ப்ரஹ்மணே ப்ர்ஹ்மவர்சஸாய ॥
(பாரஸ்-2-6-9.)

(பொ-ள்.) இச்சலத்தால் (முன் சொன்ன அக்னியின் குற்றங்களை நீக்கும் ஜலத்தால்) தனம், கீர்த்தி, வேத வித்தை, மறை மாணவம் இவைகளை யடைவதற்காக நான் ஸ்னானம் செய்கின்றேன்.

இம்மந்திரத்தைச் சொல்லி அந்நீரால் ஸ்னானம் செய்ய வேண்டும். பிறகு (ஓம் யே அப்ஸ்வந்த) எனும் முன் மந்திரத்தைச் சொல்லி மற்றோர் நீர் பாத்திரத்திலுள்ள நீரைக் கொண்டு —:

ஓம் யேன ஸ்ரியமக்ருணுதாம் யேனாவம்ருஸதாம் ஸுராம் । யேனாக்ஷ்யவப்ய ஷிஞ்சதாம் யத்வாம் ததஸ்விநா யஸ: ॥
(பாரஸ்-2-6-10.)

அஸ்வினி தேவர்களை சுந்தரர்களாக்கி புகழ்ச்சியையும், சுகத்தையும் அளித்ததான இந்நீரால் நான் ஸ்னானம் செய்கிறேன்.

இம்மந்திரம் சொல்லி ஸ்னானம் செய்யவேண்டும். மறுபடி (ஓம் யே அப்ஸ்வந்த) எனும் மந்திரத்தால் மறுபடி ஒன்று நீர் பாத்திரங்களை யெடுத்து 133 ம் பக்கத்துள்ள (ஆபோ ஹிஷ்டா) எனும் மூன்று மந்திரங்களைச் சொல்லி அந்நீரைக் கொண்டு ஸ்னானம் செய்யவேண்டும். மறுபடியும் மற்ற மூன்று பாத்திரங்களையுமெடுத்து (ஓம் ஆபோஹிஷ்டா) யெனும் மந்திரங்களை மனதில் சொல்லிக்கொண்டு ஸ்னானம் செய்யவேண்டும். பிறகு—:

ஓம் உதுத்தமம் வருண பாஶமஸ்மதவாதமம் வி மத்யமம் ஶ்ரதாய । அதா வயமாதித்ய வ்ரதே தவானுக ஸோ அதிதயே ஸ்யாம ॥ (ருக்-1-24-15.)

ஏ பரம ! எங்களின்மேல், மத்தி, கீழ் ஆகிய மூன்று பந்தங்களையும் அறுத்துவிடு. ஏ ப்ரகாசக பரமாத்மா ! நாங்கள் உன் விரதத்தை அபராதரகிதமாய் பரிபாலிப்போமாக. அதனால் பிளவுபடாச் சுகத்தைப்பெறுவோமாக.

இதைச் சொல்லி மறைமாணவன் தன் மேலாடையையும் தண்டத்தையும் நீக்கவேண்டும். பிறகு மாணவன் சூர்யனெதிரில் நின்று

ஓம் உத்யன் ப்ராஜ ப்ருஷ்ணு ரிந்த்ரோ மருத்பிரஸ்தாத் ப்ராதர்யாவ பிரஸ்தாத் தஶஸனிரஸி தஶஸனிம் மா குர்வாவிதன் மா கமய । உத்யன் ப்ராஜ ப்ருஷ்ணுரிந்த்ரோ மருத் பிரஸ்தாத் திவாயாவ பிரஸ்தாச்சதஸனிரஸி ஶதஸனிம் மாகுர்வாவிதன் மாகமய । உத்யன் ப்ராஜ ப்ருஷ்ணுரிந்த்ரோ மருத் பிரஸ்தாத் ஸாயம்யாவ பிரஸ்தாத் ஸஹஸ்ரஸனிரஸி ஸஹஸ்ரஸனிம் மாகுர்வாவித மாகமய ॥ (பாரஸ-2-6-.)

(பொ-ள்.) ஏ பரமாத்மா ! உதித்துவரும் சூரியனையொத்த சகல ப்ரகாசங்களையும் உன் ப்ரகாசத்தால் மந்தமடையச் செய்கின்றாய். நீ சகல ஐஸ்வர்யவானானதின் காரணத்தால் சகல தேவர்களாலும் சேவிக்கப்படுகின்றாய். அறிவாளிகள் விடியற்காலம் உன்னை சேவித்து நிற்கிறார்கள் உன்னையே சகல திசையிலுள்ளவர்களும் பூஜிக்கின்றார்கள். என்னை சர்வ திசைத்தவர்களுக்கு பூஜிதனுக்கு. அறிவாளியாய் எங்கும் போய் வரும் சுதந்திரவானுக்கு.

இம்மந்திரத்தை ஜபித்து தயிர் அல்லது எண்ணை தேய்த்து தலை மயிர், தாடி, நகம் இவைகளையெல்லாம் சேதித்து விட்டு—:

ஓம் அன்னாத்யாய வ்யூஹத்வம் ஸோமோராஜாயமாகமத் । ஸ மே முகம் ப்ரமார்க்ஷ்யதே யஶஸாச பகேன ச ॥ (பாரஸ்-2-6.)

(பொ-ள்.) ஏ பற்களே ! நீங்கள் சாதத்தையருந்த தயாராகுங்கள். அதற்காக இச்சுத்த ஜலம் வந்திருக்கிறது. இது என் முகத்தைக் கழுவி கீர்த்தி, ஐஸ்வர்ய விருத்திக்குக் காரணமாக்கும்.

இம் மந்திரம் சொல்லி மாணவன் உதும்புமரக் குச்சியால் பல் துலக்கவேண்டும். பிறகு நல்ல வாசனைப் பொடியை உடலில் தேய்த்து நன்னீரால் ஸ்னானம்செய்து, நல்லாடையணிந்து நல்ல சந்தனாதிகளை பூசிக்கொண்டு கண், முகம், நாசிகை நுனிகளில்—:

ஓம் ப்ராணாபானேன மே தர்பய சக்ஷுர்மே தர்பய ஸ்ரோத்ரம் மே தர்பய ॥ (பாரஸ்-2-6.)

ஏ பரமாத்மா ! என் ப்ராணன் அபானங்களை பலமாக்கு, என் கண்களை பலமாக்கு, காதுகளை பலமாக்கு.

இம் மந்திரத்தால் தொட்டு பின் கையில் நீர் கொண்டு தெற்கு முகத்தனாகி—:

ஓம் பிதரঃ ஶுந்தத்வம் ॥ (பாரஸ்-2-6.)

பித்ருக்களுக்குச் சமமாக மதிக்கக்கூடிய ஜலமே! என்னைச் சுத்தி செய்.

இம்மந்திரத்தைச் சொல்லி நீரைக் கீழே விட்டு விட்டு—திரும்பிக்கொண்டு—:

ஓம் ஸ்சக்ஷா அஹமக்ஷீப்யாம் பூயாஸம் ஸ்வர்சா முகேன। ஸ்ஸ்ருத்கர்ணப்யாம் பூயாஸம் ॥ (பாரஸ்-2-6.)

கண்களால் வேகப்பார்வையையும், முகத்தால் வேகக் காந்தியையும், காதுகளால் வேகக் கேள்வியையும் பெறு வேனாக.

இம்மந்திரத்தை ஜபித்து—:

ஓம் பரிதாஸ்யை யஸோதாஸ்யை தீர்காயுத்வாய ஜரதஷ்டிரஸ்மி। ஸதம்ச ஜீவாமி ஸரதః புரூசீ ராயஸ்போஷமபிஸம்வ்யயிஷ்யே ॥ (பாரஸ்-2-6.)

என் சரீர ரூபதனத்தின் போஷகமாகிய இவ்வாடையை உடலை ரக்ஷிப்பதற்காகவும், கீர்த்தி பெறுவதற்காகவும், தீர்காயுளை அடைவதற்காகவு மணிகின்றேன். நான் புத்ரபௌத்ராதிகளுடன் நூறு வருடங்கள் வரை ஜீவித்திருப்பேனாகவும்.

இம் மந்திரத்தைச் சொல்லி நல்லாடைகளை யணிந்து—:

ஓம் யஸா மா த்யாவாப்ருதிவீ யஸஸேந்த்ரா ப்ருஹஸ்பதீ। யஸோபதஸ் ச மா விந்தத்யஸோமா ப்ரதி பத்யதாம் ॥ (பாரஸ்-2-6.)

த்விலோகமும், பூமியும், இந்திரன், ப்ருஹஸ்பதியும் எனக்கு கீர்த்தியை யளிப்பார்களாக. நான் கீர்த்தி ஐஸ்வர்யங்களை அடைந்து அவைகளை உபயோகிப்பேனாகவும்.

இம் மந்திரத்தால் உத்தமமான மேலாடை யணிந்து—:

ஓம் யா ஆஹராஜ்ஜமதக்னி: ஸ்ரத்தாயை மேதாய காமாயேந்த்ரியாய। தா அஹம் ப்ரதிக்ருஹ்ணாமி யஸஸா ச பகேனச ॥

(பாரஸ்-2-6.)

அக்னிஹோத்திர ரக்ஷக புருஷன் சிரத்தை பூர்வமாய் அனுப்பும் புஷ்பங்களை புத்தி ப்ரசன்னத்திற்காகவும், இந்திரியங்களின் திருப்திக்காகவும் நான் யேற்கிறேன் கீர்த்தி ஐஸ்வர்யத்திற்காக நான் இதை அணிகின்றேன்.

இம் மந்திரத்தால் புட்ப மாலையை கையிலெடுத்து—:

ஓம் யத்யஸோऽப்ஸராஸாமிந்த்ரஸ்சகார விபுலம் ப்ருது। தேன ஸங்க்ரதிதா: ஸுமனஸ ஆபத்னாமி யஸோ மயி ॥ (பாரஸ்-2-6.)

கார்ய சித்தியடைந்த புருடர்களுக்கு இந்திரன் எந்த கீர்த்தியை அளித்தானோ அதே கீர்த்தியைப் பெற நானும் இம்மாலைகளை யணிகின்றேன். என்றால் சரியானபடி மறை மாணவத்தை முடித்தவர்களே புஷ்பங்களைத் தரிக்க அதிகாரியாவார்கள்.

இம் மந்திரத்தால் அதை தரித்துக்கொண்டு பிறகு தலைப்பாகை முதலியவைகளையுமணிந்து கையில் குடையையும் பிடித்துக் கொண்டு 136ம் பக்கத்துள்ள (புவரவஸ:) இம் மந்திரத்தால் மற்றவைகளையும் தரித்துக்கொண்டு பிறகு அலங்காரங்களைக் பெடுத்துக்கொண்டு —

ஓம் அலங்கரணமஸி பூயோऽலங்காரணம் பூயாத் ॥
(பாரஸ் 2-6)

ஏ அலங்காரமே! நீ சோபையை உண்டுசெய்பவன். என்னை சோபைவானுயாக்கு.

இம் மந்திரத்தால் தரித்துக்கொண்டு—:

ஓம் வ்ருத்ரஸ்யா ஸி கனீனகஸ்சக்ஷுர்தா அஸி சக்ஷுர் மே தேஹி ॥ (யஜுர்-4-3.)சக்ஷு

ஏ மையே! நீ கண்களுக்கு நல்ல பார்வையை அளிப்பவன். எனக்கு நல்ல பார்வையளி.

இம் மந்திரத்தால் கண்களுக்கு மையிட்டு—:

ஓம் ரோசிஷ்ணுரஸி ॥ (பாரஸ்-2-6.)

ஏ கண்ணுடி! நீ ப்ரகாசமளிப்பவன் (என் முகத்திற்கும் ப்ரகாசமளி.)

இம் மந்திரத்தால் கண்ணுடியில் முகத்தைப் பார்த்து—

ஓம் ப்ருஹஸ்பதேஶ்சதிரஸிபாப்மனோ மாமந்தர் தேஹி தேஜஸோ யஶஸோமாந்தர் தேஹி ॥ (பாரஸ்-2-6.)

ஏ குடையே! நீ ப்ருகஸ்பதியின் குடையாவாய். என்னைப் பாபப்பற்றிலிருந்து காபாற்றி, தேஜஸ்ஸையும், கீர்த்தியையும் உண்டாக்கு.

இம் மந்திரத்தால் குடையணிந்து—:

ஓம் ப்ரதிஷ்டேஸ்தோ விஶ்வதோ மா பாதம் ॥
(பாரஸ்-2-6.)

ஏ பாதரட்சையே! நீ சரீரத்தின் ஆதாரம். பூமியிலுள்ள பாபத்திலிருந்து என்னைக் காப்பாற்று.

இம் மந்திரத்தால் காலில் செருப்பை யணிந்து—:

ஓம் விஸ்வாப்யோ மாநஷ்ட்ராப்யஸ்பரிபாஹிஸர்வத: ॥
(பாரஸ்-2-6.)

ஏ கைத்தடியே! சகல துஷ்ட ஜீவர்களிடமிருந்து மென்னைக் காப்பாற்று.

இம் மந்திரத்தால் ஓர் கைத் தடியையும் தரித்து பின் தாய் தகப்பன்மார்கள் அவனை வெகு ஆடம்பரங்களுடன் வீட்டிற் கழைத்துவரவேண்டும். வீட்டிற்கு வந்தபின் சகலரும் 173 ம் பக்கத்திலுள்ளபடி அவனுக்கு சத்காரம் புரியவேண்டும். பிறகு வந்திருப்பவர்களுக் கெல்லாம் அன்னமளித்து, ஆசார்யனை ஓர் நல்லாசனத்தமர்த்தி முன் சொன்னமாதிரி மதுபர்கம், கோதானுதி தக்ஷிணைகளை சக்திக்குத் தகுந்தவாறளித்து எல்லோரின் முன்னிலையிலும் ஆசார்யனின் உத்தம குணங்களைப் புகழ்ந்து சொல்லவேண்டும். பிறகு எல்லோரையும் பார்த்து—: "கேளுங்கள் சகோதிரர்களே! இப் பெரியோராகிய ஆசார்யர் எனக்கு பெரிய உபகாரம் செய்திருக்கிறார். என் குழந்தையை உத்தம வித்வானுகச் செய்தார். இவற்கு பதிலுபகாரம் செய்ய நான் சிறிதும் தகுதியுடையவனல்ல. இதற்காக நான் ஆசார்யருக்கு அனேக வந்தனங்கள் புரிந்து என் குழந்தையை அவர் உத்தம வித்வானுகச் செய்ததைப் போலவே மற்ற குழந்தைகளையும் அவர் செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்கின்றேன். நானும் அவர் செய்ததைப் போலவே மற்ற குழந்தைகளுக்கு கல்வி கற்பித்து சதானந்தனயிருப்பேன். இவர் செய்த இவ்வுபகாரத்தை ஒருபோதும்

மறவேன். சர்வசக்திமான் ஜகதீஸ்வரன் அவருக்குமெனக்கும் மற்றும் சகலருக்கும் நற்கல்வியை யளித்து, சரீர ஆத்மாக்களை பலம் பெறச்செய்து, பரோபகாராதி உத்தம காரியங்களையே செய்யும்படித் தூண்டி, புருடார்த்தங்கள் முழுவதையும் சகலரும் அடையும்படிச் செய்வாராக. நாமெல்லோரும் அப் பரமாத்மனின் குண கர்மஸ்வபாவங்களை யறிந்து நாமுமதைப் பெற்று சதா ஆனந்தத்தில் வசித்து வருவோமாக" என்று சொல்லவேண்டும்.

இல்நுழைச் சடங்கு முற்றிற்று.

திருமணச் சடங்கு (விவாகசம்ஸ்காரம்)

திருமணம் என்பது மறைமாணவ விரதத்தை முழுதும் முடித்து, சகல கலைகளையுங்கற்று, சுபமான குண கர்மஸ்வபாவத்தர்களாய் பரஸ்பரம் ப்ரீதியுடன்கூடி கீழ்வரும் ப்ரமாணத்தின்படி மக்கட் பேற்றை அடைவதற்காக பெண்ணும் புருடனும் தங்களின் வர்ணாஸ்ரமத்திற் கனுகூலமாய் காரியங்களைப் புரிவதற்காக செய்துகொள்ளும் சம்பந்தமேயாகும். இதற்கு ப்ரமாணம்—:

உதகயன ஆபூர்யமாணபக்ஷே புண்யே நக்ஷத்ரே *
சௌலகர்மோபநயன கோதான விவாஹா: ॥ 1 ॥
ஸார்வகால மேகே விவாஹம் ॥ 2 ॥ (ஆஸ்வலாயனக்ருஹ்ய ஸூத்திரம்)

* நக்ஷத்ராதிவிசாரம் கல்பனையுக்தமானது. இதிலிருந்து ப்ரமாணமில்லை.

ஆவசத்யாதானம் தாரகாலே ॥ 3 ॥ (பாரஸ்கரம்)

புண்யேநக்ஷத்ரே தாரான் குர்வீத ॥4॥
லக்ஷணப்ர ஸஸ்தான் குஶலேன ॥ 5 ॥ } (கோபிலீயக்ருஹ்ய ஸூத்திரம்.)

(பொ-ள்.) உத்தராயண சுக்லபக்ஷ நன்னாள் எனின் என்னாள் சுகப்படுமோ அன்னாளில் மணம் புரியலாம் (1). சகல காலத்திலும் விவாகம் செய்யலாம் (2). விவாகத்தில் உண்டாக்கும் அக்னிக்கு "ஆவசத்யம்" எனப் பெயராகும் (3). ப்ரசன்னமாயிருக்கும் நாளில் பெண்களுக்கு பாணிக்ரஹணம் செய்யவும் (4). பெண் எப்போதும் சுபகுணங்களால் உத்தமியாயிருக்கவேண்டும் (5).

இதற்கு சமயம்—: 156, 160 ம் பக்கங்களிலுள்ளபடி அறியவும். பெண் புருடர்களின் ஆயுள், குலம் ஸ்தானம், ஸ்வபாவம் இவைகளைக் கட்டாயம் கவனிக்கவேண்டும். இருவரும் ஒரேவிதமாகப் படித்தவர்களாகவும் கலியாண விருப்பமுடையவர்களாகவு மிருக்கவேண்டும். பெண்ணின் வயதைக்காட்டிலும் புருடனின் வயது குறைந்தது $1\frac{1}{2}$ பங்கும் அதிகமானால் 2 பங்குக்குள்ளும் இருக்கவேண்டும். பரஸ்பர குலத்தையும் பரீட்சை செய்யவேண்டும். இதற்கு ப்ரமாணம்—:

வேதானதீத்ய வேதௌ வா வேதம் வாபி யதாக்ரமம் ।
அவிப்லுத ப்ரஹ்மசர்யோ க்ருஹஸ்தாஸ்ரம மாவிஸேத் ॥
குருணானுமத: ஸ்னாத்வா ஸமாவ்ருத்தோ யதா விதி ।
உத்வஹேத த்விஜோ பார்யாம் ஸவர்ணாம் லக்ஷணான்
[விதாம் ॥ 2 ॥

அஸபிண்டாச யாமாது ஸ கோத்ரா ச யா பிதுஃ |
ஸா ப்ரசஸ்தா த்விஜாதீனும் தாரகர்மணிமைதுனே || 3 ||

மஹான்த்யபி சம்ருத்தானி கோऽஜாவிதனதான்யதஃ |
ஸ்த்ரீஸம்புந்தேதசைதானி குலானி பரிவர்ஜயேத் || 4 ||

ஹீனக்ரியம் நிஷ்புருஷம் நிஶ்சந்தோ ரோமசார்சஸம் |
க்ஷய்யாமய்யாவ்யபஸ்மாரிஶ்த்ரிகுஷ்டி குலானி ச || 5 ||

நோத்வஹேத் கபிலாம் கன்யாம் நாதிகாங்கீம் நரோகிணீம் |
நாலோமிகாம் நாதிலோமாம் நவாசாடாம் ந பிங்கலாம்||

நர்க்ஷவ்ருக்ஷநதீநாம்னீம் நான்த்யபர்வத நாமிகாம் |
நபக்ஷ்யஹிப்ரேஷ்ய நாம்னீம் ந ச பீஷணநாமிகாம்|| 7 ||

அவ்யாங்காங்கீம் ஸௌம்யநாம்னீம் ஹம்ஸவாரண காமினீம் |
தனுலோம கேசதசனும் ம்ருத்வங்கீ முத்வஹேத் ஸ்த்ரியம் || 8 ||

ப்ராஹ்மோ தைவஸ்ததைவார்ஷ: ப்ராஜாபத்யஸ்ததாஸுர: |
காந்தர்வோ ராக்ஷஸஶ்சைவ பைசாசஸ்சாஷ்டமோऽதம: || 9 ||

ஆச்சாத்ய சார்சயித்வா ச ஸ்ருதி சீலவதே ஸ்வயம் |
ஆஹூய தானம் கன்யாயா ப்ராஹ்மோ தர்மஃ ப்ரகீர்த்திதஃ || 10 ||

யக்ஞேது விததே ஸம்யக்ருத்விஜே கர்மகுர்வதே |
அலங்க்ருத்ய ஸுதாதானம் தைவம் தர்மம் ப்ரசக்ஷதே||

ஏகம் கோமிதுனம் த்வேவா வராதாதாய தர்மத: |
கன்யா ப்ரதானம் விதிவதார்ஷோ தர்மஃ ஸஉச்யதே||12||

ஸஹ நௌ சரதாம் தர்மமிதி வாசாநுபாஷ்ய ச |
கன்யாப்ரதான மப்யர்ச்ய ப்ராஜாபத்யோ விதி: ஸ்ம்ருத:

க்ஞாதிப்யோத்ரவிணம் தத்வா கன்யாயை சைவ சக்
தித: |
கன்யாப்ரதானம் விதிவதாஸுரோ தர்ம உச்யதே ||14||

இச்சயாऽன் யோன்ய ஸம்யோகஃ கன்யாயாஸ்ச வர
ஸ்ய ச |
காந்தர்வஃ ஸது விக்ஞேயோமைதன்யஃ காமஸம்பவஃ ||

ஹத்வா சித்வாச பித்வாச க்ரோசந்தீம் ருததீம் க்ரு
ஹாத் |
ப்ரஸஹ்ய கன்யாஹரணம் ராக்ஷஸோ விதிருச்யதே||16||

ஸுப்தாம் மத்தாம் ப்ரமத்தாம் வா ரஹோ யத்ரோபகச்
சதி |
ஸபாபிஷ்டோ விவாஹானும் பைசாசஸ்சாஷ்டமோ
தம: || 17 ||

ப்ராஹ்யாதிஷு விவாஹேஷு சதுர்ஷ்வேவானு பூர்வ
சஃ |
ப்ராஹ்ம வர்சஸ்வின: புத்ரா ஜாயந்தே சிஷ்டஸம்
மதாஃ || 18 ||

ரூபஸத்வ குணோபேதா தனவந்தோ யசஸ்வின: |
பர்யாப்த போகா தர்மிஷ்டா ஜீவந்தி ச சதம் ஸமாஃ||19

இதரேஷு து ஶிஷ்டேஷு ந்ருஶம்ஸான்ருதவாதினஃ।
ஜாயந்தே துர்விவாஹேஷு ப்ரஹ்மதர்மத்விஷஃஸுதா:॥

அனிந்திதை: ஸ்த்ரீவிவாஹை ரநிந்த்யா பவதி ப்ரஜா ।
நிந்திதைர்நிந்திதாந்ருணாம் தஸ் மான்னிந்த்யான் விவர்ஜயேத் ॥ 21 ॥

(மனு-3-2, 4-10, 21, 27-34, 39-42).

(பொருள்)—: மறைமாணவத்தில் 4, 3, 2 அல்லது வேதத்தையாவது சரிவரக் கற்று, மறைமாணவத்தையும் செவ்வனே முடித்து பிறகு இல்லற தர்மத்தைக் கைக்கொள்ளவேண்டும் (1). மறைமாணவத்தையும், வேதத்தையும் விதிப்படிக் கற்று முடித்து, ஆசார்யனின் ஆக்ஞையேற்று ஸ்னானம் செய்து ப்ராம்மண, க்ஷத்ரிய, வைஸ்யர்கள் தங்களின் வர்ணத்திலுள்ள உத்தம லக்ஷணங்களுடன் கூடின பெண்ணை மணந்துக்கொள்ள வேண்டும் (2). தன் தாயாரின் வம்சத்திற்குட்பட்டவளாகவோ, தன் தகப்பனின் கோத்திரத்தைச் சேர்ந்தவளாகவோ உள்ள பெண்ணை ஒருவன் மணக்கலாகாது (3). தனதான்யாதிகளில் எவ்வளவு மேன்மைபெற்றிருந்தபோதிலும் கீழ்வரும் 10 குலங்களின் பெண்களை மணக்கக் கூடாது (4). பத்துக்குலங்களாவன—: (1) நல்ல காரியம் சிறிதும் செய்யாத குலம், (2) ஒரு உத்தம புருடனுவது இல்லாத குலம், (3) ஒரு படித்தவனுவது இல்லாத குலம். (4) உடலில் பெரும் பெரும் மயிரை உடையவர்களையுடைய குலம் (5). மூலரோகம் உடையவர்களை யுடைய குலம் (6). க்ஷயரோகத்தவர்களையுடைய குலம். (7) யானைக்கால் வியாதியுடையவர்களின் குலம். (8) வெண்குஷ்டமுடையோர்

களின் குலம் (9). கருங்குஷ்டமுடையவர்களின் குலம் (10) திருடர்களின் குலம். இக் குலத்தவர்களை மணக்கக் கூடாது. (5). பிலவர்ணத்தவளையும், பெருத்த அவயவங்களுடையவளையும், உடலிலெங்கும் சிறிதும் ரோமமில்லாதவளையும், உடல்களில் பெரும் பெரும் ரோமங்களை யுடையவளையும், வீணுக அதிகம் பேசுபவளையும், பூனைக் கண்ணியையும் (6); ரோகணி, ரேவதி, நக்ஷத்ரப் பெயருடையவளையும் நதிகளின் பெயர்களை (கங்கா, யமுனு), உடையவளையும், மலைப் பெயர்களை (விந்தியா) யுடையவளையும், பக்ஷிகளின் பெயர்களை(கோகிலா) யுடையவளையும், பாம்புகளின் பெயர்களை (உரகா) உடையவளையும், கேவலமான (தாசீ) பெயர்களையுடையவளையும், மற்றும் காளீ, சண்டி முதலிய பெயர்களை யுடையவளையும் மணம் செய்யக்கூடாது (7). ஆனுல் நல்ல அவயவங்களைப் பெற்று, நல்ல நாமம்பெற்று, ஹம்சம் அல்லது பிடியைப்போல நடையை உடையவளையும், சூக்ஷ்மமாகிய கேசங்களையும், சூக்ஷ்ம பற்களையுடையவளையும் மணம் புரியவேண்டும் (8). ப்ரம்ம, தைவ, ஆர்ஷ, ப்ராஜாபத்ய, ஆஸுர, காந்தர்வ, ராக்ஷஸ, பைசாச என்று 8 விதமான விவாகங்கள் உண்டு (9). பெண்ணை ஆடையாபரணங்களால் அலங்கரித்து, ஓர் உத்தமபுருடனை யழைத்து அவனுக்கு வேண்டிய உபசாரங்கள் புரிந்து அப்பெண்ணை ஈதல் ப்ரம்ம விவாகம் ஆகும் (10) வேள்விசெய்து பெரும் பெரும் வித்வான்களை அதற்கு வரவழைத்து அதில் கார்யத்தலைவனுயிருக்கும் வித்வானுக்கு அலங்காரம் செய்துள்ள பெண்ணை யளித்தல் தேவ விவாகம் ஆகும் (11). ஓர் கன்றுள்ள பசுவை பின்னையிடமிருந்த

பெற்றுக்கொண்டு * தர்மயுக்தமாக பெண்ணையளித்தல் ஆர்ஷ விவாகம் ஆகும் (12). பெண் பிள்ளைகளை வேள்விக்கெதிரமர்த்தி நீங்களிருவரும் கூடி இல்லற தர்மத்தை நடத்துங்கள்" என்று சொல்லி பாணிக்ரஹணம்செய்துவைத்தல் ப்ராஜாபத்ய விவாகம் ஆகும். இந்நான்கு விவாகமும் உத்தமமாகும் (13). பிள்ளையைச் சேர்ந்தவர்கள் கூடியவரை பெண் வீட்டாருக்குப் பணமளித்து பின் ஹோமாதி விதிகளைச்செய்து பெண்ணை யளித்தல் ஆஸுர விவாகமாகும் (14). யாருமறியாதபோது பெண்ணும் புருடனும் மனமொத்துவிட்டபின் இருவரும் சேரல் காந்தருவ விவாகமாகும் (15). பயந்து, நடுங்கிக்கொண்டிருக்கும் பெண்ணை பலவந்தமாக மணந்து கொள்ளல் ராக்ஷஸ விவாகமாகும் (16). தூங்குபவளை, பயித்தியமடைந்தவளை, குடித்து உன்மத்தமடைந்திருப்பவளை ஏகாந்தத்தில் சேர்தல் விவாகங்களில் நீசத்திலும் நீசம் மஹா நீசம் துஷ்டத்திலும் துஷ்டமான பைசாச விவாகமாகும் (17). ப்ரம்ம, தேவ, ஆர்ஷ, ப்ராஜாபத்ய மணத்தைச் செய்து கொண்டவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் வேதவித்தையால் தேஜஸ்பெற்றதாகவும், பெரியோர்களின் சம்மதம் பெற்றதாகவும், அதியுத்தமமானதாகவும் இருக்கும் (18). அவர்களின் பெண் குழந்தைகள் அழகிய ரூப, பல, பராக்ரம, சுத்த, புத்தியாதி உத்தம குணங்களுடன் கூடி தர்மாத்மாவாகி

* இவ்வார்த்தை பொய். இப்பழக்கம் கூடாதென்று இதற்கு முன்னால் மனுஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. யுக்திக்கும் தப்பிதமாகும். இதனால் பிள்ளையிடமிருந் தொன்றும் பெறக் கூடாது. பெண்பிள்ளை யிருவரும் சம்மதித்துச் சேய்தலே ஆர்ஷ வி்வாகமாகும்,

100 வருடங்கள்வரை வாழ்ந்திருக்கும் (19). மற்ற ஆஸுர, ராக்ஷஸ, காந்தர்வ, பைசாஸாதி மணம் செய்து கொண்டவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் நிந்திதமான காரியங்களைச் செய்துகொண்டு, பொய் பேசுபவனவாய், வேத தர்ம துவேஷிகளாய் பெரிய நீசஸ்வபாவத்தைப் பெறுகின்றதுகள் (20). ஆகையால் நீசக் குழந்தைகள் பிறக்கும்படியான நிந்தித விவாகங்களை நீக்கி உத்தமமக்களுண்டாகும் நல்ல சுப விவாகங்களையே புரியவேண்டியது மனிதர்களின் கடமையாகும் (21).

உத்க்ருஷ்டாயாபிரூபாய வராய ஸத்ருஶாய ச ।
அப்ராப்தாமபி தாம் தஸ்மை கன்யாம் தத்யாத்விசக்ஷணா: ॥ 1 ॥

காமமாமரணாத்திஷ்டேத் க்ருஹே கன்யர்த்துமத்யபி ।
நசைவைனாம் ப்ரயச்சேத்து குணஹீனாய கர்ஹிசித் ॥2॥

த்ரிணீ வர்ஷாண்யுதீக்ஷேத குமார்ய் ருதுமதீ ஸதீ ।
ஊர்த்வம்து காலாதேதஸ்மாத் விந்தேத ஸத்ருஶம் பதிம் ॥ 3 ॥ (மனு).

தன் பெண்ணுக்கு மணம்புரிய விரும்பும் பெற்றோர் நல்ல மேலான சுப குணகர்மவானாகவும், தன் பெண்ணுக்குச் சரியான ரூபலாவண்ய முள்ளவனாகவும் உள்ளவனுக்கே கொடுக்கவேண்டும். பெண் தன் தாயின் 6 சுற்றங்களைச் சேராதவளாய் இருக்கவேண்டும். இவ்வாறு பொருந்திய இருவரும் நல்ல குழந்தைகளைப் பெற்றளித்து இல்லறத்தை செவ்வனே நடைபெறச் செய்யத் தகுதியாவார்கள் (1).

குணஹீன, தகுதியிலா, துஷ்ட புருடனுக்குப் பெண்ணை அளிப்பதைக் காட்டிலும் அவளை மரணபரியந்தம் தகப்பன் வீட்டிலேயே விவாஹமில்லாமல் வைத்துக்கொள்ளல் மேன்மையாகும். ஆகையால் பெண்ணுக்கொத்த புருடனுக்கே பெண்ணை யளிக்கவேண்டும் (2). பெண் முதலில் வீட்டு விலக்கானபின் மூன்று வருடங்கள் கழிந்த பிறகே விவாகம் புரிந்துகொள்ளவேண்டும் (3).

கேள்வி—: "அஷ்டவர்ஷா பவேத்கௌரீ நவவர்ஷா ச ரோஹிணீ" இம்மாதிரியான ஸ்லோகங்களின் கதியென்ன?

விடை—:இச் சுலோகத்திற்கும் இதை மதிப்பவர்களுக்கும் துர்கதி என்றால் எவர் இச் சுலோகத்தின்படித் தன் குழந்தைகளுக்கு பால்யவயதில் மணம் செய்கின்றார்களோ அவர்கள் தங்கள் குழந்தைகளை கொடிய ரோகவான்களாகவும், அல்ப ஆயுள்வான்களாகவும், தங்கள் குலத்தை நாசம் செய்பவர்களாகவும் செய்கின்றார்கள். ஆகையால் வெகு சீக்கிரம் கல்யாணம் செய்யவேண்டுமாயினும் கலைதுவக்கற்சடங்கில் சொல்லியுள்ளபடி குறைந்தது 16 வயது பெண்ணுக்கும் 25 வயது புருடனுக்கும் மணம் செய்யவேண்டும். இதற்கு மேலும் மறைமாணவத்தை அனுஷ்டிப்பதால் மிகுந்த ஆனந்தம் உண்டாகிறது.

கேள்வி—: கலியாணம் அருகிலுள்ளவர்களுடன் செய்துகொள்ளல் நல்லதா, தூரத்திலுள்ளவர்களுடன் செய்துகொள்ளல் நல்லதா?

விடை—:து ஹிதா துர்ஹிதா தூரேஹிதா பவதீதி ॥ (நிருக்தம்).

எவ்வளவு தூரத்திலுள்ளவர்களுடன் மணம் செய்கின்றாரோ அவ்வளவு லாபம் கிடைக்கின்றது.

கேள்வி—: ஒரே கோத்திரத்திலுள்ள சகோதிர சகோதிரிகளுக்கு ஏன் மணம் செய்யக்கூடாது?

விடை—:ஏனென்றால் தமையன் தமைக்களுக்கு விவாகத்தின் அன்புயேற்படாது. ஏனென்றால் அன்னியப்பொருள்களின்மேலுண்டாகும் அன்பு சொந்தப்பொருளில் உண்டாவதில்லை. அன்றி சிறு வயதிலேயே ஒருவர் ஒருவரின் குணதோஷங்களை அறிந்துகொண்டு வருகிறார்கள். ஆகையால் ஒருவருக்கொருவர் பயமுங்கொள்ளமாட்டார்கள். அதுவுமன்றி ஒரே இரத்தக் கலப்பினால் உடலும் பலமடையாது. ஆனால் தூர சம்பந்தத்தால் உன்னதியும் ஐஸ்வர்யமுமுண்டாகிறது. ஆகையால் தூர சம்பந்தமாகவும் பூரணவயதிலேயும் தான் கலியாணச் சடங்கியற்ற வேண்டும். இதற்கு ப்ரமாணம்—:

தமஸ்மேரா யுவதயோ யுவானம் மர்ம்ருஜ்யமானா: பரியந்த்யாப: । ஸ ஶுக்ரேபி: ஶிக்கபிரேவ தஸ்மே தீதாயானித்மோ க்ருதநிர்ணிகப்ஸு ॥ 1 ॥ அஸ்மை திஸ்ரோ அவ்யத்யாய நாரீர்தேவாய தேவீர் தீதிஷன்த்யன்னம் । க்ருதா இவோபஹி ப்ரஸஸ்ரே அப்ஸு ஸ பியூஷம் தயதி பூர்வஸூனாம் ॥ 2 ॥ அஶ்வஸ்யாத்ர ஜனிமாஸ்ய ச ஸ்வர்த்ருஹோ ரிஷ: ஸம்ப்ருச: பாஹி ஸூரீன் । ஆமாஸு பூர்ஷு பரோ அப்ரம்ருஷ்யம் நாராதயோ விநஶந்நந்ருதானி ॥ 3 ॥ (ருக்-2-35-4, 6 ॥.

வதூரியம் பதிமிச்சன்த்யேதி ய ஈம் வஹாதே மஹிஷீ

மிஷிராம் । ஆஸ்ய ஸ்ரவஸ்யாத்ரத ஆ ச கோஷாத் புரு ஸஹஸ்ரா பரிவர்த்தயாதே ॥ (ருக்-37-3).

சஷ வ ஏஷே வன்த்யோபி: ஸுஷை: ப்ரயஹ்வீ திவஶ்சிதயத் பிரர்கை: । உஷாஸானக்தா விதுஷீவ விஶ்வமா ஹா வஹதோ மர்த்யாய யக்ஞம் ॥ (ருக்-5-41-7).

(பொருள்).—(மர் ம்ருஜ்யமானு) உத்தமமறைமாணவத்தால் நல் வித்தையால் (யுவதய:) 20ல் இருந்து 24 வயதுடைய பெண்கள் (ஆப:) நதி சமுத்திரத்தை யடைவதுபோல (அஸ்மேரா:) தங்களைக் காட்டிலும் $1\frac{1}{2}$ அல்லது 2 பங்கு வயதுடைய (தம்) மறைமாணவ, உத்தமவித்தை, சுபலக்ஷண யுக்தனை (யுவானம்) வீர புருடனை (பரியந்தி) நல் விதமாக அடைகின்றார்கள். (ஸ:) அம்மறைமாணவன் (ஶுக்ரேபி:) சுத்த குணமும் (ஶிக்கிபி:)வீர்யாதிகளின் பலம் பெற்றவனாய் (அஸ்மே) நம் மத்தியிலே (ரேவத்) அந்தந்த நல்ல காரியங்களையும் (தீதாய) தனக்குச் சமமான பெண்ணையும் அடைவானாக. (அப்ஸு) ஆகாயம் அல்லது சமுத்திரத்தில் (க்ருதநிர்ணிக்) சலத்தை சோதிக்கும்படியான(அனித்ம:) இடியாகிய அக்னியைப்போல பெண் புருடர்களின் மனதில் அன்புண்டாகி, சுப்ரகாசர்களாய் உத்த சந்தானங்களைப் பெற்று இல்லற வாழ்க்கையைச் சரியான ஆனந்தத்துடன் அனுபவிப்பார்களாக (1). ஏ பெண் புருடர்களே! (திஸ்ர:) உத்தம, மத்திம, அதம ஸ்வபாவயுக்தமான (தேவீ: நாரீ:) அறிவாளி புருடனும் அறிவுள்ள மனைவியும் (அஸ்மை) இந்த (அவ்யத்யாய) பீடையிலிருந்து நீங்கிய (தேவாய) வேலைகளுக்காக (அன்னம்) அன்னாதி உத்த பதார்த்தங்களை (ததிவந்தி) தரிக்கின்றனர். (க்ருதாஇவ) சிக்ஷிக்கப்பட்டதற்குச் சமமாய் (அப்ஸு)

உயிரைப்போல விருத்தியடைவதற்காக ஸ்த்ரீயுடன் புருடனும் புருடனுடன் ஸ்த்ரீயும் (உபப்ரஸஸ்ரே) சம்பந்தத்தை யடைகிறார்கள் (ஸ-ஹி) அவர்களே ஆனந்தமடைகிறார்கள். ஜலங்களில் (பீயூஷம்) அம்ருதரூப ரசத்தை (பூர்வஸூனாம்) முதல் குழந்தை பெற்ற பெண்ணின் குழந்தை (தயதி) பாலுண்ணுகின்றதைப்போல இம்மாணவனும் அம்மறைமாணவியினிடம் மக்களைப் பெறுகின்றான் (2). அரசர்கள் முதலிய சகலரும் (பூர்ஷு) தங்கள் நகரங்களிலும் (ஆமாஸு) தன் வீட்டில் பிறந்த புத்ர கன்யாரூப ப்ரஜைகளுக்கு உற்ற சிக்ஷையை(பர:) உத்தம வித்வான் (அப்ரம்ருஷ்யம்) சத்ருக்களைச் சஹிக்க அயோக்யமான மறைமாணவத்தா லடைந்த சரீராத்ம பலயுக்தமான தேகத்தை (ஆயுத:) விரோதிகள் (விநஶன்) நாசம் செய்ய (ந) முடியாது. (அன்ருதானி) பொய் பேசுதலாகிய துஷ்ட துர்வசனங்கள் (ந) அடைவதில்லை. (த்ருஹ:) துரோகமாதி துர்குணங்கள் (ரிஷ:) ஹிம்சையாதிபாபங்கள் (ந ஸம் ம்ருச:) சம்பந்தம் செய்வதில்லை. நல்ல பருவத்தில் மணம் புரிந்துகொண்டு நற் குழந்தைகளைப் பெற்றவிப்போர்களுக்கு (அஸ்) இந்த (அப்வஸ்ய) இல்லற தருமத்தை மேற்கொண்டுள்ள உத்தமர்களின் (ஜனிம்) ஜன்ம முண்டாகிறது. ஆதலால் ஏ ஸ்த்ரீ புருடர்களே! (ஸூரீன்) வித்வான்களை (பாஹி) காப்பாற்றிக்கொண்டு (ச) இவ்வாறான இல்லறத்தை (அத்ர) சதா இதிலேயே (ஸ்வ:) சுகத்தைப் பெறுவீர்களாக. (3). ஏ மனிதர்களே! (ய:) யார் (ஈம்) சகலவிதமான பரீட்சைகளும் செய்து(மஹிஷீம்) உத்தமகுலத்திற்பிறந்து சுபகுண [illegible] (இஷிராம்) புருடனை இச்சிக்கும் மனமுடைய பெண்ணை [illegible] அடைகின்றாரோ; (புமீம்) விவாகத்தி

விருந்து தன் புருடனுக்கு. (இச்சந்தீ) விருப்பமானவளாயிருக்கும் (இயம்) இந்த (வதூः) பெண் தன் மனதுக்குகந்த புருடனை (எதி) அடைகின்றாளோ; அப்பெண் புருடர்களே (அஸ்ய) இவ் வில்வாழ்க்கையின் மத்தியில் (ஆஸ்ரவஸ்யாத்) சகல வித்தை தன தான்யாதிகளையு மடைகின்றார்கள். அவர்களிருவர்களும் (ரத:) வண்டிக்குச் சமானமாக (அகோஷாத்) பரஸ்பர ப்ரியவார்த்தைகளைச் சொல்லிக்கொள்வார்களாக (ச) சகல இல்லற வாழ்க்கையின் பளுவை (வஹாதே) வஹிக்கத்திறமை யுள்ளவர்களாவார்கள். அவ்வாறே அவர்களிருவரும் (புரு) மிகுந்த (ஸஹஸ்ரா) கணக்கில்லா உத்தம காரியங்களையும் (பரிவர்த்தயாதே) சகலவிதமாகவும் சித்தம் செய்யக் கூடியவர்களாகிறார்கள் (4). ஏ மனிதர்களே! உங்கள் குழந்தைகளை பூர்ண மறைமாணவ மனுஷ்டிக்கச்செய்து பின் சுயம்வரத்தைச் செய்து வைப்பீர்களானால் அவர்கள் (வந்தயேபி:) விரும்பத்தகுந்த (சிதயத்பிः) சகல சத்ய வித்தைகளையும் அறியக்கூடிய (அர்கைः) சத்காரத்திற்குத் தகுந்த (ஶூஷை:) சரீராத்ம பலங்களையடைந்து (வः) உங்களுக்காக (ஏஷே) சகல சுகங்களையும் அளிக்கச்செய்யும் திறமை பெறுகிறார்கள். இன்னும் அவர்கள் (உஷாஸானக்தா) இரவு பகலைப் போலவும் (விதுஷீவ) வித்வானாகிய பெண்ணும் வித்வானாகிய புருடனும் (விஶ்வம்) இல்லறத்தில் பூர்ண விவகாரங்களை (ஆவஹத:) சகலவிதங்களிலு மடைகிறார்கள் (ஹ) அவ்வாறே இந்த (யக்ஞம்) சேர்க்கை ரூப இல்லற விவகாரங்களை அவர்கள் பூர்ணமாக்க முடிகிறது. (மர்த்யாய) மனிதர்களுக்கு இவ்வித விவாகச் சடங்கு பூர்ண சுகத்தை அளிக்கின்றது. (யஹ்வீ) பெரிய சுபகுண சீலர்களான பெண் புருடர்க

ளிருவரும் (த்வः) விருப்பங்களை (உபப்ரவஹத:) நல்ல விதமாக அடைகிறார்கள். மற்றவர்களால் அடையமுடியாது(5).

பெண்களுக்கு மறைமாணவம் வேண்டுமென்று சொல்லியிருப்பதைப் போலவே வேதங்களில் புருடர்களுக்கும் மறைமாணவத்தைச் சொல்லியுள்ளது. ஆதலால் இருவரும் பூர்ண மறைமாணவ மனுஷ்டித்த பூர்ண ப்ரீதியுள்ளவர்களுக்கே விவாகம் செய்யவேண்டும். இவ்வாறில்லாமல் பால்ய மணங்களைப் புரிபவர்கள் வேதோக்த ஈஸ்வரனின் கட்டளைக்கு விரோதிகளாகி மஹா துக்கசாகரத்தில் ஏன் மூழ்கமாட்டார்கள்? முன்சொன்ன விதிப்படி விவாகம் புரிவோர் பூர்ண சுகத்தைப் பெறுகிறார்கள்.

கேள்வி—: தங்களுடைய வர்ணங்களுக்குள்ளேயே மணம் புரியவேண்டுமா மற்ற வர்ணத்தவர்களுடனும் விவாகம் செய்துகொள்ளலாமா?

விடை—: தங்களுடைய வர்ணத்திலேயேதான். ஆனால் வர்ணமென்பது குணகர்ம ஸ்வபாவத்தா லேற்படவேண்டும். பிறப்பினாலல்ல. பூர்ண வித்வான், தர்மாத்மா பரோபகாரி, ஜிதேந்திரிய, மித்யாபாஷணதோஷரஹித, வித்தை தர்மப்ரசாரத்தில் சதாயிருத்தல் ஆகிய உத்தம குணகர்மங்களையுடையவர்களே ப்ராம்மண ப்ராம்மணிகளாகும். வித்யா, பலம், சௌர்யம், ந்யாயத்வமாதி குணங்களுள்ளவர்களே க்ஷத்ரியா க்ஷத்ரியீ. வித்வத்வமடைந்து உழவுத்தொழில், வியாபாரம், தேசபாஷையின் வல்லமையாதி குணங்களையுடையவர்களே வைஸ்யர் ஆகும். வித்தையில்லாதவர்கள் சூத்திர சூத்திரிகளாவார்கள். இவ்விதமாகவே விவாகம் புரியவேண்

டும். என்றால் ப்ராம்மணன் ப்ராம்மணியையும், க்ஷத்ரியன் க்ஷத்ரியையும், வைஸியன் வைஸ்யயையும், சூத்திரன் சூத்திரச்சியையும் மணக்கவேண்டும். இவ்வர்ணங்களுக்குப் ப்ரமாணம்—:

தர்ம சர்யயா ஜெகன்யோ வர்ண: பூர்வம்பூர்வம் வர்ணமாபத்யதே ஜாதிபரி வ்ருத்தௌ ‖ 1 ‖

அதர்மசர்யயா பூர்வோ வர்ணோ ஜகன்யம் ஜகன்யம் வர்ணமாபத்யதே ஜாதிபரிவ்ருத்தௌ ‖ 2 ‖

ஶூத்ரோ ப்ராஹ்மணதாமேதி ப்ராமணச்சைதி ஶூத்ரதாம் ।

க்ஷத்ரியாஜ்ஜாதமேவந்து வித்யாத்வைஶ்யாத்ததைவச ‖3‖

பொருள்:—தர்மத்தை ஆசரிப்பதால் நீசவர்ணமும் மேலான வர்ணங்களாகின்றது. மேல் வர்ணத்தின் குணகர்ம ஸ்வபாவங்களையுடையோர் மேல் வர்ணத்தோரே யாகும் (1). அதர்மத்தை ஆசரிப்பதால் மேல் வர்ணமும் நீசவர்ணமாகின்றது. நீசகுண கர்மஸ்வபாவங்களை யுடையோர் நீச வர்ணத்தவர்களேயாகும் (2). உத்தமமான குணகர்ம ஸ்வபாவங்களையுடைய சூத்திரன், வைஸ்ய, க்ஷத்ரிய, ப்ராம்மணவர்ணத்தின் அதிகாரத்தையும், நீச குண கர்மஸ்வபாவங்களை யுடைய ப்ராமணன் க்ஷத்ரிய, வைஸ்ய சூத்திர வர்ணத்தின் அதிகாரத்தையும் பெறுகின்றான் (3).

இவ்வாறான வர்ணபேதம் அனுபவத்திலேற்பட்டுவிடின் மேல் வர்ணத்தார் நீச காரியங்களைப் புரிய அஞ்சுவார்கள். நீச வர்ணத்தவர்களும் நல்ல காரியங்களைப் புரிந்து மேல்வர்ணத்திற்கு வர முயற்சிப்பார்களாதலால் உலகில் சதா நல்ல காரியங்களே நடைபெறும். ஆர்யாவர்த்தம் எக்காலம் வரை முன் சொன்ன விதிப்படி வர்ணங்களை அறிந்துகொண்டிருந்ததோ அக்காலம்வரை அது உன்னத நிலையில் இருந்தது. மறுபடி இனிமேலு மவ்வாறே அறியமுற்பட்டு பழையபடி ஆர்யாவர்த்தம் ஆனந்தத்தில் முழுகுமாக.

புருடரும் பெண்களும் கீழ்வருமாறு பரீட்சை செய்து கொள்ளவேண்டும்—:சமானபுத்தி, சரியான ஒழுக்கம், சமான ஆசாரம், சமானரூபாதி குணங்கள், அஹிம்சை, சத்யமதுர பாஷணம், தயாளத்வம், அஹங்கார, மத்ஸர, காம, குரோத, நிஸ்லோப, தேசநன்மை நாடல், வித்யாக்ரஹண, சத்யோபதேசம் செய்வதில் பயமின்மை, உத்சாஹ, கபட, மத்ய, மாம்ஸ, புரட்டாதிகளின் தியாகம், இல்லறகார்யங்கள் புரிவதில் நற்றிறமை, விட்டுப்பிரிந்து மறுபடி கூடுங்காலத்தில் "நமஸ்தே" என்று சொல்லல், பதிக்கு மனைவி கால் முதலியன கழுவி உபசரித்தல், பரஸ்பரம் அன்புவார்த்தைகளாடி ஆனந்தம் பெறுதல், புருடனின் சரீரத்தைக் காட்டிலும் பெண்ணின் சரீரம் குறைந்திருத்தல், புருடனின் புஜத்திற்குச் சரியாய் பெண்ணின் தலை யிருத்தல் முதலியவைகளைச் செய்தபின் இருவரும் வார்த்தையாடி உள் விகாரங்களையுந் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஓம் ருதமக்னே ப்ரதமம் ஜக்ஞ ருதே ஸத்யம் ப்ரதிஷ்டிதம் । யதியம் குமார்ய்யபி ஜாதா ததி யமிஹ ப்ரதிபத்யதாம்। யத்ஸத்யம் தத் த்ருஶ்யதாம் ‖ (கோபிலீய-1-10-4, 9).

(பொருள்) —கலியாணநாள் நிச்சயிக்கும்போது முன் சொன்ன பரீட்சைகளைச் செய்துகொள்ள தம்பதிகளுக் கது

மதி யளிக்கவேண்டும். பிறகு பெரியோர்களின் சபைநிருவி அதில் தம்பதிகளின் சம்மதத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். பெற்றோர்கள் சபையில் "ஏ பெரியோர்களே! இவ்வுலகிற்கு முன்பு யதார்த்த ஸ்வரூபமான மஹத்தத்வம் பிறந்திருந்தது. அதிலிருந்து சத்யத்ரிகுணாத்மகமான நாசரஹித ப்ராக்ருதி யுண்டாயிற்று. அப் ப்ராக்ருதியின் சேர்க்கையாய் சகல ஜீவர்களும் உண்டாயிருப்பதைப்போல என் குமாரி அல்லது குமாரன்—குமாரன் அல்லது குமாரியுடன் விவாகம் செய்துகொள்வதாக ப்ரதிக்ஞை செய்துகொள்கிறார்கள். இவர்கள் தங்கள் ப்ரதிக்ஞையில் திட உற்சாக மடைந்திருக்கிறார்கள்" என்று சொல்லவேண்டும்.

விதி—: பெண் மாதவிலக்காகி சூதகபருவத்தின் ப்ரமாணப்படி சுத்தி யடைந்தபின் "மகப்பேற்றுச் சடங்குக்காக நிச்சயிக்கப்பட்ட நாளில் விவாகம் செய்யவேண்டியதற்கான சகல பொருள்களையும் தயார்செய்து' வைத்திருந்து—பிறகு 1 மணி * நேரகாலம் இரவு சென்றபின்—:

ஓம் காம வேத தே நாம மதோ நாமாஸி ஸமானயாமும் ஸுராதே அபவத் । பரமத்ர ஜன்மாக்ரே தபஸோ நிர்மிதோஸி ஸ்வாஹா ॥ 1 ॥ (மந்-ப்ராம்மண-1-1-1).

(பொருள்) ஏகாமா! உன் பெயரை சகல உலகமும் அறியும். நீ உலகில் மதகாரகன் என்று ப்ரசித்தியடைந்துள்ளாய். இப்பெண்ணும் உன் மதத்தை யேற்குமோர் சாதனமாகும். இவளை நீ யடை. ஏ காமாக்னியே! உன்னுடைய ஜன்மமே பெண்களிடமிருக்கிறது. நீ நியமித்த இல்லற ரூப தவத்திற்காகவே செய்யப்படுகின்றது.

ஓம் இமம் தே உபஸ்தம் மதுனா ஸம்ஸ்ருஜாமி ப்ரஜாபதேர் முகமேதத் த்விதீயம் । தேன பும்ஸோ அபிபவாஸி ஸர்வானவசான் வசின்யஸி ராக்ஞீ ஸ்வாஹா ॥ (மந்-ப்ராம்-1-1-3).

(பொருள்) ஏ பெண்ணே! நான் உன் மர்மஸ்தானத்தை ப்ரேமையுடன் உபயோகப்பேனாகவும். சந்தான உத்பத்திக்கு இது இரண்டாவது துவாரரூபமாகும். இதன் வசப்படாத புருடர்களை நீ நீசர்களாகப் பார்க்கின்றாய். ஏ வீட்டினெஜமானீ! நீ சகலரையும் வசம் செய்பவளாகின்றாய்.

ஓம் அக்னிம் க்ரவ்யாத மக்ருண்வன் குஹானா: ஸ்த்ரீணாமுபஸ்தம்ருஷய: புராணா: । தேனாஜ்யமக்ருண்வன் ஸ்த்ரைஸ்ருங்கம் த்வாஷ்ட்ரம் த்வயி தத்ததாது ஸ்வாஹா ॥ (மந்-ப்ராம் 1-1-3).

பொருள்)—: தத்துவத்தை தேடியவர்களான பழைய அனுபவ ரிஷிகள் பெண்களின் மர்மஸ்தானத்தை மாம்சத்தை யருந்தும் அக்னிக்குச் சமமாகச் சொல்லிருக்கின்றார்கள். அதனுடனேயே புருடர்களின் மர்மஸ்தானத்திலிருந் துண்டாகும் வீர்யத்தை நெய்யுக்குச் சமமாகச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த வீர்யம் உன்சரீரத்தில் அடைந்து புஷ்டியை அடையுமாக.

இம்மந்திரம் சொல்லி சுத்த ஜலம் நிறைந்த பாத்திரத்தைக்கொண்டு தம்பதிகள் ஸ்னானம் செய்யவேண்டும். பிற்பாடு

* முதலில் இரவிலேயே முழுச்சடங்கும் முடியாவிட்டால் மத்தியானத்திலேயே சடங்கை ஆரம்பித்துவிட்டால் மத்ய இரவுக்குள் எல்லாம் முடிந்துவிடும்.

ஆண் நல்லாடை யாபரணங்களணிந்து ஓர் நல்லாசனத்தின் மேல் கிழக்கு முகத்தனாய் அமரவேண்டும்: பிறகு கடவுள் துதி, ப்ரார்த்தனோபாஸனா, அருள்வேண்டல், அமைதிகோறல் நெருப்புமூட்டல், சமிதையிடல் முதலியவைகளைச் செய்து ஸ்தாலீபாகம் தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். இதேமாதிரி புருடனும் தன் வீட்டில் குளித்து நல்லாடைகளை யணிந்து முன் சொன்னவைகளை யெல்லாம் செய்து பெண்ணின் வீட்டிற்குப் போகத் தயாராயிருக்கவேண்டும். அக்காலத்தில் பெண்ணைச் சேர்ந்தவர்கள் வரிசையுடன் புருடனை அழைத்துவரச் செல்லவேண்டும். பிறகு புருடனை பெண் வீட்டிற் கழைத்துவரவேண்டும். பெண்ணின் வீட்டில் பிரவேசித்த புருடன் கிழக்கு முகத்தனாய் நிற்கவேண்டும். பிறகு பெண்ணும் பெண்ணைச் சேர்ந்தோர்களும் வடக்கு முகத்தவர்களாய் நின்று பெண்ணும் கார்யகர்த்தரும்—:

ஸாது பவானாஸ்தா மர்சயிஷ்யாமோ பவந்தம் || (பாரஸ்-7-3 5).

(பொருள்) நீங்கள் நன்றாக உட்காருங்கள். நாங்கள் உங்களுக்கு சத்காரம் புரிகின்றோம். என்று சொல்ல புருடன்—:

ஓம் அர்சய ||—: செய்யுங்கள் - எனக்கு வரவேற்பளியுங்கள்.

என்று பதில் சொல்லவேண்டும். பிறகு புருடனுக்காக ஓர் நல்ல ஆசனம் தயாரித்து பெண் கையில் கொடுத்து அவளை புருடனுக் கெதிரிலே நிற்கச்செய்து—:

ஓம் விஷ்டரோ விஷ்டரோ விஷ்டர: ப்ரதிக்ருஹ்யதாம் ||

இதோ ஆசனம் இவ்வாசனத்தை யேற்றுக் கொள்ளுங்கள் ஆசனம்.

என்று சொல்ல புருடன் அதைவாங்கிக்கொண்டே—:

ஓம் ப்ரதி க்ருஹ்ணாமி || ஏற்றுக்கொள்கின்றேன்.

என அதை வாங்கிவைத்து அதன்மேல் துணியிட்டுச் சபாமண்டபத்தில் கிழக்கு முகத்தனாய் அதன்மேலமர்ந்து—:

ஓம் வர்ஷ்மோऽஸ்மி ஸமானானாமுத்யதாமிவஸூர்ய: இமந்தமபிதிஷ்டாமி யோ மா கஸ்சாபிதாஸதி || (சாரஸ்-1-3).

(பொ-ள்)— ஆகாயத்தில் உள்ள ப்ரகாசங்களில் சூர்யன் ஸ்ரேஷ்டமானதைப்போல தங்களின் வயது-வித்யா, குணங்களில் சுயஜாதீயத்தில் மேலானவன் நான், என்னை எவன் நீசமாகப் பார்க்கின்றதோ அதை இவ்வாசனத்தைப்போல நான் தாழ்மை யாக்குகின்றேன்.

இதைச் சொல்லவேண்டும். பிறகு கார்யகர்த்தவர் ஓர் சுத்த ஜலம் நிறைந்த பாத்திரத்தை பெண்ணின் கையில் கொடுக்க பெண்—:

ஓம் பாத்யம் பாத்யம் பாத்யம் ப்ரதிக்ருஹ்யதாம் || (பாரஸ்-1-3). இதோ கால்களை சுத்தி செய்துகொள்ள நீரை யேற்றுக்கொள்ளுங்கள்.

என்று சொல்லியதை புருடன் எதிர்வைக்க புருடன்—

ஓம் ப்ரதி க்ருஹ்ணாமி || ஏற்றுக்கொள்கின்றேன்.

என்று சொல்லி அந்நீரை பெற்று கால்களை சுத்தி செய்து கொள்ளவேண்டும். அப்போது புருடன்—:

ஓம் விராஜோ தோஹோ஽ஸி விராஜோ தோஹமஸீய மயி பாத்யாயை விராஜோதோஹ: ॥ (பாரஸ் 1-3).

ஏ ஜலமே! நீ பலவித சோபிதமான அன்னத்தையுடையவன். அத்துடனேயே நான் உன்னை உபயோகிப்பேன். இப்போது இந்நீர் எனக்கு கால்களை சுத்தம் செய்வதற்காக யேற்பட்டது.

இதைச் சொல்லவேண்டும். பிறகு காரியத்தலைவர் மற்றோர் நீர் நிறைந்த சிறிய பாத்திரத்தைப் பெண்ணின் கையில் கொடுக்க அதை வாங்கிய பெண்—:

ஓம் அர்கோ஽ர்கோ஽ர்க: ப்ரதிக்ருஹ்யதாம் ॥ முகம் கழுவ இந்நீரை யேற்றுக்கொள்ளுங்கள். என்று சொல்ல புருடன் அதை வாங்கிக்கொண்டே—:

ஓம் ப்ரதி க்ருஹ்ணாமி ॥ ஏற்றுக்கொள்கின்றேன்.

என்று சொல்லி அதை யேற்று முகத்தைச் சுத்திசெய்து

ஓம் ஆபஸ்த புஷ்மாபி: ஸர்வான்காமானவாப்னவானி। ஓம் சமுத்ரம் வ: ப்ரஹிணோமி ஸ்வாம் யோனிமபிகச்சத। அரிஷ்டாஸ்மாகம் வீரா மா பராஸேசி மத்பய: ॥ (பாரஸ் 1-3)

(பொ-ள்)—: ஏ நீரே! நான் உன்மூலமாய் என் காரியங்களைச் செய்துகொள்கின்றேன். நான் உன்னைக் கடலில் செலுத்துகிறேன். அங்கிருந்து நீ மேகரூபமாய் மாறி வா. நாங்கள் வியாதிகளில்லாதவர்களாவோம். உன்னிடமிருந்து அனேக பலன்களை நாங்கள் அனுபவிப்போம்.

இம்மந்திரம் சொல்லவேண்டும். பிறகு மறுபடி தடவிற்கு மேற்கில் போடப்பட்டிருக்கும் ஆசனத்தின்மேல்

கிழக்கு முகத்தனாயமரவேண்டும். அப்போது காரியகர்த்தர் மற்றோர் சிறிய பாத்திரத்தில் நீர் நிரப்பி அதில் ஓர் சிறு கரண்டியையு மிட்டுப் பெண்ணின் கையில் கொடுக்க அதைப் பெற்றுக்கொண்ட பெண்—:

ஓம் ஆசமனீயமாசமனீயமாசனீயம் ப்ரதிக்ருஹ்யதாம் ॥ குடிப்பதற்காக இந்நீரை யேற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லி புருடனுக்குக் கொடுக்க அதை வாங்கிக்கொண்டே புருடன்—:

ஓம் ப்ரதி க்ருஹ்ணாமி ॥ ஏற்றுக்கொள்கின்றேன்.

என்று சொல்லியதை யேற்று அதிலிருந்து வலதுகையில் நீரை விட்டுக்கொண்டு—:

ஓம் ஆமாகன் யசஸா ஸம்ஸ்ருஜ வர்சஸா। தம் மா குரு ப்ரியம் ப்ரஜானாமதிபதிம் பசூனாமரிஷ்டிம் தனூனாம் ॥ (பாரஸ் 1-3.)

(பொ-ள்)—ஏ நீரே! நீ எனக்காக இப்போது வந்திருக்கின்றாய். இப்போதென்னை கீர்த்திவானுக்கு. என்னை நீ புத்ரபௌத்ராதிகளுடன் சுகமாக வாழும்படியானவனாகவும், சோகாகிதனாகவும் செய்.

இதை மூன்றுமுறை சொல்லி மூன்றுமுறை நீருட்கொள்ளவேண்டும். பிறகு காரியகர்த்தர் சுவைக்கலப்புப் பாத்திரத்தை * பெண்ணின் கையில் கொடுக்க அதை வாங்கிக்கொண்டு பெண்—:

---

* சுவைக்கலப்பு என்பது தயிருடன் நெய்யையாகிலும், தேனையாகிலும் கலத்தல். 12 துலாயிடைக் தயிரில் 4 துலா நெய்யல்லது தேன் கலந்து வெங்கலப்பாத்திரத்தில் வைக்கவேண்டும்.

ஓம் மதுபர்கோமதுபர்கோ மதுபர்க: ப்ரதிக்ருஹ்யதாம் ॥ இதோ சுவைக்கலப்பை யேற்றுக்கொள்ளுங்கள். என்று சொல்லி புருடன் கையில் கொடுக்க புருடன் அதை வாங்கிக் கொண்டே—:

ஓம் ப்ரதிக்ருஹ்ணாமி ॥ பெற்றுக்கொள்கின்றேன்.

என்று சொல்லி வாங்கிக்கொண்டு—:

ஓம் மித்ரஸ்யத்வா சக்ஷுஷா ப்ரதீக்ஷே ॥ (பாரஸ் 1-3).

(பொ-ள்)—நான் உன்னை நன்மையளிக்கும் பார்வையுடன் பார்க்கின்றேன்.

இம்மந்திரம் சொல்லி சுவைக்கலப்பைத் தன் கண்களால் பார்த்து—:

ஓம் தேவஸ்ய த்வா ஸவிது:ப்ரஸவேऽச்விநோர் பாஹுப்யாம் பூஷ்ணோ ஹஸ்தாப்யாம் ப்ரதி க்ருஹ்ணாமி ॥ (யஜுர்-1-10).

(பொ-ள்) ஏ சுவைக்கலப்பே! பரமாத்மாவின் ஐஸ்வர்யமய ஸ்ருஷ்டியில் அஸ்வினி தேவர்களான புஜங்களாலும், பூஷனை கையாலும் நான் உன்னை பிடிக்கின்றேன். அஸ்வினி தேவர்கள் ஓடதியாதிகளுக்கு தானத்தாலும், சூர்யன் தன் கிரணங்களால் உலகத்திற்குக் கல்யாணத்தைச் செய்கின்றதைப் போலவே நானும் ப்ராணிகளுக்கு உபகாரம் செய்வதற்காக உன்னை ஸ்வீகரிக்கின்றேன்.

இம்மந்திரம் சொல்லி சுவைக்கலப்பை பாத்திரத்துடன் இடது கையிலெடுத்துக்கொண்டு—:

ஓம் பூர்புவ: ஸ்வ: மது வாதா ருதாயதே மது க்ஷரந்தி ஸிந்தவ: மாத்வீர்னஸ்ஸன்த்வோஷதீ: ॥ (யஜுர்-13-27).

ஓம் பூர்புவ: ஸ்வ: । மது நக்தமுதோஷஸோ மதுமத்பார்திவம் ரஜ: । மது த்யௌரஸ்து ந: பிதா ॥ (யஜுர்-13-28).

ஓம் பூர் புவ: ஸ்வ:। மது மான்னோ வனஸ்பதிர் மதுமாம் அஸ்து ஸூர்ய: । மாத்வீர்காவோ பவந்து ॥

(யஜுர்-13-29).

(பொ-ள்) பூர், புவ, ஸ்வ ஆகிய மூன்றுலகங்களின் ஸ்வாமீ! காற்றானது எங்களுக்கு அனுகூலமாக வீசட்டும். நதிகளில் நல்ல ஜலம் ப்ரவாகிக்கட்டும். ஓடதிகளில் சகலவியாதிகளும் விலகட்டும் (1). இரவும் பகலும் எங்களுக்கனுகூலமாகட்டும். மண், தூளி எங்களுக்கு அனுகூலமாகட்டும். மழையாதிகளால் உலகைபாலிக்கும் ஆகாயமும் எமக்கு அனுகூலமாகட்டும் (2). வனஸ்பதிகளும், சூர்யனும் எமக்கனுகூலமாகட்டும். பசுவாதி மிருகங்களும் எமக்கனுகூலமாகட்டும் (3).

இம்மந்திரம் சொல்லி சுவைக்கலப்பைக் கண்களால் பார்க்கவேண்டும்—:

ஓம் நம: ஸ்யாவாஸ்யாயான்னஸனே யத்த ஆவித்தம் தத்தே நிஷ்க்ருன்தாமி ॥ (பாரஸ்-1-3-9).

(பொ-ள்) காலமுகமொத்த ஜடாக்கினியே! உனக்கு வந்தனம். அன்னத்திற்குச் சமமான உன் புசிப்பு இந்த சுவைக்கலப்பில் உள்ள உணவாக இருக்கின்றேன்.

இம்மந்திரம் சொல்லி வலது கையின் பெருவிரல் ஆள் காட்டி விரல்களால் மூன்று முறை சுவைக்கலப்பை எடுத் தருந்தவேண்டும். மறுபடி அதிலிருந்து—:

ஓம் வஸவஸ்த்வா காயத்ரேண சந்தஸா பக்ஷயந்து ॥ (பாரஸ்-1-3). வசுமறைமாணவன் காயத்ரி சந்தஸ்ஸுடன் அருந்துவானாக.

இம்மந்திரத்தால் கிழக்குத் திசையிலும்;

ஓம் ருத்ராஸ்த்வா த்ரைஷ்டுபேன ச்சந்தஸா பக்ஷயந்து ॥ (பாரஸ்-1-3). ருத்ர மறைமாணவன் த்ரைஷ்டுப் சந்தஸ்ஸுடன் இதை அருந்துவானாக—;

இம்மந்திரத்தால் தெற்குத் திசையிலும்;

ஓம் ஆதித்யாஸ் த்வா ஜாகதேனச்சந்தஸாபக்ஷயந்து ॥ (பாரஸ்-1-3). அதித்ய மறைமாணவன் ஜகதீ சந்தஸ்ஸுடனிதை யருந்தட்டும்.

இம்மந்திரத்தால் மேற்குத் திசையிலும்;

ஓம் விஸ்வே த்வா தேவா, ஆனுஷ்டுபேன சந்தஸா பக்ஷயந்து ॥ (பாரஸ்-1-3). சகல வித்வான்களும் அனுஷ்டுப் சந்தஸ்ஸுடன் இதை அருந்துவார்களாக.

இம்மந்திரத்தால் வடக்கு திசையிலும் கொஞ்சம் கொஞ்சமெடுத்துத் தெளிக்கவேண்டும்.

ஓம் பூதேப்யஸ் த்வா பரிக்ருஹ்ணாமி ॥
(ஆஶ்வலா-1-24-15.)

(பொ-ள்) ஏ சுவைக்கலப்பே! சகல ப்ராணிகளுக்குமாகாரமாகும் உன்னை நான் ஸ்வீகரிக்கின்றேன். என்றால் உன்னை நான் ஒருவனே சாப்பிட்டுவிடமாட்டேன்.

இம்மந்திரம் சொல்லி மூன்று முறை மறுபடி சுவைக் கலப்பை கலக்கவேண்டும். பிறகு மிகுதியுள்ளதை மூன்று பங்குகள் செய்து மூன்று வெண்கலப் பாத்திரத்திலிட்டுத் தன் எதிரில் வைத்துக்கொண்டு—:

ஓம் யன்மதுனோ மதவ்யம், பரமம் ரூபமன்னாத்யம் । தேனாஹம் மதுனோ மதவ்யேன பரமேண ரூபேணான் னாத்யேன பரமோ மதவ்யோऽன்னாதோऽஸானி ॥ (பாரஸ்-1-3).

(பொ-ள்) சுவைபொருந்தி அருந்தயோக்யமான அன்னத்தின் மேலான ரூபத்தின் வழியாய் நான் மேலானமதுர ஸ்வபாவத்தனாகவும், விருத்தியையடைய அன்னமருந்துபவனாகவும் ஆவேன்.

இம்மந்திரத்தை மூன்று முறை சொல்லி மூன்று கிண்ணங்களிலுள்ளவைகளை அருந்தவேண்டும். மிகுந்ததை தன் வேலைக்காரனுக்குக் கொடுத்துவிடலாம். அல்லது நீரில் கலந்துவிடலாம். பிறகு—:

ஓம் அம்ருதாபிதானமஸி ஸ்வாஹா ॥ (ஆஸ்வலா-1-24-21)

ஓம், ஸத்யம் யஶ: ஶ்ரீர்மயி ஶ்ரீ:ஶ்ரயதாம் ஸ்வாஹா ॥
(ஆஸ்வலா-1-24.22.)

இவ்விரண்டுமந்திரங்களாலு மிரண்டு நீருட்கொளல் செய்து, அவயவங்களைத் தொடுதல் செய்யவேண்டும். பிறகு பெண்—:

ஓம் கௌர் கௌர் கௌ: ப்ரதிக்ருஹ்யதாம் ॥ இப் பசுவை யேற்றுக்கொள்ளுங்கள்.

இம்மந்திரத்தால் கூடியவரை புருடனுக்கு கோதானுதிகளைச் செய்யவேண்டும். அப்போது புருடன்—:

ஓம் ப்ரதிக்ருஹ்ணாமி ॥ ஏற்றுக்கொள்கின்றேன்.

என்று சொல்லி அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். பிறகு தம்பதிகளை மற்றோரிடத்தில் அழைத்துச் சென்று புருடனை கிழக்கு முகத்தனகவும் அவனெதிராக மேற்கு முகத்தளாகப் பெண்ணையும் உட்காரவைத்து, கார்யத்தலைவர் வடக்கு முகத்தராயமர்ந்து—:

ஓம் அமுக * கோத்ரோத்பன்னுமிமாமமுகநாம்னீ ‡ மலங்க்ருதாம் கன்யாம் ப்ரதிக்ருஹ்ணாது பவான் ॥ இக்கோத்திரத்தில் பிறந்த இப்பெயருடைய இவ்வலங்காரமான கன்னிகையை ஏற்றுக்கொள்ளுங்கள்.

இம்மந்திரம் சொல்லி புருடனின் வலது கையில் பெண்ணின் வலதுகை உள்ளங்கையை வைக்கவேண்டும். அப்போது புருடன்—:

ஓம் ப்ரதிக்ருஹ்ணாமி ॥ ஏற்றுக்கொள்கின்றேன்

என்று சொல்லி

---

* அமுக என்னுமிடத்திலே பெண்ணின் கோத்திரத்தைச் சொல்லவும்.

‡ அமுகநாம்னீ யென்னுமிடத்தில் பெண்ணின் பெயரை இரண்டாம் வேற்றுமை உருபில் சொல்லவேண்டும்.

ஓம் ஜராங்கச்ச பரிதத்ஸ்வ வாஸோ பவா க்ருஷ்டீனாமபிஶஸ்திபாவா । ஶதம் ச ஜீவ ஶரத: ஸுவர்சா ரயிம்ச புத்ரானனு ஸம்வ்யயஸ்வாயுஷ்மதீதம் பரிதத்ஸ்வ வாஸ: ॥

(பாரஸ்-1-4).

(பொ-ள்) ஏ கன்னீ! நீ யென்னுடன் கிழவயதுவரை வசித்திரு. நீ இவ்வாடையைத் தரித்துக்கொள். நீ மனிதர்களின் மத்தியில் தோஷத்தை விலக்குபவள். நீ 100 வருடங்கள்வரை ப்ரகாசத்துடன் உயிர் வாழ். புத்திர சம்பத்துக்களைப்பெறு. ஏ ஆயுஷ்மதீ! இவ்வாடையை அணிந்துகொள்.

இம் மந்திரம் சொல்லி பெண்ணுக்கு நல்லாடையைக் கொடுக்கவேண்டும். பிறகு—:

ஓம் யா அக்ருன்தன்னவயன் யா அதன்வத யாச்ச தேவீஸ்தன்தூனபிதோ ததன்த । தாஸ்த்வா தேவீர்ஜரஸே ஸம்வ்யயஸ்வாயுஷ்மதீதம் பரிதத்ஸ்வவாஸ: ॥ (பாரஸ்-1-4.)

(பொ-ள்) இவ்வாடையை நூலைச்சேர்த்து, தரியிலிட்டு நெய்து துணியாகச் செய்யும் பெண்கள் உனக்காக 100 வருடங்கள்வரை இதேமாதிரி ஆடைகளைத் தயார் செய்துகொண்டு வருவார்களாக. ஏ ஆயுஷ்மதீ! நீ இவ்வாடையை அணிந்துக்கொள்.

இம் மந்திரம் சொல்லி பெண்ணுக்கு உபவஸ்த்திரத்தைப் புருடன் அளிக்கவேண்டும். அதைப் பெண் பூணூலைப்போல தரித்துக்கொள்ளவேண்டும்.

ஓம் பரிதாஸ்யை யஶோதாஸ்யை தீர்காயுத்வாய ஜரதஷ்டிரஸ்மி । ஶதம் ச ஜீவாமி ஶரத: புருசீ ராயஸ் போஷமபிஸம்வ்யயிஷ்யே ॥ (பாரஸ்-2-6).

(பொ-ள்) சரீர சுகத்திற்காகவும், புகழ், கீர்த்திக்காகவும் இவ்வாடையை நான் அணிகின்றேன். என் கிழ வயதுவரை வியாதியில்லாது இருப்பேன். 100 வருடங்கள் வரை வாழ்ந்திருந்து அனேக சந்தானங்களையும் செல்வத்தையும் பெறுவேனாகவும்.

இம்மந்திரம் சொல்லி புருடன் தன் கீழாடையை அணிந்துகொண்டு—:

ஓம் யஶஸா மா த்யாவர்ப்ருதிவீ யஶஸேன்த்ரா ப்ருஹஸ்பதீ । யஶோ பகஸ்ச மா விந்தத்யஶோ மா ப்ரதிபத்யதாம் ॥ (பாரஸ்-2-6).

(பொ-ள்) எனக்கு பூமியும் ஆகாயமும் கீர்த்தியை அளிக்கட்டும். இந்திரனும் ப்ருஹஸ்பதியுமெனக்கு கீர்த்தியை யளிக்கட்டும். எனக்கு செல்வமும் கீர்த்தியுமுண்டாகட்டும். நான் கீர்த்திவானாவேனாகவும்.

இம் மந்திரம் சொல்லி மேலாடையை தரிக்கவும். இவ்வாறே பெண்ணும் ஆடைகளணியவேண்டும். இச்சமயத்தில் தடவினிலிருக்கும் நெருப்பை மறுபடி நன்கு எரியச் செய்துகொள்ளவேண்டும். நெய்யை உருக்கி வைத்துக் கொள்ளவேண்டும். புருடனைச் சேர்ந்த ஒருவன் நல்லாடைகளணிந்து சுத்த ஜலம் நிறைந்த ஓர் கலசத்தை யெடுத்துக் கொண்டு தடவினிற்கு தெற்கிலே வடக்குமுகத்தனாய் தன்

எதிரில் அக்கலசத்தை வைத்துக்கொண்டு சடங்குகள் முடியும் வரை உட்கார்ந்திருக்கவேண்டும். இதே மாதிரி புருடனைச் சேர்ந்த மற்றொருவன் கையில் தடியைப்பிடித்துக்கொண்டு தடவினிற்கு வடக்கில் காரியங்கள் முடியும்வரை தெற்கு முகத்தனாய் உட்கார்ந்திருக்கவேண்டும். இதேபோல் பெண்ணின் சகோதரன் அல்லது தமையன், மாமன்மகன் முதலிய யாராவது ஒருவன் ஓர் முறத்திலே தானியங்களையும் (பொரி) சமீ மரத்தின் இளங்கொழுந்துகளையுங் கலந்து வைத்துக்கொண்டு தடவினிற்கு மேற்கில் கிழக்கு முகத்தனா யமர்ந்திருக்க வேண்டும். பிறகு தடவினிற்கருகில் ஓர் நல்ல ஆசனமிட்டு வைக்கவேண்டும். ஓர் சுத்தமான கல்லையையும் ஓர் பக்கம் தயாராக வைத்திருக்கவேண்டும். பிறகு புது ஆடைகளை அணிந்துகொண்ட தம்பதிகளை காரியத்தலைவர் அழைத்துவர வேண்டும். அப்போது புருடனும் பெண்ணும்—:

ஓம் ஸமஞ்ஜந்து விஸ்வே தேவா: ஸமாபோ ஹ்ருதயானி நௌ ॥ ஸம் மாதரிஸ்வா ஸம் தாதா ஸமு தேஷ்ட்ரீ ததாது நௌ ॥ (ருக்-10-85-47).

(பொ-ள்) ஏ (விஸ்வேதேவா:) இம்மண மண்டபத்தி லமர்ந்திருக்கும் வித்வான்களே! நாங்களிருவரும் (ஸமஞ்ஜந்து) இல்லற தர்மத்தை அன்புடன் நடத்த ஒருவரையொருவர் அங்கீகரித்துக்கொள்கின்றோம். (நௌ) எங்களிருவரின் (ஹ்ருதயானி) இருதயங்களும் (ஆப:) ஜலத்திற்குச் சமமாய் (ஸம்) அமைதியடைந்து கலந்திருக்கும் (மாதரிஸ்வா) ப்ராணவாயு எங்களுக்குப் பிரியமானதைப் போலவே (ஸம்) ஒருவருக்கொருவர் பிரியத்துடன் வசிப்போம் (தாதா) தரி

கும்படியான பரமாத்மா சகலத்திலும் வியாபித்துத் தரித்திருப்பதைப்போல நாங்களிருவரும் ஐக்யப்படுவோம். (ஸமுதேஷ்ட்ரீ) உபதேசிகளான சுருதியாளர்களிடம் ப்ரீதி செலுத்துவதைப் போலவே (நௌ) எங்களிருவரின் ஆத்மாவும் கலந்து இடத்தைப்பெற்று (ததாது) ஒன்றுடனொன்று தரித்திருக்குமாக.

இம்மந்திரத்தைச் சொல்லவேண்டும். பிறகு பெண்ணின் வலது கையை புருடன் வலதுகையால் பிடித்துக்கொண்டு—

ஓம் யதைஷி மனஸா தூரம் திசோऽனுபவமானோ வா। ஹிரண்யபர்ணோ வைகர்ண: ஸத்வா மன்மனஸாம் கரோது அஸௌ ॥ (பாரஸ்-1-4-16).

(பொருள்) (அஸௌ) இவ்விடத்தில் பெண்ணின் பெயரைச் சொல்லவேண்டும். ஏ வரானனே-வரானன! காற்றையும் ஜலத்தையும் கிரகிக்கும்படியான சூர்யன் தூரத்திலுள்ளவைகளையும் கிரணங்கள் மூலமாகச் சென்றடைவதைப்போல நீயும் ப்ரேமையுடன் என்னை வந்தடைகின்றாய். உனக்கு பரமேஸ்வரன் எனக்கனுகூலமான மனதை யளிப்பாராக. அவ்வாறே உன் மனத்தினனுகூலமாய் என் மனதையும் செய்வாராக.

இம் மந்திரத்தைச் சொல்லிக்கொண்டே கைப்பிடியுடனிருவரும் மண்டபஸ்தானத்திற்கு வந்து—:

ஓம் பூர் புவ: ஸ்வ:। அகோர சக்ஷுரபதிக்ன்யேதி சிவா பசுப்ய: ஸுமனா: ஸுவர்சா:। வீர ஸூர்தே வ்ருகாமா ஸ்யோனா சன்னோ பவ த்விபதே சம் சதுஷ்பதே ॥

(பொருள்)—: ஏவரானனே! பதிக்கு விரோதமில்லாதவளாகிய நீ யதார்த்தக் காப்பாற்றுதலைப் புரிபவள், ப்ராணதாதா, சகல துக்கங்களையும் விலக்குபவன், ஸ்வயம் ப்ரகாசனாய் சகல சுகங்களையுமீபவனாகிய பரமாத்மாவின் கிருபையினாலும், உன்னுடைய உத்தம நடத்தைகளாலும் பிரியப்பார்வையுடையவளாய் ஆகு. ஏமங்களஸ்வரூபி! சகல ஜீவர்களுக்கும் சுகத்தையளித்து, பவித்திரமான அந்தக்கரணங்களை யுடைய சுத்தத்தாலும், உத்தமகுண கர்மஸ்வபாவத்தாலும், வித்தையாலும் ப்ரகாசமடையும். வீர புத்திரர்களை பெறக்கூடியவளே! நீ எஜமானன் வேலைகளைச் சரிவரச் செய்துகொண்டு சுகரூபியாய் எங்களுக்கும் சுகத்தையளித்து, பசு முதலான ஜீவர்களுக்கும் சதா சுகத்தை யளித்துக்கொண்டு வசித்து வருவாயாக.

ஓம் பூர் புவ: ஸ்வ:। ஸா ந: பூஷா சிவதமாமைரய ஸா ந ஊரு உசதீ விஹர। யஸ்யாமுசந்த: ப்ரஹராம சேபம் யஸ்யாமு காமா பஹவோ நிவிஷ்ட்யை ॥ (ருக்-10-85-44).

(பொருள்)—: ஜகத்போஷகபரமாத்மா நமக்கு நன்மையை யளிக்கும் பெண்ணை யளிப்பாராக. புத்திரவிருப்பத்துடனேயே நாம் ஜனனேந்த்ரிய வியாபாரத்தை நடத்துவோம்.

இதனால் நம் பலவித விருப்பங்களும் நிறைவேறும்.

இன்னான்கு மந்திரங்களையும் புருடன் சொல்லி பிறகு தடவைச் சுற்றிவந்து மேற்குத் திசையில் கிழக்கு முகத்தவர்களாய் புருடனின் வலது பக்கத்தில் பெண்ணும் பெண்ணின் இடது பக்கத்தில் புருடனுமாக முன்யிட்டுள்ள ஆசனத்திலமர்ந்தபின் பெண்—:

ஓம் ப்ர மே பதியான: பன்தா: கல்பதாகும் ஶிவா அரிஷ்டா பதிலோகம் கமேயம் ॥ (மங்-ப்ராம்-1-1-3).

(பொருள்)—: என் பதியின்வழியே என் வழியாகட்டும். ஓர் குற்றமும் துன்பமு மின்றி என் புருடன் வீட்டை நான் சேருவேனுகவும்.

இம் மந்திரத்தைச் சொல்லவேண்டும். தடவினிற்குத் தெற்கில் வடக்கு முகமாய் புரோகிதனமரவேண்டும். பிறகு (ஓம் அம்ருதோப) எனுமாதி மூன்று மந்திரங்களால் மூன்று நீருட்கொளல் செய்து, கை, முகம் முதலியவைகளையும் கழுவிக்கொண்டு—பிறகு நெருப்பு மூட்டல், சமிதையிடல், நீர் தெளித்தல் முதலியவைகளைச் செய்து * "ஆகாரவாஜ்ய பாகாகுதிகள்" 4-ன்கும், "வ்யாஹ்ருத்யாகுதிகள்" 4-ன்கும், "அஷ்டாஜ்யாகுதிகள்" 8-ம் அளித்து பின் பெண் தன் வலது கையால் புருடனின் வலது புஜத்தைத் தொட்டுக் கொண்டு ம் பக்கத்துள்ள (பூர்புவஸ்வ: அக்ன ஆயூம்ஷி) எனுமாதி 4-ன்கு மந்திரங்களால் 4-ன்கு நெய்யாகுதிகள் செய்து—:

ஓம் பூர் புவ: ஸ்வ: । த்வமர்யமாபவஸி யத்கனீனாம் நாம ஸ்வாதாவன் குஹ்யம் பிபர்ஷி । அஞ்ஜந்தி மித்ரம் ஸுதிதம் ந கோபிர் யத்தம்பதீ ஸமனஸா க்ருணோஷி ஸ்வாஹா ॥ இத மக்னயே இதன்னமம ॥ (ருக் 5-3-2).

(பொருள்)—: அமிர்தத்திற்குச் சமமான அன்னத்தை தரிக்கும் ஏ பரமாத்மா! கன்னிகைகளை நியமப்படி வைத்தி

* எல்லாக்காரியங்களையும் தம்பதிகளிருவரும் புரோகிதரும், கார்யத்தலைவரும் செய்யவேண்டும்.

ருப்பவனும், உலகை மறைமுகமாயிருந்து காப்பாற்றுபவனும் நீயே. இவ்வார்த்தை மிகுந்த ப்ரசித்தமடைந்ததே யாகும். பதி பத்னிகளின் மனதை ஒரேவிதமாகச் செய்துகொள்வதற்காக இவ்வாகுதிகள் மூலம் உன்னை ஆராதிக்கிறோம்.

இம் மந்திரம் சொல்லி ஐந்தாவது ஆகுதியைக் கொடுக்க வேண்டும். பிறகு—:

ஓம் ருதாஷாட் ருததாமாக்னிர்கந்தர்வ: । ஸ ந இதம் ப்ரஹ்ம க்ஷத்ரம் பாது தஸ்மை ஸ்வாஹா வாட் । இதம் ருதாஸாஹே ருததாம்னே அக்னயே கந்தர்வாய இதன்னமம ॥

(பொருள்)—: அக்னி ப்ரக்ருதிநியமத்தைச் சகிப்பவனாகும். ப்ரக்ருதியின் தனித்தனி பதார்த்தங்களிலும் அறியப் படுபவன். அவனே உலகத்தைத் தரித்திருக்கின்றான். அவன் நமக்காக ப்ராம்ம, க்ஷாத்ர தர்மங்களை ரட்சிக்கட்டும். இவ்வாகுதியை அவனுக்காக நாம் அளிக்கின்றோம்.

ஓம் ருதாஷாட் ருததாமாக்னிர் கந்தர் வஸ்தஸ்யௌஷதயோऽப்ஸரஸோ முதோ நாம । தாப்யாம் ஸ்வாஹா ॥ இத மோஷதிப்யோऽப்ஸரோப்யோ முத்ப்ய: இதன்ன மம ॥

(பொருள்)—: மேலே சொன்ன அக்னியின் காரியசாதனமானதும், ப்ரசன்னமானதும் ஓஷதிகளாகும். அதற்காக இவ்வாகுதியாகும்.

ஓம் ஸம்ஹிதோ விஶ்வஸாமா ஸூர்யோ கந்தர்வ: । ஸ ந இதம் ப்ரஹ்ம க்ஷத்ரம் பாது தஸ்மை ஸ்வாஹா வாட் ॥ இதம் ஸம்ஹிதாய விஶ்வஸாம்னே ஸூர்யாய கந்தர்வாய இதன்ன மம ॥

(பொருள்)—: இரவு பகல்களின் சந்திப்புக்காரணன், உலகில் அமைதியை யளிப்பவனாகிய சூர்யன் உலகைத் தரித்திருக்கின்றான். அவன் நமக்காக ப்ரம்ம, க்ஷத்ர தர்மங்களைக் காப்பாற்றட்டும்.

ஓம் ஸகும் ஹிதோ விஸ்வஸாமா ஸூர்யோ கந்தர்வஸ் தஸ்ய மரீசயோऽப்ஸரஸ: । ஆயுவோநாம தாப்ய: ஸ்வாஹா ॥ இதம் மரீசிப்யோऽப்ஸரோப்ய ஆயுப்ய: இதன்ன மம ॥

(பொருள்)—: முன் சொன்ன சூரியனின் காரியசாதனமானது கிரணங்களாகும். ஆயுள்வளர்ச்சியின் குணமுடையததுவாகும்.

ஓம் ஸுஷும்ண: ஸூர்யரஸ்மிஸ்சந்த்ரமா கந்தர்வ: । ஸ ந இதம் ப்ரஹ்ம க்ஷத்ரம் பாது தஸ்மை ஸ்வாஹா வாட் ॥ இதம் ஸுஷும்ணாய, ஸூர்யரஸ்மயே சந்த்ரமஸே கந்தர்வாய இதன்ன மம ॥

(பொருள்)—: சூரியனால் ப்ரகாசத்தையடையும் சுகமளிக்கும் சந்திரன் பூமியைத் தரித்திருக்கின்றான். அவன் நமக்காக ப்ரம்ம, க்ஷத்ர தர்மங்களைக் காப்பாற்றட்டும்.

ஓம் ஸுஷும்ண: ஸூர்யரஸ்மிஸ்சந்த்ரமா கந்தர்வஸ்தஸ்ய நக்ஷத்ராண்யப் ஸரஸோ பேகுரயோ நாம தாப்ய: ஸ்வாஹா ॥ இதம் நக்ஷத்ரேப்யோऽப்ஸரோப்யோ பேகுரிப்ய: இதன்னமம ॥

(பொருள்)—: குணசம்பன்னயுக்த சந்திரனின் காரிய சாதனமானது நட்செத்திரங்களாகும். இவ்வாகுதி அதற்காகவாகும்.

ஓம் இஷிரோ விஸ்வவ்யசா வாதோ கந்தர்வ: । ஸ ந இதம் ப்ரஹம க்ஷத்ரம் பாது தஸ்மை ஸ்வாஹா வாட் । இதமிஷிராய விஸ்வவ்யசஸேவாதாய கந்தர்வாய இதன்னமம ॥

(பொருள்)—: அன்னத்தை வளர்ப்பவன் கமனசீலனான வாயு உலகைத் தரித்திருக்கின்றான். அவன் நமக்காக ப்ரம்ம, க்ஷத்ர தர்மங்களைக் காப்பாற்றட்டும்.

ஓம் இஷிரோ விஸ்வவ்யசா வாதோ கந்தர்வஸ்தஸ்யாபோ அப்ஸரஸ ஊர்ஜ்ஜோநாம: । தாப்ய: ஸ்வாஹா ॥ இதமத்ப்யோ அப்ஸரோப்ய ஊர்க்ப்ய: இதன்ன மம ॥

(பொருள்)—: முன் சொன்ன வாயுவின் காரிய சாதனம் ஜலமாகும். அதில் பலத்தை யளிக்கும் குணமிருக்கிறது.

ஓம் புஜ்யுஃ ஸுபர்ணோ யக்ஞோ கந்தர்வ: । ஸ ந இதம் ப்ரஹ்ம க்ஷத்ரம் பாது தஸ்மை ஸ்வாஹாவாட் ॥ இதம் புஜ்யவே ஸுபர்ணாய யக்ஞாய கந்தர்வாய இதன்ன மம ॥

(பொருள்)—: ஆகுதிகளை யருந்துபவன், ஞானசம்பன்னனான யக்ஞன் பூமியைத் தரித்திருக்கின்றான். அவன் நமக்காக ப்ரம்ம, க்ஷத்ர தர்மங்களைக் காப்பாற்றட்டும்.

ஓம் புஜ்யு: ஸுபர்ணோ யக்ஞோ கந்தர்வஸ்தஸ்ய தக்ஷிணா அப்ஸரஸ: ஸ்தாவாநாம । தாப்ய: ஸ்வாஹா ॥ இதம் தக்ஷிணாப்யோ அப்ஸரோப்ய; ஸ்தாவாப்யஃ இதன்ன மம ॥

(பொருள்)—: குணசம்பன்ன யக்ஞத்தின் கார்ய சாதனம் தக்ஷிணை (ஆகுதி) யாகும். அது துதிபூர்வமாய் அளிக்கப்படுகிறது.

ஓம் ப்ரஜாபதிர் விஸ்வகர்மா மனோ கந்தர்வ: | ஸ ந இதம் ப்ரஹ்ம க்ஷத்ரம் பாது தஸ்மை ஸ்வாஹா வாட் | இதம் ப்ரஜாபதயே விஸ்வகர்மணே மனஸே கந்தர்வாய இதன்ன மம ||

(பொருள்)—: ப்ரஜைகளுக்குப் பதியும், காமங்களைப் பிரேரேபிப்பதுமான மனது உலகைத் தரித்திருக்கின்றது. அது நமக்காக ப்ரம்ம, க்ஷத்ர தர்மங்களைக் காப்பாற்றட்டும்.

ஓம் ப்ரஜாபதிர் விஸ்வகர்மா மனோ கந்தர்வஸ்தஸ்ய ருக் ஸாமான்யப்ஸரஸ ஏஷ்டயோ நாம தாப்ய: ஸ்வாஹா || இதம் ருக்ஸாமப்யோऽப்ஸரோப்ய ஏஷ்டிப்ய: இதன்ன மம ||

(பொருள்)—: முன்சொன்ன மனத்தின் கார்யசாதனம் ருக், சாம மந்திரங்களாகும். இவைகள் வேள்வியில் உபயோகப்படுகின்றன.

இவ்வாறு ஆகுதிகள் கொடுத்தபின் கீழ்வரும் மந்திரங்களைச் சொல்லி ஆகுதிகள் கொடுக்கவேண்டும்—:

ஓம் சித்தம் ச ஸ்வாஹா || இதம் சித்தாய இதன்ன மம || ஓம் சித்திஸ்ச ஸ்வாஹா || இதம் சித்யை இதன்ன மம || ஓம் ஆகூதம்ச ஸ்வாஹா || இதமாகூதாய இதன்ன மம || ஓம் ஆகூதிஸ்ச ஸ்வாஹா || இதமாகூத்யை இதன்ன மம || ஓம் விக்ஞாதஞ்ச ஸ்வாஹா || இதம் விக்ஞாதாய இதன்ன மம || ஓம் விக்ஞாதிஸ்ச ஸ்வாஹா || இதம் விக்ஞாத்யை இதன்ன மம || ஓம் மனஸ்ச ஸ்வாஹா || இதம் மனஸே இதன்ன மம || ஓம் ஸக்கரீஸ்ச ஸ்வாஹா || இதம் ஸக்கரீப்ய: இதன்ன மம || ஓம் தர்ஸஸ்ச ஸ்வாஹா || இதம் தர்சாய இதன்ன மம || ஓம்

பௌர்ணமாஸம் ச ஸ்வாஹா || இதம் பௌர்ணமாஸாய இதன்ன மம || ஓம் ப்ருஹஸ்ச ஸ்வாஹா || இதம் ப்ருஹதே இதன்ன மம || ஓம் ரதன்தரஞ்ச ஸ்வாஹா || இதம் ரதன்தராய இதன்ன மம ||

(பொருள்)—: சித்தம், சித்தசக்தி, கர்மேந்திரியங்கள், அவைகளின் சக்தி, விக்ஞானம், விக்ஞானசக்தி, மனம், மனச்சக்தி, அமாவாஸ்ய, பௌர்ணமாஸ யாகம், ப்ருஹத், ஆகிய இச்சகலத்திற்காகவுமாகுதி யளிக்கின்றேன். ஏனென்றால் இச்சகலமும் தம்பதிக்களுக்கனுகூலமாயிருக்கவேண்டும்.)

ஓம் ப்ராஜாபதிர் ஜயானிந்த்ராய வ்ருஷ்ணே ப்ராயஸ் சதுக்ர: ப்ரதனா ஜயேஷு | தஸ்மை விஸ: ஸமனமன்த ஸர்வா: ஸ உக்ர: ஸ இஹவ்யோ பபூவ ஸ்வாஹா || இதம் ப்ரஜாபதயே ஜயானிந்த்ராய இதன்ன மம ||

(பொருள்)—: ப்ராஜாபதி (கடவுள்) யானவர் விரும்பிய ஆசைகளை வருஷிக்கும் இந்திர (ஜீவாத்மா) னுக்கு ஜயா எனும் பெயருடைய மந்திரம் அளித்தார். அதனால் அதைப் பெற்றவன் தன் சத்ருக்களையும், எதிரியின் சேனைகளையும், பலத்துடன் விரட்டி ஜயம்பெறும் திறமை பெறுகின்றான். இதற்காகவே அப்பரமனைச் சகலரும் துதிக்கின்றார்கள். ஏனென்றால் அது உக்ரமும் அணையப்பெரும் சமர்த்தும் உடையதாயிருக்கிறது.

“ஜயா ஹோமம்” எனுமிதைச் சொல்லி யாகுதி அளித்த பின் “அப்யாதன் ஹோமம்” எனும் கீழ்வரும் மந்திரம் சொல்லி ஆகுதி யளிக்கவேண்டும்—:

ஓம் அக்னிர் பூதானுமதிபதி: ஸ மாவத்வஸ்மின் ப்ரஹ்மண்யஸ்மின் க்ஷத்ரேऽஸ்யாமாசிஷ்யஸ்யாம் புரோதாயாமஸ்மின் கர்மண்யஸ்யாம் தேவஹூத்யாம் ஸ்வாஹா ॥ இதமக்னயே பூதானு மதிபதயே இதன்ன மம ॥.

(பொருள்)—: பஞ்சமகா பூதங்களிலும் முக்யமானது அக்னியாகும். அது இந்த ப்ராமண சமூகத்திலும், இந்த க்ஷத்ரிய சமூகத்திலும், இந்த ப்ரார்த்தனையிலும், இப்பெண்ணுடன் சேரும் விஷயத்திலும், இவ் யாகக்காரியத்திலும், வித்வான்களின் இக் கூட்டத்திலும் என்னைக் காப்பாற்றுமாக.

ஓம் இந்த்ரோ ஜ்யேஷ்டானு மதி பதி: ஸமாவத்வஸ்மின் ப்ரஹ்மண்யஸ்மின் க்ஷத்ரேऽஸ்யமாசிஷ்யஸ்யாம் புரோதாயாயஸ்மின் கர்மண்யஸ்யாம் தேவஹூத்யாம் ஸ்வாஹா ॥ இதமிந்த்ராய ஜ்யேஷ்டானு மதி பதயே இதன்ன மம ॥

(பொருள்)—: ஜ்யேஷ்டர்களில் (மகாசக்திகளில்) இந்திரன் முக்யமானவன்.— முன்போல்

ஓம் யம: ப்ருதிவ்யாதி பதி:—ஸ்வாஹா ॥ இதம் யமாய ப்ருதிவ்யா அதிபதயே இதன்ன மம ॥

(பொருள்)—: யமன் பூவுலகின் எஜமானன் முன்போல்

ஓம் வாயுரந்தரிக்ஷஸ்யாதிபதி:—ஸ்வாஹா ॥ இதம் வாயவே அந்தரிக்ஷஸ்யாதிபதயே இதன்ன மம ॥

(பொருள்) வாயு ஆகாயத்தின் எஜமான்—முன்போல்.

ஓம் ஸூர்யோ திவோதிபதி:—ஸ்வாஹா ॥ இதம் ஸூர்யாய திவோதிபதயே இதன்ன மம ॥

(பொருள்)—: சூர்யன் ஒளி உலகின் எஜமான்— முன்போல்.

ஓம் சந்த்ரமா நக்ஷத்ராணுமதிபதி:—ஸ்வாஹா ॥ இதம் சந்த்ரமஸே நக்ஷத்ராணுமதிபதயே இதன்ன மம ॥

(பொருள்)—: சந்திரன் நட்செத்திரங்களின் எஜமான்— முன்போல்.

ஓம் ப்ருஹஸ்பதிர் ப்ரஹ்மணோऽதிபதி:— ஸ்வாஹா ॥ இதம் ப்ருஹஸ்பதயே ப்ரஹ்மணோதி பதயே இதன்ன மம ॥

(பொருள்)—: ப்ருஹஸ்பதி சகல ப்ரம்மாண்டங்களின் எஜமானன்—: முன்போல்.

ஓம் மித்ர: ஸத்யானுமதிபதி:—ஸ்வாஹா ॥ இதம் மித்ராய ஸத்யானுமதிபதயே இதன்ன மம ॥

(பொருள்)—: மித்திரன் சத்தியத்தின் எஜமானன்— முன்போல்.

ஓம் வருணோऽபாமதிபதி:—ஸ்வாஹா ॥ இதம் வருணாயாபாமதிபதயே இதன்ன மம ॥

(பொருள்)—: வருணன் ஜலத்தின் எஜமான்—முன்போல்.

ஓம் ஸமுத்ர: ஸ்ரோத்யானுமதிபதி:—ஸ்வாஹா ॥ இதம் ஸமுத்ராய ஸ்ரோத்யானுமதிபதயே இதன்ன மம ॥

(பொருள்)—: கடல் நதிகளின் எஜமான்—முன்போல்.

ஓம் அன்னம் ஸாம்ராஜ்யானுமதிபதி:—ஸ்வாஹா || இதமன்னாய ஸாம்ராஜ்யானு மதிபதயே இதன்ன மம ||

(பொருள்) அன்னம் சாம்ராஜ்யங்களின் எஜமான்—முன்போல்.

ஓம் ஸோமஓஷதீனுமதிபதி:—ஸ்வாஹா || இதம் ஸோமாய ஓஷதினுமதிபதயே இதன்ன மம ||

(பொருள்)—: ஸோமரசம் ஓடதிகளின் எஜமான்—முன்போல்.

ஓம் ஸவிதா ப்ரஸவானுமதிபதி:—ஸ்வாஹா || இதம் ஸவித்ரே ப்ரஸவானுமதி பதயே இதன்ன மம ||

(பொருள்) ஸவிதா (உற்பவக்காரணக் கடவுள்) சகல உற்பத்திகளுக்கும் எஜமான்—முன்போல்.

ஓம் ருத்ர: பஶூனுமதிபதி:—ஸ்வாஹா || இதம் ருத்ராய பஶூனுமதிபதயே இதன்ன மம ||

(பொருள்) ருத்திரன் பசுக்களின் எஜமான்—முன்போல்.

ஓம் த்வஷ்டா ரூபாணுமதிபதி:—ஸ்வாஹா || இதம் த்வஷ்ட்ரே ரூபாணுமதிபதயே இதன்ன மம ||

(பொருள்) த்வஷ்டன் ரூபங்களின் எஜமான்—முன்போல்.

ஓம் விஷ்ணு பவதானுமதிபதி:—ஸ்வாஹா || இதம் விஷ்ணவே பவதானுமதிபதயே இதன்ன மம ||

(பொருள்) விஷ்ணு மலைகளின் எஜமான்—முன்போல்.

ஓம் மருதோ கணனுமதிபதி:—ஸ்வாஹா || இதம் மருத்ப்யோ கணனுமதிபதயே இதன்ன மம ||

(பொருள்) மருததேவன் சமூகங்களின் எஜமான்—முன்போல்.

ஓம் பிதா: பிதாமஹா: பரே஽வரேத்தாஸ்ததாமஹா இஹ—ஸ்வாஹா: || இதம் பித்ருப்ய: பிதாமஹேப்யஃ பரேப்யோ஽வரேப்யஸ்ததேப் யஸ்ததா மஹேப்யஸ்ச இதன்ன மம ||

(பொருள்) பிதா, மாமன், தாதா, மேல், கீழ், தூரம், மிகத்தூரசம்பந்திகளும் என் நிலைகளைக் காப்பாற்றுவார்களாக.

இம் மந்திரங்களால் ஆகுதிகளளித்தபின்.

ஓம் அக்னிரைது ப்ரதமோ தேவதானாம் ஸோ஽ஸ்யை ப்ரஜாம் முஞ்சது ம்ருத்யுபாஶாத் | ததயம் ராஜா வருணோ஽னு மன்யதாம் யதேயம் ஸ்த்ரீ பௌத்ரமகன்ன ரோதாத் ஸ்வாஹா || இதமக்னயே இதன்ன மம || (மந்-ப்ராம்-1-1-10)

(பொருள்) பௌதிகதேவர்களில் (சக்திகளில்) முக்யமானது அக்னி. இங்கே இப்பெண்ணின் சந்ததிகளைத் துன்பத்தை பரிக்குமாக. இத்தேசத்தரசனும் இப்

பெண்ணின் கஷ்டங்கள் விலக உதவி புரியட்டும். குழந்தை பெறுவதில் இம்மங்கை அழுகை யில்லாமலிருக்கட்டும்.

ஓம் இராமக்னி ஸ்த்ராயதாம் கார்ஹபத்யः ப்ரஜாமஸ்யை நயது தீர்கமாயுः । அஸூன்யோபஸ்தா ஜீவதாமஸ்து மாதா பௌத்ரமானந்தமபி விபுத்யதாமியம் ஸ்வாஹா॥ இதமக்னயே இதன்ன மம ॥

(பொருள்) வீட்டின் நெருப்பு இப்பெண்ணைக்காப்பாற்றட்டும். இவளின் மக்களை சிரஞ்ஜீவிகளாகட்டும். மலட்டுத்தனமில்லாமல் இப்பெண் குழந்தைகளைப் பெற்று புத்ர பௌத்ராதிகளுடன் ஆனந்தத்தை அடைந்துகொண்டிருக்கட்டும்.

ஓம் ஸ்வஸ்திநோऽக்னே திவா * ப்ருதிவ்யா விஶ்வானி தேஹ்யதா யஜத்ர । யதஸ்யாம் மயி * திவி ஜாதம் ப்ரஶஸ்தம் ததஸ்மாஸு த்ரவினம் தேஹி சித்ரம் ஸ்வாஹா ॥ இதமக்னயே இதன்ன மம ॥

(பொருள்) வேள்வியாளர்களைக் காப்பாற்றும் அக்னி! ஆகாய உலகிலும் பூவுலகிலும் எங்களுக்கு மாறுபட்டுள்ளவைகளை எங்களின் விருப்பப்படியானவைகளா யாக்கு. இவ்விரண்டிடங்களிலுமுள்ள சித்ர விசித்ரசம்பத்துகளை யெங்களுக்குண்டாகச்செய்.

* பாரஸ்காரத்தில் " திவ ஆப்ருதிவ்யா " என்றும் பாடமுண்டு.* பாரஸ் காத்தில் " மஹி " என்றும் பாடமுண்டு.

ஓம் ஸுகன்னு பன்தாம் ப்ரஶன்ன ஏஹி ஜ்யோதிஷ் மத்தேஹ்யஜரான்ன ஆயுः । அபைதும் ருத்யுரம்ருதம் ம * ஆகாத்வைவஸ்வதோ நோ அபயம் க்ருணோது ஸ்வாஹா ॥ இதம் வைவஸ்வதாய இதன்ன மம ॥

(பொருள்) ப்ரகாசவானாகிய பரமாத்மா! எங்களுக்கு நல்ல வழிகளைக்காட்டு. எங்களிடம் நீ வா கிழத்தனமில்லாத ஆயுளை எங்களுக்களி. மரணமிலா நிலையை யளி. எங்களுக்கு மரண பயத்தை விலக்கு.

ஓம் பரம் ம்ருத்யோ அனுபரேஹி பன்தாம் யத்ர நோ அன்ய இதரோ தேவயானாத் சக்ஷுஷ்மதே ஸ்ருண்வதே தே ப்ரவீமி மா நः ப்ராஜாம் ரீரிஷோ மோத வீரான்த் ஸ்வாஹா ॥ இதம் ம்ருத்யவே இதன்ன மம ॥

(பொருள்) ஏ மிருத்யுவே! எங்களிடமிருக்கும் வித்வான்களின் விரோதமான ப்ரதிகூலங்களை நீ வேறிடத்திற்கு எடுத்துச்செல். எங்கள் சந்தானங்களையும், வீரர்களையும் நீர் கொல்லவேண்டாமென் றும்மை வேண்டிக்கொள்கின்றோம்.

ஓம் த்யோஸ்தே ப்ருஷ்டம் ரக்ஷது வாயுரூரு அஶ்வினௌ ச । ஸ்தனந்தயஸ்தே புத்ரான்தஸ்விதா பிரக்ஷத்வாவாஸஸः பரிதானாத் ப்ருஹஸ்பதிர் விஶ்வே தேவா அபிரக்ஷந்து பஸ்சாத் ஸ்வாஹா ॥ இதம் விஶ்வேப்யோ தேவேப்யோ இதன்ன மம ॥

(பொருள்) ஏ பெண்ணே! உன் இடுப்பை ஆகாய உலகத்திலுள்ள சூர்யன் காப்பாற்றட்டும். உன் தொடைகளை

* பாரஸ் காத்தில் " நः " என்றும் பாடமுண்டு.

வாயு காப்பாற்றட்டும். பால்யபருவத்திலிருந்து உன் குழந்தைகளைக் கடவுள் காப்பாற்றட்டும். பிறகு ஆசார்யாதிகள் அவர்களைக் காப்பாற்றட்டும்.

ஓம் மா தே க்ருஹேஷு நிஶி கோஷ உத்தாதன்யத்ர த்வத்ர தத்ய: ஸம்விஶந்து | மாத்வம் ருதத்யுர ஆவதிஷ்டா ஜீவபத்னீ பதிலோகே விராஜ பஶ்யந்தீ ப்ரஜாம் ஸுமனஸ்யமானும் ஸ்வாஹா || இதமக்னயே இதன்ன மம ||

(பொருள்) இரவில் உன் வீட்டில் வியாதிக் கூச்சல் இல்லாதிருக்கட்டும். இவ்வாறு அழும் (அமைதியை நாசம் செய்யும்) பெண்கள் உன்னைவிட்டு நீங்கட்டும். நீயும் அழுது பிறருக்கு கஷ்டத்தை யுண்டாக்காதே. உயிருடனிருக்கும் பதியுடனும், சுகமான சந்ததிகளுடனும், சகலருக்கும் சுகத்தைக் கொடுத்துக்கொண்டு விளங்கிவா.

ஓம் அப்ராஜஸ்யம் பௌத்ரமர்த்யம் பாப்மானமுதவா அகம் | ஶீர்ஷ்ணஸ்ரஜமிவோன் முச்யத் விஷத்ப்ய: ப்ரதிமுஞ்சாமி பாஶம் ஸ்வாஹா || இதமக்னயே இதன்ன மம ||

(பொருள்) உன்னை நான் ஏற்று உனக்கேற்படும் புத்ர சம்பந்தமான துன்பங்களை முற்றும் நீக்குகின்றேன். மற்றும் எனக்கேற்படும் சத்ருக்களையும் விலக்கிவைப்பேன்.

இம்மந்திரங்களாலும் ஆகுதிகளளித்து ம் பக்கத்துள்ள (ஓம் பூர்க்னயே ஸ்வாஹா) எனுமாதி 4-ன்கு மந்திரங்களாலும் 4-ன்கு ஆகுதிகளளித்து பின் புருடன் ஆசனத்தினின்று மெழுந்து கிழக்கு முகத்தளாய் அமர்ந்திருக்கும் பெண்ணுக்கெதிரில் மேற்கு முகத்தனாய் நின்று தன் வலது

கையால் பெண்ணின் வலது கையைப் பிடித்துக்கொண்டு மேலே யெழுப்பவேண்டும். அப்படியே பெண்ணின் கையைப் பிடித்துக்கொண்டு புருடன்—:

ஓம் க்ருஹ்ணாமி தே ஸௌபகத்வாய ஹஸ்தம் மயா பத்யா ஜாதஷ்டிர்யதாஸ: | பர்கோ அர்யமா ஸவிதா புரந்திர் மஹ்யம் த்வாதுர் கார்ஹபத்யாய தேவா: || (ருக்-10-85-36).

(பொருள்) ஏ வரானனே! ஐஸ்வர்ய, ஸௌபாக்ய சந்தானங்களைப் பெற உன்னை நான் யேற்றுக்கொள்கின்றேன். ஆதலால் நீ பதியான என்னுடன் வாழ்நாள் முடிய சுகத்துடன் வாழ்ந்திரு. சுகத்தைப் பெற நான் உன்கையைப் பிடிக்கின்றேன். சகல ஐஸ்வர்யயுக்தியாயகாரியனும் பரமனும், இங்கமர்ந்திருக்கும் வித்வான்களும் சேர்ந்து உன்னை எனக்களிக்கின்றார்கள். என் சுகத்திற்காக உன் கையைப் பிடித்தேற்றுக்கொள்கின்றேன்.

ஓம் பகஸ்தே ஹஸ்தமக்ரபீத் ஸவிதா ஹஸ்தமக்ரபீத் | பத்னீ த்வமஸி தர்மணாஹம் க்ருஹபதிஸ்தவ (அதர்-14-1-52).

(பொருள்) ஏ பிரியே! ஐஸ்வர்ய யுக்தமான உன் கையை தர்மத்தை பரிபாலித்துக்கொண்டிருக்கும் நான் பிடிக்கின்றேன். தர்மத்தினால் நீ என் மனைவி யாவாய். நான் தர்மத்தால் உன் புருடனாவேன். நாமிருவரும்கூடி வீட்டுக் காரியங்களைச் செய்வோமாக.

மமேயமஸ்து போஷ்யா மஹ்யம் த்வாதாத் ப்ருஹஸ்பதி: | மயா பத்யா ப்ரஜாவதி ஸம் ஜீவ ஶரத: ஶதம் ||
(அதர்-14-1-1-53).

(பொருள்) ப்ருஹஸ்பதி உன்னை யெனக்குக் கொடுத்தார். நீ என்னை போஷிக்கும் பத்னியாகிறாய். உன் புருடனை என்னுடன் 100 வருடங்கள் ஜீவித்திரு.

த்வஷ்டாவாஸோ வ்யததாச்சுபே க ம்ப்ருஹஸ்பதே: ப்ரஶிஷா கவீனாம் | தேனேமாம் நாரீம் ஸவிதா பகஸ்ச ஸூர்ய மிவ பரிதத்தாம் ப்ரஜயா || (அதர்-14-1-1-54).

(பொருள்) பரமனின் உற்பதத்தினாலும், வித்வான்களின் கற்பனையினாலும், மேகம் பரவியுள்ளதைப்போல் நீ நல்லாடை யாபரணங்களை யணிந்துவா உன்னையேற்று நான் சுகத்தைப் பெறுகின்றேன். நீ நல்ல உத்தமக் குழந்தைகளைப் பெற்றளி. அவர்களுடனு மென்னுடனும் சுகத்துடன் நீ வசித்துவா.

இந்த்ராக்னீ த்யவாப்ருதிவீ மாதரிஶ்வா மித்ராவருணா பகோ அஶ்வினோபா | ப்ருஹஸ்பதிர்மருதோ ப்ரஹ்ம ஸோம இமாம் நாரீம் ப்ரஜயா வர்தயந்து || (அதர்- 14-1-1-56).

(பொருள்) மேகம் அக்னி, சூர்யன், பூமி, ஆகாயத்திலுள்ள வாயு, ப்ராணன் உதானன், ஐஸ்வர்யம், சத்யோபதேசகன், அரசன், வைத்யர்கள், பரமாத்மா, சந்திரன் முதலியவைகள் சகலமும் ஜனங்களை விருத்திசெய்து பாலிக்கின்றன. இதேபோல் இப்பெண்ணும் நல்ல மக்களைப்பெற்று பாலித்துக்கொண்டு வருவாளாக.

அஹம் விஷ்யாமி மயி ரூபமஸ்யா வேததித்பஶ்யன்மனஸா குலாயம் | நஸ்தேயமத்மீ மனஸோதமுச்யே ஸ்வயம் ஶ்ரன்தானோவருணஸ்ய பாஶான் || (அதர்-14-1-1-56)

(பொருள்) நான் குலாபிவிருத்தியின்பொருட்டு இந்த உன் உருவத்தை அன்புடன் ஏற்றுக்கொள்கின்றேன். அவ்வாறே நீயும் என்னை யேற்றுக்கொள். மனதாலும் திருட்டுத்தனத்தை நான் விட்டுவிட்டேன். அன்னியர் பொருளை விரும்பமாட்டேன். என்ன துன்பங்கள் வந்தபோதிலும் கெட்ட புருடர்களின் நட்பைக் கைக்கொள்ளமாட்டேன், இவ்வாறே இப்பெண்ணும் வசிப்பாளாக.

இவ்வாறு பாணிக்கிரஹண மந்திரங்களைச சொல்லி, பிறகு பெண்ணின் கையைப் பிடித்துப் புருடனெழுந்து அப்போது முன்பு கலசத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பவனும் எழுந்து கலசத்தை முன் தாங்கிச் செல்ல தடவினைச் சுற்றி தம்பதிகள் வலம் வரவேண்டும். வந்து:—

ஓம் அமோऽஹமஸ்மி ஸா த்வம் ஸா த்வமஸ்யமோऽஹம் | ஸமோஹமஸ்மி ருக்த்வம் த்யௌரஹம் ப்ருதிவீ த்வம் தாவேவ விவஹாவஹை ஸஹ ரேதோ ததாவஹை | ப்ரஜாம் ப்ரஜனயாவஹை புத்ரான் விந்தாவஹை பஹூன் | தே ஸந்து ஜரதஷ்டய: ஸம் ப்ரியௌ ரோசிஷ்னு ஸுமனஸ்யமானௌ | பஶ்யேம ஶரத: ஶதம் ஜீவேம ஶரத: ஶதம் ஶ்ருணுயாம ஶரத: ஶதம் ||. (பாரஸ்-1-6).

(பொருள்) ஏ பெண்ணே! நான் உன்னை அறிவு பூர்வகமாய் அடைவதுபோல் நீயுமென்னை அறிவு பூர்வகமாகவே அடைகின்றாய். உன்னை நான் பூர்ண அன்புடன் நேசிப்பதைப்போல் நீயுமென்னை பூர்ண அன்புடன் நேசி. நான் சாமவேதத்தையொத்த புகழ்ச்சியாளன், நீ ருக்வேதத்தை

யொத்த புகழ்ச்சியாளி. நான் மழைபெய்விக்கும் சூரியனைப் போன்றவன் நீ சகல பொருள்களையும் கொண்டுள்ள பூமியைப் போன்றவள். நாம் இருவரும் களிப்புடன் மணம் புரிந்துகொள்வோம். நன்றாக வீர்யத்தைத் தரிப்போம். நற்குழந்தைகளைப் பெறுவோம். அனேக குழந்தைகளைப் பெறுவோம். அக்குழந்தைகள் பூர்ணவயதுடன் வளர்பவைகளாயிருக்கட்டும். அவைகள் ஒன்றுடனொன்று சதா அன்புடன் வசித்திருக்கட்டும். 100 வருடங்கள்வரை பிரியத்துடனும் ஆனந்தத்துடனும் வளர்ந்துவருவார்களாக.

இம்மந்திரத்தால் இருவரும் ப்ரதிக்ஞை செய்துகொண்ட பிறகு புருடன் பெண்ணுக்குப் பின் சென்று பெண்ணின் வலது பக்கத்திற்சென்று வடக்கு முகத்தனாய் நின்று பெண்ணின் வலது கையைத் தன் வலது கையால் பிடித்து இருவருமாக நின்றுகொள்ளவேண்டும். கலசத்தை யுடையவன் முன்போல் தன்னிடம் சென்று அமர்ந்துவிடவேண்டும். பிறகு பெண்ணின் தாய் அல்லது தமையன் பெண்ணின் வலது பாதத்தை முன்பே தயாரித்து வைத்துள்ள கல்லின் மேல் எடுத்து வைக்கவேண்டும். அப்போது புருடன்—:

ஓம் ஆரோஹே மமஶ்மான மஶ்மேவத்வம் ஸ்திராபவ ।
அபிதிஷ்ட ப்ருதன்யதோऽவபாத ஸ்வ ப்ருதன்யதஃ ॥
(பாரஸ்-1-7).

(பொருள்) ஏ பெண்ணே! நீ இக்கல்லின்மேல் நிற்கிறாய். இக்கல்லைப்போல் திடத்தைப்பெறு. உன்னை விரோதிப்பவர்களையும், பலாத்காரம் செய்வோர்களையும் தைர்யத்துடன் வென்றுவா.

இம்மந்திரத்தைச் சொல்லவேண்டும். பிறகு தம்பதிகள் நடுவிற் குண்டில்வந்து கிழக்கு முகத்தவர்களாய் இருவரும் நிற்கவேண்டும். பிறகு புருடனின் வலது கையின்மேல் பெண்ணின் வலதுகையை வைக்க அதில் சிறிது நெய்யைத் தெளித்தபின் முன்பே வைத்துள்ள தான்யத்திலிருந்து சிறிதெடுத்து அவர்கள் கையில் கொடுக்க. கீழ்வரும் மந்திரங்களைச் சொல்லி மூன்றுமுறை ஆஹுதி பளிக்கவேண்டும்.

ஓம் அர்யமணம் தேவம்கன்ய அக்னிமயக்ஷத ஸநோ அர்யமா தேவ ப்ரேதோ முஞ்சது மா பதே: ஸ்வாஹா ॥
இதமர்யம்ணே அக்னயே இதன்ன மம ॥

(பொருள்) பெண்களால் ஆராதிக்கப்படும் தேஜஸ்வியாகிய பரமாத்மன் நம்மை கெட்ட சகவாசத்தினின்றும் விலக்குவாராக. ஆனால் பதியினிடமிருந்து விலக்கமாட்டாராகவும்.

ஓம் இயம் நார்யுபப்ருதே லாஜானாவபந்திகா । ஆயுஷ்மானஸ்து மே பதிரேதந்தாம் ஞாதயோ மம ஸ்வாஹா ।
இதமக்னயே இதன்ன மம ॥

(பொருள்) ஆஹுதிகளையிடும் பெண் "என் பதி சிரஞ்ஜீவியாயிருக்கட்டும். என் சம்பந்திகள் நல்ல பலன்களைப் பெறட்டும்" என்று சொல்கின்றாள்.

ஓம் இமாம்ல்லாஜானாவபாம்யக்னௌ ஸம்ருத்தி கரணம் தவ । மம துப்யம் ச ஸம்வனனம் ததக்னி ரனுமன்யதாமியம் ஸ்வாஹா ॥ இதமக்னயே இதன்ன மம ॥ (பாரஸ்-1-6).

(பொருள்) என் புருடனின் அபிவிருத்தியை நாடி நான் இவைகளை நெருப்பிலிடுகின்றேன். இதன்மூலமாக நாமிருவரும் மேன்மையையும் கலப்புமனத்தையும் பெறுவோமாக.

இவ்வாறு அளித்தபின் புருடன்—:

ஓம் ஸரஸ்வதி ப்ரேதமவ ஸுபகே வாஜினீவதி । யான் த்வா விஸ்வஸ்ய பூதஸ்ய ப்ரஜாயாம் ஸ்யாக்ரத: । யஸ்யாம் பூதம் ஸமபவத்யஸ்யாம் விஸ்வமிதம் ஜகத் । தாமத்ய காதாம் காஸ்யாமி யோ ஸ்த்ரீணாமுத்தமம் யஸ: ॥ (பாரஸ்-1-7).

(பொருள்) ஏ சௌபாக்யவதி! அன்னசாலனீ! இயற்கைத்தேவீ! நீ இம்மணச்சடங்கைக் காப்பாற்று. வித்வான்கள் உன்னையே சகல ப்ராணிகளினும் முக்யமானதாகச் சொல்கின்றார்கள். உன்னைக்கொண்டே இவ்வைந்து மஹாபூதங்களும் உலகமும் உண்டாக்கப்பட்டது. நான் உன்னைத் துதித்துப் பாடுகின்றேன். இதைக் கேட்டுப் பெண்களும் அறிவாளிகளாய் கீர்த்தியை யடைவார்களாக.

இம் மந்திரத்தைச் சொல்லி பெண்ணின் கையைப் பிடித்துக்கொண்டு—:

ஓம் துப்யமக்ரே பர்யவஹன்த் ஸூர்யாம் வஹது நா ஸஹ । புன: பதிப்யோ ஜாயாம் தா அக்னே ப்ரஜயா ஸஹ ॥ (ருக்-40-86-38).

(பொருள்) ஏ பரமாத்மா! உன் சேவைக்காகவே இப்பெண்ணை நான் அங்கீகரிக்கின்றேன். இப் பெண்ணுக்கு சூர்யனைப்போன்ற சோபயை யளி. அனேக சந்தானங்களை இப்பெண்ணுக்கு என் மூலமாய் உண்டாக்கு.

ஓம் கன்யலா பித்ருப்ய: பதிலோகம் யதீயமவ தீக்ஷாமயஷ்ட । கன்யா உதத்வயா வயம் தாரா உதன்யா இவாதிகாஹேமஹித்விஷ: ॥ (மங்-ப்ராம்-1-2-5).

(பொருள்) பெண் தன் தகப்பன் வீட்டை நீக்கி புருடன் வீட்டையடைய இத்தீக்ஷையை (இல்லற தருமதீக்ஷையை)ப் பெறுகின்றாள். புருடன் "ஓ பெண்ணே! மழையால் பயிர்கள் வளர்வதைப்போல நான் உன் சகாயத்தைக் கொண்டு சத்ருக்களை வெல்வேனாகவும்.

இம்மந்திரம் சொல்லி தடவை வலம்வந்து தடவனிற்கு மேற்கில் கிழக்கு முகத்தனாகி சிறிது நேரம் நிற்கவேண்டும். மறுபடி முன் சொன்னபடி கலசத்துடன் தடவைச் சுற்றி வந்து, மறுபடி இவ்வாறு 2 முறை சுற்றிவந்து தடவினிற்கு மேற்கில் கிழக்கு முகத்தவர்களாய் தம்பதிகள் நின்றபின் மீதியிருக்கும் தானியத்தையும் பெண் கையில் கொடுக்கவேண்டும். பிறகு—:

ஓம் பகாய ஸ்வாஹா ॥ இதம் பகாய இதன்ன மம ॥

இவ்வாகுதி ஐஸ்வர்யத்திற்காக. என்று சொல்லி அத்தானியத்தை ஆகுதி யளிக்கவும். பிறகு புருடன் பெண்ணின் வலதுபக்கம் தடவிற்கு மேற்கில் கிழக்கு முகத்தனாய் அமர்ந்து—:

ஓம் ப்ரஜாபதயே ஸ்வாஹா ॥ இதம் ப்ரஜாபதயே இதன்ன மம ॥ இவ்வாகுதி கடவுளுக்காக.

இம்மந்திரம் சொல்லி ஓர் நெய்யாகுதி யளிக்கவும். பிறகு அனியிடம் சென்று புருடன் பெண்ணின் கூந்தலை—:

ப்ர த்வா முஞ்சாமி வருணஸ்ய பாஶாத்யேன த்வாபத்னாத்ஸவிதா ஸுஶேவா: | ருதஸ்யயோனௌ ஸுக்ருதஸ்ய லோகே$_{2}$ரிஷ்டான்த்வா ஸஹ பத்யா ததாமி ||

(ருக்-10-85-24).

(பொருள்) ஓ கன்னீ! சுகத்தை யளிக்கும் தாய் தந்தையர் உன்னை எந்த விஷயத்தில் கட்டுப்படுத்தியிருந்தனரோ அந்த விஷயத்திலுன் கட்டை நான் அவிழ்த்துவிடுகின்றேன். இயற்கையின் நியமத்தை நீ சரிவர பாலித்து வா. உனக்கு நான் அனுமதி யளிக்கின்றேன்.

ப்ரேதோமுஞ்சாமி நாமதுஸ்ஸு: பத்தாமமுதஸ்கரம் | யதேயமிந்த்ர மீட்வ: ஸுபுத்ராஸுபகா ஸதி ||

(ருக்-10-85-25).

(பொருள்) தகப்பன் வீட்டிலிருந்துன்னை நீக்குகின்றேன். புருடன் வீட்டிலிருந்தல்ல. புருடன் வீட்டிலே உன்னை திடநிலைப் பெறச்செய்கின்றேன். இப்பெண் நற்குழந்தைகளைப் பெறும்வண்ணம் புருடன் வீர்யத்தை உபயோகிப்பானாகவும்.

இவ்விரண்டு மந்திரங்களைச் சொல்லி யவிழ்த்துவிட்டுப் பிறகு மண்டபத்திற்குவந்து "சப்தபதீ" (ஏழடிகள்) சடங்கைச் செய்ய ஆரம்பிக்கவேண்டும். இப்போது தம்பதிகளின் ஆடைகளை முடிபோடவேண்டும். பிறகு தம்பதிகள் ஆசனத்திருந்தெழுந்து இருவரும் வலது கைகளைப் பிடித்துக் கொண்டு தடவினிற்கு வடக்கு பாகத்திலே செல்லவேண்டும். பிறகு புருடன் வலது கையை பெண்ணின் வலது புஜத்தின் மேல் வைத்து வடக்கு முகத்தவர்களாய் நிற்கவேண்டும். பிறகு புருடன்—:

மா ஸவ்யேன தக்ஷிணமதிக்ராம ||

என்று சொல்லி பெண்ணின் வலது காலை எடுத்து வைத்து நடக்கும்படிச் சொல்லவேண்டும்—:

ஓம் இஷே ஏக பதீ பவ ஸா மாமனுவ்ரதா பவ விஷ்ணுஸ்த்வா நயது புத்ரான் விந்தாவஹை பஹூன்ஸ்தே ஸந்து ஜரதஷ்டய: ||

(பொருள்) நீ முதலடியை அன்னத்திற்காக எடுத்துவை நீ என் விரத்தை அநுசரித்த விரதத்தவளாகு. உலக உற்பவப் பரமன் நம்மிருவருக்கும் நல்ல பலம். ஆயுள்பெற்ற அனேக குழந்தைகளை அளிப்பானாக.

இம்மந்திரத்தைச் சொல்ல பெண் புருடன் தொடர்ந்துவர முதலடியை வலது காலால் எடுத்து ஈசானதிசையில் வைக்கவேண்டும். பிறகு

ஓம் ஊர்ஜே த்விபதீ பவ—: முன்போல் || பலத்திற்காக இரண்டாம் அடியை.

ஓம் ராயஸ்போஷாய த்ரிபதீபவ—: முன்போல் || தன விருத்திக்காக மூன்றாம் அடியை.

ஓம் மயோ பவாய சதுஷ்பதீபவ—: ,, சுக விருத்திக்காக நான்காம் அடியை.

ஓம் ப்ரஜாப்ய: பஞ்சபதீ பவ—: ,, சந்தான விருத்திக்காக ஐந்தாம் அடியை.

ஓம் ருதுப்ய: ஷட்பதீ பவ—: முன்போல் ‖ இருதுக்களினனுகூலத்திற்காக ஆறும் அடிவை.

ஓம் ஸகே சப்தபதீ பவ—: ,, நம் நட்பின் விருத்திக்காக ஏழாம் அடிவை.

ஒவ்வொரு மந்திரத்திற்கும் வலது இடதாக 7 அடிகள் புருடன்தொடர பெண் ஈசான திசையில் எடுத்து வைத்துச் சென்றபின் மறுபடி வந்திருவரும் ஆசனத்தமரவேண்டும். பிறகு முன்பே வைத்துள்ள கலசத்தின் நீரைக்கொண்டு கீழ்வரு மந்திரங்களைப் புருடன் சொல்ல தம்பதிகளின்மேல் தெளிக்கவேண்டும்—:

ஓம் ஆபோ ஹிஷ்டா மயோ புவஸ்தா ந ஊர்ஜ்ஜேததாதன। மஹேரணாயசக்ஷஸே ‖ (ருக்-10-9-1).

(பொருள்) ஏ நீரே! நீ சுககாரகன். எங்களுக்கு நல்ல பலத்தையும் அழகிய பார்வைத்திறனையும் அளி.

யோவஃ ஶிவதமோ ரஸஸ்தஸ்ய பாஜயதேஹ நஃ। உஶதீரிவ மாதரஃ ‖ (ருக்-10-9-2).

(பொருள்) உன்னிடமிருக்கும் கல்யாண ரசத்தை யெங்களுக்குத் தானமளி. குழந்தையின் கருணையால் குழந்தைக்குத் தாய் பால் ஊட்டுவதைப்போல் எங்கள்பால் உன் கருணையை செலுத்து.

தஸ்மா அரங்கமாம வோ யஸ்ய க்ஷயாய ஜின்வத ஆபோ ஜனயதா ச நஃ ‖ (ருக்-10-9-3).

(பொருள்) எந்த ரசத்தால் ஓஷதிகளை வளர்க்கின்றாயோ அந்த ரசத்தால் எங்களையும் புஷ்டியாக்கு.

ஓம் ஆபஃ ஶிவா: ஶிவதமாஃ ஶாந்தா: ஶாந்த தமாஸ்தாஸ்தே க்ருண்வந்து பேஷஜம் ‖ (பாரஸ்-1-8).

(பொருள்) நீர் கல்யாண காரகமானது. மேலான சுகத்தை யீயவல்லது. சாந்தஸ்வரூபமாய் சாந்தியை யளிப்பது. அது பெண்ணுக்கு ஆரோக்யத்தை யளிக்குமாக.

இந்நான்கு மந்திரங்களைச் சொன்ன பிறகு தம்பதிகள் மேலே யெழுந்து—:

ஓம் தச்சக்ஷுர் தேவஹிதம் புரஸ்தாச்சுக்ர முச்சரத்। பஶ்யேம ஶரத: ஶதம் ஜீவேம ஶரத: ஶதம் ஶ்ருணுயாம ஶரதஃ ஶதம் ப்ரப்ரவாம ஶரத: ஶதமதீனாஃ ஸ்யாம ஶரதஃ ஶதம் பூயஸ்ச ஶரத: ஶதாத் ‖ (யஜுர் 36-24).

(பொருள்) பரமாத்மன் சூர்யனுக்குச்சமமாக உலகைப் பார்க்கும் வித்வான்களுக்கு ஹிதம் புரிபவன். சதாசுத்தஸ்வபாவன். அவனின் கிருபையால் நாம் 100 வருடங்கள்வரை பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும், பேசிக்கொண்டும் சுதந்திரத்துடன் வசித்துக்கொண்டும் இருப்போமாக. 100 வருடங்களுக்குப் பின்புங்கூட நம் இந்திரியங்கள் க்ஷீணத்தை யடையாதிருக்கட்டும்.

சூர்யதரிசனம் செய்யவேண்டும். பிறகு புருடன் பெண்ணின் வலது இருதயத்தின்மேல் தன் வலதுகையை வைத்து—:

ஓம் மம வ்ரதே தே ஹிருதயம் ததாமி। மம சித்தமனு சித்தம் தே அஸ்து। மம வாசமேகமனா ஜுஷஸ்வ ப்ரஜாபதிஷ்ட்வா நியுனக்துமஹ்யம் ‖ (பாரஸ்-1.8).

(பொருள்) உன் இருதயத்தில் என் விரதத்தை யளிக்கின்றேன். நம் இருவரின் சித்தங்களும் ஒன்றுபடட்டும். என் வார்த்தையின்படியே உன் வார்த்தையு மிருக்கட்டும். கடவுள் உன்னை என் வழியிலே செலுத்தட்டும்.

இம்மந்திரத்தைச் சொல்லவேண்டும். பெண்ணு மிவ்வாறே புருடனின் வலது இருதயத்தில் கைவைத்து முன் மந்திரத்தைச் சொல்லவேண்டும். பிறகு புருடன் பெண்ணின் நெற்றியில் கைவைத்து—:

ஸுமங்கலீரியம் வதூரிமாம் ஸமேத பஶ்யத । ஸௌபாக்யமஸ்யை தத்த்வா யதாஸ்தம் விபரேதன ॥
(ருக்-10-85.33).

(பொருள்) ஏ தர்சனீய அதிதிகளே! இந்த மணப் பெண் மங்களகாரிணியாகும். நீங்கள் சகலரும் இவளை தர்சியுங்கள். இவளுக்குச் சகல பாக்கியங்களு முண்டாகுமாறு ஆசீர்வாதமீந்து பின் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்.

இம்மந்திரத்தைச் சொல்ல அப்போது சகலரும்—:

ஓம் ஸௌபாக்ய மஸ்து ॥ ஓம் ஶுபம் பவது ॥ சௌபாக்யமும் சுபமும் இவர்களுக் குண்டாகட்டும், என்று ஆசீர்வாதமீயவேண்டும். பிறகு தம்பதிகள் (ஓம் யதஸ்யகர்மணோ) எனும் மந்திரத்தா லோராகுதி யளித்து பின் ம் பக்கத்துள்ள (ப்ராக்னயே ஸ்வாஹா) ஆதி 4-ன்கு மந்திரங்களால் 4-ன்கு ஆகுதிக ளளித்து பின் களைப்பாரவேண்டும். இதன் பிறகு மணத்தின் பிற்பகுதிச் சடங்குகளை முன்பே

தம்பதிகளுக்காக தயார் செய்து வைத்துள்ள ஓர் தனி அறையில் செய்யவேண்டும். சூர்யாஸ்தமனகாகி நட்சத்திரம் தென்பட்ட சமயத்திலே தம்பதிகள் தடவினிற்கு மேற்கில் கிழக்கு முகத்தவர்களாய் அமர்ந்து—நெருப்பு மூட்டல்—செய்யவேண்டும். பிறகு—சமிதையிடல் செய்து "ஆகாரவாஜ்யபாகாகுதிகள்" நான்கும், "வ்யாஹ்ருத் யாகுதிகள்" 4-ன்கும் அளித்துப் பின் கீழ்வரும் மந்திரங்களைச் சொல்லியும் ஆகுதிகள் அளிக்கவேண்டும்—:

ஓம் லேகாஸந்திஷு பக்ஷ்மஸ்வாவர்த்தேஷு ச யானி தே । தானிதே பூர்ணாஹுத்யா ஸர்வாணி ஶமயாம் யஹம் ஸ்வாஹா ॥ இதம் கன்யாயை இதன்ன மம ॥
(கோபிலீ-2-3-5)

(பொருள்) ஏ கன்னீ! உன் உடலின் சந்திப்புகளில், கண் பார்வையில், மற்றுமுள்ள எந்தப் பாகங்களிலிருக்கும் குற்றங்களும் தொலைவதற்காக நான் இப்பூர்ணாகுதியை யளிக்கின்றேன்.

ஓம் கேஶேஷு யச்ச பாபகமீக்ஷிதே ருத்தே சயத் । தானி ॥

(பொருள்) உன் கூந்தலில், பார்வையில், அழுகையில் உள்ள குற்றங்களை நீங்க—: முன்போல்.

ஓம் ஶீலேஷு யச்ச பாபகம் பாஷிதே ஹஸிதே சயத் । தானி ॥

(பொருள்) உன் ஸ்வபாவ, சம்பாஷண, சிரிப்புகளில் உள்ள குற்றங்கள் நீங்க—: முன்போல்

ஓம் ஆரோகேஷு தந்தேஷு ஹஸ்தயோ: பாதயோஸ் சயத் । தானி ॥

(பொருள்) பற்களினிடையில், பற்களில், கைகால்களில். உள்ள குற்றங்கள் நீங்க—: முன்போல்.

ஓம் ஊர்வோருபஸ்தே ஜாங்கயோ: ஸன்தானேஷு சயானி தே । தானி ॥

(பொருள்) உன் துடை, யோனிப்ரதேசம், முடிகளில் உள்ள குற்றங்கள் நீங்க—: முன்போல்.

ஓம் யானி கானி ச கோராணி ஸர்வாங்கேஷு தவா(ப)வன் பூர்ணாஹுதிபிராஜ்யஸ்ய ஸர்வாணி தாள்யஸீஸமம் ஸ்வாஹா ॥ இதம் கன்யாயை இதன்ன மம ॥

(பொருள்) உன் மற்ற யிடங்களிலுள்ள குற்றங்கள் நீங்க இந் நெய்யாலான பூர்ணாகுதியின் மூலமாய் ப்ரார்த்திக்கிறேன்।

இவ்வாறு மந்திரங்களாலும் ஆறு நெய்யாகுதிகளீந்து—ம் பக்கத்துள்ள (ஓம் ஆக்னயே ஸ்வாஹா) எனுமாதி 4-ன்கு மந்திரங்களால் 4-ன்கு நெய்யாகுதிக ளீந்து, தம்பதிகள் எழுந்து சபாமண்டபத்தைவிட்டு வடக்கு திசையாய் வெளிச் செல்லவேண்டும். பிறகு புருடன்—:

த்ருவம் பஸ்ய॥ துருவத்தைப்பார்.

என்று சொல்லி பெண்ணுக்கு துருவநட்செத்திரத்தைக் காட்டவேண்டும். அப்போது பெண் "பஸ்யாமி" (பார்க்கிறேன்) என்று சொல்லி பின்—:

ஓம் த்ருவமஸி த்ருவாஹம் பதிகுலே பூயாஸம் (அமுஷ்ய: " அஸௌ) ॥ (கோபி-2-3 8.)

(பொருள்) ஏ ஸ்வாமீ! நான் உங்களின் அரைச்சரீரியாகும் உங்கள் குலத்தில் சலனமில்லாமலிருப்பேன். தாங்கள் எனக்கு திட நிச்சயமான புருடனைப்போல நானுமுமக்கு திட நிச்சயமான மனைவியாகும்.

இம்மந்திரம் சொன்னபின் புருடன்—:

அருந்ததீம் பஸ்ய ॥ அருந்ததியைப்பார்.

என்று சொல்ல மனைவி "பஸ்யாமி" (பார்க்கிறேன்) என்று சொல்லி,

ஓம் அருந்தத்யஸி ருந்தாஹமஸ்மி (அமுஷ்ய* அஸௌ)

(பொருள்) நீ அருந்ததி நட்சத்திரம் போன்றிருப்பாய். நான் உன்னிடம் வேண்டிய சுகத்தைப் பெறுவேனாகவும்.

என்று சொல்லி புருடன் பெண்ணின் நெற்றியின்மேல் கையைவைத்து—:

ஓம் த்ருவா த்யௌர்த்ருவா ப்ருதிவீ த்ருவம் விஸ்வமிதம் ஜகத் । த்ருவாஸ: பர்வதா இமே த்ருவா ஸ்த்ரீ பதிகுலே இயம் ॥ (மந்த்ரம்-1-6-6)

(பொருள்) ஏ பெண்ணே! சூர்யகாந்தி நிச்சலனமாயிருப்பதைப் போலவும், பூமி தன் ஸ்வரூபத்தில் நிலையுள்ளதைப்

* அமுஷ்யவென்னுமிடத்தில் புருடன் பெயரையும் அஸௌவென்னுமிடத்தில் பெண்ணின் பெயரையும் சொல்லவேண்டும்.

போலவும், சகல சம்சார ரூபப் ப்ரவாகம் நிலையுள்ளதைப் போலவும், இம்மலையானது நிலையுள்ளதைப்போலவும் நீயும் என் குலத்தில் நிலையாயிருப்பாயாக.

ஓம் த்ருவமஸி த்ருவன்த்வா பஶ்யாமி த்ருவைதி போஷ்யே மயி । மஹ்யம் த்வாதாத் ப்ருஹஸ்பதிர் மயாபத்யா ப்ராஜாவதீ ஸஞ்ஜீவ ஶரத: ஶதம்॥ (பாரஸ்-1-8).

(பொருள்) ஏ ஸ்வாமீ! நீர் என்னிடமும் நான் தங்களிடமும் இப்போது நிலையான திடத்தைக்கொண்டிருப்பதைப் போலவே சதா கொண்டிருப்போமாக. ஏனென்றால் என் மனத்தைப் போலவே கடவுள் உங்கள் மனதையும் மாற்றியிருக்கின்றார். தாங்கள் 100 வருடங்கள்வரை வாழ்ந்திருப்பீர்களாக, ஏ பெண்ணே! மனைவியைப் பாதுகாக்கும் பதியான என்னிடம் நிலையுள்ளவளாயிரு. என் மனம் போலவே உன் மனத்தையும் கடவுள் மாற்றியிருக்கின்றார். என்னுடன் கூடி நற்குழந்தைகளைப் பெற்று 100 வருடங்கள்வரை வாழ்ந்திருப்பாயாக.

இவைகளைச் சொன்னபின் தம்பதிகள் தடவினிற்கு மேற்கே கிழக்கு முகத்தவர்களாயமர்ந்து 41-ம் பக்கத்துள்ள (ஓம் அம்ருதோபஸ்தரணமஸி)எனுமாதிமந்திரங்களால் மூன்று முறை நீருட்கொளல்வேண்டும். பிறகு சுவைக்கலப்பு (ஸ்தாளிபாகம்) தயார்செய்துகொள்ளவேண்டும். 'பிறகு நெருப்பு மூட்டி, சமிதைகளிட்டு, "ஆகாரவாஜ்யபாஹாகுதிகள்" 4-ன்கும், "வ்யாஹ்ருதியாகுதிகள்" 4-ன்கும் கொடுத்து பின் சுவைக்கலப்புச் சாதத்தில் நெய் தெளித்து இருவரும் வலது கையில் சிறிது யெடுத்துக்கொண்டு—:

ஓம் அக்னயே ஸ்வாஹா ॥ இதமக்னயே இதன்ன மம॥ ஓம் ப்ராஜாபதயே ஸ்வாஹா ॥ இதம் ப்ராஜாபதயே இதன்ன மம ॥ ஓம் விஶ்வேப்யோ தேவேப்ய: ஸ்வாஹா ॥ இதம் விஶ்வேப்யோ தேவேப்ய: இதன்ன மம ॥ ஓம் அனுமதயே ஸ்வாஹா ॥ இத மனுமதயே இதன்ன மம॥ (கோபி-2-3-18).

இந்நான்கு மந்திரங்களாலும் நான்கு ஆகுதிகள் கொடுத்து 46-ம் பக்கத்துள்ள (யதஸ்யகர்மணோ) யெனும் மந்திரத்தால் ஓர் ஆகுதியளித்து ம் பக்கத்துள்ள "வ்யாஹ்ருதியாகுதிகள்" 4-ன்கும் ம் பக்கத்துள்ள "அஷ்டாஜ்யாகுதிகள்" 8-ம் ஆகுதிகளளித்து, மீதி சாதத்தில் சிறிது நெய்விட்டு வலது கையில் எடுத்துக்கொண்டு—:

ஓம் அன்னபாஶேன மணினா ப்ராணஸூத்ரேண ப்ருஶ்னினா । பத்னாமி ஸத்யக்ரந்தினா மனஸ்ச ஹ்ருதயம் சதே ॥1॥ ஓம் யதே தத்ஹ்ருதயம் தவ ததஸ்து ஹ்ருதயம் மம । யதிதம் ஹ்ருதயம் மம ததஸ்து ஹ்ருதயம் தவ ॥2॥. ஓம் அன்னம் ப்ராணஸ்ய ஷட்விம்ஶஸ்தேன பத்னாமி த்வா அஸௌ ॥3॥ (மந்-ப்ராம்-1-3-8,10).

(பொருள்) ஏ புருடனே பெண்ணே! அன்னத்துடன் ப்ராணனும், ப்ராணத்துடன் அன்னமும், இவ்விரண்டுடன் ஆகாயமும் சம்பந்தமுடையதைப்போல உன்னை, இருதய, சித்தங்களின் சத்யமெனும் முடியினால் என்னுடன் சேர்த்துக்கட்டுகின்றேன். (1) உன் இருதயம்போல் என் இருதயமும் என் இருதயம்போல் உன் இருதயமும் ஆகக்கடவது. (2) ப்ராணத்தைப் போஷிக்கும் 26 தத்துவங்களையுடைய அன்னத்தால் உன்னைச் சேர்த்து என்னுடன் கட்டுகின்றேன் (3)

இம்மந்திரங்களைச் சொல்லி அச்சாதத்தில் முதலில் புருடன் சிறிது சாப்பிட்டு மீதியை மனைவிக்கு அருந்த அளிக்க அதை வாங்கி பெண் அருந்தவேண்டும். பிறகு மறுபடி அமர்ந்து இருவருமாக "வாமதேவ்யகானம்" செய்யவேண்டும். பிறகு கடவுள் துதி, அருள் கோறல், அமைதிவேண்டல் முதலியவைகளைச் செய்து உப்பு, புளி நீக்கி, தயிர், பால், நெய்யுடனாகிய சாதத்தை அருந்தவேண்டும். பிறகு வந்திருப்பவர்களுக்கும் உணவளிக்கவேண்டும். பிறகு வேண்டுவன புரிந்து எல்லோருக்கும் விடை யளிக்கவேண்டும். பிறகு இரவு 10 கடிகை கழித்தவுடன் பெண்ணும் புருடனும் தனித் தனியே ஸ்நானம் செய்து, பூமியில் படுக்கையிட்டு மூன்று இரவுகள்வரை மறைமாணவத்துடன் சயனிக்கவேண்டும். கனவிலும் வீர்யம் வீணுகாமலிருக்கும்படியான ஆகாரங்களையே புசித்துவரவேண்டும். பிறகு 4ன்காம்நாளில் விதிப்படி மகப்பேற்றுச் சடங்கை (கற்பாதானம்) செய்யவேண்டும். நான்காம் நாளிலும் தம்பதிகளுக்கு விருப்பமின்றேல் வேண்டிய நாள்வரை மறைமாணவத்துடனிருந்து பிறகு விரும்பிய நாளிலே செய்யவேண்டும். பிறகு இரண்டல்லது மூன்றாம்நாள் புருடனைச்சேர்ந்தவர்கள் தம்பதிகளை வண்டியில் அமர்த்தி நல்ல சிங்காரத்துடன் தங்கள் மனைக்கு அழைத்துச் செல்லவேண்டும். அவ்வாறு போகும்போது பெண்ணானவள் தன் தாய் தகப்பனாரின் பிரிவைச் சகியாது கண்ணீர் விட்டாளேயாயின் —:

ஜீவம் ருதந்தி விமயந்தே அத்வரே தீர்கா மனு ப்ரஸிதிம் தீதியுர்னர: । வாமம் பித்ருப்யோ ய இதம் ஸமேரிரே மய: பதிப்யோ ஜனய: பரிஷ்வஜே ॥ (ருக்-10-40-10).

(பொருள்) புருடனின் தர்மகார்யத்தில் கஷ்டத்தை சகிப்பவள், யாகாதிகாரியங்களில் தன் குழந்தைகளை யனுப்பி வைப்பவள், பெரும் இல்லறத்தை நன்கு பாலிப்பவள், தாய் தகப்பனை நிதமும் சேவிக்கும் தன்மை பொருந்திய உத்தமக் குழந்தைகளைப் பெறுபவள், இவளே பெண் ஆவாள். சகல சுகத்தினிருப்பிடமு மிவளேயாகும். இம் மந்திரத்தைப் புருடன் சொல்லவேண்டும். ரதத்தில் புருடன் தன் வலதுபக்கத்திலே பெண்ணை யமர்த்திக்கொண்டு—:

பூஷா த்வேதோ நயது ஹஸ்தக்ருஹ்யாஸ்விநுத்வா ப்ரவஹதாம் ரதேன । க்ருஹான் கச்ச க்ருஹபத்னீ யதாஸோ வஶினீத்வம் விதத மாவதாஸி ॥ (ருக்-10-85-26).

(பொருள்) பெண்ணின் தகப்பன் "உன்னை போஷிக்கும் பதியானவர் உன்கையைப் பிடித்து வண்டியிலமர்த்துகின்றார். இக்குதிரை வேகமாகப் போகின்றது. உன் புருடன் வீட்டை யடைந்தபின் வீட்டு வேலைகளை வேலைக்காரி போல் செய்துகொண்டு உத்தம இல்லறத்தவளாக ஆவாயாக" என்று சொல்லவேண்டும்.

ஸுகிம் ஶுகம் ஶல்மலிம் விஸ்வரூபம் ஹிரண்யவர்ணம் ஸுவ்ருதம் ஸுசக்ரம் । ஆரோஹ ஸூர்யே அம்ருதஸ்ய லோகம் ஸ்யோனம் பத்யே வஹதும் க்ருணுஷ்வ ॥ (ருக்-10-85-20).

(பொருள்) ஏ சுந்தரீ! வில்வம் முதலாகிய நல்ல மரத்தாலாகிய; நானுவர்ண சுவர்ண அலங்காரங்களால் சிங்காரிக்கப்பட்ட, நல்ல வேகம் பொருந்திய குதிரைகளுடன் பூட்டிய

பட்டிருக்கும் இவ்வண்டியில் நீயும் சென்று உன் மனதை புருடனைப் பாதுகாப்பதில் வேகமுடையதாகச் செய்துகொள்.

இவ்விரண்டு மந்திரங்களைச் சொல்லி வண்டியை ஓட்ட வேண்டும். வழியிலே வண்டியிலிருந்து நீங்கி படகில் செல்ல வேண்டியிருந்தால்—:

அஶ்மன்வதீ ரீயதே ஸம் ரபத்வ முத்திஷ்டத ப்ரதரதா ஸகாய: ||

(பொருள்) படகையோட்டும் நண்பா! பலவித இலைகளைக்கொண்டு இந்நதிவேகமாய் ஓடிக்கொண்டிருக்கிறது. அமைதியை அடைய அவசியம்வந்தால் சீக்கிரத்தில் அக்கரையை அடையத்தயாராயிரு.

என்று செப்பிவிட்டு படகில் அமரவேண்டும். பிறகு படகிலிருந் திறங்கும்போது—:

அத்ரா ஜஹாம யே அஸன்னஶேவா: ஶிவான்வயமுத்தரேமாபி வாஜான் || (ருக்-10-53-8).

(பொருள்) நம்மிடையிருக்கும் கெட்டவைகளை இங்கேயேவிட்டுவிட்டு சகலரும் ஒன்றுகூடி சுத்தமான அன்னத்தை அருந்துவோமாக.

என்றுசொல்லி இறங்கவேண்டும். வழியிலே திருடர்பயமுள்ளவிடம், நதி, புலி முதலியவைகள் வசிக்கும் பயங்கரமானவிடம், பெரிய மேடு, பள்ளங்கள், பெரும் மரக்கும்பல்கள், சுடுகாடு முதலியவைகள் எதிர்ப்படுமாயின்—:

மா விதன் பரிபந்தினோ ய ஆஸீதந்தி தம்பதீ | ஸுகேபிர்துர்கமதீதாமபத்ரான்த்வாதய:|| (ருக்-10-85-32).

(பொருள்) இத்தம்பதிகளுக்குத் துன்பம் விளைக்கக்கூடிய பயங்கரங்கள் இல்லாதொழியட்டும். எங்கள் வரவைக்கண்ட துஷ்ட ஜீவன்கள் பயந்து ஓடட்டும்.

இவ்வாறு சொல்லவேண்டும். வழியிலே வண்டிக்கேதாவது சேதமேற்படினும், எதிர்பாரா உபத்திரவம் ஏற்பட்டாலும் அருகில் ஓர் நல்ல விடத்தைப் பார்த்துத் தங்கவேண்டும். தங்களுடன் கொண்டுவந்துள்ள விவாகாக்னியில் 4-ன்கு "ஆஜ்யாகுதிகள்" கொடுக்கவேண்டும். பிறகு "வாமதேவகானம்" செய்யவேண்டும். பிறகு சமயோஜிதமாய் வேண்டுவன புரிந்து மணமகள் வீட்டை யடைந்தபோது ஓர் உத்தம குலஸ்த்ரீ, அல்லது ஓர் ப்ராம்மணீ எதிர்வந்து கைலாகு கொடுத்து பெண்ணை புருடனுடன் வண்டியிலிருந் திறக்க வேண்டும். பிறகு அவர்களை சபாமண்டபத்திற் கழைத்துச் சென்றபோது கார்யகர்த்தர் அங்குள்ளவர்களைப் பார்த்து—:

ஸுமங்களீரியம் வதூரிமாம் ஸமேத பஶ்யத | ஸௌபாக்யமஸ்யை தத்வா யதாஸ்தம் விபரேதன || (ருக்-10-85-33).

என்று சொல்ல அவர்கள்—:

ஓம் ஸௌபாக்யமஸ்து ஶுபம் பவது ||

என்று ஆசீர்வதித்தபின் புருடன்—:

இஹ ப்ரியம் ப்ரஜயா தே ஸம்ருத்யதாமஸ்மின் க்ருஹே கார்ஹபத்யாய ஜாக்ருஹி | ஏனாபத்யா தன்வம் ஸம்ஸ்ருஜஸ்வாதா ஜிவ்ரீ விததமாவதாத: (ருக்-10-85-27).

(பொருள்) ஏ மணமகளே! இவ்வீட்டில் புத்ராதிகளுடன் உன் அன்புவார்த்தைகளை அபிவிருத்திசெய். உன் இல்

லற தர்மத்திலே சதா சாவதானம் வை. இப்புருடனுடன் உன் சரீர சம்பந்தம் செய். நீங்களிருவரும் கிழப்பரியந்தமும் யாகாதி நற்காரியங்களைச் செய்துகொண்டிருங்கள்.

என்று சொல்லி பெண்ணை மண்டபத்திற் கழைத்துச் செல்லவேண்டும். பிறகு தடவினிற் கருகு செல்லும்போது புருடன்—:

ஓம் இஹ காவ: ப்ராஜாயத்வமிஹாஸ்வா இஹ பூருஷா:। இஹோ ஸஹஸ்ரதக்ஷிணோபி பூஷா நிஷீதது ॥

(சதர்-20(127),

(பொருள்) இவ்வீட்டிலே பசு, குதிரை, குழந்தைகளை நீங்கள் இருவரும் விருத்திசெய்யுங்கள். பத்னியைக் காப்பாற்று மிப்புருடன் அனேக தானங்களைப் புரிந்துகொண்டு வாழட்டும்.

என்று சொல்லி தடவினிற்கு மேற்கில் பத்னியைத் தன் வலது பாகத்திலமர்த்தி மணை அல்லது ஆசனமிட்டமரவேண்டும். பிறகு 41-ம் பக்கத்துள்ள (ஓம் அம் ருதோபஸ்தரணமஸி) எனுமாதி மந்திரங்களால் மூன்றுமுறை நீருட்கொண்டு நெருப்புமூட்டி, சமிதைகளிட்டு, "ஆகாரவாஜ்யாகுதிகள்" 4-ன்கும், ",வ்யாஹ்ருத் யாகுதிகள்" 4 ன்கும், "அஷ்டாஜ்யாகுதிகள்" 8-ம் செய்து பின் கீழ்வரும் மந்திரங்களால் ஆகுதிகள் கொடுக்கவேண்டும்—:

ஓம் இஹ த்ருதி: ஸ்வாஹா। இதமிஹத்ருத்யை இதன்ன மம ॥ ஓம் இஹஸ்வத்ருதிஸ் ஸ்வாஹா ।

இதமிஹ ஸ்வத்ருத்யை இதன்ன மம ॥ ஓம் இஹ ரந்தி: ஸ்வாஹா । இதமிஹரந்த்யை இதன்ன மம ॥ ஓம் இஹ ரமஸ்வ ஸ்வாஹா । இதமிஹரமாய இதன்ன மம ॥ ஓம் மயித்ருதி: ஸ்வாஹா । இதம் மயித்ருத்யை இதன்ன மம ॥ ஓம் மயிஸ்வத்ருதி: ஸ்வாஹா । இதம் மயி ஸ்வத்ருத்யை இதன்ன மம ॥ ஓம் மயிரம: ஸ்வாஹா । இதம் மயி ரமாய இதன்ன மம ॥ ஓம் மயிரமஸ்வ ஸ்வாஹா । இதம் மயிரமாய இதன்ன மம ॥

(மந்-ப்ராம-1-6-1-4).

(பொருள்) இவ்வீட்டில் தைர்யம், மனவடக்கம், களிப்பு பெண் புருடர்களின் பரஸ்பர க்ரீடை ஆதிகுணங்கள் சதா வசித்துக் கொண்டிருக்கட்டும்.

இவ்வாகுதிகளளித்து பின்—:

ஓம் ஆ ந: ப்ரஜாம் ஜனயது ப்ராஜாபதி ராஜரஸாய ஸமனக்தவர்யமா அதுர்மங்களீ: பதி லோகமாவிஶ ஶன்னோ பவ த்விபதே ஶம் சதுஷ்பதே ஸ்வாஹா । இதம் ஸூர்யாயை ஸாவித்ர்யை இதன்ன மம ॥

(பொருள்) ந்யாயகாரி பரமாத்மாவின் கிருபையால் கிழவயதுவரை வாழ்ந்திருக்கி நாம் உத்தம மக்கட்பேற்றை அடைவோமாக. அதனால் சுகத்தைப் பெறுவோமாக. சுமங்களியானநீ உன் புருடன் மனையாகிய இம்மனையில் உள்ள சகலருக்கும், பசுவாதி சகல ஜீவர்களுக்கும் சுகத்தையளித்துக்கொண்டிருப்பாயாக.

ஓம் அகோரசக்ஷுரபதிக்ன்யேதி ஶிவா பஶுப்ய: ஸுமனா: ஸுவர்சா: । வீரஸூர்தேவ்ருகாமா ஸ்யோனா ஶன்

ஞே பவ த்விபதே ஶம் சதுஷ்பதே ஸ்வாஹா । இதம் ஸூர்யாயை ஸாவித்ர்யை இதன்ன மம ||

(இதன் பொருள் ம் பக்கத்துள்ள ப்ரமாணத்தின் படி யறியவும்).

ஓம் இமாம் த்வமிந்த்ர மீட்வ: ஸுபுத்ராம் ஸுபகாம் க்ருணு । தமாஸ்யாம் புத்ராநாதேஹி பதிமேகாதஸம் க்ருதி ஸ்வாஹா । இதம் ஸூர்யாயை ஸாவித்ர்யை இதன்ன மம ||

(பொருள்) வீர்யத்தைச் சிந்தும் ஏ புருடா! நீ இப்பெண்ணை நல்ல புத்ரவதியாகவும் சௌபாக்யத்தளாகவும் செய். இவள் மூலமாய் 10 குழந்தைகளைப் பெறு. அதிகம் வேண்டாம். ஏ பெண்ணே! நீயும் அதிக இச்சையின்றி 10 குழந்தைகளுடனும் 11-வதாக புருடனையும்கொண்டு சந்தோஷத்துடன் வாழ்ந்துவா.

ஓம் ஸம்ராக்ஞீ ஶ்வஶுரே பவ ஸம்ராக்ஞீ ஶ்வஶ்ருவாம் பவ । நநாந்தரி ஸம்ராக்ஞீ பவ ஸம்ராக்ஞீ அதிதேவ்ருஷு ஸ்வாஹா । இதம் ஸூர்யாயை ஸாவித்ர்யை இதன்ன மம ||
(ருக்-10, 7, 85, 43-46).

(பொருள்) ஓ பெண்ணே! உன் மாமியிடமும், மாமனிடமும் அன்புடையவளாகு. உன் நாத்திமாரிடமும், நாத்தன்மாரிடமும் அன்புடையவளாகு.

இம்மந்திரங்களாலு மாகுதியளித்து 46-ம் பக்கத்துள்ள (ஓம் யதஸ்ய) எனும் மந்திரத்தால் 1-ம், "வ்யாஹ்ருதி யாகுதிகள்" 4-ன்கும், "ப்ராஜாபத்யாகுதி" 1-ம் கொடுத்து பின்—:

ஸமஞ்ஜந்து விஶ்வே தேவா: ஸமாபோ ஹ்ருதயானி நௌ । ஸம் மாதரிஶ்வா ஸ்ம் தாதா ஸமுதேஷ்ட்ரீ ததாது நௌ ||
(ருக்-10-85-47).

(இதன் பொருள் ம் பக்கம் வந்துள்ளது).

இம்மந்திரம் சொல்லி இருவரும் தயிர் சாப்பிடவேண்டும். பிறகு—:

அஹம் போ அபிவாதயாமி || நான் உங்களுக்கு வந்தனம் செய்கின்றேன்.

இதைச் சொல்லி தம்பதிகளிருவரும் தாய், தகப்பன் மற்றுமுள்ள எல்லாபெரியோர்களையும் நமஸ்கரித்துக்கொள்ள வேண்டும். பிறகு மறுபடி நல்ல அலங்காரங்களைச் செய்துகொண்டு இருவரும் ஆசனத்தி லமர்ந்து "வாமதேவகானம்" செய்யவேண்டும். பிறகு கடவுள் துதியையும் செய்யவேண்டும். அப்போது தம்பதிகள் பெரியோர்களைப் பார்த்து—:

ஓம் ஸ்வஸ்தி பவந்தோ ப்ருவந்து || (ஆஸ்வலா-1-8-15).

(பொருள்) அருள் வேண்டல் புரியுங்கள்.

என்று சொல்ல சகலரும்சேர்ந்து அருள்கோறல் செய்ய வேண்டும். இது முடிந்தபின் சகலரும் சேர்ந்து—:

ஓம் ஸ்வஸ்தி ஓம் ஸ்வஸ்தி ஓம் ஸ்வஸ்தி ।

என்று சொல்லவேண்டும். பிறகு பெண்களுக்கு பெண்களும், புருடர்களுக்குப் புருடர்களும் வேண்டுவனசெய்து அனுப்பிவைக்கவேண்டும். அந்நாளில் மகப் பேற்றுச்

சடங்கை நடத்த முடியாவிட்டால் மறுபடி நடத்த வேண்டிய நாள்வரை தம்பதிகள் காரமில்லாத உப்பு புளிப்பில்லாத ஆகாரங்களை உண்டுவரவேண்டும். ஆனால் எப்போதும் மாதவிலக்குக் கண்டுதீர்ந்த பின்பே மகப்பேற்றுச் சடங்கைச் செய்ய வேண்டும். புருடன் வெளியூரைச் சேர்ந்தவனாயின் அவன் ஊருக்குச் சென்றபின்பே மகப்பேற்றுச் சடங்கைச் செய்யவேண்டும். பிறகு புருடன், மாமி, மாமன், நாத்திமார் முதலியவர்கள் அன்புடன் பெண்ணை உபசரிக்கவேண்டும். ஒருவருக்கொருவர் சதா அன்புடன் வசிக்கவேண்டும். சதா பெண்ணை நல்ல அன்புபெறும் வார்த்தைகளாலும், ஆடையாபரணங்களாலும் களிப்பித்துக்கொண்டு சுகமுடன் வைத்திருக்க வேண்டும். பெண்ணுமவ்வாறே சகலரையுமன்புடன் நடத்த வேண்டும். புருடன் மனைவியை நேசனாக பாவித்து நடத்த வேண்டும். பெண்ணுமவ்வாறே தன் புருடன் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு நடத்தி களிப்புடன் புருடனை வைத்திருக்க வேண்டும். இருவருங்கலந்து மனம், வாக்கு, காயங்களில் ஒற்றுமை யடைந்து நற்புத்திரப்பேற்றை யடைந்து சுகமுடன் நீடுழிகால மின்பமயமாய் வாழ்வார்களாகவும்.

சுபம். சுபம். சுபம்.

திருமணச் சடங்கு முற்றிற்று.

இல்லறசீலச் சடங்கு

(க்ருஹாஸ்ரமம்)

இகபர சுகங்களுக்காக தங்களாற் கூடியவரை பிறர்க்குபகாரம் புரிதலும், நியமித்த காலங்களில் கடவுளைத் துதித்தலும், வீட்டுக்காரியங்களைப் புரிதலும், நற்காரியங்களிலேயே தன் உடல், பொருளாவி மூன்றையுஞ் செலவழித்தலும், நற்குண வொழுக்க வீரபுருடர்களாகும் மகவுகளைப் பெறுதலும், முதலானவைகள் இல்லற சீலச் சடங்கெனப்படும். இதற்குத்தாட்சி.

ஸோமோ வதூயுரபவதஸ்விநாஸ்தாமுபா வரா சூர்யாம் யத்பத்யே ஸம்ஸந்தீம் மனஸா ஸவிதா ததாத் (1). இஹைவ ஸ்தம் மாவியௌஷ்டம் விஸ்வமாயுர் வ்யஸ்நுதம் । க்ரீடந்தௌ புத்ரைர் நப்த்ருபிர்மோதமானௌ ஸ்வே க்ருஹே॥(2)
(ருக்-10-85 [9-112]).

(பொருள்) நற்குணவதியை நாடும் புருடனும், நற்குணப் புருடனை நாடும் பெண்ணும், மறைமொழிகளை ஏரன்புடன் கற்று களையடைந் திருவரும் சமமாய் குணவொழுக்கமுள்ளவர்களாவார்களாக. ப்ரீதியின் [illegible] பொன்னெறியுடைய புருடனை விரும்பி மனத்தான் நற்கருமங்களைப் புரியும் பெண்ணையும், அவ்வாறே விரும்பும் புருடனையும், முத்தொழில்முதல்வன் அடையச்செய்கின்றான் (1) ஏ பெண் புருடர்களே!

நினைப்பை யறிந்தியவல்ல சகல நிறைச் சர்வருபி உம்மெண்ணங்களை முடித்துவைப்பாருக. ஆதலால் உம்மெண்ணத்திற்றிடங்கொண்டிருங்கள். கைவிடாதீர்கள். மகவுகளுடனும் மக்களின் மக்களுடனும், விளையாடிக்கொண்டு, நற்காரியங்களைப்புரிந்துகொண்டு, நல்லில்லற வாசிகளாய் நீடுழிவாழுங்கள் (2).

ஸௌமங்கலீ ப்ரதாரணீ க்ருஹாணாம் ஸுசேவா ஸ்வஸுராய ஸம்பூ꞉ | ஸ்யோனா ஸ்வஸ்ராவை ப்ரக்ருஹான் விசேமான் || (3). ஸ்யோனா பவ ஸ்வ ஸுரேப்ய: ஸ்யோனா பத்யே க்ருஹேப்ய: | ஸ்யோனாஸ்யை ஸர்வஸ்யைவிசே ஸ்யோனா புஷ்டாயைஷாம் பவ||(4). யர்துர்ஹாதோ யுவதயோ யாஸ்சேஹ ஜரதீரபி வர்சோன்வஸ்யை ஸந்தத்தாதாஸ்தம்விப ரேதன || (5). (அதர்:14-2-26, 27, 29).

ஏ இன்பக் காதலி! நீ நற்காரியங்களைம் புரிபவள். கெட்ட காரியங்களை விலக்குவதில் வயிரம் போன்றவள் இல்லற காரியங்களிற் திறமையுடையாள். நற் சுகங்களைப் பெறுபவளாய், புருடனுக்காகவும், மாமனுக்காகவும், அத்தையாருக்காகவும், சுகமீபவள். சுய அறிவுடையவளாய் இவ்வீடுகளில் சுகத்துடன் வாழ் (3). ஏ! செவ்விதழ்வெண்பற்சிறு நகைப்பாவாய்! உன்றன் மாமனார் முதலாயினோர்க்கு சுகமீவாய். இல்லிற்சார்ந்த சம்பந்திகளுக்கும் சுகமீவாய். சகல மக்களுக்காகவும் சுகரூபிணியாக நீ விளங்குவாயாக(4). எவர் கெட்ட மனதுடையோராய் பெண்களாகின்றனரோ, பின்னுமிவ்விடம் கெட்ட நடக்கையுள எப்பெண்களுளரோ, அவர்களுக்கும் மங்கை விளைவினொளியை அளிப்பாளாக.

பிறகவ ரவரில்லங்களுக்குச் செல்வாராக. மறுபடி யிம்மங்கையிடம் வாராதொழிவார்களாக (5)

ஆரோஹ தல்பம் ஸுமனஸ்யமானேஹ ப்ரஜாம் ஜனைய பத்யே அஸ்மை | இந்த்ராணீவ ஸுபுதா புத்யமானா ஜ்யோதிரக்ரா உஷஸ꞉ ப்ரதிஜாகராஸி || (6) (அதர்-14-2-32).

ஏ! பிறைநுதலீ! நீ நன்மனதுடையோளாய், அறிவாசனத்தின் மேலேறி படுப்பாய். இனி யிவ்வில்லறத்தில் நிலையுடனிருந்து, இப்புருடனுக்காக மக்களைப் பெறு. நல்லறிவு போதனைபெற்று, சூரியனைப்போன்ற ஒளியுளநீ விடியற்காலையின் முதனொளியைப்போற் சகல காரியங்களையும் புரிந்துகொண்டிரு. (6)

தேவா சுக்ரேன்யபத்யந்த பத்னீ꞉ ஸமஸ்ப்ருஸந்த தன்வஸ்தனூபி꞉ | ஸூர்யேவ நாரிவிஸ்வரூபா மஹித்வா ப்ரஜாவதீ பத்யா ஸம்பவேஹ || (7) (அதர்-14-2-32).

ஏ! திருக்கெழின் நங்காய்! இவ்வில்லறத்தை முதலில் அறிவோர்களும், நற்குணவதிகளும் எவ்வாறடைகின்றார்களோ, உடலுடனுடலைத் தீண்டுகின்றார்களோ; அவ்வாறே, நல்லுருவத்துடன், நற்குணமும் பெற்று, பரிதியினொளிபோல் புருடனுடன்கூடி, நன்மகப்பேறுகளை யடைவாயாக. (7)

ஸம் பிதராவ்ருத்வியே ஸ்ருஜேதாம் மாதா பிதா சரேதஸோ பவாத꞉ | மர்ய இவ யோஷாமதி ரோஹயைனாம் ப்ரஜாம் க்ருண்வாதாமிஹ புஸ்யதம் ரயிம் || 8 (அதர்-14-2-37).

ஏ! பெண் புருடர்களே! உங்கள் மக்களுக்கு நன் மகவுகளுண்டாமாறு செய்யுங்கள். குழந்தைகள் பெரும் பெண்

னும் புருடனும், இந்திரயஸ்தம்பனம் புரிந்தவர்களாயிருக்கட்டும். ஏ புருடா! இதோவிருக்கு முன் மனைவியின்பால் நன்மகவுண்டாம்படி செய், நீங்களிருவரு மில்லறத்திற்கலந்து மகவுகளைப் பெறுங்கள். அவைகளைக் காப்பாற்றி நற்பேறுகளைப் பெருமாறு செய்யுங்கள். (8)

தாம் பூஷஞ்சிவதமாமேரயஸ்வ யஞ்யாம் பீஜம் மனுஷ்யாதுபத்தி । யா ந ஊரு உஸதி விஸ்ரயாதியஸ்யாமுஸந்தஃ ப்ரஹரேமஸேபம் ॥ (8) (அதர்-14-2-38).

ஏ புருடா! மனிதர்களெதின்கண் இந்திரியங்களைப் பொருந்தச் செய்கின்றனரோ, எவள் நம்மை யாசித்து, துடைகளினெழிலான் நம்மை யாசிக்கச் செய்கின்றனளோ, எதனிற் குழந்தையைநாடி நம் மர்மவிடத்தின் காரியம் புரிகின்றனமோ, அக்கனி யுண்டாக்கு மங்கையை மகப்பேற்றக்காகளிப்புடன் வைத்திருப்பாயாகவும் (9).

ஸ்யோனாத்யோனேரதி ப்ருத்யமானௌ ஹஸாமுதௌ மஹஸாமோத மானௌ । ஸுகூ ஸுபுத்ரௌ ஸுக்ருஹௌ தராதோ ஜீவாவுஷஸோ பிபாதீ: ॥ (10) (அதர்-14-2-43).

ஏ! இல்லறவாசிகளே! எவ்வாறு பரிதி விடியற்காலையின் நன்னொளியுடன் தோன்றுகின்றனனோ, அவ்வாறே இக துடன் இல்லத்தில் பகப்பெறுதல் முதலாய காரியங்களை நன் கறிந்தவர்கள் எப்போதும் விகடக்களிப்போராயும் இடவன் புடன் நன்முகத்தினராய், நன்னடக்கையுடையவராய், அறக் காரியங்களை நன்குபுரிபவர்களாய் நன்மகவுடையோர்களாய் இல்லறச்சரக்குகளுடனு இங்கூடியவர்களாய், நன்மகவுகளைப் பெற்று, இல்லறகாரியங்களை நடத்துவீர்களாக. (10)

இஹேமாஜிந்த்ர ஸன்னுத சக்ரவாகேவ தம்பதீ । ப்ரஜயை னௌ ஸ்வஸ்த கௌ விஸ்வமாயுர்வ்யஸ்னுதாம் ॥
(அதர்-14-2-64).

உண்மைப்பொருளாய கல்வியாளனுய பண்டிதவரசா! நீ யிவ்வில்லறத்தி லிம்மங்கையுடன், பெண்புருடர்களுக்கு சமயோசிதமாய் மணஞ்செய்து கொள்ள கட்டளையியும். அவ்வாறே சகலரையும் தூண்டும். இவ்வாறு புரியப்பட்ட அவ்விருதம்பதிகளும் 100 வருடங்கள் சுகமுடன் வதிவாராகவும் (11).

ஜனியந்தி நாவக்ரவஃ புத்ரியந்தி ஸுதாவைஃ । அரிஷ்டாஸு ஸசேவஹிப்ருஹதே வாஜஸாதயே ॥ (12)
(அதர்-14-2-72).

ஏ மனிதர்களே! எவ்வாறு நற்கலையை பிறர்க்களிக்கும் உத்தமப் பெண் புருடர்கள், மகவுகளைப் பெறுகின்றனரோ, அன்றி மகவுகளை வேண்டுகின்றனரோ, அவ்வாறே வுங்களுக்கு நல்லெண்ண முண்டாகுக. அவ்வாறே நற்குணமுடையோராய், நல்லறங்கள் புரிந்து, சுகமுடனிருப்போமாக (12).

ப்ரபுத்யஸ்வ ஸுபுதா புத்யமானு தீர்காயுஸ்வாய ஸதசாரதாய । க்ருஹான் கச்ச க்ருஹபத்னீ யதாஸோ தீர்கம்த ஆயு: ஸவிதாக்ருணோது ॥ 13 ॥ (அதர்-14-2-75).

ஏ! காதலீ! நீ 100 வருடங்கள்வரை வாழ, நற்குணத்தளாய், நல்லெண்ணத்தளா யென்னில்லிற் பொருந்திடுவாய், இல்லறதெய்வமாய என்னின்பக் காதலீ! எவ்வாறுன் னுயுளின் வாழ்க்கையுளதோ, அவ்வாறே வுன்னறிவு மிருக்குமென்றெண்ணு. கடவுளிதை நிறைவேற்றுவாராக (13)

ஸஹ்ருத்யம் ஸாம்மனஸ்யமவித்வேஷம் க்ருணோமிவ: ।
அன்யோ அன்யமபி ஹர்யத வத்ஸம் ஜாதமிவாக்ன்யா ॥14॥
(அதர்-3-30-1).

ஏ மனிதர்களே ! உம்மைப்போன்ற பிறரை நேசிப்பீர். மனதினுற் குற்றமிலாக் காரியங்களை நிலைநிறுத்துகின்றேன். பசுவின் கன்றினைத் தாயெவ்வாறன்புடன் பாதுகார்க்குமோ, அவ்வாறே மக்களிடை யன்புடனிருங்கள்—: (14).

அனுவ்ரதஃ பிது: புத்ரோமாத்ரா பவது ஸம்மனா: ।
ஜாயாபத்யே மதுமதீம் வாசம் வதது சாந்திவான் ॥ 15 ॥
(அதர்-3-30-2)

ஏ இல்லறவாசிளே ! எவ்வாறு மகன் தாயாரிட மன்புடையவனும் அவனின் நன்மையைக் கோருபவனும், தகப்பனரிடமு மிவ்வாறே மேன்மை யுடையவனுமிருப்பனே, அவ்வாறே நீங்களுமவனிட மிருப்பீராக. எவ்வாறு மனைவி புருடனின் நன்மைக்காக அவனின் மேன்மையைச் சொல்வளோ, அவ்வாறே புருடனும் மனைவியின் மேன்மையிற் கருத்துடையவனு யிருத்தல்வேண்டும்.

மா ப்ராதா ப்ராதரம் த்விக்ஷன்மா ஸ்வஸாரமுதஸ்வஸா ।
ஸம்யஞ்ச ஸவ்ரதா பூத்வா வாசம் வதத பத்ரயா ॥ 16 ॥
(அதர்-3-30-3).

ஏ! இல்லறர்களே! உங்களிலுடன்பிறந்தானுடன் பிறந்தானுக்குத் தீங்கியற்றலாகா. அவனுமவனிட மவ்வாறே. ஆதலாலிருவரு மொருவருக்கொருவர் நன்மையைக் கோருபவராயிருக்கட்டும்.

யேன தேவா ந வியந்தி நோ ச வித்விஷதே மித: । தத் க்ருண்மோ ப்ரஹ்மவோ க்ருஹே ஸம்ஜ்ஞானம் புருஷேப்ய: ॥ 17 ॥
(அதர்-3-30-4)

ஏ இல்லறவாசிகளே ! எதனுல் பண்டிதர்கள் ஒருவருக்கொருவர் பேதமுள்ளவர்களாகாரோ, இன்னும், ஒருவருக்கொருவர் வெறுக்கார்களோ, அதே காரியங்களை உங்களில்லங்களிற் புரியுங்கள். ஏ புருடர்களே ! இல்லறத்திற் செவ்வனே வொழுகி நற்செல்வம் பெருவீர்களாக (17).

ஜ்யாயஸ்வந்தஸ்சித்தினோ மா வியௌஷ்ட ஸம்ராதயந்த: ஸதுராஸ்ச ரந்தஃ । அன்யோ அன்யஸ்மை வல்குவதந்த ஏத ஸத்ரீசீனன்வஃ ஸமன ஸ்க்ருணோமி ॥ 18 ॥
(அதர்-3-30-5).

ஏ இல்லறர்களே ! நீங்கள் நற்கல்வி யறிவையுடைய பண்டிதர்களின் நல்லொழுக்கங்களைக்கொண்டு வாழ்ந்து, சகல சுகமும்பெற்று, விரோதிகளின்றி, ஒருவர் மற்றவருக்காக நன்மை நாடுபவர்களாய் பொருந்துங்கள். அதினலுங்களை சகலத்திலும் சமமானவர்களாகச் செய்கின்றேன் (18).

ஸமானீ ப்ரபா ஸஹ வோன்னபாக: ஸமானே யோக்த்ரே ஸஹவோ யுனஜ்மி । ஸம்யஞ்சோ஽க்னிம் ஸபர்யதாரா நாபிமிவாபித: ॥ 19 ॥
(அதர்-3-30-6)

ஏ மனிதர்களே ! உங்கள் காரியங்கள் ஒரேவிதமாகட்டும். உங்களாகாராதிகள் ஒன்றாயிருக்கட்டும். உங்கள் பீடங்களொன்று யிருக்கட்டும். எவ்வாறு சக்கரத்தி னிதழ்களச் சக்கரத்தை யாதரிக்கின்றனவோ, எவ்வாறு மற்றையோர்கள் கலையாளர்களுக்கு வேள்விகளால் நன்மை யீகின்

றனரோ, அவ்வாறே நீங்களு மொருவருக்கொருவ ருதவி செய்துகொள்ளுங்கள் (19).

ஸத்ரீசீனன்வ: ஸம்மனஸஸ் க்ருணோயேகஸ்னுஷ்டின்த் ஸம்வனனேன ஸர்வான் | தேவா இவாம்ருதம் ரக்ஷமாணா: ஸாயம்ப்ராத: ஸௌமனஸோவோ அஸ்து || 20 ||
(அதர்-3-30-7).

உங்களை சமப்பார்வையும், சமமனதையும், ஒரேவித காரியங்களையும், சகலரையும் ஒரேவிதமாகச் செய்கின்றேன். நீங்கள் பண்டிதர்கள்போல் சுகங்களைக் காப்பாற்றிக்கொண்டு காலைமாலைகளி லுங்கள் மனது களிப்புடனிருக்கும்படிச்செய்து கொள்ளுங்கள் (20).

ஸ்ரமேணதபஸா ஸ்ருஷ்டா ப்ரஹ்மணா வித்த ஹ்ருதே ஸ்ரிதா: || 21 || (அதர்-12-5-1).

நீங்கள்—: துக்கமின்றியும், நற்பழக்கத்துடனும், நற் கல்வியுடனும், சகல செல்வத்துடனும், அறங்களுடனும், நீண்ட சுகமுடனும் வாழ்வீர்களாக (21).

ஸத்யேனாவ்ருதா ஸ்ரியா ப்ரவ்ருதா யஸஸா பரிவ்ருதா: || 22 || (அதர்-12-5-2).

உண்மையுடனும், நற்பெயருடனும், திருவுடனும், புகழுடனும், செல்வத்துடனும், பொருந்தி சுகமுடன் வதிவீர்களாக (22).

ஸ்வதயா பரிஹிதா ஸ்ரத்தயா பர்யூடா தீக்ஷயா குப்தா யக்ஞோ ப்ரதிஷ்டிதா லோகோ நிதனம் || 23 ||
(அதர்-12-5-3).

நற்றயை, சகலரின் நன்மையை நாடுதல், கவலையுடனிருத்தல், சகலருக்கும் நன்மை யீயல், மறைமாணவ னோன்பால் நற்குணம் பெருதல், வேள்வியாதிக ளியற்றல் இவைகளால் இவ்வுலகில் சுகத்தைக்கொண்டு வாழ்ந்திருங்கள் (23).

ஓஜஸ்ச தேஜஸ்ச ஸஹஸ்ச பலஞ்ச வாக்சேந்த்ரீயம் ச ஸ்ரீ ஸ்ச தர்மஸ்ச || 24 || (அதர்-12-5-5-7).

வீரம், ஒளி, நற்சகவாசம், பலம், உண்மை, அவயவப்புனிதம், திருவும், நியாயமும்பெற்று சுகத்துடன் வாழுங்கள். (24).

ப்ரஹ்ம ச க்ஷத்ரஞ்ச ராஷ்ட்ரம் ச விஸஸ்சத்விஷிஸ் ச யஸஸ்ச வர்சஸ்ச த்ரவிணம் ச || 25 || (அதர்-12-5-8).

நற்கலை, வீரம், பூமி, பிறர்நன்மை, நல்லறிவு, நற்பெயர், கலைவிசாரணை, செல்வம், முதலியனபெற்று சுகரூபிகளாய் விளங்குங்கள் (25).

ஆயுஸ்ச ரூபம்ச நாமச கீர்திஸ்ச ப்ராணஸ்சாபானஸ்ச சக்ஷுஸ்ச ஸ்ரோத்ரஞ்ச || 26 || (அதர்-12-5-9).

ஆயுள், நன்னுடல், நற்பெயர், நற்கீர்த்தி, நீண்டவுயிர், நற்பார்வை, நற்கேள்வி பெற்றுச் சுகமுடன் வாழுங்கள் (26).

பயஸ்ச ரஸஸ்சான்னம் சான்னாத்யம்ச ஹ்ருதம் ச சத்யம் சேஷ்டம் ச பூர்த்தம் ச ப்ரஜா ச பஸவஸ்ச || 27 ||
(அதர்-12-5-5-10).

நற்பெயர், சத்துள்ளவன்னம், அரிசி, நற்பொருள்கள், உண்மை, உண்மையைபேசும்படி செய்தல், வேள்வி, எண்ணம் நிறைவேற்றல், மக்கள் பலம், பசுக்களின் செல்வம், முதலியன பெற்றுய்யுங்கள் (27).

குர்வன்னேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேத்ஸதம்ஸமா: ।
ஏவம் த்வயி நான்யதேதோऽஸ்தி ந கர்ம லிப்யதே நரே ॥
(யஜுர்-40-2).

இவ்வுலகில் பந்தமுண்டுசெய்யா காரியங்களைப் புரிந்து கொண்டு மனிதனாய் நீ 100 வருடங்கள் வாழ்ந்திருப்பதன்றி மற்று நீ புரியவேண்டிய தொன்றுமில்லை.

பூர்புவ: ஸ்வ: । ஸுப்ரஜா: ப்ரஜாபி: ஸ்யாம் ஸுவீரோ வீரை: ஸுபோஷ: போஷை: । நர்ய ப்ரஜாம் மே பாஹி ஸம்ஸ்ய பஸூன்மே பாஹ்யதர்ய பிதும் மே பாஹி ॥ 2 ॥
(யஜு-3-37).

உடல், வாக்கு, மனமாய மூன்றின் சுகமுடன்கூடி, மக்களுடன், நன்மனிதனாய் ஆகக்கடவேன். நல்வீரனாவேனாகவும், உலகப்பொருள்களால் நற்பலவானாவேனாகவும். ஏ கடவுளே! எங்கள் மக்களைக் காப்பாற்று. ஏ கடவுளே! எங்கள் பசுமுதலியவைகளையும் காப்பாற்று. இவ்வாறு இல்லறவாசிகள் கடவுளை வணங்கவேண்டும் (2).

க்ருஹா மாபிபீத மா வேபத்வமூர்ஜம் பிப்ரத ஏமஸி ।
ஊர்ஜம் பிப்ரத்வ: ஸுமனா: ஸுமேதா க்ருஹா னைமி மனஸா மோதமான: ॥ 3 ॥ (யஜு-3-41).

இல்லறவாசிகளே! அஞ்சாதீர்கள். திடமில்லாதவர்களாகாதீர்கள். நற்குண இல்லறர்களுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்கள். உங்களுக் குண்மையைச் சொல்கின்றோம். மனதாற் களிப்படையுங்கள். நன்மனத்தாய், நற்குணத்தவராய், நற்பலத்தாய் சகலவிதத்திலும் சுகமுடன் வாழுங்கள் (3).

ஏஷா மத்த்யேதி ப்ரவஸன்யேஷு ஸௌமனஸோ பஹு: । க்ருஹானுபஹ்வயாமஹே தே நோ ஜானந்து ஜானத: ॥ 4 ॥ (யஜு-3-42).

வெளிச்சென்றவன் எவனை நினைக்கின்றான். எவனிடமன்புள்ளதோ அவர்களைப் புகழ்கின்றோம். அவர்கள் அவர்களை அறிவார்கள். எங்களையுமறிவார்கள் (4).

உபஹூதா இஹ காவ உபஹூதா அஜாவய: । அதோ அன்னஸ்ய கீலால உபஹூதோ க்ருஹேஷு ந: । க்ஷேமாய வ: ஸான்த்யை ப்ரபத்யே ஸிவம் ஸக்மம் ஸம்யோ: ॥ 5 ॥
(யஜுர்-3-43).

நம்மில்லங்களில் பசுமுதலியவைகள் அருகாவதுபோல, ஆடுமுதலானவைகளும் அருகாகட்டும். இதற்குமேல் ஆகாராதிகளுக்காகத் தேடுவோமாக. நானுங்கள் வீட்டில் சுகமியவருகின்றேன். நீங்கள் சகல சுகங்களையும் பெற்று வாழுங்கள்.

ஸந்துஷ்டோ பார்யயா பர்த்தா பார்யா தத்தைவ ச । யஸ்மின்னேவ குலே நித்யம் கல்யாணம் தத்ர வை த்ருவம் ॥ 1 ॥
(மனு-3-60)

எக்குலத்தில் மனைவியுடன் புருடனும், புருடனுடன் மனைவியு மன்புடனிருப்பரோ, அக்குலத்திலேயே சகல மேன்மையு முண்டாகிறது. இஃதில்லாக் குடும்பத்தில் கலகமே பயனாகும் (1).

யதி ஹி ஸ்த்ரீ ந ரோசேத புமாம்ஸம் ந ப்ரமோதயேத் ।
அப்ரமோதாத் புனர்பும்ஸ: ப்ரஜனம் ந ப்ரவர்த்ததே ॥2॥
(மனு-3.61).

புருடனிடம் பெண் அன்பில்லாதவளாயினும், புருடனை சரியாக பாதுகார்க்காவிடினும், அப்புருடனிடம் காமவிச்சையுமேற்படாமற் குழந்தைகளு முண்டாகா (3).

ஸ்ரீயாந்து ரோசமாநாயாம் ஸர்வந்தத்ரோசதே குலம் ।
தஸ்யாம் த்வரோசமாநாயாம் ஸர்வமேவ ந ரோசதே ॥ 3 ॥
(மனு-3-62).

எப்புருடன் மனைவியை இனியவளாகச் செய்யானோ, அவளன்பில்லாதவ ளாகின்றதா லக்குலத்தில் துக்கமே வாசமாகும். புருடனிடம் பெண் அன்புள்ளவளா யிருக்குங் குலத்திலேயே களிப்பென்பதிருக்கும் (3).

பித்ருபிர்ப்ராத்ருபிஸ்சைதா: பதிபிர்தேவைரஸ்ததா ।
பூஜ்யா பூஷயிதவ்யாஸ்ச பஹுகல்யாணமிப்ஸுபி: ॥ 4 ॥
(மனு-3-55).

தம்மகள், உடன்பிறந்தாள், மனைவி, மைத்துனி முதலாய பெண்கள், தகப்பனார், உடன்பிறந்தாள், புருடன் முதலாகி யவர்களை அன்புடன் நடத்தல், கடமையாகும் (4).

யத்ர நார்யஸ்து பூஜ்யந்தே ரமந்தே தத்ரதேவதா: । யத்ரைதாஸ்து ந பூஜ்யந்தே ஸர்வாஸ்தத்ரா பலா: க்ரியா: ॥ 5 ॥
(மனு-3-56).

எக்குலத்தில் பெண்கள் நன்காதரிக்கப்படுகின்றனரோ, அக்குலத்தில் சகல செல்வங்களும் மலியும். எக்குலத்தி லஃதின்றோ வக்குலத்தின் காரியங்கள் யாவும் பலனற்றவையாகும் (5).

ஶோசந்தி ஜாமயோ யத்ர விநஸ்யத்யாஸு தத்குலம் ।
ந ஶோசந்தி து யத்ரைதா வர்த்ததே தத்தி ஸர்வதா ॥ 6 ॥
(மனு-3-57).

எக்குலத்தில் நன்குபசரிக்கப் பெறாத பெண்கள், எவர்களைத் திட்டுவரோ, அக்குலமுமவர்களும் நாளாவிர்த்தியில் நாசமடைவர் (6).

தஸ்மாதேதா: ஸதா பூஜ்யா பூஷணாச்சாதநாஸநை: । பூதிகாமைர்நரைர்நித்யம் ஸத்காரேஷூத்ஸவேஷு ச ॥ 7 ॥
(மனு-3-59).

ஆதலின் பெண்களை நற்காரியங்களிலும், உற்சவங்களிலும், ஆடையாபரணாதிகளால் களிப்பிக்கவேண்டியது. நற்செல்வம் விரும்பும் புருடர்களின் கடமையாகும் (7).

ஸதா ப்ரஹ்ருஷ்டயா பாவ்யம் க்ருஹகார்யேஷு தக்ஷயா । ஸுஸம்ஸ்க்ருதோபஸ்காராயா வ்யயேசாமுக்தஹஸ்தயா ॥ 8 ॥
(மனு-5-150),

பெண்ணெப்போதும் வீட்டுக்காரியங்களைப் புரிவதில் சமர்த்தியாயிருத்தல் வேண்டும். அன்னம் சமைப்பது, அளவுடனிடுவது, முதலாய இல்லற காரியங்களில் பெண்கள் வல்லவர்களா யிருக்கவேண்டும் (8).

ஏதாஸ்சாந்யாஸ்ச லோகேऽஸ்மிந்நபக்ருஷ்ட ப்ரஸூதய: । உத்கர்ஷம் யோஷித: ப்ராப்தா: ஸ்வை: ஸ்வைர்பர்த்ருகுணை: ஸுபை: ॥ 9 ॥
(மனு-9-24).

பெண்கள் கெட்ட நடத்தையுள்ளவர்களாயிருப்பினும், அனேக பெண்களிவ்வுலகில் தம் நாயகரின் குணங்களால் நன்

னெறியிற் றிரும்பியிருக்கின்றனர். ஆதலின் புருடர்கள் நன்னெறியாளர்களாயின் பெண்களு மவ்வழியேயாவர் (9).

யஸ்மாத்த்ரயோऽப்யாஸ்ரமிணோ தானேனான்னேனச் சான்வஹம் | க்ருஹஸ்தேனைவ தார்யந்தே தஸ்மாஜ் ஜ்யேஷ்டாஸ்ரமோக்ருஹீ || 10 || (மனு-3-78).

இல்லறவாசியால் மற்ற மூன்றறத்தினர்களும் காப்பாற்றப்படுவதினால் நால்வகை யறத்தினு மில்லறமே மேலாகும்(1)

தஸஸூனாஸமம்சக்ரம் தஸசக்ரஸமோ த்வஜ: | தஸத்வஜஸமோவேஸோ தஸவேஸஸமோன்ருப: || 11 ||
(மனு-4-85).

வண்டியின் சக்கிரத்தைப்போல வாழ்க்கையை நடத்துபவர்கள். "தஸஹத்யர்" எனப்படுவர். "த்விஜ" என்பவர் பத்துச் சக்கரங்களின் சமமாவர். "வேஸ" எனின் 10 "த்விஜர்" களுக்குச் சமமாவர். அரசனென்பவன் 10 "வேஸர்" களுக்கு சமமாவன். ஆதலினிவர்க ளில்லறச் சாதமருந்துதற்கூடாது (11).

தஸாவராவா பரிஷத்யம் தர்மம் பரிகல்பயேத் | த்ர்யவராவாபி வ்ருத்தஸ்தா தம் தர்மம் ந விசாலயேத் || 12 ||
(மனு-12-110).

இல்லறவாசிகள் எக் காரியங்களையும் நிச்சயித்துக் கொள்ள வேண்டுமாயின் சகல மறை யுணர்ந்தோரும், இலக்கண பண்டிதர்களும் சேர்ந்து சபைகூடி தீர்மானித்ததின் படியே நிச்சயித்துக்கொள்ளவேண்டும் (12).

ஸோऽஸஹாயேன மூடேன லுப்தேனாக்ருதபுத்தினா | ந ஸக்யோன்யாயதோ நேதும் ஸக்தேன விஷயேஷுச ||3||
(மனு-7-30).

நற்பழக்கமில்லாதவனும், மூடனும், கல்வியறிவில்லாது இச்சைகளிற் சிக்கியவனுமாகு மரசன் கட்டளையை யொருபோதும் நிறைவேற்றமுடியாது (13).

ஸைனாபத்யம் ச ராஜ்யம் ச தண்டனேத்ருத்வமேவ ச | ஸர்வலோகாதிபத்யம் ச வேதசாஸ்த்ர விதர்ஹதி || 14 ||
(மனு-12-100).

மறைகளை யறிந்தவனும், ஈகையுடையவனும், உண்மையையொப்புக் கொள்பவனும் ஆகிய பலமுடையபுருடனுக்கே அரசபதவி, வீரர்பதவி, முதலானதுகளை யீயவேண்டும். மற்றவருக்குக் கூடாது.

வழி—: புருடர் மனைவியெப்போது மிரவு 10 மணிக்குப் படுத்து, நடுயிரவிலாகிலும் காலை 4-ன்கு மணிக்காகிலு மெழுந்து, முதலில் பகவானை மனதினிற் சிந்தித்து, அறவழிகளை விசாரித்திருக்கத் தகும். அறவழிகளினொழுங்குகளிலாகிலும் தொழில்களிலாகிலும், எப்போதாவ தாரோக்யக் குறைவேற்படினும் அறவழியி னொழுக்கங்களி னின்றும் வழுவலாகாது. ஆதலினெப்போதும் உள்மனம் அனுசரித்து ஆகாரங்கொண்டும், மருந்துகளுடனும், எப்போதும் தொழிற்புரிந்து, சதா கடவுள் வணக்கம் புரிந்துகொண்டிருக்கவேண்டும். அதற்கான மறைமொழிகள் வரையப்படுகின்றன—:

ப்ராதரக்னிம் ப்ராதரிந்த்ரம் ஹவாமஹே ப்ராதர்மித்ராவருணாப்ராதரஸ்வினா | ப்ராதர்பகம் பூஷாணம் ப்ரஹ்மணஸ்பதிம் ப்ராதஸ்ஸோமமுத ருத்ரம் ஹுவேம || (ருக்.7-41-1).

நாங்கள் விடியற்காலையில், ஒளிருபன், சகலசுகமீபவன், சகல வல்லமையையு முடையவன், பரிதித்திங்களைப் படைத்த

வனுமாய கடவுளை துதிக்கின்றதைப் போலவே; தன்னைத் துதிப்பவருக் கருள் புரிபவனும், சகல வியாதிகளைப் போக் கடிக்குங் கடவுளைத் நாங்கள் துதிப்பதைப் போலவே நீங்க ளும் துதியுங்கள்.

ப்ராதர்ஜிதம் பகமுக்ரம் ஹுவேம வயம் புத்ரமதிதேர் யோ விதர்தா। ஆத்ரஸ்சித்யம் மன்யமானஸ் துரஸ்சித்ராஜா சித்யம் பகம் பக்ஷீதியாக ॥ 2 ॥ (ருக்-7-41-2).

விடியற்காலை வெற்றியாளனும், செல்வமளிப்பவனும், ஒளிபொருந்தியவனும், சூரியனையாக்கியவனும், சகலத்தையும் தரித்திருப்பவனும், எதையுமறிந்தவனும், துஷ்டர்களை தண் டிப்பவனும், சகலருக்கும் மேலானவனுகவு மிருக்குமெந்த சுத்தரூபனையா னிவ்வாறு தொழுகின்றேனே அவ்வாறே யவர் சகலருக்கும் சொல்வதாவது—: "என் கட்டளைப்படி நடப்பின் யானருள்புரிவேனுகவும்". ஆதலால் நாம் அவ னைத் துதிப்போமாக.

பக ப்ரணேதர்பக ஸத்யராதோ பகேமாம் தியமுதவா ததன்னஃ। பகப்ரணோ ஜனய கோபிரஸ்வைர்பக ப்ர ன்ருபின் ருவந்தஃ ஸ்யாம ॥ 3 ॥ (ருக்-7-42-3).

துதிரூப! சகலரையும் படைப்பவனும், செல்வமீபவனும் உண்மைப்பொருளை யளிப்பவனும், உண்மைவழியாளர்களுக் குச் செல்வமீபவனுமாய செல்வ! எங்களுக்கு இவ்வறிவை யளி. எங்களைக் காப்பாற்று. ஏ சகலகுணனே! நீ பசுக்கள் முதலானவைகளாலும், குதிரை முதலானவைகளாலும், எங்க ளுக்கு நன்மையை அளி. ஏ கடவுளே! உன்னருளால் நாங் கள் நன்மனிதருடன் வீரபுருடர்களாய் விளங்குவோமாக.

உதேதானீம் பகவந்தஃ ஸ்யாமோதப்ர பித்வ உதமத்யே அஹ்னாம்। உதோதிதா மகவன்த் ஸூர்யஸ்ய வயம் தேவா னாம் ஸுமதௌ ஸ்யாம ॥ 4 ॥ (ருக்-7-42-4).

கடவுளே! எங்கள் புருடார்த் தங்களாலும், இச்சமயத் தில், நன்மையடைவதிலும், இந்நாளின் வேண்டுவனவாய செல்வமுமடைவோமாக. இனியும் கடவுளே! பரிதி உலக உதயத்தில் கலையாளர்களின் நல்லறிவால் நாங்களெப்போதும் நல்லறிவுடன் வாழ்வோமாக (4).

பக ஏவபகவாம் அஸ்துதே வாஸ்தேன வயம் பகவந்தஃ ஸ்யாம। தம் த்வா பக ஸர்வ இஜ்ஜோஹவீதி ஸநோ பக புர ஏதா பவேஹ ॥ 5 ॥ (ருக்-7-42-5).

கடவுளே! அறிவாளிகளெல்லாம் அறிவின் பலத்தால் அறிந்துகொண்ட பரமா! எங்களில்லறவறத்தைச் செவ்வனே நடத்துவிப்பாயாக. நீயே எங்களுண்மைப் பொருளாதலால் கலைவர்களாகிய நாங்கள் உன்னருளைப் பெறுமாறு செய்வா யாகவும் (5).

இவ்வாறு கடவுள் வணக்கம் புரிந்து, பிறகு முகம் கை கால் சுத்தி செய்வதுடன் காலைக்கடனை முடித்து, குளிக்க வேண்டும். பிறகு இரண்டல்லது மூன்று மைல்தூரம் தனி யாக காட்டுவழிசென்று, யோகாப்யாசத்துடன் கடவுள்வணக் கம் புரிந்து, சூரியவுதையமாயபின்னில்லிற்குவந்து, கூட்டு வேளைத் தொழுகையை (சந்தியாவந்தனம்) செய்யவேண்டும். தினமும் புரியவேண்டிய காரியங்களையு மதற்குறிய மந்திரங் களையு மதன் பொருளையும் "பஞ்சமஹாயக்ஞவிதி" யெனும் தமிழ் நூலில் பார்த்துக்கொள்ளலாம். முதலினுடலை சுத்தி

செய்துகொள்ளவேண்டியது கீழேயுள்ள சடங்குகளை யாரம்பிக்கவேண்டும். முதலில் வலதுகையால் நீர்கொண்டு—:

ஓம் அம்ருதோபஸ்தரணமஸிஸ்வாஹா ||

ஓம் அம்ருதாபி தானமஸி ஸ்வாஹா ||

ஓம் ஸத்யம் யஸ: ஸ்ரீர்மயி ஸ்ரீ: ஸ்ரயதாம் ஸ்வாஹா ||

பொருள் வந்துள்ளது.

இம்மூன்று மந்திரங்களால் மூன்றுமுறை நீருட்கொண்டு இரண்டுகைகளையும் கழுவி, நன்னீரால் காது, கண், மூக்கு முதலியவைகளைத் தொட்டு, ஓர் புனிதமாயவிடத்தில் நற்பீடத்தில் காற்றுவாட்டத் தமர்ந்து, தொப்புளுக்குக் கீழிருந்து இந்திரியங்களை மேலுக்கிழுத்து, மார்பில்உள்ள் காற்றை பலத்துடன் வெளியிற்றள்ளி மறுபடி உள்ளேபுகாமற் சிறிது தடுத்து, பிறகு மெதுவாக காற்றை உள்ளுக்கேற்று அங்கேயே சிறிது வெளிவாமல் வைத்திருந்து, பிறகு மெதுவாக விடவேண்டும். இதுவொரு "ப்ராணயாமம்" "உயிர்வயம்" எனப்படும். இவ்வாறு நிதமும் குறைந்தது காலைமாலை 3 "உயிர்வயங்கள்" செய்யவேண்டும். மூக்கைக் கையாற் பிடித்துக்கொள்ளக் கூடாது. பிறகு கடவுள் வணக்கத்தை மனதினிற் செய்து—:

ஓம் ஸன்னோ தேவீரபிஷ்டய ஆபோபவந்து பீதயே |
ஸம்யோரபிஸ்ரவந்து ந: || (யஜு-36-12).

பொருள் முன்பே வந்துள்ளது.

இம்மந்திரம் சொல்லி 3 முறை நீருட்கொள்ளவேண்டும். பிறகு பாத்திரத்துள்ள நீரை நடுவிரல், பெருவிரல்களால்

தொட்டு, முதலில் வலது பாகத்தையும் பிறகிடது பாகத்தையும் கீழெழுதப்படும் மந்திரங்களாற் றொடவேண்டும்.

ஓம் வாக் வாக் ||

இதனால் வலது பாகத்தையும் மிடதுபாகத்தையும்,

ஓம் ப்ராண: || ப்ராண	மூக்கு	,,	,,
ஓம் சக்ஷுஸ்சக்ஷு: ||	கண்	,,	,,
ஓம் ஸ்ரோத்ரம் ஸ்ரோத்ரம் ||	காது	,,	,,
ஓம் நாபி: ||	தொப்புள்	,,	,,
ஓம் ஹ்ருதயம் ||	மார்பு	,,	,,
ஓம் கண்ட: ||	கழுத்து	,,	,,
ஓம் ஸிர: ||	தலை	,,	,,
ஓம் பாஹுப்யாம் யஸோபலம் ||	தோள்கள்		,,
ஓம் காதலகரப்ருஷ்டே ||	இரண்டுகைகளுக்குமேல்		,,

பிறகு நீர் தெளித்தல்.

ஓம் பூ: புனாது ஸிரஸி || தலைமேல் நீர் தெளித்துக் கொள்ளவேண்டும்.

ஓம் புவ: புனாது நேத்ரயோ: || கண்களின்மேல் நீர் தெளித்துக்கொள்ளவேண்டும்.

ஓம் ஸ்வ: புனாதுகண்டே || கழுத்துமேல் நீர் தெளித்துக்கொள்ளவேண்டும்.

ஓம் மஹ: புனாது ஹ்ருதயே || மார்பின்மீது நீர் தெளித்துக்கொள்ளவேண்டும்.

ஓம் ஜன: புனாது நாப்யாம் || தொப்புளின்மேல் நீர் தெளித்துக்கொள்ளவேண்டும்.

ஓம் தப: புநாது பாதயோ: ॥ பாதங்களின்மேல் நீர் தெளித்துக்கொள்ள வேண்டும்.

ஓம் ஸத்யம் புநாது புந: ஶிரஸி ॥ மறுபடி தலைமேல் நீர் தெளித்துக்கொள்ள வேண்டும்.

ஓம் கம் ப்ரஹ்ம புநாது ஸர்வத்ர ॥ சகல உடம்பின் மேலும்—:

இதன் பிறகு முன் சொன்னவாறு "உயிர்வயம்" செய்துகொண்டு கீழ்வரும் மந்திரங்களையும் சொல்லிக்கொள்ள வேண்டும் மனதில்—:

ஓம் பூ:, ஓம் புவ:, ஓம் ஸ்வ:, ஓம் மஹ:, ஓம் ஜந:, ஓம் தப:, ஓம் ஸத்யம் ॥ (தைத்ரியாரண்யகம்-10 ; 27).

இவைகளெல்லாம் கடவுளின் பெயராகும். இதன் பொருள் அறிந்ததே. இவ்விதம் குறைந்தது மூன்றும், அதிகமாக 21-ம் "உயிர்வய" ங்கள் செய்யலாம். பிறகு கடவுளின் தன்மையைக் கீழ்வரும் மந்திரங்களால் சிந்திக்கவேண்டும்.

ஓம் ரிதஞ்ச ஸத்யஞ்சாபீத்தாத் தபஸோऽத்யஜாயத ।
ததோ ராத்ர்யஜாயத ததஃ ஸமுத்ரோ அர்ணவ: ॥ (1).

பெயர், உருவங்களாலாய இவ்வுலகமும், கண்ணாலறிய முடியா "ப்ரக்ருதி" யும், கடவுளின் திறமையாலுண்டாயிற்று. உலகத்திற்குக் காரணம் "ப்ரக்ருதியும்" இதன் மூலமாய் இரவு, பூமி, கடல்முதலானவைகள் பிறந்தனவுமாகும்.

ஸமுத்ராதர்ண வாததி ஸம்வத்ஸரோऽஜாயத । அஹோராத்ராணி விதத்த் விஶ்வஸ்ய மிஷதோ வஶீ ॥ (2).

கடலின் பிறகு சமையங்களுண்டாயிற்று. பிறகு கடவுளிரவும் பகலுமுண்டுசெய்தார்.

ஸூர்யா சந்த்ரமஸௌ ததா யதாபூர்வமகல்பயத்। திவம் ச ப்ருதிவீஞ் சாந்தரிக்ஷமதோ ஸ்வ: ॥ 3 ॥ (ருக்-10-190).

பிறகு முறையே வுலகை ஆக்கல், காத்தல், அழித்தலுடன், பரிதி, திங்கள், மற்றவுலகங்கள் முதலியவைகளை யுண்டு செய்தார்.

இம்மந்திரங்கள் சொன்னபின் (ஸன்னோ தேவீ) எனும் மந்திரத்தால் மூன்றுமுறை நீருட்கொண்டு, பிறகு கீழ்வரும் மந்திரங்களால் சகலமும் நிறைந்த கடவுளைத் துதிக்கவேண்டும்.

ஓம் ப்ராசீ திகக்னிரதிபதிரஸிதோ ரக்ஷிதாதித்யா இஷவ: । தேப்யோ நமோऽதி பதிப்யோ நமோ ரக்ஷித்ருப்யோ நம இஷுப்யோ நம ஏப்யோ அஸ்து । யோஸ்மான் த்வேஷ்டி யம் வயம் த்விஷ்மஸ்தம் வோ ஜம்பே தத்ம: ॥ 1 ॥
(அதர்-3-27-1).

தணலைப்போன்று சகலத்திலும் நிறைந்த கடவுளே! எங்களைக் காப்பாற்றும். சூரியக்கதிர்களால் வியாதியைத் தீர்ப்பதால் வானரூபியாகின்றாய். எம்மைக் காப்பாற்ற வானமாகியசகலத்திற்கும் வந்தனம். நம்மைக் குற்றம் புரிபவர்களினின்றும் விலக்கட்டும்.

தக்ஷிணா திகிந்த்ரோऽதிபதிஸ்திரஸ்சிராஜீ ரக்ஷிதா பிதா இஷவ: । தேப்யோ ॥ (அதர்-3-57-2).

தெற்குதிசைச் செல்வத்தினதிபனாகிய கடவுள் நம்குறைகளை நீக்கிக் காப்பாற்றட்டும். மற்றது முன் மந்திரத்தின் பொருள் போலவே அறியவும்.

உதீசீ திக்ஸோமோऽதிபதிः ஸ்வஜோ ரக்ஷிதாஸனிரிஷவः। தேப்யோ ॥

வடக்குதிசையின் நற்குணக் கடவுள் நம்மைக் காப்பாற்றட்டும். மற்றதுமுன்போல,

த்ருவா திக்விஷ்ணுரதிபதிः கல்மாஷக்ரீவோ ரக்ஷிதா வீருத இஷவः தேப்யோ ॥

உலகமெங்கணும் நிறைந்திலகுங் கடவுள் நம்மைக் காப்பாற்றட்டும்—:

ஊர்த்வா திக்ப்ருஹஸ்பதிரதிபதிः ஸ்வித்ரோ ரக்ஷிதா வர்ஷமிஷவः। தேப்யோ ॥

மேற்றிசையின் அதிபனாகிய கலைக் கடவுள் நம்மைக் காப்பாற்றட்டும்—ः

இம்மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு உள்ளும் புறம்பும் கடவுளிருப்பதாயறிந்து, பிறகு கடவுள் என்னிடமுண்டு, நான் கடவுளிடமுண்டு எனும் பாவனையுடன்—ः

ஜாதவேதஸே ஸுனவாம ஸோமமராதீயதோ நிதஹாதி வேதः। ஸநः பர்ஷததி துர்காணி விஸ்வா நாவேவ ஸிந்தும் துரிதாத்யக்னிः ॥

கடவுள் துதிக்காகவே நாம் நல்லறிவைப் பெறுகின்றோம் மறையினறிவு கெட்டகுணங்களை நீக்குகின்றது. சகலமும் நிறைந்த கடவுளருளால் வெல்லமுடியா கெட்டகுணங்களையும் வெல்வோமாக.

சித்ரம் தேவானாமுதகாதனீகம் சக்ஷுர்மித்ரஸ்ய வருணஸ்யாக்னேः। ஆப்ரா த்யாவாப்ருதிவீ அந்தரிக்ஷம் ஸூர்ய ஆத்மா ஜகதஸ்தஸ்துஷஸ்ச ॥

இவன் கடவுளினற்புத சக்தியான். பண்டிதர்கள் மனதில் வதிபவன். சகலத்திற்கும் பலன். பரிதி, நீர், தணல் முதலியவைகளின் ஒளியன்: சகல உலகத்தினும் வியாபித்தவன். மரம் முதலியவைகளினுயிரிவன்.

உதுத்யம் ஜாதவேதஸம் தேவம் வஹந்தி கேதவः। த்ருஸே விஸ்வாய ஸூர்யம் ॥

கடவுள் உலகைவுண்டாக்கி காத்து அழிக்கப் பலவித மனங்களைப் பலவிதமாய் வியாபிக்கச் செய்கின்றார்.

உத்வயந்தமஸஸ்பரி ஸ்வः பஸ்யந்த உத்தரம்। தேவம் தேவத்ரா ஸூர்யமகன்ம ஜ்யோதிருத்தமம் ॥

இவ்விருளினின்றும் புறம்பாய கடவுளை, தேவர்களிற் சிறந்தவனை, நாங்களறிவுண்டாக வணங்குகின்றோம்.

தச்சக்ஷுர்தேவஹிதம் புரஸ்தாத் சுக்ரமுச்சரத்। பஸ்யேம சரதः சதம் ஜீவேம சரதः சதம் ஸ்ருணுயாம சரதः சதம் ப்ரப்ரவாம சரதः சதமதீனாः ஸ்யாம சரதः சதம் பூயஸ்ய சரதः சதாத் ॥

இதன் பொருள் முன்புவந்துள்ளது 30-ம் பக்கம் பார்—ः

இம்மந்திரங்களாற் கடவுளைத் தியானித்தபின், "ஸன்னோதேவீ" எனும் மந்திரத்தால் மூன்றுமுறை நீருட்கொண்டு, 145-ம் பக்கத்துள்ளபடியாவது, "பஞ்சமஹாயக்ஞ விதி" யிலெழுதியுள்ளபடியாகிலும், "காயத்ரீ" மந்திரத்தைப் பொருளுடன் புரியவேண்டும். பிறகு—:

ஓம் நமஃ ஸம்பவாய ச மயோபவாய ச நமஃ ஸங்கராய ச மயஸ்காராயச நமஃ ஸிவாய ச ஸிவதராய ச ॥ (யஜுர்-16-41)

நன்மைக்கும் சுகத்திற்கும் காரணனானவனுக்குவந்தனம். கல்யாணரூபனாய கடவுளுக்கு வந்தனம். எனச்சொல்லி "ஸன்னோதேவீ" எனும் மந்திரத்தால் மூன்றுமுறை நீருட்கொண்டு பிறகு "தழல் வணக்கம்" ஆரம்பிக்கவேண்டும்.

கூட்டுவேளைத் தொழுகை முற்றிற்று.

தழன் மூலத்துதி

(அக்னி ஹோத்திரம்)

காலைமாலையிருவேளையிலும் "கூட்டுவேளை வணக்கம்" புரிவதைப்போலவே பெண் புருடரிருவரும் நிதமும் அக்காலங்களிலேயே * தழன்மூலத்துதி" யும் புரியவேண்டும்.

49 பக்கத்துள்ளபடி நெருப்புமூட்டி, சமிதைகளிட்டு 45 பக்கத்துள்ளபடி "ஓம் அதிதேனுமன்யஸ்வ" எனும் மந்திரங்களால் தடவினைச்சுற்றி நீர்தெளித்து, நல்லநெய்யைக் காச்சி பாத்திரத்தி லெடுத்துக்கொண்டு, தடவினிற்கு மேற்கில் கிழக்கு முகமாயமர்ந்து ; நான்கு "ஆகார வாஜ்ய பாகாகுதி" கள்செய்து, கீழ்வரும் மந்திரங்களால் காலை "தழன்மூலத் துதி" புரிதல்வேண்டும்.

ஓம் ஸூர்யோ ஜ்யோதிர் ஜ்யோதிஃ ஸூர்யஃ ஸ்வாஹா ॥

கடவுள் சகல உலகங்களினுமொளியீவபர். அவர் கட்டளையால் சகல உலகத்திற்கு முதவியாக விவ்வாகுதியாகும்.

ஓம் ஸூர்யோவர் சோ ஜ்யோதிர்வர்சஃ ஸ்வாஹா ॥ (2)

கடவுள் சகலத்திற்கும் பலமீவர். அவர் ஒளியுள்ளவர்.

ஓம் ஜ்யோதிஃ ஸூர்யஃ ஸூர்யோ ஜோதிஃ ஸ்வாஹா ॥3॥

---

* எக்காரணத்தாலாவது புருடன் மனைவி யிருவரும் சேர்ந்து புரியமுடியாவிட்டால், தனியாக புருடனாகிலும் பெண்ணாகிலும் இரண்டு சடங்கையும் புரியலாம். அதாவது ஒவ்வொரு மந்திரத்தையு மிரண்டுமுறை படித்து இரண்டாகுதிக ளீயவேண்டும்.

கடவுள் ஒளியினருளால் நாமுமொளிபெருவோமாக.

ஓம் ஸஜூர்தேவேன. ஸவித்ரா ஸஜூருஷஸேந்த்ரவத்யா ஜுஷாணஃ ஸூர்யோவேது ஸ்வாஹா ॥

கடவுள் ஒளிரூபர் தணனுக்குமவரே வொளியீபவராகும்.

இனிவருவனவைகள் மாலே தழன்மூல வணக்கத்திற்காக —ஃ

ஓம் அக்னிர்ஜ்யோதிர் ஜ்யோதிரக்னிஃ ஸ்வாஹா ॥ 1 ॥

கடவுள் பலவான். தனலினொளியும் அவருடைய அருளேயாகும்.

ஓம் அக்னிர்வர்சோ ஜ்யோதிர்வர்சஃ ஸ்வாஹா ॥ 2 ॥

ஓம் அக்னிர் ஜ்யோதிர் ஜோதிரக்னிஃ ஸ்வாஹா ॥ 3 ॥

ஓம் ஸஜூர்தேவேன ஸவித்ரா ஸஜூராத்ர்யேந்த்ரவத்யா ஜுஷாணோ அக்னிர்வேது ஸ்வாஹா ॥

(யஜுர்-3-9, 10)

படைத்தொழிளாலனின் அருளால் ஒளிபெற்றதனாலே। எங்களுக்கருள்செய்.

இனி கீழ்வரும் மந்திரங்களா லிருவேளையு மாகுதியியவும்—ஃ

ஓம்பூரக்னயே ப்ராணாய ஸ்வாஹா ॥ இதமக்னயே ப்ராணாய இதன்ன மம ॥

உயிர்களின் ஆதாரமான உயிர்ரூபப் பரமனுக்கிவ்வாகுதி யாகும்.

ஓம் புவர்வாயவே அபானாய ஸ்வாஹா ॥ இதம் வாயவே அபானாய இதன்ன மம ॥

காற்றின் மூலமாய் நம்மைக் காப்பாற்றும் கடவுளுக் கிவ்வாகுதி யாகும்.

ஓம் ஸ்வராதித்யாய வ்யானாய ஸ்வாஹா ॥ இதமாதித்யாய வ்யானாய இதன்ன மம ॥

பரிதியின்மூலமாய் நமக்கு சுகமளிக்கும் கடவுளுக்காக இவ்வாகுதியாகும்.

ஓம் பூர்புவ: ஸ்வரக்னிவாய்வாதித்யேப்ய: ப்ராணாபானவ்யானேப்யஃ ஸ்வாஹா ॥ இதமக்னிவாய்வாதித்யேப்யஃ ப்ராணாபானவ்யானேப்யஃ இதன்ன மம ॥

உயிர், காற்று, பரிதி இவர்கள் மூலமாய் நமக்குச் சுகமளிக்கும் கடவுளுக்காக இவ்வாகுதியாகும்.

ஓம் ஆபோ ஜ்யோதிரஸோऽம்ருதம் ப்ரஹ்மபூர்புவ: ஸ்வரோம் ஸ்வாஹா ॥

அக்கடவுள், நிறைந்த, வியாபித்த, சுவைமித்த, ஒளி பெறும், சகல வுலகத்தின் கடவுளானவர், உயிரைக்காத்து உண்மையை புணர்ந்து முத்தமன்.

ஓம் யாம் மேதாம் தேவகணா: பிதரஸ்சோபாஸதே। தயா மாமத்யமேதயாக்னே மேதாவினம் குரு ஸ்வாஹா ॥

(யஜுர்-32-14).

எவ்வறிவுக்காகப் பண்டிதர்கள் உபாசிக்கின்றார்களோ, ஏ சுடரே! இன்றெனக்கு மவ்வறிவையளி.

ஓம் விஸ்வானிதேவ ஸவிதர்துரிதானிபராஸுவ । யத்பத்ரம் தன்ன ஆஸுவ ஸ்வாஹா ॥

சகலமும் படைத்த கடவுளே! எங்களின் கெடுதல்களைப்போக்கி நல்லனவைகளை அறிவி.

ஓம் அக்னே நயஸுபதாராயே அஸ்மான் விஸ்வானி தேவ வயுனானி வித்வான் । யுயோத் யஸ்மஜ்ஜுஹுராண மேனோ பூயிஷ்டாந்தே நம உக்திம் விதேம ஸ்வாஹா ॥
(யஜு-40-16).

ஏ சுடரே! நாங்கள் நற்செல்வம் பெற எங்களை நல்வழியில் நடத்து. எங்களின் சகல செய்கைகளையுமறிந்து, கெட்டதை நீக்கு. தங்களுக்கனேக வந்தனங்கள் செலுத்துகின்றோம்.

இவ்வாறெட்டாகுதிகளளித்து —

ஓம் ஸர்வம் வைபூர்ணம் ஸ்வாஹா ॥ இது சகலமும் கலந்த வாகுதியாகும்.

இம்மந்திரம் மூன்றுமுறை சொல்லி மூன்றாகுதிகள் கடைசியி லீயவேண்டும்.

தழன் மூலத்துதி முற்றிற்று.

பெற்றோர் சேவை.

(பித்ருயஜ்ஞம்),

தழன் மூலத்துதி முடிந்தபின்பு மூன்றாவது உயிருடனிருக்கும் தாயார் தகப்பனாரை வணங்குதல் "பெற்றோர் சேவை" எனப்படும்.

பெற்றோர் சேவை முற்றிற்று.

உலகநாதர்கள் சேவை.

(பலிவைஸ்வதேவவிதி:)

ஓம் அக்னயே ஸ்வாஹா || ஓம் ஸோமாய ஸ்வாஹா || ஓம் அக்னிஷோமாப்யாம் ஸ்வாஹா || ஓம் விஸ்வேப்யோதேவேப்ய: ஸ்வாஹா || ஓம் தன்வந்தரயே ஸ்வாஹா || ஓம் குஹ்வை ஸ்வாஹா || ஓமனுமத்யை ஸ்வாஹா || ஓம் ப்ராஜாபதயே ஸ்வாஹா || ஓம் த்யாவாப்ருதிவீப்யாம் ஸ்வாஹா || ஓம் ஸ்விஷ்டக்ருதே ஸ்வாஹா ||

இப் பத்து மந்திரங்களால் நெய் சேர்ந்த சாதத்தையாகிலும், மற்றெது உப்பு காரமின்றி தயாராயிருக்கிறதோ அதையாகிலும், 10 ஆகுதிகளீயவேண்டும். பிறகு கீழ்வரும் மந்திரங்களால் திசைப் பங்கிடவேண்டும்.

ஓம் ஸானுகாயேந்த்ராய நம: ||	கிழக்கில்.
ஓம் ஸானுகாய யமாய நம: ||	தெற்கில்.
ஓம் ஸானுகாய வருணாய நம: ||	மேற்கில்.
ஓம் ஸானுகாய ஸோமாய நம: ||	வடக்கில்.
ஓம் மருத்ப்யோ நம: ||	துவாரத்தில்.
ஓம் அத்ப்யோ நம: ||	நீரில்.
ஓம் வனஸ்பதிப்யோ நம: ||	உரல், உலக்கை
ஓம் ஸ்ரியை நம: ||	யிடத்தில்
ஓம் பத்ரகாள்யை நம:	
ஓம் ப்ரஹ்மபதயே நம: || ஓம் வாஸ்த்துபதயே நம: ||	மத்தியில்.

ஓம் விஸ்வேப்யோ தேவேப்யோ நம: || ஓம்திவாசரேப்யோ பூதேப்யோ நம: |

ஓம் நக்தம் சாரிப்யோ பூதேப்யோ நம:|| மேலே

ஓம் ஸர்வாத்ம பூதயே நம: || பின்னால்.

ஓம் பித்ருப்ய: ஸ்வதாயிப்ய: ஸ்வதா நம: || தெற்கில்.

இம்மந்திரங்களால் ஒரிலையிலாகிலுமோர் தட்டிலாகிலும் முன்சொன்ன திசைகளிற் செய்தன அன்னத்தை வைக்க வேண்டும். அப்போது யாராகிலும் யாசகர்கள் வருவார்களாயின் அவர்களுக்கே ஈந்துவிடவும். இன்றேல் தணிவிட்டுவிடவும். இனி உப்புள்ள நெய் சாதத்தைக்கொண்டு—

ஸூனும் ச பதிதானும்ச ஸ்வபசாம் பாபரோகிணும் ।
வாயஸானும் க்ருமீணும்ச ஸனைர்நிர்வபேத் புவி ||

(மநு-3.92)

பொருள்—: நாய், பாசகன், சண்டாளன், பாபவியாதியான், காகம், எறும்பு முதலாய புழுக்கள், இவ்வாறு பெயர்களாலாறு பங்கு பூமியின்மேல் வைக்கவேண்டும். பிறகு அவ்வப்பங்கை யவ்வப்பேருடையதிற் சேர்க்கவேண்டும்.

உலகநாதர்கள் சேவை முற்றிற்று.

விருந்தோம்பல்.

(அதிதியக்ஞம்)

அறமனத்தினரும், பிறர்க்குபகாரியும், உண்மை பேசுகின்றவர்களும், வஞ்சனையில்லாதாரும், அமைதியுற்றோருமாகுங் கலைஞர்களை சாதம் முதலிய பொருள்களால் சேவித்தல் "விருந்தோம்ப" லெனப்படும். அவர்களிடம் கேள்வி பதில் முதலியவைகளைச் செய்து, அறிவை விளக்கிக்கொள்ளலும் நிதமும் பெண் புருடர்கள் செய்துவரவேண்டும்—:

இனி "பாகச் சேவை (பக்ஷயக்ஞம்)" அதாவது பூரணைநாளினும், அமை நாளிலும் முன்சொன்ன தழன்மூலத்துதி முதலியன புரிந்தபின், முன்சொன்னபடி பாகபாத்திரம் தயார் செய்துகொண்டு, கீழ்வரும் மந்திரங்களாலாகுதி யீயவேண்டும்—:

ஓம் அக்னயே ஸ்வாஹா ॥ ஓம் அக்னீஸோமாப்யாம் ஸ்வாஹா ॥ ஓம் விஷ்ணவே ஸ்வாஹா ॥

இவ்வாகுதி ஒளியன், எங்கும் நிறைந்த கடவுளுக்காகவும்.

இம்மூன்று மந்திரங்களால் மூன்றாகுதியளித்தபின் "வ்யாஹ்ருத்யாகுதி" நான்கீயவேண்டும். ஆனால் சிறிது பேதம் அதாவது அமைநாளில் ஓம் அக்னிஷோமாப் யாம் ஸ்வாஹா ॥ எனும் மந்திரத்திற்குப் பதில் ஓம் இந்த்ராக்னிப்யாம் ஸ்வாஹா ॥ என்று மாற்றிக்கொள்ளவேண்டும்.

மந்திரம்சொல்லி பாகபாத்திரவாகுதி யீயவேண்டும். எக்காரணத்தாலாயினும் யார் வீட்டிலாயினும் நிதமும் தழன்மூலத்துதி நடை பெறாவிட்டாலவர்கள் வீட்டில் இப்பாகச் சேவை நாளில் வேள்விமண்டபம், வேள்விப் பொருள் முதலானதுகளைக்கொண்டு நெருப்புமூட்டி சமிதையிட்டு, "ஆஹார வாஜ்ய பாகாகுதி" களும், தடவினிற்கு நாற்புறமும் நீர் தெளித்தல் முதலானவைகளைச் செய்து, கடவுள் வணக்கம், அருள் கோறல் அமைதிவேண்டல் முதலியனவும் செய்யவேண்டும். இனி "வருடப் பிறப்பு" வரும்போதெல்லாம்,

கீழ்வரும் வழியைச் செய்யவேண்டும்.

இதை எதற்காகச் செய்வதென்றால் வருடம் முழுவதும் தான் சுகமாக இருக்கவேண்டுமென்ற தீர்மானத்தைச் செய்துகொள்வதற்குத்தான். கிராமம் அல்லது ஏதாவதோர் வயலில் வேள்வி மண்டபமமைத்து, சகல விதிகளையும் செய்து, "ஆகாரவாஜ்யபாகாகுதிகள்" 4-ன்கும் "வ்யாஹ்ருதி யாகுதிகள்" 4-ன்கும்; "அஷ்டாஜ்ய யாகுதிகள்" 8-ம் கொடுத்துப் பின் கார்யகர்த்தர்—:

ஓம் ப்ருதிவீத்யௌ: ப்ரதிஸோ திஸோ யஸ்மை த்யுபிராவ்ருதா: ! தமிஹேந்த்ரமுப ஹ்வயேஸிவா ந: ஸந்து ஹேதய: ஸ்வாஹா ॥

எவனினுற்பவத்தால், மண், ஆகாயம், திசைகள், மூலைகள் முதலானவைகள் பரிதியின் கதிர்களாய் பாவப்பட்டனவோ, அக்கடவுளை நாங்களழைக்கின்றோம். அவரெங்களுக்கு நன்மை புரிபவராவர்.

ஓம் யன்மே கிஞ்சிதுபேப்ஸிதமஸ்மின்கர்மணி வ்ருத்ர ஹன் । தன்மே ஸர்வம் ஸம்ருத்யதாம் ஜீவதஃ சரத: சதம் ஸ்வாஹா ॥

ஏ கடவுளே ' என்னுயிர் வாழ்க்கையில் நான் விரும்பும் கோரிக்கைகளை யீடேற்றிவை. நான் 100 வருடங்கள் உயிர் வாழும்படி ஆயுளையுமளி.

ஓம் ஸம்பத்திர்பூதிர் பூமிர் வ்ருஷ்டிர்ஜ்யை ஷ்ட்யம்ஸ்ரை ஷ்ட்யம் ஸ்ரீஃ ப்ரஜாமிஹாவது ஸ்வாஹா ॥ இதமிந்த்ராய இதன்ன மம ॥

மேகம் முதலாயதுகள் பெருமை யடைந்தவிடத்தினின் றும் யானுமதை யடைகின்றேன். பின்னும் செல்வம், நிலம் பெருமை, கீர்த்தி, திருமுதலியவைகளையு மங்கிருந்தடைகின் றேன்.

ஓம் யஸ்மாபாவே வைதிக லௌகிகானும் பூதிர்பவதி கர் மணும் । இந்த்ர பத்னீமுப ஹ்வயே ஸிதாம் ஸா மே த்வன்ன பாயினீ பூயாத்கர்மணி ஸ்வாஹா ॥ இதமிந்த்ரபத்ன்யை இதன்ன மம ॥

எவரால் சிறிய, பெரிய ஆசைகள் நிறைவேறியும் முறிந் தும் போகின்றனவோ அவளை நானழைக்கின்றேன். எனக் காக அவள் சாதனமளிப்பவள். அவளினருளால் இல்லறவாசி களின்எண்ணங்க ளீடேறுகின்றது.

ஓம் அஸ்வாவதீ கோமதீ ஸூன்ருதாவதீ பிபர்த்தியா ப்ராணப்ருதோ அதன்த்ரிதா । கலமாலினீமுர்வராமஸ்மின்

கர்மண்யுபஹ்வயே த்ருவாம் ஸாமே த்வனபாயினீ பூயாத் ஸ்வாஹா ॥ இதம் ஸீதாயை இதன்ன மம ॥

(பாரஸ் 2-17).

குதிரை, பசு முதலாய வுயிர்களையும், சத்திய காரியங்க ளைக்கொண்டு யிப்பூமி பட்சபாதமின்றி சகலத்தையும் காப்பாற்றுகிறது. அப்பேர்ப்பட்டவளை யானழைக்கின் றேன். அவளென் துக்கங்களை நீக்குவாள்.

இம்மந்திரக்களால் நெய்யாகுதிக ளீந்து—ஃ

ஓம் ஸீதாயை ஸ்வாஹா ॥ ஓம் ப்ரஜாயை ஸ்வாஹா ॥ ஓம் ஸமாயை ஸ்வாஹா ॥ ஓம் பூத்யை ஸ்வாஹா ॥

(பாரஸ்-2-17).

இந்நான்கு மந்திரங்களால் நான்கும், "யதஸ்யக" எனும் மந்திரத்தாலொன்றும், "அஷ்டாஜ்யாகுதி" "வ்யா ஹ்ருத்யாகுதி" களுமீந்து, "வாமதேவகான" முன், கட வுள் வணக்கமும் அருள்கோறல், அமைதிவேண்டல், முதலி யனசெய்து வேள்வியை முடிக்கவேண்டும்.

விருந்தோம்பல் முற்றிற்று.

இடநியமிப்பு.

(ஶாலாகர்மவிதி)

மனிதர்களுக்காகவும், பசு முதலியவைகளுக் காகவும் வசிப்பதற்காயினும், பொருள்களை வைப்பதற்காயினும், நியமிக்கும் மனையை, அன்றி இடத்தின் விசேடத்தை இடநியமிப்பல்லது சாலையெனச் சொல்வர். இதிலுளவிடயங்களிரண்டாகும். ஒன்று—: அத்தாட்சி ; இரண்டு—: வழி ; முதலாவதாய அத்தாட்சி—:

உபமிதாம் ப்ரதிமிதாமதோ பரிமிதாமுத । ஶாலாயா விஶ்வாவாராயா நத்தானி வி ச்ருதாமஸி ॥ (அதர்;9-3-1).

பார்ப்பவர்கள் புகழும்படியாய் துவாரத்திற் கெதிரில் துவாரமாகவும், மூலைகளுக் கெதிரில் மூலைகளாகவும், இருக்க வேண்டும். இது நான்கு சதுரமாயிருத்தல் வேண்டும். இதன் வாயல்கள் நாற்புறத்திலுங் காற்றை யேற்றுக்கொள்வதாயிருக்கவேண்டும், சுவர் முதலியவைகள் பலத்துடனிருக்கவேண்டும். இவ்வாறு நாங்கள் செய்வதுபோலவே நீங்களும் செய்யுங்கள்.

ஹவிர்தானமக்னிஶாலம் பத்னீனாம் ஸதனம் ஸதஃ । ஸதோ தேவானா மஸி தேவி ஶாலே ॥ (அதர்-9-3-7).

அவ்விடம் வேள்விப்பொருள்களை வைக்கவோரிடமும், தணலை யுண்டுசெய்ய வோரிடமும், பெண்களிருக்க விடமும், புருடர்களமருஞ் சபையும், சாதமருந்தவும் ; குளிக்க முதலானவைகளுக்கும் இடமுமமைத்துக் கட்டவேண்டும்.

அந்தரா த்யாஞ்ச ப்ருதிவீஂச யத்வ்யசஸ்தேன ஶாலாம் ப்ரதிக்ருஹ்ணாமித இமாம் । யதந்தரிக்ஷம் ரஜஸோ விமானம் தத்க்ருண்வேऽஹமுதரம் ஶேவதிப்ய; । தேன ஶாலாம் ப்ரதிக்ருஹ்ணாமிதஸ்மை ॥ (அதர்-9-3-15).

அதின் நான்கு பாகங்களும் சுத்தமாயிருத்தல்வேண்டும். அதின் முழுப்பாகமும் பரிதியின் கதிர்கள் படும்படியாயினும் பரிதியிலொளிபடும்படி யாகவாவது நியமிக்கவேண்டும். ஏ பெண்ணே ! உனக்காக இம்மனையை நியமிக்கின்றேன். உன்னுடன் யானு மிதை யேற்றுக்கொள்கின்றேன். இவ்வீட்டை உயரமும், உள்ளிடமும் கொண்டெழில் பெறுமாறு செய்கின்றேன். இம்மனையை இல்லறத்தைச் சார்ந்த சகல தொழில்களுக்காகவும் யேற்றுக்கொள்கின்றேன்.

இனி வழி,

மனை நியமித்தபோததை நன்ருக சுத்திசெய்து, நான்கு பக்க வாயல்களினும் நான்கு தடவுகளையும், மனை நடுவிலொரு தடவினையும் வைக்கவேண்டும். இன்றேல் தாம்பிரத்தினால் தடவைச்செய்து கொள்ளலாம். இவ்வொன்றைக் கொண்டெல்லா பக்கங்களின் காரியங்களையும் செய்துகொள்ளலாம். பிறகு நெய், அரிசி, சுவைகள், மணப்பொருள்கள் முதலியவைகளை யொருநாள் முன்பாகவே சுத்திசெய்து வைத்துக் கொள்ளவேண்டும். மனைத்தலைவனுக்கேற்றதோர்நாளில் "மனை நுழைதல்" (க்ருஹப்ரவேசம்) செய்யலாம். அங்கு வேள்வி யதிகாரிகளை வரவழைக்கவேண்டும். அவர்களில் "ஹோதா" வென்பவன் மேற்கில் கிழக்கு முகத்தனாகவும்,

“அத்வர்யு” என்பவன் வடக்கில் தெற்கு முகத்தனும், “உத்காதா” என்பவன் கிழக்கில் மேற்கு முகத்தவனுகவும், “ப்ரஹ்ம” என்பவன் தெற்கில் வடக்கு முகத்தவனுகவும், நற்பீடங்களி லமரவேண்டும். பிறகு வீட்டின் தலைவன் மேற்கில் கிழக்குமுகத்தனு யமரவேண்டும். இவ்வாறே நான்கு பக்கத் தடவினருகிலும் பீடங்களிட்டிருக்கவேண்டும். பிறகு முதலிற் செய்யவேண்டுமென விரும்பிய வாயலின் வெளியிற் சகலரும் நின்று—:

ஓம் அச்யுதாய பௌமாய ஸ்வாஹா ॥ பூமியின்மேல் நிலையுள யிம்மனைக் கிவ்வாகுதி.

இதனுலோராகுதி செய்து, துவசத்தூணை நடவேண்டும். இவ்வாறே மனையின் நான்கு மூலைகளிலும் நான்கு தூண்கள் நடவேண்டும். பிறகு மனைத் தலைவாசத் தூணை நன்ருக நிற் கும்படி நீர் முதலியன தெளிக்கவேண்டும். பிறகு வாயலின் வெளிசென்று கீழ்வரும் மந்திரங்களால் நீரைத் தெளிக்க வேண்டும்.

ஓம் இமாமுச் ச்ரயாமி புவனஸ்ய நாபிம் வஸோர்தாராம் ப்ரதானீம் வஸூனும் । இஹைவ த்ருவாம் நிமினோமி ஸா லாம் க்ஷேமே திஷ்டது க்ருதமுக்ஷமாணு ॥ (பாரஸ்-3-4).

இன்றுமுத லிம்மனையை யான் நிருமிக்கின்றேன். இம் மனை உலகினிறெரு உருவமாய், தனதான்யாதிகளால் நிறைந்து, சகல சுகங்களையு மீவதாகின்றது. இம்மனையை நெய் முதலிய பொருள்களால் நிதமும் சுத்திசெய்துகொண்டு வருவேனுகவும்.

இம்மந்திரத்தால் கிழக்கு வாசலில் நீர் தெளிக்கவும்—

அஸ்வாவதீ கோமதீ ஸூன்ருதாவத்யுச் ச்ரயஸ்வ மஹதே ஸௌபகாய । ஆ த்வானிஸு ராக்ரன்தந்தத்வா காவோதேன வோ வாஸ்யமானு: ॥ (பாரஸ்-3-4).

ஏ மனையே! உன்னுடன் பசு, குதிரைமுதலாயன சதா வதியும். உன்னுள் பொய்வார்த்தை யென்னும் பேசப்பட மாட்டாது உன்னுல் நாங்கள் சகல சக்தியையும் பெரு வோம். உன்னுள் குழந்தை பசுவினவைகள் களிப்புடன் வளரும்—:

இம்மந்திரத்தால் தெற்கு வாசலிலும்—:

ஆத்வா குமாரஸ்தருண ஆவத்ஸோ ஜகதை: ஸஹ: । ஆத்வா பரிஸ்ருத: கும்ப ஆதத்ந: கலஸைருப க்ஷேமஸ்யபத்னீ ப்ருஹதீ ஸுவாஸா: ரயிம் நோ தேஹி ஸுபகே ஸுவீர்யம்॥ (பாரஸ்-3-4).

உன்னுள் பசுங்கன்றும், சிறுபாலனும், நிறைந்தநீருடை யோராய் நிற்பர். நல்லாடை யாபரணங்களால் நிறைந்திலகப் பெறுவோமாகவும்—:

இம்மந்திரத்தால் மேற்கு வாசலிலும்—:

அஸ்வாவதூர்ஜஸ்வத்பர்ணம் வனஸ்பதேரிவ । அபிந: பூர்யதாம் ரயீரிதமனுஸ்ரே யோ வஸாந: ॥

பசு, குதிரை முதலியவைகளாலும், பலத்தாலுமாய விம் மனை எங்களுக்கு மரத்தின் கிளைகளைப்போன்று நான்கு பக் கங்களிலும் சுகமருளும்.

இம்மந்திரத்தால் வடக்கிலும் நீர் தெளிக்கவேண்டும். பிறகு வாசலை யழகுசெய்ய நான்கு பக்கங்களிலும் வாழை நட்டு அலங்கரிக்கவேண்டும். பிறகு மனைத்தலைவன்—:

ஹே ப்ரஹ்மன் ! ப்ரவிஸாமீதி । கடவுளே ! இவ்வீட்டினுள் நான் செல்கின்றேன்.

எனச் சொல்லவேண்டும். அப்போது "ப்ரம்ம" எனும் தானத்திருப்பவன்—:

வரம் பவான் ப்ரஸிது ॥ நல்லது உள்ளே செல்லும்.

எனச் சொல்லவேண்டும். பிறகவனுமதி பெற்று—:

ஓம் ருசம் ப்ரபத்யேஸிவம் ப்ரபத்யே । நான் சுகமீயுமிம்மனையுள் செல்கின்றேன்.

இம்மந்திரம் சொல்லி உள்ளே செல்லவேண்டும். பிறகு நெய்யை உருக்கி, வடிகட்டி, வாசனையைக் கலந்து வைத்திருக்கும் பாத்திரத்தை எடுத்து, முதலிலெவ்வாசலில் நுழைந்தோமோ அவ்வாசல் வழியேசென்று நெருப்பு மூட்டல், சமிதையிடல், நீர் தெளித்தல், நீருட்கொளல், முதலியன செய்து "ஆஹாராவாஜ்யபாகாகுதி" நான்கும், "வ்யாஹ்ருத்யாகுதி" நான்கும், ஒன்பதாவது ஸ்விஸ்டக்ருத்யாகுதிஒன்றுமாக நான்கு வாசல்களிலும் செய்து பின் கிழக்கு வாசற்றடவினில்—:

ஓம் ப்ராச் யா திஸ: ஸாலாயா நமோமஹிம்னே ஸ்வாஹா ॥ ஓம் தேவேப்யஃ ஸ்வாஹ்யேப்ய: ஸ்வாஹா ॥

மனையின் கிழக்கில் மகிமையுண்டு. ஆதலாலிவ்வாகுதி கிழக்கு திசைக்காக.

இம்மந்திரத்தா லிரண்டாகுதி செய்து, அவ்வாறே—:

ஓம் தக்ஷிணயாதிஸஃ ஸாலாயா நமோ மஹிம்னே ஸ்வாஹா ॥ ஓம் தேவேப்யஃ ஸ்வாஹ்யேப்ய: ஸ்வாஹா ॥ மனையின் தெற்கில் மகிமையுண்டு—:

இம்மந்திரத்தால் தெற்கு வாயற்றடவினி லிரண்டாகுதிகளும்...:

ஓம் ப்ரதீச்யா திஸ: ஸாலாயா நமோ மஹிம்னே ஸ்வாஹா ॥ ஓம் தேவேப்ய: ஸ்வாஹ்யேப்யஃ ஸ்வாஹா ॥ மனையின் மேற்கில் மகிமையுண்டு—:

இம்மந்திரத்தால் மேற்கு வாயலிலிரண்டாகுதிகளும்—:

ஓம் உதீச்யாதிஸஃ ஸாலாயா நமோ மஹிம்னே ஸ்வாஹா ॥ ஓம் தேவேப்யஃ ஸ்வாஹ்யேப்ய: ஸ்வாஹா ॥ மனையின் வடக்கில் மகிமையுண்டு—:

இம்மந்திரத்தால் வடக்கினி லிரண்டாகுதிக ளீந்தபின் நடுத்தடவி னருகு சென்று அவரவரிடங்களி லமர்ந்து—:

ஓம் த்ருவாய திஸஃ ஸாலாயாஃ ॥ மனையினடியில் மகிமை....:

இம்மந்திரத்தால் நடுத்தடவினி லிரண்டாகுதி—:

ஓம் ஊர்த்வாயதிஸஃ ஸாலாயா—: மனையில் மேலே மகிமை—:

இம்மந்திரத்தாலு மிரண்டாகுதிகள் செய்து—:

ஓம் திஸோ திஸஃ ஸாலாயா—|| மனையின் சகல திசைகளிலும் மகிமை—:

இம்மந்திரத்தாலு மிரண்டாகுதிகள் செய்து, பிறகு கிழக்கு வாயற்றடவினில் நெருப்பை நன்கெரியச் செய்து, வேள்வி யதிகாரிகளவரவர் பீடங்களிலமர்ந்து, தடவினின் வடக்கிலோர் செம்பில் நீர்வைத்து சுவைச்சாதம் செய்து, வெளி வாயலருகுசென்று, வேள்வி யதிகாரிகளுடன் மனைத் தலைவன் நடுத்தடவினிற்கு வந்து, அவர்களை பீடங்களிலமர்த்தி, தான் கிழக்கு முகத்தனுயமர்ந்து—: வாசனை நெய்யைப் பாத்திரத்திற்கொண்டு, அவ்வாறே ஒவ்வோர் பாத்திரத்திலும் நிறப்பி வேள்விக் கர்த்தர்களெதிரில் வைக்க வேண்டும். இனி காண்டிகளை யதிலமிழ்த்தி.

ஓம் வாஸ்தோஷ்பதே ப்ரதிஜானீஹ் யஸ்மான்த் ஸ்வாவேஸோ அனமீவோ பவாநஃ | யத்த்வேமஹே ப்ரதிதன்னோ ஜுஷஸ்வ ஸன்னோ பவதிபதே சம்சதுஷ்பதே ஸ்வாஹா ||
(ருக்-7-54-1)

ஏ மனை முதலியனவைகளை யியற்றுபவனே! எங்கள் மனை வியாதியற்றதாயாகுமாறு நீ உறுதிமொழி கொண்டியற்று. உன்னிடம் நாங்கள் விரும்புவதெதுவோ அது நீ. எங்கள் மக்கள் பசுவாதியவைகளுக்காக நீ சுகரூபியாகு.

வாஸ்தோஷ்பதே ப்ரதரணோ ந எதி கயஸ்பானோ கோபிரஸ்வே பிரிந்தோ | அஜராஸஸ்தே ஸக்யே ஸ்யாம பிதேவ புத்ரான் ப்ரதிநோ ஜுஷஸ்வ ஸ்வாஹா || (ருக்-7-54-2).

ஏ இல்லதிகாரி! உன் நன்மை ஈதலை நாங்களடையட்டும். நீ எங்கள் பசு, குதிரை முதலியவைகளுடன் வா. நாங்களெப்போது முன்னுடன் நண்பனாகவதிவோம், தகப்பன் மகனிடமிருப்பதைப்போல் நீ யெங்களிடமிரு.

வாஸ்தோஷ்பதே ஸக்மயா ஸம்ஸதாதே ஸக்ஷீமஹி ரண்வயா காதுமத்யா | பாஹி க்ஷேம உதயோகே வரம் நோ யூயம் பாத ஸ்வஸ்திபிஃ ஸதா நஃ ஸ்வாஹா || (7-54-3).

ஏ மனை யதிகாரி! நாங்களெல்லோருமொருங்குகூடி உன் குணங்களைப் பாடுவோம். நீ யெங்கள் சகல காரியங்களினுமெங்களைக் காப்பாற்று. அமைதியை யளி.

அமோவஹா வாஸ்தோஷ்பதே விஸ்வா ரூபான்யாவிஸன் ஸகா ஸுஸேவ எதி நஃ ஸ்வாஹா || (7-54-4).

வியாதியை நீக்கு மனையதிகாரீ! (ஸேனிடரி இன்ஸ்பெக்டர்). வியாதிகளின் சகல தன்மைகளையு மறிந்து நீக்கி யெங்களுடன் நண்பனு யெப்போதுமிரு.

இந்நான்கு மந்திரங்களால் 4-ன்கு நெய்யாகுதிகளீந்து, தயார்செய்துள சுவைச் சாத்தை யோர் வெண்கலப் பாத்திரத்திற்கொண்டு, வேண்டுமளவு நெய்யிட்டு, அவரவரெதிரில் வைத்துக்கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாக யெடுத்துக்கொண்டு—:

ஓம் அக்னிமிந்த்ரம் ப்ருஹஸ்பதிம் விஸ்வாம்ஸ்சதேவானுபஹவயே | ஸரஸ்வ தீஞ்ச வாஜீஞ்ச வாஸ்துமே தத்த வாஜிநஃ ஸ்வாஹா ||

தணல், இந்திரன், கலையோன், புவனக்கடவுள், கலைவாணி முதலாய சகல தேவர்களும் (பூலோகத்து மனிதர்களுக்கு, உபயோகமாகும் சக்திகளுக்கு நான் வணக்கம் புரிகின்றேன். அவர்களென் மனையை சகல சுகத்தாலும் செல்வத்தாலும் நிறைத்து வைப்பார்களாக.

ஸர்பதேவ ஜனான்த்ஸர்வான்ஹிமவந்தம் ஸுதர்ஸனம் | வஸூன்ஸ்ச ருத்ராஞதித்யானீஸானம் ஜகதைः ஸஹ | ஏதான்த்ஸர்வான் ப்ரபத்யேஹம் வாஸ்துமே தக்தவாஜினः ஸ்வாஹா ||

வசு, உருத்திரன், பரிதி முதலாய சகல தேவர்களும் நன்மை புரியுமாறு துதிக்கின்றேன்.

பூர்வாஹ்ணமபராஹ்ணம் சோபௌ மாத்யந்தினஸஹ | ப்ரதோஷமர்த்தமாத்ரம் ச வ்யுஷ்டாம் தேவீம் மஹாபதாம் ஏதான் ஸர்வான் ப்ரபத்யேஹம் வாஸ்து மே தத்தவாஜினः ஸ்வாஹா ||

காலை, மாலை, பகல், இரவு முதலாய சகல காலங்களினுமென் மனையிற் சுகமுடன் வசிப்பேன்.

ஓம் கர்த்தாரஞ்ச விகர்த்தாரம் விஸ்வகர்மாண மோஷதீஸ்சம் வானஸ்பதீன் | ஏ தான்த் ஸர்வான் ப்ரபத்யேஹம் வாஸ்துமேதத்தவாஜினः ஸ்வாஹா ||

மனையியற்றியவனும், மருந்துவகைகளு மெங்களுக்கு நன்மை புரியட்டும்.

தாதாரம் ச விதாதாரம் நிதீனும் ச பதிம் ஸஹ | ஏதான் ஸர்வான் ப்ரபத்யே ஹம் வாஸ்துமே தத்த வாஜினःஸ்வாஹா||

படைத்தவன், காப்பவன் மற்றும் சகல செல்வத்தினதிபதியாய கடவுள் எங்கள் மனையிற் சதா சுகம் வசிக்கும்படி செய்வாராக.

ஸ்யோனம் ஸிவமிதம் வாஸ்து தத்தம் ப்ரஹ்ம ப்ராஜாபதீ | ஸர்வாச்ச தேவதாச்ச ஸ்வாஹா ||

மக்களைப் படைக்கும் ப்ரம்மன் முதலாய சகல தேவர்களு மெங்கள் மனையில் சுக செல்வம் வசிக்கும்படிச் செய்வார்களாக.

இம்மந்திரங்களால் சுவைச் சாதத்தைக் கொண்டாகுதிகளீந்து, பிறகோர் வெண்கலப் பாத்திரத்தில், பலாசயிலை, பசுநீர் (கோமியம்), தயிர், தேன், நெய், தற்பைப்புல், அவல் முதலியவைகளைக் கலந்து—:

ஓம் ஸ்ரீஞ்ச த்வா யஸஸ்ச பூர்வே ஸந்தௌ கோபாயேதாம் || கிழக்கு வாயலிலும்; கிழக்கு திசையினிப்மனைத் திரு காப்பாற்றுகின்றாள்.

யக்ஞஞ்ச த்வா தக்ஷிணு ச தக்ஷிணே ஸந்தௌ கோபாயேதாம் || தெற்கில்—:

தென்றிசையில் இம்மனையை வேள்வி காப்பாற்றட்டும்.

அன்னஞ்ச த்வா ப்ராஹ்மணஸ்சீ பஸ்சிமே ஸந்தௌ கோபாயேதாம் || மேற்கில்—:

மேற்கு திசையில் என் மனையை மறையவன் காப்பாற்றட்டும்.

ஊர்க்ச த்வாஸூன்ருதா சோத்தரே ஸத்தௌ கோபா யேதாம் || வடக்கில்—ः

வடதிசையி னிம்மனையை உண்மை காப்பாற்றட்டும்.

இம்மந்திரங்களா லவ்வத்திசை வாயலின்கண் முன் கலந்து வைத்திருப்பதைத் தெளித்ததுடன் நீரும் தெளிக்க வேண்டும்.

கேதா ச மாம் ஸூகேதாச புரஸ்தாத கோபாயேதாமித் யக்னிர்வை கே தாऽऽதித்யஃ ஸூகேதா தௌ ப்ரபத்யே தாப் யாம் நமோऽஸ்து தௌ மா புரஸ்தாத் கோபாயேதாம் ||

என்னெதிர் நிற்குந்திசை யறிவெனைக் காப்பாற்றட்டும். பரிதியாக்னிகள் திசையறிவுடையதாகையால் நானவைகளை வணங்குகின்றேன். அவைகளெனைக் காப்பாற்றட்டும்.

இம்மந்திரத்தாற் கிழக்கு திசையிற் கடவுளை வணங்கிப் பின் தெற்குவாயிற் பக்கந் தெற்கு முகத்தனுகி—ः

தக்ஷிணதோ கோபாயமானம் ச மா ரக்ஷமாணு ச தக்ஷி ணதோ கோபா யேதாமித்யஹர்வைகோபாயமானம் ராத்ரீ ரக்ஷமாணு தே ப்ரபத்யே தாப்யாம் நமோऽஸ்து தே மா தக்ஷி ணதோ கோபாயேதாம் ||

தெற்குதிசைத் தணுவும் பரிதியின் மூலமாயிரவு பகல்க ளெனைக் காப்பாற்றட்டும். நானவைகளை வணங்குகின்றேன். அவைகளெனைக் காப்பாற்றட்டும்.

இவ்வாறு துதித்துப்பின் மேற்கு வாயலின்வழி மேற்கு முகத்தனுகி—ः

தீதிவிஸ்ச மா ஜாக்ருவிஸ்ச பஸ்சாத் கோபாயே தாமித்யன் னம்வை தீதிவிঃ ப்ராணோ ஜாக்ருவிஸ்தௌ ப்ரபத்யே தாப் யாம் நமோऽஸ்து தௌ மாபஸ்சாத் கோபாயேதாம் ||

ஒளியும், விழிப்புமெனை மெற்கு திசையினின்றும் காப் பாற்றட்டும். அன்னத்திஞெளியாற் கலையும், கலையிபவனுலு யிரும் விகசிதமடைகிறது. நானவ்விரண்டையும் வணங்கு கின்றே னவைகளெனைக் காப்பாற்றட்டும்.

இவ்வாறு மேற்கு திசையின் கடவுளை வணங்கி, வடக்கு வாயலின்கண் வடக்கு முகத்தனுகி—ः

அஸ்வப்னஸ்ச மானவத்ராண ஸ்தோத்ரதோ கோபாயே தாமிதி சந்த்ரமா வா அஸ்வப்னோ வாயுரன்வத்ராணஸ்தௌ ப்ரபத்யே தாப்யாம் நமோऽஸ்து தௌ மோத்தரதோ கோபா யேதாமிதி ||

தூக்கமின்மையு மாழ்ந்த தூக்கமு மெங்களைக் காப்பாற் றட்டும். இரவை யொளிசெய்யும் திங்கள் தூக்கமின்மையி லும், ஆழ்ந்த தூக்கத்தில் சஞ்சலம் புரிவாயுவு மெனைக் காப் பாற்றட்டும். நானவைகளை வணங்குகின்றேன்.

தர்மஸ்தூணாராஜம் ஸ்ரீ ஸூர்யமஹோராத்ரேத்வாரபலகே. இந்த்ரஸ்ய க்ருஹா, வஸூமதோ வரூதினஸ்தானஹம் ப்ரபத் யே ஸஹ ப்ரஜயா பஸூபிஸ்ஸஹ யன்மே கிஞ்சிதஸ்த்யுப ஹூத: ஸர்வகணஃ | ஸகாயஃ ஸாதுஸம்ம வ்ருதஸ்தாம் த்வா ஸாலே அரிஷ்ட வீராக்ருஹா நঃ ஸந்து ஸர்வதঃ ||

அறத்தின்வழி நிலைபெற்றிலகும் வாணி, பரிதி, பகல், இரவு,இம்மனை முதலாய சகலமும் எங்கள் மக்களுடனுமென்

னுடனும் வந்தருள் புரியுமாறு வேண்டுகின்றேன். அவைகள் சகலமு மெங்களுடன் நேசர்களாக வாழ்வர்—:

இவ்வாறு வடக்குதிசையிற் கடவுளைத் துதித்துபின் னவ் வேள்வி கர்த்தர்களுக்கும், மணையாட்களுடன் வந்துள மறை யோர்களுக்கும், சுற்றத்தார், நண்பர்களுக்கும், சம்பந்திகளுக் கும் நன் விருந்தளித்து, வேண்டுவன புரிந்து, களிப்புடன னுப்பி வைக்கவேண்டும். அவர்கள் செல்லும்போது மணைத் தலைவற் றலைவியானவர்களை—:

ஸர்வே பவந்தோऽத்ரானந்திதாః ஸதா பூயாஸுః ‖ நீங்க ளெல்லாருமிங்கு சுகமுடன் வதியுங்கள்—:

இவ்வாறு வாழ்த்திப் பின்னவரவ ரில்லங்களுக்கேக வேண்டும். இவ்வாறே தோட்டம் முதலியவைகளையும் நிய மிக்கவேண்டுமாயினு மத்தோட்டங்களுக்கு காற்றெப்பக்கத் திருந்து வீசுமோ, அப்பக்கத்தில் வேள்வி செய்யவேண்டும். அதில் மணையியற்ற வேண்டியிருப்பின் முன்போலவே செய் வேண்டும். இவ்வாறே இல்லறத்திலவ்வப்போ தேதாவது நிய மிக்கவேண்டியிருப்பி னிவ்வாறே செய்யவேண்டும்—:

இடநியமிப்பு முற்றிற்று.

மறையோர் முறை.

ப்ராஹ்மணஸ்வரூப லக்ஷணம்.

அத்யாபனமத்யயனம் யஜனம் யாஜனம் ததா |
தானம் ப்ரதிக்ரஹச்சைவ ப்ராஹ்மணானாமகல்பயத் ‖
(மனு-1-88).

பொருள்—: (ஒன்று) கபடமிலாதன்புடன் புருடர்கள் புருடர்களையும், பெண்கள் பெண்களையும், படிப்பிக்கவேண்டும். (இரண்டாவது) பூர்ணகலை கற்கவேண்டும். (மூன்றாவது) வேள்விகளியற்றவேண்டும். (நான்காவது) பெற்றோர்சேவை முதலியதுகளைப் புரியவேண்டும். (ஐந்தாவது) கலையும் பொரு ளையும் நல்லோர்களுக் கீயவேண்டும்.

(ஆறாவது) உண்மையுடன் பொருளீயும் இல்லறர்களிடம் பொருளையும் பெறவேண்டும். இதில் மூன்று காரியங்கள்— கற்றல், வேள்வியியற்றல், அறஞ்செயல், என்பவைகள். * இவைகள் உயிர்வாழ்வோர்க்கின்றி யமையாதது. ஆகை யால்—:

ப்ரதிக்ரஹః ப்ரத்யவரః (மனு).

தானம் பெறுதல் நீசமாயகாரியமாதலால் படிப்பித்தாகி லும், வேள்விகள் புரிவித்தாகிலும், காலங்கழித்த லுத்தம மாகும்.

---

* அறமென்பதுண்மையை யொப்புக்கொளல். உண்மையெ னின் பரோபகாரமானவைகள். பரோபகாரமெனின் சதா பிறர்க்கும் பிறதுகளுக்குத் துன்பமின்றி, உண்மை பேசுவதிற்றிடங்கொண்டு வெறுப்பு முதலியன இல்லாமலிருத்தல். அதாவது சகல மனிதர் களுக்கும் பொதுவாய வறத்தையே புரியவேண்டும்.

R65 163917
N34

ஸமோ தமஸ்தப: ஸௌசம் க்ஷாந்திரார்ஜவமேவ சம
க்ஞானம் விக்ஞான மாஸ்திக்யம் ப்ரஹ்மகர்ம ஸ்வபாவஜம் ||
(கீதை-18-42).

மனதிலறமிலா வெண்ணங்கள் வாராமலும், காது முதலாய புலன்களை அறமலாததினின்றும் நீக்கி வறத்திலேயே நடப்பித்தலும், மறைமாணவம், கலை, யோகம் முதலியவைகளின் சித்திபெறுவதற்காக, சூடு, குளிர்ச்சி, புகழ்ச்சி, இகழ்ச்சி, மானம், அவமானம், முதலிய பாசங்களை நீக்குதலும்; விருப்பு, வெறுப்பு, பொறாமை, முதலியவைகளினின்றும், மனம், ஆத்மாவையு மவ்வாறே நீரினின்று முடலையும், சதா சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.' அறியாதவனாயினும் வெறுப்பினு மவனிடம் வெறுப்பின்றி மனம் மன்னித்தலையும், பற்றுதல், தற்புகழ்ச்சி முதலியனவின்றி நன்மனத்தாயிருத்தல், கலைகற்றதன் பொருளை மனோ விசாரணைபுரிந்துண்மைப் பொருளறியுந் திறமை பெற்றிருத்தல், பூமிமுதல் கடவுள் வரையுள பொருள்களின் தன்மையை யறிந்து வேண்டுவனவைகளை யுபயோகித்து முபயோகிக்கச் செய்தலும், மறை, கடவுள் முதலியவைகளில் எப்போதும் சந்தேகமில்லாமலிருத்தல் முதலிய காரியங்கள் எவர்களிடமிருக்குமோ, அவர்களே மறையோரெனப்படுவர். மணம் முதலியவைகளையு மிவ்வாறே ஒழுக்கத்தைக் கண்டறிந்து புரிதல்வேண்டும். மனிதர்களி லிக்காரியவொழுக்கங்களுள்ளவர்களையே மறையோரெனக் கொள்ளவேண்டும்—:

மறையோர் முறை முற்றிற்று.

வீரர் முறை.

க்ஷத்ரியஸ்வரூப லக்ஷணம்.

ப்ரஜானும் ரக்ஷணம் தானமிஜ்யாத்யயனமேவ ச | விஷ
யேஷ்வப்ரஸக்திச்ச க்ஷத்ரியஸ்ய ஸமாஸத: || (மனு-1-89).
ஸௌர்யம் தேஜோக்ருதிர்தாக்ஷ்யம் யுத்தேசாப்ய பலா
யனம் | தானமீஸ்வர பாவச்ச க்ஷாத்ரகர்ம ஸ்வபாவஜம் ||
(கீதை-18-43).

பொருள்—: மறைமாணவம் பெற்று மறைகளை நன்கு பயிலல், வேள்விபுரிதல், மக்களுக்கேற்படு மாபத்துக்களை யெதிர் நின்று தாக்கி அவர்களை யதினின்றும் விடுவித்தல், போர்க்கல்வியைக் கற்று பிறர்க்கு கற்பித்து, அதினால் ஜீவ வாழ்க்கை நடத்துதல், சிற்றின்பங்களிற் பற்றின்றி யிருத்தல், மதுபானம் முதலாய குடிகளினின்றும், மைதுனம் முதலாய சேர்க்கைகளினின்றும் விடுபடல், எதிரியைக்கண்டு பின் தங்காமையும், சமர்புரிவதிலொளி பெறுதல், எவ்வித துக்கங்களு மாபத்துகளும் வரினும் தைரியத்தைக் கைவிடாது அவைகளை யெதிர்த்து நிற்றல்—: நகர பாதுகாப்பு முதலானவைகளி லறிவாளியாயிருத்தல், சமர்புரிவதில் பற்றுதலும், பயமின்மையும் கொள்ளல், கடவுளெவ்வாறு மக்களுக்கு சுகதுக்கங்களீவனோ, அஃதேபோல் மக்களிடை வசித்து அவர்களுக் கேற்படும் துக்கங்களை நன்கு விசாரித்து துட்டனை தண்டித்தும், நல்லவனைக் காப்பாற்றி வஞ்சனையின்றி யிருத்தலும், முதலிய

குணங்களெவனிட மிருக்கின்றதோ, அவன் வீரன் (க்ஷத்திரியன்) எனப்படுவன். இக்குணங்களுடைய பெண்ணே வீரியாவள். இவர்களுக்கு இம்மாதிரி வொழுக்க முள்ளவர்களையே மணம் புரிவிக்கவேண்டும். இவ்வாறாய வீரர்க ளரசனாயில்லாவிடினு மாசத்தொழில்களி லேதாவதொன்றில் தொழில் புரிந்துகொண்டிருத்தல் வேண்டும்.

வீரர் முறை முற்றிற்று.

வியாபாரி முறை.

வைஸ்யஸ்வரூப லக்ஷணம்.

பஸூனாம் ரக்ஷணம் தானமிஜ்யாத்யயனமேவ ச ।
வணிக்பதம் குஸீதம் ச வைஸ்யஸ்ய க்ருஷிமேவ ச ॥
(மனு-1-90).

பொருள்—: மறைகளைக் கற்றல், வேள்விபுரிதல், அன்னாதி வறங்களைச் செய்தல், பசு முதலாயவைகளைக்காப்பாற்றி யவைகளின் பால் முதலியவைகளை விற்றல், பலதேயபாடைகளையும், கணக்குகளையும், பூமியின் தன்மையையும், விளைபொருள்களையு மறிந்துகொள்ளல், அத்துடனவைகளின் விலைகளி னேற்றக் குறைவுகளையு மறிந்துகொள்ளல், வட்டிவாங்குதல், * உழவுத் தொழிலை செவ்வனே யறிந்துசெய்தல், முதலிய இத்தொழிற் குணங்களையுடையோர் வியாபாரிகளெனப்படுவர். இவர்களுக் கிவ்வாறொழுக்க முடையோர்களையே மணம் புரிதல்வேண்டும்.

வியாபாரி முறை முற்றிற்று.

---

* நியாயமான வட்டி.

தாழ்ந்தோர் முறை.

சூத்ர ஸ்வரூப லக்ஷணம்.

ஏகமேவ ஸூத்ரஸ்ய ப்ரபு: கர்ம ஸமாதிஸத் । ஏதேஷா மேவ வர்ணாம் ஸுஸ்ருஷமன ஸூயயா ॥ (மனு-1-91).

பொருள்—: கடவுள், படித்தும் படிப்புவாாதவனும், உடலில் நற்பலமுடையவனும், பணி புரிவதிற் றிறமையாளனுமாகிய தாழ்ந்தோனுக்கு, மற்ற முத்தொழிலாளர்களின் நிந்தையிலாத வன்புடன்கூடிய சேவையை புரியும்படி கட்டளையிட்டிருக்கின்றார். இத்தகைய குணங்கள் எவரிடங் காணப்படுமோ அவர்கள் தாழ்ந்தோர் (சூத்திரர்) எனப்படுவர். இவர்களுக்கிம்மாதிரி குணமுடையோரையே மணம் புரிவிக்க வேண்டும்.

இனி மறையோராதி மற்ற மனிதர்கள் கீழ் எழுதப்படும் விதமாகத் தங்கள் காரியங்களில் நடக்கவேண்டும்.

வேதோதிதம் ஸ்வகம் கர்ம நித்யம் குர்யாத் ததந்த்ரித:।
தத்தி குர்வன்யதாஸ்த்தி ப்ராப்னோதி பாமாங்கதிம் ॥
(மனு-4-14).

மறையோர்களாகிய மனிதர்கள் தங்கள் காரியங்களை நிதமும் புரிந்துவரவேண்டும் ; அவைகளைத் தங்கள் சாமர்த்தி

யத்தை யனுசரித்துப் புரிந்து வீடுநிலை பெறும்வரையுள பொருள்களை அடைவார்களாக—:

நேஹேதார்தான் ப்ரஸங்கேன ந விருத்தேன கர்மணா ।
ந வித்யமானே ஷ்வர்தேஷு நார்த்யாமபி யதஸ்தத: ॥
(மனு-4-15).

இல்லறவாசி யென்னும் கெட்டகாரியங்களிலாகிலும், கெட்டவார்த்தைகள் சொல்லியாகிலும், பணம் சம்பாதிக்கக் கூடாது. பிறரால் எவ்விததுக்கம் நேருவதாயினும் அறமல்லாக் காரியங்களைப் புரிந்து பணம் தேடலாகாது.

இந்த்ரியார்தேஷு ஸர்வேஷு ந ப்ரஸஜ்யேத காமத: ।
அதிப்ரஸக்திம் சைதேஷாம் மனஸாஸன்னிமர்த்தயேத்॥
(மனு 4-16)

புலன்களின் காரியங்களி லாசையிலென்னும் சிக்கக் கூடாது. மனதின் சாட்சியாக கெட்டகாரியங்களை துரத்த வேண்டும்.

ஸர்வயான் பரித்யஜேதர்தான் ஸ்வாத்யாயஸ்ய விரோதிந: । யதா ததாऽத்யாபயம்ஸ்து ஸா ஹ்யஸ்ய க்ருதக்ருத்யதா ॥ (மனு-4-17).

அறமிலாக் காரியங்களையும் பொருள்களையு மெப்போதும் நீக்கவேண்டும். என்னும் கல்வியைப் பயிற்றுவிக்குந் தொழிலை மேற்கொண் டொழுகவேண்டும்.

புத்தி வ்ருத்திகரான்யாஸு தன்யானி ச ஹிதானி ச ।
நித்யம் ஸாஸ்ரான்யவேக்ஷேத நிகமாம்ஸ்சைவ வைதிகான் ॥
(மனு-4-19).

ஏ பெண் புருடர்களே! அறம், பொருளின்பங்களேயடையு மார்க்கத்தை வெகு சுலபத்தி லென்னால் சொல்லுமோ அவ்வாருய மறைக்கிளே நூற்களே நிதமும் வாசித்துக்கொண்டிருங்கள்.

யதாயதா ஹி புருஷ: ஸாஸ்ரம் ஸமதிகச்சதி । ததா ததா
விஜாநாதி விக்ஞானம் சாஸ்ய ரோசதே ॥ (மனு-4-20)

மனிதர்கள் எவ்வாறு நூற்களேப் படித்துண்மைப் பொருளே யாராய்கின்றனரோ அவ்வாறே யவர்களறிவும் மேன்மையுற்று பொருளாராய்ச்சியிலு மவர்களறிவு செல்லும்.

ந ஸம்வஸேச்ச பதிதைர்ன சாண்டாலைர்ன புக்கஸை: ।
ந மூர்கைர்நாவ லிப்தைஸ்ச நான்த்யைர்நான்த்யாவஸாயிபி: ॥
(மனு-4-79).

கெட்ட காரியம்புரிபவர், சண்டாளர்கள், மூர்க்கன், குடியன், கல்வியில்லாதவர், நீசர், முதலானவர்கள் சகவாசத்தினின்றும் விடுபட்வேண்டும்.

ஸத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயான்ன ப்ரூயாத் ஸத்யம்
ப்ரியம் । ப்ரியஞ்ச நான்ருதம் ப்ரூயாதேஷ தர்ம: ஸநாதன:॥
(மனு-4-138).

மனிதர்க ளெப்போது முண்மை பேசல்வேண்டும். பிறர்க்கு நன்வழியைக் கற்பிக்கவேண்டும். பிறர் மனங் கோணும்படி யோர்வார்த்தையுஞ் சொல்லக்கூடாது. இதுவே "சனாதன தர்மம்" எனப்படும்.

அபிவாதயேத் வ்ருத்தான்ச்ச தத்யாச் சை வாசனம்
ஸ்வகம் । க்ருதாஞ்ஜலிருபாஸீத கச்சத: பருஷ்டதோSன்
வியாத் ॥ (மனு-4-154).

எப்போதும் கலையிலும் வயதினும் பெரியோர்களேக் காணின் "நமஸ்த்தே" எனச் சொல்லவேண்டும். அவர்கள் நம்மைத் தேடிவருவாராயின் நாமெழுந்து அவர்களே யுபசரித்து நம்மாசனத்தின்மீ தமரச்செய்யவேண்டும். கைகளேக் கட்டிக்கொண்டு நாமருகிலமரவேண்டும். கேட்ட கேள்விக்குப் பதிலீயவேண்டும். போகும்போது நாமும் சிறிதுதூரம் தொடர்ந்து சென்று "நமஸ்த்தே" செய்து வழியனுப்பவேண்டும்.

யத்யத்பரவஸம் கர்ம தத்தத் யத்னேன வர்ஜயேத் ।
யத்யதாத்மவஸம் து ஸ்யாத் தத்தத் ஸேவேத யத்னத: ॥
(மனு-4-159)।

மனிதனெப்போதும் தன் நன்மையுடன் பிறர் நன்மையுமுண்டாகும்படியான காரியங்களேயே புரிதல்வேண்டும்.

உத்தமை ருத்தமைர்நித்யம் ஸம்பந்தானுசரேத்ஸஹ ।
நிநீஷு: குலமுத்கர்ஷமதமான தமாம்ஸ்தயஜேத் ॥
(மனு-4-155).

எம்மனிதன் தன் குலத்தை மேன்மையடையச் செய்ய விரும்புவனே, அவன் நீசர்கள் சகவாசம் நீக்கி, நல்லோர் சகவாசமே யென்னளும் புரிதல்வேண்டும்.

வாச்யர்தா நியதாः ஸர்வே வாங்மூலா வாக்வினிः ஸ்ருதாः। தாந்து யः ஸ்தேனயேத்வாசம் ஸ ஸர்வ ஸ்தேயக்ருன்னரः ॥ (மனு-4-156).

எவ்வாயானது சகல வார்த்தைகளுக்கும் காரணமாயிருக்கின்றதோ, எவ்வாயினல் சகல காரியங்களு மறியப்படுகின்றனவோ, அப்பேர்ப்பட்ட வாயினலெவன் திருடுவனே (பொய்பேசுவனே), அவன் திருட்டு முதலாய சகல குற்றங்களையும் புரிகின்ருன். ஆதலா லெப்போது முண்மை பேச வேண்டும்.

பொருளவை—ः அரசகாரியம் நீங்க மற்றதேதேது பெரியகாரியங்களுளவோ அவைகளை அறிவாளிகள்கூடிய அவையின்கண் தீர்மானித்தபடி புரியவேண்டும்.

இதற்கத்தாட்சி—ः தம் ஸபாச ஸமிதிச்ச ஸேனு ச॥ (அதர்-15-9தை

உலகத்தி லறவழியிற் பாவிக்கப்படும் அரசகாரி-2) யம சபையிற் றீமானிக்கப்படின் சகல விதத்திலுங்கள் யேற்றுக் கொள்ளவேண்டும்.

அநாம்னுதேஷு தர்மஷு கதம் ஸ்யாதிதி சேத்பவேத்। யம் ஸிஷ்டா ப்ராஹ்மணு ப்ரூயுஸ்ஸதர்மः ஸ்யாதசங்கிதः॥ (மனு-12-108).

ஏ இல்லறவாசிகளே! எக்காரியங்கள் "மனுமுறை" முதலிய நூற்களில் சொல்லப்பட்டதோ, அவைகளிலையமுண்டாயின் நற்கல்வி யறிவாளர்கள் சொல்லும் பொருளையே உண்மையென நம்புங்கள்.

தர்மேணுதி கதோ னயஸ்து வேதः ஸபரிப்ரும்ஹணः। தே ஸிஷ்டா ப்ராஹ்மணு க்ருயாः ஸ்ருதிப்ரத்யக்ஷஹேதவः॥ (மனு-12-109).

பூர்த்தியான மறைமாணவமனுஷ்ட்டித்து, மறைகளை அதன் அங்கங்களுடன் விதிப்படி கற்றிருக்கின்றனரோ, எவர் கேள்வி, அத்தாட்சிகளைக்கொண்டும், கண்முன்காட்டுதலைக் கொண்டும் பொருள்களை நிரூபிப்பதிற் சமர்த்தரோ, பரோபகாரிகளோ, அவர்களையே அறிவாளிக ளெனச் சொல்ல வேண்டும்.

தஸாவராவா பரிஷத்யம் தர்மம் பரிகல்பயேத்। த்ரயவரா வாபி வ்ருத்தஸ்தாதம் தர்மம் ந விகாலயேத்॥ (மனு-12-110).

குறைந்தது பத்துப்பேர் கூடிய சபையேற்படல்வேண்டும், அல்லது பெரிய கலையாளர்கள் மூன்றுபேர் கூடியதும் சபையேயாகும். இவ்வாருய சபையின்கண் தீர்மானிக்கப்பட்ட சகல காரியங்களையும் எல்லோரு மொப்புக்கொண்டு நடக்கவேண்டும்.

த்ரைவித்யோ ஹைதுகஸ்தர்கீ நைருக்தோ தர்மபாடகः। த்ரயஸ்சாஸ்ரமிணः பூர்வே பரிஷத்ஸ்யாத்தஸாவரா॥ (மனு-12-111).

அப்பத்துபேர்களுள் மூன்றுபேர் மறைகளை நன்குணர்ந்தவர்களும், நான்காமவர் காரணகாரியங்களை யறிபவரும், ஐந்தாமவர் தர்க்கசாத்திர மறிந்தவரும், ஆருமவர் "நிருக்தம்" அறிந்தவரும், ஏழாமவர் நீதி சாத்திர முணர்ந்தவரும், எட்டாமவர் மறைமாணவரும், ஒன்பதாமவர் இல்லறவாசியும், பத்தாமவர் வனவாசியாகவு மிருக்கவேண்டும்.

சபையின்கண் கருத்து வேறுபாடுண்டாயின், அதிகம் பேர் சொல்வதை ஒப்புக் கொள்ளவேண்டும். இவ்விரண்டு தொகையாளரும் சரியாகயிருப்பின் வனவாசியாரின் தீர்மானத்தை வொப்புக்கொள்ளவேண்டும்.

த்ருதிஃ க்ஷமா தமோ஽ஸ்தேயம் சௌசமிந்த்ரியநிக்ரஹ:।
தீர்வித்யா ஸத்யமக்ரோதோ தஸகம் தர்மலக்ஷணம் ॥

(மனு-6-92).

அறநிலைகள் பதினேறு வகைப்படும். (அஹிம்ஸா) கெட்ட காரியங்களால் பிறர்க்கு துன்பம் புரியாமை, (த்ருதிஃ) எவ்வித ஆபத்துவரினு மறநிலையினின்றும் மாருமை ;(க்ஷமா) துர்வார்த்தை அவமானச்சொல் முதலியவைகளில்துக்கித்து பிறர் சொல்லுமறத்தினின்றும் மாருமை ; (தம:) மனதை அறவழிகளிலேயே செலுத்துதல், (அஸ்தேயம்) உடல், பொருள் ஆவி, யிம்மூன்றினு மறமே யியற்றல்; (சௌசம்) குற்றங்களினின்றும் நீங்கி மனதையும், நீரிஞலுடலையும் எப்போதும் சுத்தமாய் வைத்திருத்தல் ; (இந்த்ரியநிக்ரஹ:) புலன்களை யறவழியினிருத்தல் ; (தீ:) வேதநூற்களை கற்றல் ; (வித்யா) கற்றதை விசாரித்துண்மை யறிந்ததன்படி யொழுகல் ; (ஸத்யம்)

உண்மைபேசல் ; (அக்ரோத:) பொருமை யின்மை ; முதலிய கெட்டன நீக்கி நல்லனகொண்டு வாழலே அறநிலையாகும்.

ந ஸா ஸபா யத்ர ந ஸந்தி வ்ருத்தா நதே வ்ருத்தா யே ன வதந்தி தர்மம்। நாஸௌ தர்மோ யத்ர ந ஸத்யமஸ்தி ந தத்ஸத்யம் யச்சலேனுப்யுபேதம் ॥ (பாரதம்).

முதியோரிலாக் கூட்டம் சபையாகாது. அறமொழியியம்பார் முதியோரல்லர். உண்மையலாதறமில்லை. வஞ்சனை மொழி உண்மையன்று.

ஸபாம் வா ந ப்ரவேஷ்டவ்யம் வக்தவ்யம் வா ஸமஞ்ஜஸம்। அப்ருவன் விப்ருன்வாபி நரோ பவதி கில்விஷீ ॥

(மனு-8-13).

சபையில் நுழையாமையே மனிதனின் நன்மை. நுழையினுண்மையையே பேசவேண்டும். சபையிலமர்ந்து உண்மையல்லாததைக் கேட்டு மோனமாயிருக்காதவனும், அறநிலை பிறழ்பவனும், பாபவாளுகும்.

தர்ம ஏவ ஹதோ ஹந்தி தர்மோரக்ஷிதி ரக்ஷதஃ। தஸ்மாத்தர்மோ ந ஹந்தவ்யோ மா நோ தர்மோ ஹதோவதீத் ॥

(மனு-8-15).

எவன் அறத்தை நசிக்கச் செய்கின்றனே, அவனை அறம் நசிக்கச்செய்கிறது. எவன் அறத்தைக் காப்பாற்றுகின்றனே, அவனை அறமும் காப்பாற்றுகிறது.

ஸஹ நாவவது ஸஹ நௌ புனக்து ஸஹவீர்யம் காவாவஹை | தேஜஸ்விநாவதீதமஸ்து மா வித்விஷாவஹை | ஓம் ஸாந்தி ஸாந்தி ஸாந்திః (தைத்திரீயாரண்யகம்—எட்டாவது பாடம்—முதலாவது வாசகம்).

பெண் புருடர்களும், நண்பர்களும், ஆசான், மாணவன், ஆகிய நாங்களனைவ நம் (ஸஹ) கலந்து, (நௌ) அன்புடன், (அவது) ஒருவரை யொருவர் காப்பாற்றுவோமாக. (ஸஹ) ஒருவருக்கொருவ ரன்புடன் கலந்து, (வீர்யம்) பலத்தை, (காவாவஹை) அடைவோமாக. (நௌ) எங்களால் (அதீதம்) கற்றுகற்பிக்கப்பட்டதும், (தேஜஸ்வி) ஒளி பெற்றதாக (அஸ்து) ஆகட்டும். (மா வித்விஷாவஹை) ஒருவருக்கொருவர் பேதமின்றி யிருப்போமாக.

தாழ்ந்தோர்முறை முற்றிற்று.

வனவாசிச் சடங்கு.

(வானப்ரஸ்த சம்ஸ்காரம்)

மணம்முடித்து பின் மகவையீன்று, முடிந்த "மறை மாணவ" மனுட்டித்த மகனுக்கு மணம்முடித்து, அவனுக்கு மோர் மகவுண்டாயபின், புருடன் வனத்தில் சென்று, கீழ் வரும்முறைகளை யெலாமனுட்டிக்கவேண்டும்.

இதற்கத்தாட்சி—:

ப்ரஹ்மசர்யாஸ்ரமம் ஸமாப்யக்ருஹீ பவேத் க்ருஹீ பூத்வா வனீபவேத்வனீ பூத்வா ப்ரவ்ரஜேத் || (சதபதப்ராஹ்மணம்).

ஒவ்வோர் மனிதனும் முதலில் மறைமாணவமும் பிறகு இல்லறவாசமும், பிறகு வனவாசமும், பிறகு துறவிவாசமும், அவசியம்கொள்ளவேண்டும்.

வ்ரதேன தீக்ஷாமாப்நோதி தீக்ஷயாப்நோதி தக்ஷிணாம் | தக்ஷிணா ஸ்ரத்தாமாப்நோதி ஸ்ரத்தயா ஸத்யமாப்யதே ||

(யஜு-19-30).

மனிதன் "மறைமாணவ" உண்மையை நோன்பாக யேற்றுக்கொள்ளும்போதந்த நோன்பினால் அறிவை யடைகிறான். மறைமாணவாதிகளை பாலிப்பதனால் செல்வாதிகளை யடைகிறான். அந்நோன்பினாலன்பை யடைகிறான். அவ்

வன்பிறு னுண்மைப் பொருளை யடைகின்றான். ஆகலால் இல்லறவாசம் முடித்தபின் வானவாசம் கட்டாய மேற்கத் தகும்.

ஆனயைதமா ரபஸ்வ ஸுக்ருதாம் லோகமபி கச்சது ப்ராஜானன் । தீர்த்வா தமாம்ஸி பஹுதா மஹாந்த்யாஜோ நாகமாக்ரமதாம் த்ருதீயம் ॥ (அதர்-9-5-1).

ஏ இல்லறவாசீ! இயற்கைப்படி யறிந்து நீ யிவ்வன வாசத்தைத்துடங்கி உன்மனதை இல்லறவாசத்தினின்று மிப் பால் வாங்கி, அறிவாளிகள் பார்வைக்கன்பாய வனவாசத் தையு மடைவாயாக. பலவிதமாய குடும்பத் துக்கக்கடலி னின்றும் வெளிப்பட்டு உன்னுயிர் மரணமுதுமையில்லாதென் றறிவாயாக. மூன்றாந் துக்கமாய வனவாசத்தையும் பின் றூண்டுவாயாக.

மா நோ மேதாம் மா நோ தீக்ஷாம் மா நோ ஹிம்ஸிஷ்ட யத்தபः । ஶிவாந: ஸம் ஸன்த்வாயுஷே ஶிவா பவந்து மாதரः॥ (அதர்-19-40-3).

